சித்தாந்தச்
செழும் புதையல்கள்

ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம்

1978

ஸ்ரீமதி. ஜாகையாணீ.

உ

சிவமயம்

சித்தாந்தச் செழும் புதையல்கள்

வெளியீடு :

ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம்

யாழ்ப்பாணம்

ஆசிரியர் :

மு. கந்தையா, ஏழாலை

விலை : ரூ 10.00

ஆசீர்வாதம் அச்சகம்,

50, கண்டிவீதி, யாழ்ப்பாணம்.

வெளியீடு — 1

முதற் பதிப்பு — காலயுத்தி ஸ்ரீ கார்த்திகை 1978

பதிப்புரிமை வித்தியாபீடத்துக்குரியது.

முகவுரை

''பூவினுக் கருங்கலம் பொங்கு தாமரை'' என்பதுபோல் அறிவினுக் கருங்கலம் சைவ சித்தாந்த அறிவு எனல் பொருந்தும். அகில உலகிலும் அறிஞர் குலம் பரவலாக ஒத்துக் கொண்டிருப்பதோர் உண்மை இதுவாகும். அங்ஙனமாதலின் சைவத்தமிழ்க் குலந்துக்குச் சைவசித்தாந்த அறிவின் இன்றி யமையாமை எத்தகையதென்பது யாருஞ் சொல்லியுணர்த்த வேண்டுவதன்று.

ஜி. யு. போப் ஐயர் முதலிய மேலை நாட்டு அறிஞர்கள் சைவசித்தாந்த அறிவின் மேன்மையைச் சிலாகித்துரைக்கக் கேட்கும்போது நம் செவித்துளைகள் இரண்டும் இனிக்கின்றன நெஞ்சம் புல்லரிக்கின்றது. 'தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' பெரிதுவக்கும் என்ற திருக்குறளிற் கேட்ட தாய் என்ற தொடரில் திருவள்ளுவர் வைத்த பொருணயமும் இத் தொடர்பில் பொள்ளெனப் புலப்படுகின்றது. அதேசமயம் நமது இன்றைய சமுதாயம் இச் சைவ சித்தாந்த அறிவின் மேன்மையை அதற்குத் தகுந்த அளவில் உணர்கிறதா? பேணு கிறதா? என்று விசாரிக்கும்போது பெரும் மனக்கிலேசம் நிகழவுஞ் செய்கின்றது.

பிறவி தோறும் நாம் பெரிதும் முயன்று பல துறையாற் பெறும் பிறதுறையறிவுகள் எவையும் நம் பிற்கிடைக்கு எந்த வகையிலும் உதவுவனவாகா. இறுதி மூச்சுவரை உயிரின் ஈடேற்றத்துக்கு உறுதுணையாய் நின்றுதவ வல்லது இச் சைவ சித்தாந்த அறிவே என்ற விளக்கம் சைவத்தமிழ் உள்ளங்கள் தோறும் பிரகாசிக்க வேண்டியது அவசியம்

சைவ சித்தாந்த அறிவு விளக்கத்தின் பெறுமானம் எவ்வ ளவென்பதைச் சிந்திக்க வேண்டிய கடப்பாடு ஒவ்வொரு வருக்கும் உளதாகும். அம்மை நல்வாழ்வுக்கு மட்டுமல்ல, இம்மை நல்வாழ்வுக்கும் உறுதுணையாய் நிற்கவல்லது அவ்வறிவு விளக் கமேயாம்.

வாழ்வியல் உண்மையை உணர்ந்து தன் உண்மையுணர் வுக்கு இரண்டகம் பண்ணுமல் வாழக்கூடியவன் சைவ சித்தாந்த விளக்கமுள்ள ஒருவன் மட்டுமே என்றல் மிகையாகாது. இவ் விளக்கந் தலைகொள்ளாவிடத்து. உண்மையுரைக்கும் ஒருவனைக் காண்பதே துர்லபம்; சீவ இரக்கமுள்ள ஒருவனைக் காண்பதும் சிரமம் சகிப்புத் தன்மையுள்ள ஒருவனைக் காண்பதும் சாத்திய மாகாது. சமுதாய அமைதியே பிரச்சினைக்குள்ளாகிவிடும்.

சைவ சித்தாந்த விளக்கங் குன்றுமிடத்து நம் சைவாதீனங்கள், சைவாலயங்கள் அனைத்தும் வெறும் சம்பிரதாயச் சடங்கு நிலையங்களாகிவிடும். உயிரில்லா உடல்களாக மட்டும் அவை காட்சி தரும்.

இவ்வுண்மையை நம் ஈழத்துத் தொல்லறிஞர் துடியாக உணர்ந்திருக்கின்றனர்கள். கொழும்பு விவேகானந்த சபையுஞ்சரி, யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபையுஞ்சரி, நாவலர் பெருமான் பேரால் எழுந்த சைவஸ்தாபனங்களுஞ்சரி, சமீப காலத்தமைந்த சிவதொண்டன் நிலையமுஞ்சரி இவ்வுணர்வின் பிரதிபலிப்பாக அமைந்தனவேயாம். இவற்றின் இன்றைய நிர்வாகங்கள் இதனைச் சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக்கொள்ளுமளவிலேயே திருப்திகாண முயல்கின்றனர். இந்நிலை நீடித்தலாகாது.

நாவலர் பெருமான் சைவசித்தாந்த அறிவின் மேன்மையைச் சொல்லாலும் செயலாலும் பலதடவை வற்புறுத்தியுள்ளார். சேர். பொன். இராமநாதன் அவர்கள் தமது தர்மசாசனத்தில் சைவசித்தாந்த அறிவு விருத்திக்குக் கணிசமான பகுதி ஒதுக்கியுள்ளார், சிவஸ்ரீ யோக சுவாமிகள் 'எல்லோருஞ் சைவ சிந்தாந்தம் படிக்கவேண்டும்' என அறிவுறுத்தி வைத்துள்ளதாகப் பிரபலமாக அறிய வருகின்றது,

இத்தனைக்கும் உத்தரவாதமுள்ளதாக இன்றைய நம் சமுதாயம் இயலவேண்டுமெனில், சைவ சித்தாந்த அறிவாராய்ச்சித் துறை நம்மத்தியில் விளக்கமடைய வேண்டுமென யாரும் விரும்புதலில் ஏதும் தவறில்லை.

சைவ சித்தாந்தக் கருத்துக்கள் கட்டுரைகளை யதார்த்தமான முறையில் வெளியிடுவதற்கு நம் தமிழ்த் தினசரிகளில் இடமில்லை. வானொலியில் நேரமில்லை, தனிப் பிரசுரங்கள் வெளியிடப் பணமில்லை.

இந்த 'இல்லை' நிலைமைகள், சைவசித்தாந்த விஷயத்தில் நம்மவர்க்கிருக்கும் பாலதாகிய உத்தரவாதத் தன்மைக்கு எதிராகவே பிரதிபலிக்கின்றன. இந்த நிலைமை மாறுதவரை நமக்கு விமோசனமேயில்லையெனலாம்

இந் நிலையில் திருவருட் செயலாக 'ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியா பீடம்' என ஒரு ஸ்தாபனம் நம்மத்தியில் உருப்பெறுதல் மிகவும் வரவேற்கத் தக்கதொன்றாகும். இவ்விஸ்தாபனம் தன் தளர்நடைப் பருவத்திலேயே, ஒரு சிறு அளவி

லாவது, சைவசித்தாந்தப் பிரசுரம் வெளியிட வேண்டுமென்று கொண்டுள்ள ஆர்வம் மேலும் வரவேற்கத்தக்கதாம். இத்தகைய ஆர்வமிக்க இவ்விஸ்தாபனம் ஆயுட்பலமும் நிதிப் பலமும் மிக்குத் திகழ்வதாக! மேற்குறித்த 'இல்லை' நிலைமைகளை இல்லையாக்கும் அனைத்து வகை ஆற்றலும் இதற்கு மிகுவதாக!

தன்புகழேயான சைவசித்தாந்தப் புகழ் மேலோங்கத் திருவருள் முன்னிற்பதாக!

''ஞாலம் நின்புக ழேமிக வேண்டும் தென்
ஆல வாயில் உறையுமெம் ஆதியே'' — திருஞானசம்பந்தர்

மு. கந்தையா
ஏழாலை

இந்நூல்

சைவச் சான்றோர்கள் தம் ஆத்மீக அநுபவக் கடலில் ஆழ்ந்து அமிழ்ந்து சென்று கண்டு கூறிவைத்த அரும்பொருட் புதிர்கள் பலவாகும். அவையெல்லாம் இம்மை வாழ்வுக் கென்செய்ய என்ற ஒரு வகை அலுப்பு மனப்பான்மை இன்றைய சைவ சமூகத்தில் தழும்பிப்போயிருத்தல் கண்கூடு. இவ்வெண்ணத்தின் பொருந்தாமையைச் சற்றுச் சிந்தித்தல் தற்போதைய சூழ் நிலையில் இன்றியமையாததே. அதனால், சைவசிந்தாந்த ஞானம் இம்மை வாழ்வுக்கு எவ்வகையில் உதவும் என ஆராயும் ஒரு கட்டுரையோடு கால் கொள்கின்றது இந்நூல்.

சைவ சித்தாந்தத்தில் அதன் கேந்திர நிலையங்கள் போல் நின்று நிலவும் ஐந்து பொருட் கூறுகள் இந் நூலில் ஆராயப் படுகின்றன. முப் பொருள் நிலை ஒன்று, ஆணவம் ஒன்று மாயை ஒன்று, திரோதானம் ஒன்று, ஊழ் ஒன்று என அவை ஐந்தும் அறியப்படும். இவை பற்றி அறியவுள்ள அரும்பொருள் விளக்கங்கள் அத்தனையும் நமக்கு ஈடிணையற்ற பெரும்புதையல்களாதல் நம் அறிவாராய்ச்சிக் கண்கொண்டு கண்டு தெளிய வேண்டுங் காரியமாகும். இந் நூற் பெயரின் உட்கிடை இதுவே என்க.

இவையிற்றில் மாயை திரோதானம், ஆணவம் என்ற மூன்றனியல்புகளும் பெரும் பெரும் பிரச்சினைகளுக்கிடமானவை. உயிரின் பந்தநிலைத் தில்லுமுல்லுகளுக்கு இவை மூன்றும் தனித்தனியாயுந்தான், ஒரே கூட்டாயுந்தான், உபகரித்து வருவதாகத் தெரிகிறது. மாயை விளக்கம் செய்கிறதென்றால் அதே நேரம் மயக்கமுந்தான் செய்கிறது. ஆணவம் மறைக்கிறதென்றால் திரோதானமுந்தான் மறைக்கிறது. இவற்றின் இவ்வியல்புகள் தொழில்கள் ஒன்று இடம்பெற்று முடிந்த பின் மற்றது நடக்கும் சூழ்நிலைகள் இல்லை. எல்லாம் ஒன்றுக்குள் ஒன்றாயிருத்தலின் மெய்ப்பொருளாராய்ச்சியாளரிடையே இவற்றை இனங்கண்டு கூறுதல் பற்றி எழுந்த அபிப்பிராய பேதங்களும் பல. இதனால் தமிழிலுள்ள நம் சித்தாந்த சாஸ்திரங்களைக் கற்போரிடையில் நிகழும் தடுமாற்றங்களும் மிகப் பல.

நம் மெய்கண்ட சாத்திரங்கள் உபநிடதக் கருத்துக்களையும், சைவாகம ஞானபாத விரிவு விளக்கங்களையும் ஒருங்ககப்படுத்துச் சிந்தித்துத் தெளிந்து தத்தம் சுவாநுபவச்

சுவையோடு தெளித்து வடித்து நமக்குத் தரப்பட்ட ஆன்றோர் படைப்புக்கள். அவை கூறுங் கருத்துக்களை, சம்பந்தப்பட்ட உபநிடதக் கருத்துக்களோடும் ஆகமப் பகுதிகளோடும் பொருத்திப் பொருத்தி நோக்குதல் மூலம் அக்கருத்துக்களின் மூல உண்மைகள் புலனாகுதலும், அவை பற்றிய விரிவான விளக்கங்கள் உண்டாதலும், அறிவாராய்ச்சிச் சுவை பிறத்தலும் அநுபவ சாத்தியமான உண்மைகளாம். நமது சித்தாந்த நூல்களில் பூர்வ பக்கமாக நிறுத்தப்படும் பரபக்கக் கருத்துக்களை இனங் கண்டுகொள்ளுதற்கும் இம் முயற்சி பெரிதும் உபகாரமாதல் தெரிகின்றது. ஆகவே, மெய்கண்ட சாஸ்திரங்களைக் கற்கும் அன்பர்கள் குறித்த உபநிடத ஆகமப் பகுதிகளையும் தொடர்புபடுத்திக் கற்றல் மூலம் ஓரளவுக்குத் தெளிவு பெறுதல் சாத்தியமேயாம். இந்நோக்கில், உபநிடத ஆகமக் கருத்துக்களின் பின்னணியில், தான் எடுத்துக்கொண்ட கருத்துக்களை ஆராயும் முறையைத் தழுவுகின்றது இந் நூல்.

பாஷை வேற்றுமையைப் பாராட்டாமலும், பிற மொழியொன்றைத் தெரிந்துகொள்ளுதலில் நேரும் சிரமத்தைப் பெரிது பண்ணாமலும், குறித்த உபநிடதங்களிலும், ஆகமங்களிலும் அவற்றைப் படித்துணர்தல் மூலம் நமக்கு மற்றுமோர் பெரும் பயன் விளைய இருத்தல் இந்நூல் 36ஆம் பக்கத்து இரண்டாம் பந்தியில் விளக்கப்பட்டிருத்தல் காணலாம். நம் மெய்கண்ட சாத்திர நூல்களின் அருமை பெருமைகளை உணர்ந்தின்புறுவதற்கு அம் முயற்சி பெரிதும் உதவும் என்பது அப்பந்தியின் தாற்பரியமாதல் காண்க.

கேவலாத்துவித, விசிட்டாத்துவித, சுத்தாத்துவித உண்மைகள் பற்றிய விளக்கம் அவ்வவற்றின் வரைவிலக்கணங்களை அறிந்துகொள்ளுமளவில் நமக்கு லப்பியமாதலில்லை. அவை பற்றிய கருத்து மூலங்களின் தோற்றத்தையும் அவை விருத்தியுற்ற வகையையும் அவை தம்முள் வேறுபட்டிருக்கும் விதத்தையும் அலசி ஆராய வேண்டுதல் மிகவும் இன்றியமையாதது ஒன்றாகும். இந்நூலின் சதசத் ஆராய்ச்சிக் கட்டுரை இதற்கு ஓரளவில் உதவும் என்றல் மிகையாகாது.

இன்னும், வேதாந்தத்தில் மாயாவாதமென ஒரு கிளை தோன்ற வந்ததற்கான கருத்துப் பிறழ்ச்சிநிலை யாது? ஆணவம் முத்திநிலையில் விலகியே போகும் என்ற கருத்து நிலையை நிச்சயிக்குமாறு யாங்ஙனம்? முயற்சியால் ஊழைவெல்லலாம் என நிலவுங் கருத்து உண்மையோடு பட்டதாகுமா? என இவை போல்வனவாகும் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான விளக்கங்களைத் தன்பாற் கொண்டுள்ளது இந்நூல்.

ஆணவம், ஊழ் என்ற விஷயங்கள் பற்றிச் சுருதி, யுக்தி, அநுபவ உண்மைகளுக்கு விரோதமாக இக்காலத்து நிலவும் விளக்கங்களும் பல. அவற்றின் பொருந்தாமை பற்றியும், சம்பந்தப்பட்ட கட்டுரைகளில், இந் நூல் குறிப்பிடுதல் காணலாம். அத்தகைய விளக்கங்கள் ஏற்படுங் காரணங்கள் பற்றி 53ஆம் 54ஆம் பக்க அடிக்குறிப்புக்களிலும் 57ஆம் பக்க இறுதிப் பந்தியிலும், 110 ஆம் பக்க இரண்டாம் பந்தியிலும் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் சித்தாந்தக் கல்வியாளரின் சிந்தனைக்குரியனவாகும்.

'இன்மை அரிதே வெளிறு' என்ற வாசகம் அகிலப் பிரசித்தமானது. இந்நூலும் அதற்கு விலக்காகாது. இச்சிறு நூலைப் பொருள் செய்துவாசித்து, இதன் மிகை குறைகளைப் பயன்படத்தக்க முறையில் எடுத்துக்காட்டும் அறிஞர்களுக்குப் பெருநன்றியும் பெருங்கடப்பாடும் பூண்டொழுகக் கடமைப்பட்டுள்ளோம். தோன்றாத் துணையாய் நின்றருளுந் திருவருள் அறிஞரறிவில் நின்று இதனைஇனிது நிறைவேற்றிவைக்கும் என எண்ணி அமைகின்றேம்.

ஆ—ர்.

உ

குருபாதம்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீன குருமகாசந்நிதானம்,

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

அருளிச் செய்த

ஆசியுரை.

உயர் ஞானம் இரண்டாம்; மன்னுபோதத் திருவருள் ஒன்று; அதனைத் தெரியவோதும் சிவாகமம் ஒன்று என உமாபதி சிவாசாரியார் தந்த விளக்கம் மலை இலக்காக உள்ளது. அதன் பிரகாரம் திருவருள் ஞானம் பெறுதற்குச் சிவாகமமாகிய கலைஞானம் இன்றியமையாததாகும்.

சைவ சித்தாந்தம், முற்றுமுழுதாக ஆகம ஞானமேயாம். ஆதலின் சைவசித்தாந்தக் கல்வியில்லாமல் திருவருள் ஞானப்பேறு சித்தியாகாது என்பது உண்மை.

இவ்வுண்மை வழிநின்று எங்கள் ஆதீனத்து நிகழும் சித்தாந்த சைவ வித்தியாபீடம், சொல்வளம், அருள்வளம், பொருள் வளம் முழுதும் நிரம்பிய "சித்தாந்தச் செழும் புதையல்கள்" என்னும் நூலைச் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளது.

எமது ஆதீனத்துச் சித்தாந்த ஆசிரியர், ஏழாலை, திரு. மு. கந்தையா அவர்கள் இந்நூலைத் திறம்பட யாத்திருக்கிறுர்கள். இந்நூல் சைவப் பெருமக்கள் கரந்தோறும் இலங்கி, அனைவருக்கும் கலைஞானம் வழங்கவேண்டுமென்றும், இதன் ஆசிரியர் மேன்மேலும் இத்தகைய சிவப்பணிகளில் ஈடுபட்டு உழைக்கத் திருவருள் நலம் கைகூட வேண்டுமென்றும் எம்பெருமான் ஞானசம்பந்தன் அடியிணைகளை வழுத்தி ஆசீர்வதிக்கின்றோம்.

"நாதன் நாமம் நமச்சிவாயவே"

ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்

நல்லை ஆதீனம்,
15-11-1978.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

26-ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

அருளிச்செய்த

அணிந்துரை

தம்செயலற்று, தாமற்று எல்லாம் இறைவன் செயலாகவே செய்யும் அருளாளர்கள், சமயாசாரியர்கள் அவர்கள். அருளிச் செய்தன திருமுறைகளாகிய தோத்திர நூல்கள். அவைகளில் ஆங்காங்கு காணப்படும் இறையியல்புகளையும் உயிரியல்புகளை யும் தளையியல்புகளையும் ஒருங்கே தெரிந்து கொள்ளத் துணை செய்வன சாத்திர நூல்கள் சாத்திரநூற் கருத்துக்கள் வேதாகமங்களில் கூறப்பட்டுள்ளன 'பலகலை ஆகம வேதம் யாவையினும் கருத்துப் பதிபசுபாசம் தெரித்தல்' என்பது உமாபதி சிவாசாரியார் அருள்வாக்கு.

சித்தாந்தச் செழும்புதையல்கள் என்ற இந்நூல் சத்து, சித்து, ஆணவம், மாயை திரோதானம் ஆகியவைகளை ஆகம உபநிடத வாக்கியங்களை மேற்கோள் காட்டி விளக்கிக் கூறு கிறது. சிவாகம உபநிடதப்பயிற்சி சித்தாந்த நூல்களைக் கற்ப தற்கும் தெளிவுபெறுதற்கும் துணைசெய்யும் என்பதை இதனைப் படிப்போர் உணர்வர்.

இத்தகைய அரிய நூலை எழுதி உலகிற்கு உபகரித்த ஏழாலை, திரு. மு. கந்தையா, நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பற்று உள்ளவர். சமயப்பணி செய்வதில் ஆர்வமுள்ளவர். சித்தாந்த வகுப்புக்களை நடத்திவருபவர். சமயவிரிவுரையாளர். அவரது அரும்பணியாகிய இந்நூல், சித்தாந்தத் தலைமணி நூலாகிய சிவஞான போதத்தை அருளிய ஸ்ரீ மெய்கண்டதேவ நாயனர் குருபூஜைத் திருநாளில் வெளிவருவது சிறப்புடையது. புதையல் எடுத்த தனம்போல மக்கள் இந்நூலைப்பெற்றுக் கற்றுப் பயனுறவும். அன்பர் திரு. கந்தையா இதுபோன்ற பலநூல்களை உலகிற்குத் தந்து எல்லா நலனும் பெற்றுச் சிறக்கவும் செந் தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

தருமபுரம், மாயூரம்.
21-10-78

ஸ்ரீ நடராஜர் துணை

சாகிர்த்தியகர்தா கலைமாமணி

வி. வி. ஸ்வர்ணவேங்கடேச தீக்ஷிதர் அவர்கள்

அருளிச்செய்த

ஆசியுரை

எனது அன்புள்ள ஸ்ரீமான் இ. ஸுப்ரமண்யம் அவர்களுக்கு அன்புடன் ஆசீர்வாதம் செய்து எழுதியது. உபய க்ஷேமம். தாங்கள் எனக்கு 18-9-1978ல் எழுதியபடி தாங்கள் அன்புடன் அனுப்பிய ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம் (யாழ்ப்பாணம்) ஆசிரியர் ஸ்ரீ மு. கந்தையா அவர்களது முகவுரையுடன் கூடிய சித்தாந்தச் செழும் புதையல்கள் புத்தகம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. நான் வெளியூர்களுக்குச் சென்றிருந்து இப்போதுதான் வந்தேன். ஆகையினால்தான் உடனே தங்களுக்கு பதில் எழுத முடியவில்லை.

ஷை புத்தகத்தைப்பற்றி நன்கு நிதானமாகப் படித்து அறிந்து உணர்ந்து எழுதவேண்டும் என்ற எண்ணத்தினால் மேலும் காலதாமதமாயிற்று.

ஷை புத்தகம் 112 சிறு பக்கங்கள் கொண்டதாயினும் அவரவர் அறிவிற்கேற்ப படித்துப் படித்து அறிந்துணர்ந்து அனுபவித்து மகிழத்தக்க முறையில் அமைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக சைவ சித்தாந்தம் ப்ரம்மவிசாரம் போன்று எளிதில் அறிந்து உணரக் கூடியதல்ல. மேலும் மொழி, இன, வெறி கொள்ளாதவர்க்கே சைவ சித்தாந்தம் உணரக் கூடியது தெளிவாகும்.

அஸ்தி அஸ்தி என்று சொல்பவர்க்கே ஆஸ்திகர் என்றும் நாஸ்தி நாஸ்தி என்று சொல்பவர்க்கே நாஸ்திகர் என்றும் ப்ரஸித்தமான பெயர். இது பலருக்கும் தெரிந்த ஒன்று. ஆயினும் ஆஸ்திகரில் நாஸ்திக குணமும், நாஸ்திகரில் ஆஸ்திக குணமும் கொண்டோர்களும் உண்டு என்பதை மனவேதனையுடன் எழுத வேண்டியதாயிற்று. சைவ சமயம் கடலுக்கு ஒப்பானது. தன் பால் வரும் பிற மதத்தவரையும்கூட அன்புடன் ஏற்றுக்கொள்ளும் குணமுடையது. கடலில் கலக்கு முன்னே கங்கை நீர்,

காவிரி நீர், கழு நீர் என்ற பலவகைப் பெயரோடு ஓடிவருவதாயினும் அவைகள் கடலில் விழுந்தகணமே கடலின் தன்மையை அடைவது போல் சைவ சமயம் பிற சமயங்களுக்கெல்லாம் தனித்து சிறந்து விளங்குவது. ஏனெனில் மற்ற சமயங்களுக்கெல்லாம் மூலதனம் வைத்து வாய்மையால் தூய்மையே பேசி தொடர்பான சொற்பொழிவுகள் மூலமும் வளர்வது போல் தெரிகிறது.

நமது சைவ சமயமோ ஊக்குவார் இல்லையெனினும் துயர் போக்குவார் இல்லையெனினும் பயன் உண்டாக்குவார் இல்லையெனினும் தானாக உறுதியுடன் வளர்ந்து மெய்மையால் செம்மையாகி திசையெங்கும் திகழும் உறுதி படைத்தது, அது எவ்விதத்தாலும் அழிக்கவொண்ணாதது. அழியாதது. என்றாலும் தூண்டா விளக்கெனினும் ஒரு தூண்டுகோல் தேவை என்பது உலகில் பலரும் அறிந்த உண்மை. ஆகையினால் நமது சைவ சமயத்திற்கு, இந்த (சைவ) சித்தாந்தச் செழும் புதையல்கள் போன்ற இன்னும் பல பிரசுரங்களும் தேவை. இப்படிப்பட்ட நற்பணிகளில் ஈடுபட்டு உணர்வித்து, ஊக்குவித்து பற்பலரும் பயனடையத்தக்க வகையில் பாடுபட்டு வரும் தங்களுக்கும் தங்களைச் சார்ந்த மெய்யன்பர்களுக்கும் எம்பெருமான்றில்லையம்பலவன் இன்னருள் சுரந்து இஷ்டஸித்திகளை தந்தருளுவானாகுக. ''இறைவனையுடையோர் குறைதனையடையார்'' என்பது உறுதி. மற்றவை எல்லாம் நன்மைக்கே. ஏதும் கடவுள் செயல்.

இப்படிக்கு,
ஆசீர்வாதம்
V. V. ஸ்வர்ணவேங்கடேச தீக்ஷிதர்

101, கிழக்கு கார் வீதி,
சிதம்பரம்.
14-10-78.

இலங்கை பல்கலைக் கழக இந்து நாகரீகத்துறை பேராசிரியர்

கலாநிதி கா. கைலாசநாதக்குருக்கள்

அவர்கள் வழங்கிய

அணிந்துரை

சைவசித்தாந்தச் செழும் புதையல்கள் என்ற இந்நூலை இது உருவாகி வெளிவர இருக்கும் நிலையில் பார்வையிடும் வாய்ப்புக் கிடைத்தது. ஏழாலை திரு. மு. கந்தையா அவர்கள் இந்நூல் ஆசிரியர். அவர் தமிழில் புலமை மிக்க பண்டிதர்; சமஸ்கிருதத்தில் கலைமாமணிப் பட்டம் பெற்றவர்; ஆங்கில அறிவும் கைவரப் பெற்றவர்; சைவ சமய தத்துவ ஆராய்ச்சி யிலேயே தம் வாழ்க்கையை ஈடுபடுத்தி வருபவர்; வயது முதிர்ந்த காலத்திலும் ஓய்வை நாடாது இத்துறையில் அயராது உழைப்பவர். சைவசித்தாந்தத்தின் உயர்மாண்பை உலகம் நன்கு உணரல் வேண்டும் என்ற நோக்குடையவர்; உயிரின் ஈடேற் றத்திற்கு உறுதுணையாக நின்று உதவ வல்லது சைவ சித்தாந் தம் என்ற கருத்துடையவர்; சைவ ஆராய்ச்சித் துறை நம் மத்தியில் சிறந்து விளங்க வேண்டும் என்பது இவ்வாசிரியரின் வேணவா. இவ்வவாவினால் பெரிதும் உந்தப்பட்ட நூலாசிரியர் தாம் மேற் கொண்ட ஆராய்ச்சியின் விளைவாலும், சித்தாந்த சாத்திரங்களைப் போதித்தும், அங்கங்கே விரித்துரைத்தும் பெற்ற அனுபவப் பெருக்கின் விசேடத்தாலும் உருவான கட்டு ரைகள் ஒரு சிலவற்றின் தொகுதியாக அமைகின்றது இந்நூல்

சித்தாந்தச் செழும் புதையல்கள் என்னும் இந்நூலில் இடம் பெறும் கட்டுரைகளில் சித்தாந்த தத்துவ விசாரணையின் போது பொதுவாகப் பேசப்படும் பொருள்கள் சிலவற்றைப் பற்றிய ஆராய்ச்சி பூர்வமான விளக்க விவரங்கள் இடம் பெறுகின்றன இத்தொகுப்பு நூலில் அங்கங்கே சைவ சித்தாந்த தத்துவத்தின் சிறப்பு நலன்களைப் படிப்பவர்கள் நன்கு உணரக்கூடிய வகை யில் ஆசிரியர் கட்டுரைகளை யாத்துள்ளார்.

உபநிடதங்களிலிருந்தும் வேதங்களின் இதர பகுதிகளிலி ருந்தும் பொருத்தமான மேற்கோள்களைப் பெருமளவில் எடுத் தாண்டிருப்பதன் மூலம் வேதாந்தத் தெளிவாம் சைவ சித்தாந் தம் என்ற உண்மையை ஆசிரியர் நிரூபிக்கும் அழகே தனி அழகு

ஆசிரியர் ஆகம மேற்கோள்களை அங்கங்கே எடுத்தாண்டு சித்தாந்த நுணுக்கங்களை ஆதார பூர்வமாக விளக்கும் முறை வேதம் பொதுநூல் ஆகமம் சிறப்பு நூல் என்ற சித்தாந்தக் கருத்தைத் தெள்ளிதின் உணரவைக்கின்றது.

சதசத் ஆராய்ச்சி, ஆணவ விசாரணை, மாயா விவகாரம் திரோதான மான்மியம், ஊழ்ப்பிரச்சனை என்ற தலைப்புகளைத் தாங்கிவரும் கட்டுரைகளை உள்ளீடாகக் கொண்ட இந்நூல் இப்பொருள்கள் பற்றி மறைந்து புதைந்து கிடந்த கருத்துக் களை வெளிக்கொணர்வதால் சித்தாந்தச் செழும் புதையல்கள் எனும் பெயரினைப் பொருத்தமுறப் பெற்றுள்ளது. இந்நூலில், ஆசிரியர் தமக்கே உரிய நடையில் கருத்துக்களை ஆராய்ந்து விளக்குகின்றார். வேத சிவாகமங்களிலும் திருமுறைகளிலும் சித்தாந்த சாத்திரங்களிலுமிருந்து தெரிந்து எடுத்தாளப்பட்ட மேற்கோள்கள் இவ்விளக்கங்களுக்கு வலிமையையும் தெளிவை யும் தருகின்றன.

இவ்வாறே, சைவசித்தாந்த தத்துவ விசாரணையில் அவ்வப் போது எழும் பிரச்சனைகளையும் விளக்கம் வேண்டப்படும் பொருள்களையும் தலைப்பாகக் கொண்டு அவற்றை ஆராய்ச்சி வழியே விளக்கவல்ல கட்டுரைத் தொகுதிகள் இவ்வரிசையில் தொடர்ச்சியாக வெளிவருவதைச் சைவ உலகம் இவ்வாசிரியரி டம் எதிர்பார்க்கின்றது இவ்வாறு வெளிவரும் நூல்கள் சைவ சித்தாந்த தத்துவத்தின் நுணுக்கங்களை நன்கு விளங்கவைக்க வும் இத் தத்துவத்தின் மேம்பாட்டை உணரச் செய்வதற்கும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலை வெளியிடும் ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியா பீடம் மேற்கொண்ட இம்முயற்சி பெரும் பாராட்டுக்கு உரியது இந்நிறுவனததின் தொண்டு மேன்மேலும் வளர்வதாக.

மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
14-11-78

கா. கைலாசநாத குருக்கள்

காஞ்சி மெய்கண்டாராதீன சித்தாந்தபாநு வடகோவை

திரு. சோ. சுப்பிரமணியக் குருக்கள்

வழங்கிய

ஆய்வுரை

''சித்தாந்தச் செழும் புதையல்கள்''

என்னும் இந்நூல் ஏழாலையூர்ச் சித்தாந்த ஆசிரியர் திரு. மு. கந்தையா B. A. அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இவ் ஆசிரியர் மும்மொழி அறிஞர். சித்தாந்த சைவநூல் ஆராய்ச்சி யிலும் தாம் கற்றவற்றைப் பிறர்க்குக் கற்பிப்பதிலும் மிகத் திறமை வாய்ந்தவர். இலங்கை வானொலியிலும் சைவ சித்தாந் தம் பற்றிய சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். இத்தகைய பேரறிஞரின் நூலுக்குச் சிறப்புரை ஒன்று எழுதும் வண்ணம் இந்நூலின் பதிப்பாசிரியர் சைவத்திரு இ. சுப்பிரமணியம் அவர் கள் கேட்டுக் கொண்டார்கள். பேரறிஞர் ஒருவர் எழுதும் நூலை அளவிட்டு உரைக்கும் நுண்மாண் நுழைபுலமுடைய மூதறிஞர் களே நூலுக்கு மதிப்புரை கூற அருகதை உடையார் எனினும் பதிப்பாசிரியர் வேண்டுகோட் கிணங்கிச் சில கருத்துக்கள் எழுத வேண்டுவது கடப்பாடாகி விட்டது,

''இங்கு வாழும் காலமெல்லாம் பிறருக்குப் பயன்படக் கூடிய உத்தம அறிவாற்றலோடும் செயலாற்றலோடும் வாழ வேண்டும்.''

என இந்நூலின் பதின்மூன்றும் பக்கத்திலே கூறும் இயல்புக்கு தாமே இலக்கியமாக விளங்குகின்ற இப்பெரியார் இந்நூலை 5 பெரும் பிரிவுகளாகத் தொகுத்து எழுதியிருக்கிறார், முதல் இரு கட்டுரைகளும் ''சதசத் ஆராய்ச்சி'' என்னும் பெயரில் இலங்கை வானொலியில் பேசிய இரு பேச்சுக்களும் அடுத்து ''ஆணவ விசாரணை'' பற்றிய தெளிவான விளக்கங்கள் அடங்கிய 30 பக்கக் கட்டுரையும் ''மாயா விவகாரம்'' பற்றிய மூன்று கட் டுரைகளும் திரோதான சக்தியின் பெருமையை விளக்கும் கட்டுரையும் இறுதியில் உள்ள ''ஊழ்ப் பிரச்சினை'' பற்றிய விரிவான விளக்கம் கூறும் ஓர் கட்டுரையும் அடங்கியதாக இந் நூலைத் தொகுத்திருக்கிறார்.

முதற்கட்டுரையில்

''பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்
மருளானும் மாணாப் பிறப்பு''

என்னும் திருக்குறட்

பாவுக்குப் பரிமேலழகர் கூறுங் கருத்தும் சதசத்துக்குச் சைவ சித்தாந்தம் கூறும் கருத்தும் ஒரு தன்மையதே என ஒப்புமை காணும் நூலாசிரியரின் கருத்து ஒப்புக்கொள்ளற் பாலதேயாம். சதசத்துப் பற்றிய இரண்டாவது கட்டுரையில் சத்து, அசத்து, சதசத்து என்னும் பொருள்கள் மூன்றாகக் கூறப்படினும் உண்மையில் ஒரு பொருளாகவே விளங்குந் தன்மை விளக்கப்பட்டுள்ளது. மூன்றாவதான ஆணவ விசாரணை மிகவும் பாராட்டக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

டாக்டர் தேவசேனாதிபதி — திரு நல்முருகேச முதலியார் திரு. பழ. இரத்தினம் செட்டியார் என்னும் இப்பெரியார்கள் சித்தாந்தம் பத்திரிகையில் முத்தி நிலையில் ஆணவம் பற்றி எழுதிய விளக்கக் கருத்துக்கள் மாறுபட்டிருக்கும் தன்மையை அலசி ஆராய்ந்து அதன் உண்மைப் பொருள் விளக்கப்பட்டுள்ளது. மாயா வியவகாரம் பற்றிய மூன்று கட்டுரைகளில் வேதசம்ஹிதை உபநிஷதம், ஆகமம், கந்தபுராணம், வேதாந்தம், பாஞ்சராத்திரம், என்னும் இவைகள் கூறும் மாயா விளக்கங்களும் ஆராயப்பட்டுச் சைவசித்தாந்தங் கூறும் "சதசத்" பார்வையில் மாயைப் பொருள் விளக்கம் கூறப்பட்டுள்ளது. "திரோதான சக்தி மான்மியத்தில்" திரோதான சக்தியின் அருளுபகாரத் தன்மையை விளக்கும் பகுதியில்.

"பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை"

என்னும் திருவாசகப் பகுதிக்கு அருமையானதோர் விளக்கம் தருகின்றார் ஆசிரியர். "ஊழ்ப் பிரச்சனை" என்னும் பகுதியில் நியதி—ஊழ்விதி;—தெய்வம்:— எப்பவோ முடிந்த காரியம் நியாமிகா;— மெய்யடியார் விஷயத்தில் ஊழ் எவ்விதம் தொழிற்பாடாகிறது? என்பவற்றின் விளக்கங்கள் கூறப்படுகின்றது.

மேலும் எழுத்து வழக்கில்லாத "நெடுக" "மெத்த" "இங்கத்தைய" "சிறுக மறுக" என்னும் சொற்பிரயோகங்கள் நூலாசிரியரின் உள்ளக்கருத்தை விளக்குவதாய் அமைந்திருத்தல் புதுமைச் சிறப்பாகப் பொருந்தி உள்ளது.

இந்நூல் கற்றார்க்குப் பெரு விருந்தாயும் மாணவர்க்கு ஞானக் கருவூலமாகவும் சமய ஆராய்ச்சியாளருக்குச் சித்தாந்த சமய தீபமாகவும் நின்று நிலவுக.

இந்நூலாசிரியர் இதுபோன்ற நல்ல சமயத் தொண்டுகளை ஆற்றுவதற்குச் சிவபிரான் திருவருள் முன்னிற்பதாக.

திரு. சி. அருணைவடிவேல் முதலியார்

ஆராய்ச்சியாளர்

திருக்குறள் இருக்கை

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

திரு. மு. கந்தையா அவர்கள் எழுதியுள்ள 'சித்தாந்தச் செழும்புதையல்கள்' என்னும் நூல் கிடைக்கப்பெற்றேன். அவர்கள் சீரிய தமிழறிவும் சிந்தாந்த ஞானமும் உடையவர்கள் அதனால், அவர்களது சித்தாந்த ஆய்வுநூல் பல அரிய கருத்துக்களை இக் காலத்திற்கு ஏற்ப உலகத்திற்கு வழங்குவதாய் உள்ளது.

'முத்தியில் ஆணவம்'

'ஊழ்ப் பிரச்சினை'

இவை இரண்டும் சைவ சித்தாந்தத்தில் நன்கு ஆய்ந்து தெளியத்தக்கனவே. இவற்றையும் இந்நூலின் ஆசிரியர் மற்றைப் பொருள்களோடு ஆராய்ந்து வெளியிட்டுள்ளார்.

இன்ன பலவகையில் இந்நூல் சைவசித்தாந்த ஞானவேட்கை யுடையவர்கட்கு நன்கு பலன் தரத்தக்க தொன்றாகும். இது நமது ஆதீனத்தில் வெளிவருவது மிகச் சிறப்பே.

அடியேன்,

சி. அருணைவடிவேலு

[நல்லை ஆதீன இளவரசு சோமசுந்தரத் தம்பிரான் சுவாமி களால் திரு. முதலியாரவர்கள் இந்நூற்கு ஆய்வுரை வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தார்கள். 29-9-78 இல் அனுப்பப்பட்ட கடிதம் விலாசமாற்றத்தால் 21-10-78 இலேயே அவர்களுக்குக் கிடைத் திருக்கிறது. 31-10-78 இல் நூல் வெளியீடு என்று கடிதத்திற் குறிக்கப்பட்டிருந்தமையால் முதலியாரவர்கள் அவகாகம் போதாமை கருதி ஆய்வுரை செய்யவில்லை. அதுபற்றி அவர்கள் சுவாமிகளுக்கு எழுதிய பதில் கடிதத்திலிருந்து மேற் குறித்த பகுதி எடுத்துக்கொள்ளப்பட்டதாகும்.]

ஆ—ர்.

உ

சிவமயம்

பதிப்புரை

உடலுயிர் வாழ்வின் உறுதிப் பயனுவது சிவஞானப்பேறு. சிவஞானப் பேற்றிற்கு உகந்த சாதனம் சைவசித்தாந்த சாஸ்திரங்கள். அவை திருவுந்தியார் முதல் சங்கற்ப நிராகரணம் இறுதியாக உள்ள பதினுன்காகும். இவை தனியாகவுங் கூட்டாகவும் உயிராகிய தன்னையும் கடவுளாகிய சிவனையும் தன்னில் தானே கண்டறிதற்கு இன்றியமையாத ஆவலை ஊட்டவல்லன. இவற்றின் பண்பும் பயனும் இதுவேயாதல் ஒரு தலை. அவ்வாற்ருன் நமது கலாச்சார பாரம்பரியத்தில் சைவ சித்தாந்த நூலறிவுக்கு முதன்மையான ஒரு ஸ்தானம் இருந்து வருதல் இயல்பே.

நம் முன்னேர் இதற்குப் பெருமதிப்பு வழங்கி சைவசித்தாந்த ஊற்றில் ஊறி, சைவத்தைப் பேணியும் பரப்பியும் வாழ்ந்திருக்கிருர்கள் என்பது அவர்களது வாழ்க்கை வரலாற்றிலிருந்து புலனுகிறது. நமக்கு முன்னைய தலைமுறையில் நம் நாட்டில் அறிஞர்கள் என வாழ்ந்தோர் அனைவரும் சைவசித்தாந்த விளக்கம் உள்ளவர்களாய் வாழ்ந்திருத்தல் குறிப்பிடத்தக்கது அதேசமயத்தில் நமது இன்றைய தலைமுறையினரை நோக்கும்போது அப்படிச் சொல்லுமளவுக்கு இல்லையே என அங்கலாய்க்க வேண்டியும் ஆகிறது.

''யாமிரப்பவை நின்பால்.
பொருளும் பொன்னும் போகமுமல்ல
அருளும் அன்பும் அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே''

பரிபாடல்

''செவ் வேற் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே''

திருமுருகாற்றுப்படை

என்ற பழந்தமிழ்க் குறிக்கோளெங்கே? இவை நிகழ்ந்து இரண்டாயிரம் ஆண்டு கடந்துவிட்ட இன்றைய குறிக்கோள் எங்கே?

இன்றைய நம்நாட்டுக் கல்விமுறை மாற்றத்தினுலும் மட்டுக்கு மிஞ்சி அதிகரித்து வரும் அன்ருட வாழ்க்கைத்தேவைகளின் தொல்லைகளினுலும் மேற்போந்தவாருன குறிக்கோள்க

ளில் சராசரி மனம் லயிக்க முடியாதிருப்பதாகவும் நேரம் போதா தாகவும் ஏதோ சொல்கிருர்கள். காரணத்தின் சரி பிழை எப்படி என்பதல்ல. கல்விமுறை மாற்றம். மேல்நாட்டு கலாச்சாரமோகம், அரசியல் அதர்மம், ஆன்மார்த்த சிந்தனை இன்மைக்கும் லயப் படாமைக்கும் அன்ருடத்தேவை அதிகரிப்புக்கும். மனவிரக்திக் கும் ஓரளவு காரணமாய் இருப்பதாலும் நம்மவர்கள் இதைச் சொல்லிக்கொண்டு 'முயல்விட்டுக் காக்கைப் பின் போவதா' என்பதே கேள்வி.

நல்லை, திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் வாராவாரம் நடை பெற்றுவரும் சித்தாந்த வகுப்பில் இப்படியான ஒரு விசாரம் சதா இருந்து வருகின்றது வருடங்கள் பல கடந்தும் இவ் இலவச வகுப்பிற் கூடியிருந்து சித்தாந்தங் கற்பவர்கள் குறிக் கப்பட்ட சிலர் மட்டுமேயாம்.

இக்கல்வி சிலரளவிலல்லாது மற்றும் பலர்க்கும் பயன்பட வைக்கும் நோக்கமாக இவ்வகுப்பினர் "ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீடம்" என்ற பெயரில் ஒரு சபையை அமைத்து சித்தாந்த நூல் ஒன்று வெளியிடும் முயற்சியை மேற்கொண்டனர். இச் சபை இந்நூற்குப் பதிப்பாளராம் பணியில் என்னை நியமித்துக் கொண்டது. நூல் விஷயங்களைச் சபை ஆலோசகர் ஒழுங்கு செய்து தந்துதவினுர்கள். இந்நூல் சிந்தாந்த சாஸ்திரங்களிற் கூறப்படும் உண்மைகளை உணர்ந்து தெளியவும், வேதாந்த சித்தாந்தத்தின் பேதாபேதத்தை விளக்கவும், ஒன்றற்கொன்று ஆதாரமும் படியும் போல அமைந்து ஒன்றன் ஒன்று எவ்வகை யில் மேம்பட்டது என்பதை உணரவும் உதவும் என்பது எமது நம்பிக்கை குமரகுருபரரின் மேல் வரும் பாடல் இதை ஒருவாறு தெளிவாக விளக்குவதை உணரலாம்.

" ... நல்லருட் திறக்தால் நம்பி நீயே
பல்லுயிர்த் தொகுதியும் பயன்கொண்டு உய்கெனக்
குடிலை என்னும் தடவயல் நாப்பண்
அருள்வித்திட்டுக் கருணை நீர் பாய்ச்சி
வேதம் என்னும் பாதபம் வளர்த்தனை
பாதபம் அதனிற் படுபயன் பலவே, அவற்றுள்
இலைகொண்டு உவந்தனர் பலரே. இலை ஒரீத்
தளிர் கொண்டு உவந்தனர் பலரே தளிர் ஒரீத்
அரும்பொடு மலர் பிஞ்சு அருங்காய் என்றிவை
விரும்பினர் கொண்டு கொண்டு உவந்தனர் பலரே
அவ்வாறு உறுப்பும் இவ்வாறு பயப்ப
ஓரும் வேதாந்தம் என்று உச்சியிற் பழுத்த
ஆரா இன்ப அருங்கனி பிழிந்து
சாரங்கொண்ட சைவ சித்தாந்தத்
தேன் அமுது அருந்தினர் சிலரே"

சைவ சித்தாந்த அறிவின் அவசியத்தை இந்நூலாசிரியர் ''இம்மைக்கும் சித்தாந்தம் அம்மைக்கும் சித்தாந்தம்'' என்னும் தலைப்பில் நன்கு ஆராய்ந்து விளக்கஞ் செய்துள்ளார்கள். மற்றும், இந்நூலின் தாற்பரியம் ''இந்நூல்'' என்ற தலைப்பில் நூலாசிரியரால் கையாளப்பட்டுள்ளது.

சபை அங்கத்தவர்கள் தம் பொறுப்பாகவும் பிறரிடம் சேர்த்தும் இப் பதிப்புக்கு வேண்டிய பொருள் தொகையில் ஒரு பகுதிக்கு வகைசெய்தார்கள். மீதிப் பொருட்கு வழிதேடிச் சமய பக்தியும் விசுவாசமுமுள்ள அன்பர்கள் சிலரை நாடவேண்டியவனாயினேன் என் சொல்லை ஏற்று மனங்கோணாது உதவி, என்னை மலர்வித்த அவ்வன்பர்களின் பெருந்தன்மை என்றென்றைக்கும் என்னாற் போற்றப்பெற வேண்டியதாகும்; இவ் வகையில் வாய்த்த பொருட்பலத்துடன் யாழ். ஆசீர்வாதம் அச்சகத்தாரை அணுகியபோது அவர்களும் பொருள் போதாக் குறையைப் பொருள் செய்யாது தாராள சிந்தையுடன் நூலை அச்சேற்றித் தந்திருக்கிறார்கள். அச்செலவில் மீதியாயிருக்கும் தொகையைக் கொஞ்சஞ் செல்லவிட்டுஏற்றுக்கொள்ளவும்ஏற்றுக் கொண்ட அவர்களின் தயவையும் நான் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன். இவ்வாறு நாம் எண்ணியவாறு நூற்பதிவு நிறைவுறத் திருவருள் கைதந்திருக்கின்றது. ''அளவிறந்தது அருள் சிவ! சிவ!! சிவ!!!.''

இந்நூலுடன் அச்சிட்டுச் சேர்க்க படங்களின் பிரதி உருக்களைத் தந்துதவிய பெரியார்கட்கும், ஆசியுரைகளும் மதிப்புரைகளும் வளங்கிய அருள் விளக்கமுள்ள அறிஞர்கட்கும் பொருள் உதவிய அன்பர்கட்கும் எனது மனமுவந்த நன்றி.

எங்கள் சபையின் முதல் வெளியீடாகிய இந்நூல், உருவில் சிறிய தாயிருப்பதைப் பொருள் செய்யாது இத்துறையில் எம்மை மேன்மேலும் ஊக்குங்கருணையை முற்கொண்டு, சைவ அன்பர்கள் இதனை ஏற்று ஆதரிக்க வேண்டுமென வேண்டிக் கொள்கின்றேன். இதன் குறை நிறைகளை உகந்த முறையில் எடுத்துக்காட்டும் அறிஞர் பெருமக்களுக்கும் எனது நன்றி கலந்த வணக்கம் உரியதாகும்.

இ. சுப்பிரமணியம்.
பதிப்பாசிரியர்,
ஈழத்துச் சித்தாந்த சைவ
வித்தியாபீடம்.

107, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.



கல்லா னிழன்மலை
வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர்
நல்லார் புனைவரே.

அம்மைக்கும் சைவ சித்தாந்தம் இம்மைக்கும் சைவ சித்தாந்தம்

சிறு குழந்தை ஒன்று தனக்குப் பசிக்கிறது என்னும், தனக்குத் தாகமாயிருக்கிறது என்னும். ஏன், பசிக்கிறது? ஏன் தாகமாயிருக்கிறது? என்று கேட்டால் அது பதில் சொல்ல அறியாது.

நாம் உடம்பிலுள்ள அவயவங்களினுல் ஓயாமற் தொழில் செய்து கொண்டிருக்கிறோம். கை, கால் முதலிய அவயவங்களினுல் நாமறியக்கூடியதாகத் தொழில் நடக்கிறது. அதே போல நாம் காணுமல் நம்முள் இருக்கும் அவயவங்களும் பல. அவை ஓயாமல் தொழில் செய்கின்றன. இதனுல், அவற்றின் சக்தி தேய்கிறது அதனை ஈடு செய்தற்காக உணவுப் பொருள்கள் தேவைப்படுகின்றன. பசியெடுத்தல் மூலமாக அத் தேவை உணரப்படுகின்றது. இப்படியுள்ளுறுப்புக்கள் இயங்குவதனுல உடலில் உஷ்ணமுண்டாகிறது. அதைச் சாந்திசெய்ய நீர் தேவையாகிறது. தாகத்தின் மூலம் அத்தேவையுணரப்படுகிறது. என்று பராயமுள்ளவர்கள் சொல்வார்கள்.

உள்ளுறுப்புகள் இயங்குவதை நீர் கண்டீரா? சக்தித் தேய்வை நீக்க உணவு உதவுவதைக் கண்டீரா? என்றுல் சாமானியமான பராயமுள்ளவரும் பதில் சொல்ல முடியாது. அதே போல், நாம் உண்டதற்கும், பருகியதற்கும் என்ன நடக்கிறது என்பதும் பொதுவாக நாமறியோம். உண்ட உணவு சீரணிக்கும் விதமும் அதன் சத்துக்கள் திரட்டிப் பிரிக்கப்படும் விதமும் சத்தாகிய அன்னரசம் வெவ்வேறு நிலைகளில் உடலின் வெவ்வேறு உறுப்புகளுக்குச் செலுத்தப்படும் விதமும், கழிவுப் பொருள்கள் அதற்குரிய கருவிகள்மூலம் பிரிக்கப்பட்டுப் பிரத்தியேகமாகத் தங்கவைத்து வெளியேற்றப்படும் விதமும் நாமறியோம். இத் தொழில்களிற் சம்பந்தப்படும் பல்வேறு கருவிகளினியல்பும் நாமறியோம். உணவின் ஒரு பகுதி இரத்தமாக, ஒரு பகுதி எலும்புக்குதவ, ஒரு பகுதி சக்கையாயிருப்பதும் நீரின் ஒரு பகுதி இரத்தத்துக்குதவ, ஒரு பகுதி பிராணனுக்குதவ ஒரு பகுதி கழி நீராவதும் நாமறியோம். நாம் மூக்குத்

தொளையால் உள் இழுக்கும் காற்று எங்கே போய்த் தங்குகிறது? என்னென்னத்துக்குதவுகிறது? எப்படி வெளியேறுகிறது? என்ப தொன்றும் நாமறியோம்.

ஆனல், உடற்கூற்று விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சி வன்மையால் இவற்றைச் சொல்கிருர்கள். நாங்கள் அறிகின்ருேம். ஒத்துக்கொள்கின்ருேம். இனி,

உடம்பில் சதா இயங்கிக்கொண்டிருக்கிறது — உயிர் என ஒன்று. அதன் சொரூபம் என்ன? அது பொருளோ பொருளல் லவோ? பொருளாயின் வடிவப் பொருளோ? வடிவமில் பொருளோ? அப் பொருள் உடலில் எப்படித் தங்குகிறது! உடலில் அது ஒரே நிலையாய்த் தங்கியிருக்கிறதோ? இடத்துக்கிடம் போக்குவரவு புரிகிறதோ? எந்த நேரமும் அதன் பிரகாசம் ஒரே தன்மை யாகத்தானுள்ளதோ? சில தருணங்களில் அது உடலில் இருக் கிறதோ இல்லையோ என்ற சந்தேகமும் ஏற்படும்படியாகிறதே? சற்று நேரத்தில் மீளவும் எங்கிருந்தோ வந்ததுபோல வந்து விடுகிறதே இந்தப்போக்குவரவு நிலை எப்படியெப்படி என்னென் னத்தைப்பற்றி நிகழ்கிறது?

உடலில் இயங்கும் உயிர் ஒருகால் சந்தோஷமாயிருக் கிறது, ஒருகால் துக்கமாயிருக்கிறது. ஒருகால் கோபவசப் படுகிறது. ஒருகால் காமவசப்படுகிறது. ஒருகால் பரபரப்படை கிறது. ஒருகால் சாந்தமாயிருக்கிறது. இவையெல்லாம் நிகழ்வது எதனுல்?

இப்படியான விசாரணைகளுக்கு உடற் கூற்று விஞ்ஞானி களும் பதில் கூறுர். இனி,

மனம் என்றும், புத்தி என்றும் சித்தம் என்றுமுள்ள உரு வமற்ற உட்கருவிகள் இருதயம், மூளை என்பவற்றைப் பற்றி யியங்குவதாக அறிகிருேம். இவை எப்படியியங்குகின்றன என்ருவது இவற்றின் சொரூப நிலை யாதென்ருவது நாமறி யோம். மனேதத்துவ நிபுணர்கள் இவற்றின் தொழிற்பாடுகளை ஒருவாறு சொல்கிருர்கள். ஆனல், இவற்றின் சொரூபங்களைப் பற்றியாவது இவை எப்படித் தோன்றுவன எப்படி ஒடுங்கு வன என்ருவது, இவை சித்துக்களோ சடங்களோ என்ருவது, இவற்றுக்கு மூலம் எதுவென்ருவது ஆதாரமெதுவென்ருவது அவர்கள் தெளிவுபடச் சொல்லக் கூடிய நிலை இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும்,

பஞ்சபூதங்களையும், அவற்றின் நுண்ணியற் கூறுகளையும் விஞ்ஞானிகள் விரிவுபட ஆராய்கிறார்கள். அவற்றின் முடிவாய சித்தாந்தங்களையும் அவ்வப்போது வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள், வெளியுலகப் படைப்புக்களில் அவை சம்பந்தப்பட்டிருக்குமாற்றையும், அச்சூழ்நிலையை மனித தேவைக்குப் பயன்படுத்து மாற்றையும் நுட்பமாக ஆராய்கிறார்கள். அத்தகைய ஆய்வின் மூலம் ஒலி, ஒளி என்பவற்றின் தோற்ற நிலைகளை அறிந்து ஒன்றை மற்றொன்றாக மாற்றி விந்தையான சாதனைகளையும் விளைக்கிறார்கள். ஆனால்,

இப் பஞ்சபூத நுண்கூறுகள் எங்கள் பஞ்சேந்திரியங்களாகிய மெய், வாய் கண், மூக்குச் செவி என்பவற்றிற் சம்பந்தப்படுமாற்றையும் அவைகளே அகப்பூதங்களாயும், புறப்பூதங்களாயும் நின்று நமக்கு அறிவு நிகழ உதவுந்தன்மையையும், நம்மிடத்தில் எழுத்தொலி தோன்றி விருத்தியடைந்து பேச்சாய் மலரும் நுட்பத்தையும் இவை சார்ந்த மற்றும் விஷயங்களையும் அவர்கள் கூறுகிறார்களில்லை.

எம் தோலில் பரிசம் என்ற ஒரு நுண்கூறு இருப்பதோ, செவியில் சப்தம் என்ற ஒரு நுண்கூறு இருப்பதோ மூக்கில் கிராணம் என்ற ஒரு நுண்கூறு இருப்பதோ நாவில் ரசமென்ற ஒரு நுண்கூறு இருப்பதோ கண்ணில் ரூபமென்ற ஒரு நுண்கூறு இருப்பதோ விஞ்ஞான அறிவின் தர்சனத்துக்கு அப்பாலாயிருக்கிறது. மேலும்,

வெளியுலகமாகிய பிரபஞ்ச விரிவில் உள்ள அண்டங்கள் புவனங்கள் கோளங்கள் கிரகங்கள் நக்ஷத்திரங்கள் போன்றவை பற்றிய விஞ்ஞான ஆராச்சியறிவு விரிந்து கொண்டிருக்கின்றது. அறிவு விரிய விரிய அவற்றின் தன்மைகளும் விரிந்து விரிந்து செல்ல காணப்படுவனவேயன்றி அறிவாராய்ச்சிக்கு அடங்கி அமைந்து வந்தபாடில்லையென்றே சொல்கிறார்கள். 'அறிதோறும் அறியாமை கண்டற்றால்' என்ற வள்ளுவர் வாக்கும் இதுவும் சமமாகத் தோன்றுகின்றன.

நாம் உன்னிப்பாகச் சிந்திக்க வேண்டியன இவை போற் பல்லாயிரம் விஷயங்கள் நம் அகத்தும் புறத்தும் உள. இவையெல்லாம் நமக்கு ஒரே உண்மையைத்தான் எடுத்துரைக்கின்றன. அதாவது, சொல்லாமற் சொல்கின்றன.

இங்ஙனம், மனித ஆற்றலுக்கும் மனிதருக்கிருக்கும் அறிகருவிகளுக்கும் ஆராய்ச்சிச் சாதனங்களுக்கும் எட்டாத உண்மைகள், எவ்வளவு எட்டி எட்டிப் பார்த்தாலும் எட்டுமெல்

லக்கு அப்பால் எட்ட எட்ட நிற்கும் எத்தனையோ உண்மை கள், எவ்வளவோ கனகாத்திரமான உண்மைகளாக இருக்கின் றன என்பைதையே இவை காட்டுகின்றன.

ஆனல்; அவையெல்லாம் எல்லாவற்ருலும் அறியப்படா தவையல்ல, அவற்றையெல்லாம் அறியும் வகையும் ஒன்றிருக்கின் றது என்றதெண்பு எங்கள் முன்னேர் வாயிலாக எங்களுக்குண்டு. எம் முன்னேராகிய மகாஞானிகள் அவற்றை அறிந்து சொல் லியிருக்கிருர்கள். பிறர் அறியும் வகையையும் உணர்த்தியிருக்கி ருர்கள். அவர்கள் கொள்கைப்படி உயிர்க்கு நிகழும் அறிவு தூல அறிவு சூக்கும அறிவு என இரு திறமாய் இருப்பதாக அறியப்படுகிறது.

உடலும், உடலிலுள்ள அறிதற் கருவிகளுஞ் சார்பாக அறியும் அறிவு தூல அறிவு. இவற்றின் தொடர்பினை நீக்கித் திருவருளாலறியும் அறிவு சூக்கும அறிவு. மேற்குறித்தவாருன உண்மைகளெல்லாஞ், சூக்கும அறிவுக்கே புலனுகும் தூல அறி வுக்கு அவை எட்டமாட்டா என்பது அவர்கள் கொள்கை. இச் சூக்கும அறிவு திருவருட்சார்பாக நின்று அவையெல்லாவற்றை யும் அறிதல் மாத்திரத்தில் அமைந்துவிடாது. அவையெல் லாவற்றுக்கும் ஆதார பூதமாயிருக்கும் இறைவனையும் அறியும். அறிதல் மட்டில்லாது அவனுடன் இரண்டறக் கலந்து நிற்கும் அத்துவித அனுபவமான சிவானந்தத்தையும் பெறும் என்கிருர் கள். அவ்வகைத் தகுதி பெற்ற மகான்கள் பலர் சரித்திரமறிய உலகில் வாழ்ந்திருக்கிருர்கள். நாமறியச் சமீப காலத்தில் நம் முன் வாழ்ந்துமிருக்கிருர்கள்.

இத்தகைய சூக்கும அறிவு நுண்ணுணர்வு என்றும் பெயர் பெறும். இந்த நுண்ணுணர்வினுற் பெறும் ஞானம் தத்துவ ஞானம். அந்த ஞானத்தையுணர்த்தும் நூல்கள் ஞான சாஸ் திரங்கள். அந் நூல்கள் அத்தகைய மகாஞானிகளின் படைப்புக் கள். அவர்கள் தம் சூக்கும உணர்வினுற் கண்ட கண்ட உண் மைகளே அந் நூற் பொருளாயிருக்கின்றன. அதனுல் அந் நூல்கள் கற்பார்க்குச் சூக்கும உணர்வைத் தூண்டுங் கருவி களாயிருத்தல் ஒருதலை.

உலகின் எல்லா நாடுகளிலும், எல்லாச் சமயத்தாரிடையி லும் தத்துவ நூல்கள் உள்ளன. ஒவ்வோர் வகையில் ஒவ்வோர் அளவில், சூக்கும உணர்வைத் தூண்டுமியல்பு ஒவ்வோர் தத்துவ ஞான நூலுக்கும் ஒவ்வோரளவு உண்டு. ஆனுல், அவற்றுட் பல, தத்துவ உண்மைகளை முற்ற முடியக் கண்டு கொள்ளா தனவாயிருக்கின்றன. கண்ட தத்துவங்களைத்தானும் அறிவுணர்

வனுபவங்களுக்குப் பொருத்தமான முறையில் அமைத்து விளக்க முடியாமலிருக்கின்றன. சமய தத்துவ ஞான நூல்களுள் இந்திய தத்துவஞான நூல்களுக்கு முதலிடமுண்டு. அவற்றுள்ளும் சைவ சித்தாந்தம் ஒன்று தவிர ஏனையவை, தத்துவ ஞான உண்மைகளைச் செம்பாகமாக எடுத்துவிளக்கவில்லை. இப்படி இருக்கின்றது இன்றைய உயர் மட்ட அறிவாராய்ச்சியாளர்களின் அபிப்பிராயம். அவற்றுட் சிலவற்றைக் கவனித்தல் நலமாகும்.

The unique position of Saiva Siddhanta in the history of thought is the fact that it expounds by careful reflection the systematic account of the process of cosmic evolution which attempts to comprehend the universe as a sum total of 36 categories. This exposition is no more metaphysical speculation but is a purely logical account on scientific principles - Theos Bernad.

அறிவியல் வரலாற்றில் சைவசித்தாந்தத்துக்குத் தனியான ஒரு இடமுண்டு. பிரபஞ்சத்தின் செவ்விய அமைப்புக்கும் அதன் சீரிய இயக்கத்துக்கும் உடனிலையாதாரமாயுள்ள சகல சாதனங்களையும் அது நுண்மையாக ஆராய்ந்து அவையனைத்தையும் 36 தத்துவங்களாக ஒழுங்கு படுத்தி விளக்கியுள்ளமை அதன் தனித்துவப் பண்பாகும். இத்தத்துவக் கோப்பு வெறும் தத்துவ வாய்பாடு அளவில் இல்லாமல் விஞ்ஞான அறிவியல் விளக்கத்துக்கும் தர்க்க ரீதியான ஆய்வியல் விளக்கத்துக்கும் ஏற்றதாயிருத்தல் குறிப்பிடற்பாலதாகும் என்கிறார் தியோஸ் பெர்னட் என்ற அறிஞர்.

The fact must be born in mind that in Tamil alone exist systematic, authoritative works on the Saiva Siddhanta whereas in Sanskrit not even a single Systematic work on the philosophy is to be met with, even though its principal tenets are found scattered with much that is rubbish in the Sankya, the yoga, The Nyaya, The Vaisesika and The Vedantha works. — Maraimalai Adigal.

தமிழ் மொழியில் மட்டுமே ஒழுங்குமுறையானதும், பிரமாணிக்கமுள்ளதுமான சைவசித்தாந்த நூல்கள் உள்ளன. சமஸ்கிருதத்தில் சாங்கியம், யோகம், நியாயம், வைசேஷிகம், வேதாந்தம் என்ற பலவேறு பெயர்களில் பலவேறு தத்துவ

நூல்களிலிருந்தும் அவற்றுள் ஒன்றேனும் சைவசித்தாந்தத்தைப் போல் ஒழுங்கு முறையான தத்துவ நூலாக அமையவில்லை. அவையெல்லாம் உதவாக்கரை நூல்கள் என்கிருர் மறைமலையடிகள்.

The Saiva Siddhanta philosophy is the choicest product of the Dravidian intelect. It is the most elaborate influential and undoubtedly the most intrinsically Valuable of all the religions of India. It is peculiarly The South Indian and Tamil Religion, Dr. G. U. Pope.

சைவசித்தாந்தம் திராவிட அறிவியல்நுட்பத்தின் உயர்தர படைப்பாக உள்ளது. இது மிக மிக விரிவானதும் நிரம்பிய செல்வாக்குள்ளதும், முடிநிலையுண்மையோடு மிக அந்தரங்கமாக அணுகி நிற்கும் அகமுகத் தொடர்ச்சி வாய்ந்ததுமாகும். இந்திய தத்துவ ஞானங்கள் எல்லாவற்றுள்ளும் இதுவொன்றே இத்தன்மையுள்ளதாயிருக்கின்றது. சிறப்பாக இது தென்னிந்தியத் தமிழ்த் தத்துவ ஞானநூல் என்று போற்றத்தகும் என்கிருர் வண. ஜி. யு. போப் என்னும் அறிஞர்.

இத்தகைய மெய்யறிஞர் கூறும் நல்லபிப்பிராயங்கள் சைவசித்தாந்தக் கல்விக்கும் நமக்குமுள்ள இயற்கையான தொடர்பைச் சுட்டிக்காட்டுகின்றன. இது தமிழினத்தாரின் முதுசொம் என்றதை நினைவூட்டுகின்றன. தமிழராகிய நமக்கு அதன்பேரில் இருக்கக்கூடிய உரிமையையுங் கடமையையும் எடுத்துணர்த்துகின்றன.

தமிழரின் சமயதத்துவ ஞானம் மட்டுமல்ல. அவர்களின் சாமானிய ஒழுகலாறும், வழிபாட்டு விதிமுறைகளும், ஏன்? அவர்கள் பாஷையும் சைவசித்தாந்த மயம் என்ற கருத்தும் சிறப்பாக மேல் நாட்டறிஞர்களாற் போற்றப்பட்டிருக்கின்றது. தமிழருட் பொதுமக்களின் நடைமுறையிலுள்ள சாதாரண பேச்சு வார்த்தைகளுக்குள்ளேயே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் நிரம்ப இருப்பதை அறிஞர் சுளை, சுளையாக எடுத்துக் காட்டுவார்கள். அது தனிவிஷயம். இங்கு விபரித்தற்கிடமில்லை.

இவ்வகையால், சைவசித்தாந்த அறிவு நம்மால் வருத்தியுந் தேடற்பாலது. கால நேரமின்மை முதலாய சம்பிரதாய பூர்வமான சாட்டுகளின் தடைகளை மீறி நின்று சம்பாதிக்கற்பாலது என்ற நிலை தெளிவாகிறது.

ஆனால், ஆத்மீக லாபத்துக்குத்தானே சைவசித்தாந்தம். அதைப் பின்பு பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்ற கருத்தும் பரவலாக நம் மத்தியில் இடம் பெற்றிருப்பதும் என்னவோ உண்மைதான். இத்தகைய கருத்து நிலை உண்மையியல்புக்கு விரோதமானது; துர் அதிஷ்ட வசமாக நம்மத்தியில் இடம் பெற்றுள்ளது என்பதைக் கவனத்திற் கொள்ளல் நன்று.

அதைக் கவனித்தற்கு முன்னோடியாகச் சைவ சித்தாந்தம் நமக்கென்ன சொல்கிறது என்ற சுருக்கமான விளக்கமொன்று அவசியமாகிறது. அது கூறுவன:-

(1) உடலுக்கு வேறாக உயிர் என ஒருபொருள் உண்டு

(2) அந்த உயிர்க்கு உள்ளாக இறைவன் என்னும் மற்றொரு பொருள் உண்டு

(3) உயிர்ப்பொருள் உள்ளிருக்கும் இறைவன் உணர்த்துதல் வழியாகத்தான் தனது உடற் கருவிகளை இயக்கிக்கொண்டு இவ்வுலகில் வாழ்கிறது

(4) உயிரின் உலகியல் வாழ்வுக்கு உடந்தையாக ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்கள் உள்ளன

(5) திருவருளால் இவற்றைச் சார்ந்து உயிர்வாழும் கட்டம் அவ்வளவும் பந்த நிலை அல்லது பெத்த நிலை.

(6) திருவருளால் இவற்றின் தொடர்பு நீங்கிச் சூக்கும உணர்வாகிய ஞான உணர்வினால் கடவுளை அறிந்து அடைந்து அனுபவிக்கும் நிலை மோக்ஷநிலை அல்லது சுத்தநிலை

(7) இச் சுத்தநிலைப்பேறு ஒவ்வோருயிர்க்கும் உரியது. ஆனால், அதனதன் பக்குவ காலத்தில் மட்டும் அதற்கதற்கு வாய்ப்பது.

(8) இவ்வகையிற் சம்பந்தப்படும் பொருள்கள் மூன்று. அவை பதி, பசு, பாசம் என்பன.

(9) உண்மை அறிவியற் கோட்பாடுகளுக்கு முரண்படாத வகையில் இம் முப் பொருளியல்புகளை உரிய முறையிற் கற்றுக் கேட்டுத் தெளிபவர்களே மெய்ஞ்ஞானம் பெறுவர். அவர்களே மேல்கதிக்கும் வீடு பேற்றிற்கும் உரியர்.

(10) வீடு பேறு என்பது உயிர் தன் சீவத்தன்மை கழிந்து சிவத்தோடு ஏகரசமாய் நின்று அநுபவிக்கும் ஆராத ஒரு பேரின்ப நிலை.

இவையும் இவற்றின் உள் விரிவுகளுமே சைவ சித்தாந் தங்கூறும் விஷயங்கள், இவற்றை அறிவதன் மூலம் ஒருவன் தன்னையறிந்தவனாவான். தன்னையறியும் அறிவும் தலைவனாகிய இறைவனையறிதலோடேயே நிகழும். இந்த அறிவு நிலையே அறிவுக்கெல்லாம் உயர்நிலையறிவாகும். இந்த அறிவு நிலையை எட்டாவிடில் அறிவுக்குப் பயன் எதுவுமில்லை. 'கற்றதனாலாய பயனென்' என்ற செய்யுளின் மூலம் இக் கருத்துத் திருக்குறளில் முத்திரீகரணம் (முத்திரையிடல்) செய்யப்பட்டிருக்கிறது.

இத்தகைய அறிவுநிலை அறிந்த அளவிலேயே முத்தியைத் தந்து விடுவதில்லை. யாம் முன் குறிப்பிட்டவாறு, இந்த அறிவு நிலை ஒருவனிடத்து மோக்ஷ நிலைக்கின்றியமையாத சூக்கும உணர்வை வளர்க்கும். அதன் பெறுபேருகப் படிமுறையாக நிகழும் ஆன்ம விழிப்புப் பெற்ற உயிரை அதனுள் கலப்பினால் ஒன்றாயிருக்கும் இறைவனே, பக்குவமறிந்து, குருவாய்த்தோன்றி ஆட்கொண்டு, வீட்டின்பம் கொடுப்பன் என்பது முடிபு.

இவ்விதத்தில் ஒருவர் சைவசித்தாந்தங் கற்று உண்மையில் முத்திப்பேறு கூடுதற்கிடையில் எத்தனை, எத்தனையோ பிறப்புக்கள் எடுக்க வேண்டியிருக்கும். ஆனால், அப் பிறப்புக்கள் ஒவ்வொன்றும் மேல் மேல் திருத்தமுற்ற பிறப்புக்களாகவே அமையும். ஒவ்வோர் பிறப்பிலும் குறித்த சூக்கும உணர்வின் பலாபலனை உயிர் பெற்றுக்கொண்டேயிருக்கும்.

எந்த ஒரு பொருட்கும் அது சூக்கும நிலையிலுள்ளபோது இருக்கக் கூடிய வீறும் விறலும் அதிசயிக்கத்தக்க அளவுக்கு அதிகாதிகம் என்பார்கள். ஒரு குறிக்கப்பட்ட அளவு தண்ணீர் தான் என்ன சாமர்த்தியம் பண்ணியும் அசைக்க முடியாத ஒரு இயந்திரத்தை அதேயளவு தண்ணீரின் சூக்கும நிலையாகிய நீராவி இயக்கிவிடுவதைப் பார்க்கிரும். தூல உணர்விலும் பார்க்கச் சூக்கும உணர்விற்குளதாகும் ஆற்றலின் அதிகத்தரம் இத்தகையதாயிருக்கும். ஆகவே, சைவ சித்தாந்த அறிவுணர்வு பெற்ற ஒருயிரின் மேன்மேற் பிறப்புகளில் அதன் அறிவாற்றல் செயலாற்றல்களில் விசேடங்காணப்படுதல் இயல்பே. அன்றியும்,

சைவசித்தாந்த அறிவுணர்ச்சியுள்ள ஒருவர் மட்டுமே தன் உயிரின் அந்தரங்கச் சூழ்நிலைகளை அறிதல் சாலும். முற்றாக அறியாவிட்டாலும் ஒரு அளவிலாவது; சிறப்பாக அறியாவிட்டாலும் ஒரு பொது அளவிலாவது தன் சூக்கும உணர்வின் தரத்திற்கேற்ப அந்த அறிவு அவர்க்கு வாய்த்தல் சாத்தியமே. பந்த நிலை வாழ்வில் அகப்பட்டிருக்கும் தான் அதற்கு உடந்தையாயுள்ள தனது ஆணவ, கன்ம, மாயா விகாரங்களினாலே மயக்

கப்படுந் தன்மை அவற்குப் புலனுகாமற் போகாது. அவற்றின் சார்பினுல் காமம், குரோதம், லோபம், மோஹம் முதலிய அந்நிய இயல்புகளுக்குத்தான் அடிமையாகுந்தன்மையும் அவர்க்குப் புலனுகாமற்போகாது. இத்தகைய தீய இயல்புகளைத் தன்னிடத்திற் காணும் வாய்ப்புள்ளவர் படிப்படியாக அவற்றை விலக்கியொழுகத் தலைப்படுதல் தப்பாது. இவ்வகையிலேயே ஒருவருக்கு அகச் சீர்திருத்தம் வாய்ப்பதாகும். தனிப்பட்டவரின் இத்தகைய அகச் சீர்திருத்தமே புறச்சீர்திருத்தத்துக்குக் காரணம். அதுவே சமூகச் சீர்திருத்தத்துக்குங் காரணம். தனிவாழ்விலுஞ்சரி சமூக வாழ்விலுஞ் சரி அகச் சீர்திருத்தத்தின் பங்கு அசாமானியப் பொறுதி வாய்ந்தது. மேலும்,

சைவசித்தாந்த அறிவுணர்ச்சியில்லாத ஒருவர் உயிராகிய தன் இயல்பையும் அதனுள்ளுயிராகிய கடவுளியல்பையும் கற்பனை பண்ணக்கூட இயலாதிருக்கும். அந்நிலையில் கடவுள் வழிபாடே அவருக்கு யதார்த்தமாக வாய்த்தல் துர்லபம். வழிபாட்டு நிலையங்களாகிய ஆலயங்களில் நிகழும் கிரியாம்சங்களின் தத்துவ உண்மைகளை விளங்கிக்கொள்ளும் தத்துவம் அவர்க்கு லபித்தலில்லை. அத்தகையோர் அர்ச்சகராயிருக்கும் பட்சத்தில் அங்கு சுவாமி சாந்நித்தியமே சோபித்தல் கஷ்டமாகும். இன்னும்,

நாங்கள் கடவுள் வழிபாட்டிற் பேறடைதற்கெனவே அமைந்தவை நம் திருமுறைகள். அவை சைவ சித்தாந்தக் கருவூலங்கள். சைவசித்தாந்த அறிவு விளக்கில் விளங்கும் வரைக்கும் அவற்றின் பொருள் வெளியாயிருக்காது. மறையாகவேயிருக்கும். தமிழ்மறை என்றே அவை பெயர்பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

தன்னைப்பற்றிய பாசங்களின் தொடர்பு நீங்கிய ஆன்மா சிவரூபத்தின் தொடர்பில் தன்னை அறியும். இது ஆன்ம தரிசன நிலை. அந்தகாரமாகிய ஆணவ இருளில் ஒரு விடிவு புலப்படும் நிலை இது, இந்த நிலையின் விருத்திப்பாடாக, ஆன்மா சிவதரிசனத்தின் தொடர்பில் தன்னை நன்ருக விளங்கும். முன்னைய நிலை ஆணவ இருளில் விடிவு புலப்படும் நிலை. ஆனுல், இப்பின்னையநிலை விடிவு ஏற்பட்டே விடும் நிலையாகிறது. திருவாசகத்தில் திருப்பள்ளியெழுச்சியும் திருவெம்பாவையும் இருக்கின்றன. ஆலயங்களில் திருப்பள்ளியெழுச்சி முன்னும் திருவெம்பாவை பின்னும் படிக்கப்படுகின்றன. முன்னையது விடிவு புலப்படும் வைகறை வேளையிலும். பின்னையது பொழுது புலரும் உதயவேளையிலும் நிகழ்கின்றன. முற்காட்டிய சித்தாந்த தத்துவப் பொருள் விளக்கத்தின் விளக்கிற் பார்க்

கும் போது தானே இவற்றை இந்த நேரத்திற் படிப்பதன் அர்த்தம் புலனுகின்றது, அந்நிலையில் மட்டுந்தானே புறவழி பாட்டுக் கிரியையாகிய அது நமது அகத்துக்கு எவ்வகையில் அர்ப்பிதமாகின்றது எனவும் தெரிய வருகிறது. பாட்டுக்களைக் கேட்டுக் கேட்டுக் கொண்டே அகத்தில் நாம் சிவரூபமும் சிவ தரிசனமும் பெறுவதாகப் பாவனையாவது பண்ணிக்கொள்ளாத பட்சத்தில் திருப்பள்ளியெழுச்சிப் பூசை, திருவெம்பாவைப் பூசைகளின் பலனை நாம் பெற்றுக் கொண்டதாகச் சொல் வதற்கில்லை. இன்னும் இப்படிச் சுட்டியுணருமளவிலும் விஷயம் முடிந்தபாடில்லை. இந் நிலைமையை உணர்வதற்குரிய முன் பின் விளக்கங்களும் இன்றியமையாதவையாம். சைவ சித்தாந்தக் கல்வி சாமானியமான ஆலய வழிபாட்டுக்கு எ துணை அவசியம் என்பதை இந்த வகையிற் சிந்தித்தல் நலமாகும். இனி, 'திருவே என் செல்வமே...... என்று தொடங்கி உருவே என் உறவே என் ஊனே ஊனின் உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற கருவே என் கற்பகமே கண்ணே கண்ணுட் கருமணியே மணியாடு பாவாய் காவாய்' என்று அப்பர் சுவாமிகள் பாடுகின்றுர். இதைப் பொது நோக்கிற் பார்த்தால் ஏதோ பல வேறு சொற்களாலான நெடுந் தொடரர்யிருக்கிறது சற்று உற்று நோக்கினுல் புறத்திலிருந்து அகத்தை நாடி நுணுகி நுணுகிச் செல்லும் ஒரு உணர்வொழுங்கு இதிற் புலனுகின்றது. நுணுகி நுழைந்து செல்லும் உணர்வு சூக்கும உணர்வு, நாம் ஏலவே கவனித்த சூக்கும உணர்வின் தொழிற்பாட்டை இங்கே காண்கின்றேம். ஏதாலுமொரு இலக்கைப் பற்றிக் கொண்டு அதிலிருந்து மேலும் மேலும் நுணுகி நுழைந்து நுழைந்து தெய்வ அநுபவத்தைப் பற்றும் அப்பர் சுவாமிகளது சூக்கும உணர்வின் தரம் இங்கே அறியப்படுகின்றது. இந்த அறிவே இப்பாட்டின் அநுபவப் பயன், இப் பயனைப் பற்றுதவரை இதைப்படிக்கும் நாம் அடைந்த பேறு எதுவுமில்லையாகும். சித்தாந்த உணர்வு நோக்கு இல்லாமல் இது கைகூடாது.

சித்தாந்தக் கல்வியுணர்விஞலே சூக்கும உணர்வு பெருகு கிறது. அறிவாற்றல் செயலாற்றல்கள் அதிகரிக்கின்றன. தனி மனித சீர்திருத்தம் ஏற்படுகின்றது. சமூக சீர்திருத்தம் ஏற் படுகிறது, ஆலய வழிபாடு பலன் படுகின்றது. தேவார திரு வாசகம் ஆகியவற்றின் அநுபவப்பயன் உணரப்படுகின்றது. என்ற உண்மைகளை இதுவரை கண்டோம், இன்னும் இவ் வகையில் உள்ள கருத்தம்சங்கள் பல, அவற்றில் ஒன்றைக் கவனித்து மேற் செல்வோம்.

தன்னுயிரின் பெருமானத்தை மட்டுமல்ல, தன்னுடலின் பெருமானத்தை மட்டிட்டறிவதற்கும் சித்தாந்த அறிவு இன்றியமையாதது. உடலின் சிக்கனபரமான அற்புத அமைப்பு நிலையை உணர்ந்து அதைப் படைத்த கடவுளின் அருமை பெருமையை உணர்விக்க நிற்கின்றது இவ்வுடம்பு. இதன் புறத்திலுள்ள அவயவ அமைப்பெல்லாம் இறைபணிக்கும் வழிபாட்டுக்கும் உகந்தவகையிற் காணப்படுகின்றன. இவற்றினும் பார்க்க உள்ளுறுப்புக்களின் அமைப்புமுறை அதிசயகரமானது. இவ்வுடம்பினுள்ளே மேரு மலையுண்டு, சிதம்பரம் உண்டு, காசி உண்டு, திரிவேணிசங்கமம் உண்டு. வெளியுலகிலுள்ள அவற்றின் பிரதியம்சமாக அவையிருக்கின்றன. முள்ளந்தண்டு மேருமலை. இருதயவெளி சிதம்பரம், புருவ நடுவிலுள்ள ஆக்ஞா சக்கரம் காசி. அதனயலே வந்து கூடி ஒன்றை ஒன்று குறுக்கிடும் இடா நாடி, கலா நாடி, பிங்கலா நாடிகளின் சங்கமம் திருவேணி சங்கமம் இப்படிச் சொல்வதெல்லாம் மாதிரிக்காகவோ பாவனைக்காகவோவாயிருக்கலாம் என எண்ணுதலிலும் அர்த்தமில்லை, மகான்கள் வரலாறுகள் இவற்றின் உண்மைத் தன்மைக்கு ஆதாரமாயிருக்கின்றன. சிவயோக சுவாமிகள் ஒரு முறை காசிக்குப் போய் அங்கிருந்தெழுதிய கடிதமொன்றில், ''நான் உங்கே கண்டதையேஇங்குங் கண்டேன்'' என்ற ஒரு வசனமுண்டு தமது யோக சாதனையினாலே தமது புருவ நடுவிற் கண்ட தரிசனம் இங்கே கண்ட காட்சி. திரிவேணி சங்கமத்தோடு கூடிய காசி க்ஷேத்ர தரிசனம் அங்கே கண்ட காட்சி. இது யாரும் மறுக்கொணாதது

குறித்த ஆக்ஞை என்றது ஆருதாரங்களில் ஒன்று இதுபோல் மற்றும் ஆதாரங்கள் ஐந்துள. நம் உடலில் ''விந்து'' என்ற சுத்தமாயா தத்துவத்தின் ஒரு அம்சம் மிக அந்தரங்கமாயிருக்கிறது அதைப் பற்றிக் கொண்டு குண்டலினிசக்தி என்ற சிவசக்தி சொரூபித்து மேல் மேலெழும் ஒரு வாய்ப்புமிருக்கிறது அவ் வாய்ப்பை அறியக் குருவினருள் வேண்டும். குருவருள் பெறுதற்கு இருவினையொப்பு முதலிய உயர் பண்புகள் வேண்டும், அதற்குச் சித்தாந்த ஞான உணர்வு வேண்டும். இவ்வாற்ருல் அவ்வாய்ப்பை அறியும் ஒருவர் தமது பிராணயாமம் புலனடக்கம் முதலிய சாதனைகளால் குண்டலினி சக்தியை உருப்பட்டெழுச் செய்யும்போது அது பாம்பு மண்டலமிட் டெழுவது போலெழும். 'ஆடுபாம்பே ஆடுபாம்பே' என்று பாம்பாட்டிச் சித்தர் ஆட்டிய பாம்பு இந்தப் பாம்பேதான். சிவன்கோவில் மூலஸ்தானத்தில் சிவலிங்கத்தைச் சுற்றிப் படமெடுத்து மேற்கவித்து நிற்கக்காணும் பாம்பு இந்தப் பாம்பேதான். இந்தச் சிவலிங்க அமைப்பு தன் உடலில் மூலாதாரம்

என்ற ஆதாரத்தில் சிவயோகி ஒருவர் கண்ட காட்சியின் பிரதி ரூபமே என அறிதல் தக்கது.

இத்தகைய குண்டலினி எழுந்து தொழிற்படும் போது அதன் பிரபாவத்தினுலே ஆதாரங்கள் ஒவ்வொன்றும் தொழிற் படும். மிக நுண்ணிய அற்ப நரம்பு முடிப்புக்களாயிருந்த அந்த ஆதாரங்கள் பிரமாண்டமான தாமரை வடிவங்களாய் விரியும். அவற்றில், உயிருணர்வு பொருந்திப் பொருந்தி நின்று தியானமும் பூசனையும் பண்ணப் பண்ண அங்கங்கு தெய்வமூர்த்தங்கள் தோன்றித் தோன்றி உயிர்க்கு அருள் சொரி யும். இவ்வகையில் மேல் நோக்கிய உயிர் பிரமரந்திரமாகிய உச்சி நடுந்தொளைக்கும் அப்பால் உயர்ந்தெழும்பி அங்கு தரிசனமாகும் பரமசிவப் பொருளோடு ஒன்றுபடும். இத் தகைய ஒன்றுபடுதல் சிவயோகம் ஆகும். சித்தாந்த அறிவு ணர்ச்சியின் தொடர்பாக வருங் குருவருளால் கைகூடும் இச் சிவயோகப் பேற்றுக்கு ஆதாரம் இவ்வுடம்பே. உயிரின் ஈடேற் றப் பணியில் உடம்பின் பங்கு எவ்வளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்ற விளக்கம் ஏற்படும்போது தானே ஒருவன் தன்னுடம்பின் பெறுமானத்தைத் தானறிபவன் ஆகிறுன், இப் பேறு, சைவசித்தாந்தக் கல்விப்பேறு, 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்ற திருமூலர் திருமந்திரத்தின் அனு பவப்பயன் இனித்தானே விளங்கும்.

சித்தாந்தங் கற்பதனுல், அந்த அறிவுணர்ச்சி பெறு வதனுல் அம்மைக்கு மட்டுமல்ல இம்மைக்கும் பேறுண்டு. மோக்ஷப் பேறுமட்டுமல்ல வாழ்க்கைப் பேறுகளும் பல உண்டு.

உலக இன்பங்களைத் துறக்க விரும்புவர், அத்துறவுக்குக் காலமும் நேரமுஞ் சாட்டி அதனைப் பின்போடாமல் இயன்ற அளவுக்கு முன்னதாகவே துறக்க வேண்டும் என்கின்றுர் திரு வள்ளுவர். அதற்குக் காரணமும் அவரே சொல்கின்றுர். 'துறந்த பின் ஈண்டியற் பால பல' — உலக இன்பங்களைத் துறந்த பின்னும் இறுதிப் பலனுக மோட்சமடைவதன் முன் னுமாக உள்ள இடைப்பட்ட கால எல்லையில் இவ்வுலகிலேயே அத்துறவி அடைதற்குரிய பேறுகள் பலவாகும் என்பது அவர் கூறுங் காரணம்.

"வேண்டின் உண்டாகத் துறக்க துறந்தபின்
ஈண்டியற் பால பல" என்பது செய்யுள்

இங்கு நாம் ஆராயுங் கருத்துக்கும் இதற்கும் நிரம்ப ஒற்றுமையுண்டு. துறத்தலுக்கும் மோட்சமடைதலுக்கும் இடைப் பட்ட காலத்தில் ஒரு துறவி பெறத்தகும் பேறுகள்

பல என்கின்றூர் அவர். சைவ சித்தாந்தக் கல்வியுணர்வு பெறு தலுக்கும் முத்திப் பேற்றுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஒருவர் பெறத்தகும் பேறுகள் பல என்கின்றேம் நாம். அப் பேறுகளை விரும்பினுல் ஏற்கனவே துறவை மேற்கொள்க என்கின்றூர் அவர். நாமும் அப்பாணியிலேயே, ஏற்கனவே சைவசித்தாந்தத் தைக் கற்க என்கின்றேம்.

சைவ சித்தாந்த அறிவுணர்வு பெற்றவர் சைவ சித்தாந்தி என்ற மதிப்புக்குரியர். சைவ சித்தாந்தி மனித சாதியில் தனிச் சாதி. சைவ சித்தாந்தத் தூய்மை ஒரு தனித் தூய்மை. சைவ சித்தாந்த வாய்மை ஒரு தனி வாய்மை. சைவ சித்தாந்த ஞான வீறு ஒரு தனி வீறு.

சிவயோக சுவாமிகளிடத்தில் நாம் கண்டு மகிழ்ந்த தூய்மை சைவ சித்தாந்தத் தூய்மையின் முழுமலர்ச்சிப் பொலிவு நிலை. அவரிடங் கண்ட வாய்மை, ஞான வீறுகளும் அத்தகையனவே.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சேர். பொன். இராமநாதன் முதலிய மேதாவிகளிடத்தில் இருந்தனவாக நாமறியும் நேர்மை வாய்மை அறிவு வீறு எல்லாம் சைவ சித்தாந்த உணர்வின் பிரகாசமாகவேயமைந்தவை. அவர்களின் செயல்களிற் காணும் திட்ப நுட்ப இயல்புகளுக்கும் மந்திர சக்தி போன்ற ஆற்ற லுக்கும் நாம் வேறு காரணம் எதுவுங் காண்டலியலாது.

எவராயினுஞ்சரி இங்கு வாழுங் காலமெல்லாம் பிறருக் குப் பயன்படக்கூடிய உத்தம அறிவாற்றலோடும், செயலாற்ற லோடும் வாழ வேண்டும். வாழ்க்கையொழிந்தால் மனிதப் பிறப் பின் ஒரே இலட்சியமாகிய முத்திப்பேற்றை அடையவேண்டும். இதுவே. உண்மையான வாழ்விலட்சியம். வாழ்க்கை வாழ்வதற்கே என்று சொல்வார் சொல்லிக்கொள்ளட்டும். அது நமக்கல்ல.

முற்றும்.

'சதசத்' ஆராய்ச்சி (1)

(18-10-77 இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது)

நமது காட்சிக்கும் கருத்துக்கும் விடயமாகிக்கொண்டிருக்கின்றது உலகம் என ஒன்று. இவ்வுலகம் ஆக்கப்படுவதும் அழிக்கப்படுவதுமாயிருத்தலால் இதற்குக் கர்த்தா ஒருவர் உளர் என்பது பெறப்படும். கர்த்தா என ஒருவர் இல்லாமல் காரியம் என ஒன்று இருத்தல் இயலாது என்பது பிரசித்தமான ஒரு விதி எனில், அக்கர்த்தா யார் பொருட்டாக இதனை ஆக்கி அழித்துக் கொண்டிருக்கின்றார்? இதனை விசாரிக்கும் போது மற்றும் ஒரு பொருள் இருத்தல் தெரியவரும். மாயை என்ற பாசத்தின் விளைவாயும் ஆக்கியழிக்கப்படுவதாயும் உள்ள இவ்வுலகம் பாசம். இதை ஆக்கியழிக்குங் கர்த்தா கடவுள். அங்ஙனம் ஆக்கியழித்தலாற் பயன் பெறுவது உயிர் என முப்பொருளுண்மை இதனாற் பெறுகின்றோம். இம் முப் பொருள்களின் இயல்புகள் தம்முள் வேறுபாடுடையன.

கடவுள் என்ற பொருள் நம்முடைய காட்சிக்கும் கருத்துக்கும் அப்பாற்பட்டது. மற்றொன்றின் செயற்பாட்டுக்கும் அகப்படாமல் தானேயாய் நிலைத்திருப்பது. இத்தன்மைகளைக் கருதி அதனைத் 'தத்' என்றும் 'சத்' என்றும் வேதம் குறிப்பிடுகின்றது. எமது அளவைப் பிரமாணங்களுக்கு அப்பாற்பட்டதாயிருத்தலின் அது 'தத்'. தானேயாய் நிலைத்த பொருளாதலின் அது 'சத்'.

பாசம் நமது காட்சிக்கும் கருத்துக்கும் ஒருவாற்றான் அறியப்படும் பொதுவியல்புடையது. என்றென்றும் கடவுளின் தொழிற்பாட்டுக்கு விடயமாய் உள்ளது. அது தானேயாய் நிலைக்கும் பொருளுமன்று. ஆதலின் அது கடவுள் தன்மைகள் அல்லாத தன்மைகளுடையதாய் 'அசத்' எனப்படுகின்றது.

உயிர் எப்படியும் பாசத்தோடு சம்பந்தப்பட்டேயாகவேண்டியநியதியுடையது. தன் மல நீக்கங் காரணமாகக் கடவுளின் அநுக்கிரக நிக்கிரகங்களுக்கிடனாவது. என்றும் சடமாகவேயிருக்கும் பாசத்தினியல்புக்கு வேறாக தான் என்றும் சித்தாகவேயிருப்பது. இருந்தும் அநாதி கேவலம் என்ற தன் பூர்வநிலையில் ஆணவத்துக்குள்ளேயே முற்றும் அழுந்தி மைக்குழம்பினுள் விழுந்த மாணிக்கம் போலக் கிடக்கும்போது 'அசத்' தென்றே கருதி விடக் கூடிய ஒரு நிலையை எய்தியிருப்பது. பின் காலகதியில் இறைவனருளால் மலநீக்கம் பெற்றுச் சுத்தபுடமிட்டதங்கம் போலக்

கடவுளைச் சார்ந்திருக்குஞ் சுத்தநிலையில் சத்தேயாய் இருப்பது. இங்ஙனம் இந்த இரு நிலைக்கும் உட்படுந் தன்மையதாய் இருத்தல் ஒன்று. இந்த இரு நிலைக்கும் இடைப்பட்ட நிலையாகிய சகல நிலையில் அசத்தைச் சார்ந்து அசத்தையறியும் வாய்ப்பும், சத்தை அறிதற் கான வகையில் முயலும் வாய்ப்பும் ஆகிய இருதன்மையும் உடைய தாய் இருத்தல் ஒன்று. இவ்விருதிறத்தாலும் 'உயிர்' 'சதசத்' எனப்படும்.

எனவே '**சதசத்**' என மேற் குறித்த தொடர் ஒன்றே 'சத்' 'அசத்' என இரு மொழியாய்ப் பிரிக்கப்படும் நிலையில் முறையே கடவுள் பாசம் என்ற இரண்டையும் தனித் தனி உணர்த்தியும் பிரிக்காமல் ஒருமொழியாய்க் கொள்ளும்போது உயிரை உணர்த் தியும் நிற்கக் காண்கின்றோம்.

இத் தொடர் மெய்ப் பொருள் அறிவாராய்ச்சித்துறையில் முக்கிய இடம் வகிப்பது. அதனால் இதனை மேலும் விரித்து விசாரித்தல் பயனுடைத்தாகும்

'சத்' என்ற, வட சொல்லுக்கு இருப்பது (existing) உள்ளது (being) என்ற இரு பொருளும் உண்டு. இதே சொல் ('ந' வின் திரிபாகிய) அ' என்ற இடைச்சொல் சேர்ந்து வரும்போது 'அசத்' என நிற்கும். இந்த இடைச்சொல் சந்தர்ப்பத்துக்கேற்ற வாறு எதிர்மறைப் பொருளும் அன்மைப் பொருளும் உணர்த்தக் கூடியது. 'சத்' என்றால் 'இருப்பது' என்று பொருள் செய்து கொண்டு 'அ' வையும் எதிர்மறை உணர்த்தியதென்று கொண் டால் 'அசத்' என்ற சொல் 'இல்லாதது' என்று பொருள்தந்து விடும்.

மெய்ப்பொருள் ஆராய்ச்சியாளர்களில் ஒரு பகுதியார் இவற்றுக்கு இப்படியே பொருள் கொண்டுவிட்டார்கள். 'சத்' என்றதனாற் குறிக்கப்படும் கடவுள் ஒன்றே இருக்கும் பொருள் 'அசத்' என்றதனாற் குறிக்கப்படும் பாசம் என்பது இல்லாத பொருள் என்பது அவர்கள் கொள்கையாயிற்று. பின்னை, உயி ரைப்பற்றி என்ன சொல்கிறீர்கள் என்று கேட்டால் அப்படித் தனியாக ஒருபொருள் இல்லை என்பார்கள்.

எல்லோருமறிய எங்குங் காட்சிப்படும் உலகமாகிய பாசம், என்பது ஒன்று இருக்கிறதே! எல்லா உயிர்கட்கும் பலவிதமான அனுபவங்கள் அதனால் நிகழ்கின்றனவே! அதனை இல்லாத பொருள் என்றால் பொருந்தாதே என்றால், அது வெறுந் தோற்றம் மாத்திரமே, பொருளாகச் சொல்ல எதுவுமில்லை என்பார்கள். இல்

லாத ஒன்றுக்குத் தோற்றமிருத்தல் எங்ஙனம்? என்று கேட்டால் ஏன்? சிலவேளை கயிற்றில் பாம்பு தோன்றுவதில்லையா கானலில் நீர் தோன்றுவதில்லையா? என மறித்து வினவுவார்கள். பாம்புத் தோற்றத்துக்கும் நீர்த் தோற்றத்துக்கும் தனித்தனி கயிறும் கானலும் ஆதாரமாயிருந்தனவே. அது போல என்றால் நீர் குறிப்பிடும் இத் தோற்றத்தித்திற்கும் ஆதாரம் ஒன்று இருக்க வேண்டுமே என்னில், அது பிரமந்தான் என்பார்கள். பிரமம் அப்படித் தோன்றுமென்றல் பொருந்தாதே. பிரமம் சித்துப் பொருள் உலகஞ் சடப்பொருள், பிரமமே தோன்றுகின்றதெனில் சித்தா யல்லவோ தோன்ற வேண்டும். அது சடமாகத்தோன்றல் இயல்பாகாதே என்றால் பிரமம் சித்துப் பொருள்தான். ஆனால் அதன் மாயாசக்தி எங்கள் பார்வைக்கு அப்படிச் சடவடிவாகக் காட்டிக்கொண்டிருக்கிறது என்பார்கள்.

இனி உண்மையுண்மையாக உடல் தோறும் உலாவுவதாய்க் காணப்படுகிறதே உயிர் என ஒன்று. அது நாமறிய உடம்பிலி ருந்து இயங்குகிறது ஒரு காலம். உடலில் இன்புறுகிறது ஒரு காலம், துன்புறுகிறது ஒருகாலம், தினசரி விழிப்பு உறக்கம், பேருறக்கம் என்ற வெவ்வேறு அவஸ்தைகளுக்கும் உட்படுகின் கின்றதே! அப்படியான உணர்வுப் பொருள் வெவ்வேறுடலில் வெவ்வேருயிருக்கின்றதே! அப்படியிருந்தும் நீங்கள் அது ஒரு தனிப் பொருளல்ல என்கிறீர்களே என்று கேட்டால் பிரமந்தான் அதுவும் என்பார்கள். இன்ப துன்ப சனன மரண நிலைகளுக்கு அப்பாற்பட்டதல்லவோ பிரமம். அது அவற்றினுக்குட்பட்டு அப்படி வரவேண்டுவதேன்? என்றால், பிரமம் அவிச்சையோடு கூடி யதால் அப்படி ஆயிற்று என்பார்கள். தனக்கென ஒன்றும் வேண்டாததல்லவோ பிரமம். அது அவிச்சையை வேண்டி அடைந்ததேன்? என்றால் அது அதன் விருப்பம் என்றோ விளை யாடல் என்றோ பதிலிறுப்பார்கள்.

இப்படியான கருத்து நிலைகளுக்கு மாறுபட்டது சைவ சித்தாந்தம். உள்ளது போகாது இல்லது வராது என்ற சத்காரிய வாதமே சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியின் அடிப்படை. அதன் பிரகாரம் கடவுள், பாசம், உயிர் என்ற மூன்றும் தனித்தனி யான உள்பொருள்கள் என்பது சைவ சித்தாந்தக் கொள்கை. அதனால், 'சத்' — இருக்கும்பொருள். 'அசத்' — இல்லாதபொருள் என்ற கருத்தை அது அங்கீகரிப்பதில்லை. அத்தகைய விளக்கம் சுருதி, யுக்தி அநுபவ நிலைகளுக்குப் பொருந்தாது என்பது அதன் துணிபு.

அதனுல் 'சத்' என்பதற்கு உள்ளது என்றே சைவ சித்தாந்தம் பொருள் கொள்ளும். உள்ளது என்ற தமிழ்ச் சொல்லுக்கு இருவிதமான பொருட்சாயல் (Shades of Meaning) வழக்கில் உண்டு. இருப்பது என்பதொன்று. உண்மைத் தன்மை அதாவது உளதாந் தன்மை என்பதொன்று. அவற்றில் பிந்திய பொருளே சைவ சித்தாந்தத்திற்கு அங்கீகாரமானது. அத்துடன், முன் காட்டியவாறு 'அ' என்ற இடைச்சொல்லுக்குரிய இரு பொருளில் எதிர்மறைப் பொருளைவிட்டு அன்மைப் பொருளையே, அது தழுவுகின்றது. அதனுல், சைவ சித்தாந்த நோக்கில் 'சத்' — உளதாவது, 'அசத்' — உளதல்லாதது என்று பொருள் அமையும். சிவஞான போதம் ஆருஞ் சூத்திரம் இரண்டாவது சூர்ணியின் கண் 'அதுவே சத்தாயுள்ள பிரமம்' என மெய்கண்டார் — குறிப்பிடுவது காணலாம். இத் தொடர்க்குப் பொருளுரைக்கும்போது, உரைகாரராகிய சிவஞான முனிவர், சத்தாய் என்ற அளவில் விடாது உள்ள என்ற சொல்லுஞ் சேர்த்துச் சொல்லப்பட்டதற்குக் காரணம் விளக்குகிருர். 'சத்' என்னும் வடமொழிக்குப் பொருள் இன்னதுதான் என்று காட்டுதற்காகவே மெய்கண்டார் உள்ள என்ற சொல்லையுஞ் சேர்த்துச் சொல்லியுள்ளார் என்பது அவர் தரும் விளக்கமாகும். குறித்த இருவர் கூற்றும் குறித்த சொற்களின் (சத், அசத்) உண்மைப்பொருள் முறையே, உளதாவது உளதல்லாதது என்றல்தான் என்பதற்குச் சிறந்த ஆதாரமாகும்.

''பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும்

மருளானும் மாணுப் பிறப்பு'' — என்பது திருக்குறள் மெய்யுணர்தல் அதிகாரத்து முதற் செய்யுள். இதில் பொருள் என்பதற்கு மெய்ப்பொருள் என்றும் பொருளல்ல என்பதற்கு மெய்ப்பொருளல்லாதவை என்றும் உரையாசிரியராகிய பரிமேலழகர் பொருள் விரிப்பர். இச் சொற்களுக்குப் பரிமேலழகர் விரிக்கும் இப்பொருளும் 'சத்' 'அசத்' என்பவற்றுக்குச் சைவ சித்தாந்தங் கொள்ளும் பொருளும் ஒரு தன்மையனவே. இக் குறளுக்குச் சைவ சித்தாந்த பரிபாஷையில் உரை கூறுவதானுல்,

அசத்துப் பொருளைச் சத்துப் பொருளாகக் கொள்ளும் மயக்கத்திஞல் மாட்சிமைப்படாத பிறப்பு உண்டாம். என்றே கூறிவிடலாம். அதனுல் குறட் பொருள் எவ்வகையானும் பாதிக்கப்படமாட்டாது.

சைவ சித்தாந்தம் உள்ள பொருள் என்பதும் இங்கு மெய்ப்பொருள் என்பதும் ஒன்றே. உள்ள பொருள், மெய்ப்பொருள்

செம் பொருள் என்ற மூன்றும் 'சத்' என்றதன் பொருளாதற்கு ஒத்த உரிமையுடையவை; அவ்வாறே உள்பொருளல்லாதது, மெய்ப்பொருளல்லாதது, செம்பொருளல்லாதது, என்ற மூன்றும் 'அசத்' என்றதன் பொருளாதல் அமையும். அது அங்ஙனமாக.

'சத் ஏவ சோம்ய இதம் அக்ர ஆசீத்'

சோம்யனே (சித்தமழகியோனே) 'சத்' என்ற இதுவே ஆதியில் இருந்தது என்பது ஓர் சாந்தோக்ய உபநிடத வசனம். இங்கு 'சத்' என்ற சொல், இருப்பது என்ற கருத்தில் வழங்கப்பட்டதில்லை என்பதற்கு இவ் வாக்கியத்திலேயே ஆதாரமுண்டு. இருந்தது என்னும் பொருள் தருதற்கு ''ஆசீத்' என்ற வினைமுற்றுச்சொல் இங்கிருக்கக் காண்கின்றோம். அஸ்— இரு. ஆஸீத்—இருந்தது. இவ்வினைமுற்று,வாக்கியத்தின் பயனிலை. எது இருந்தது என்ற வினாவுக்கு விடையாக வருகிறது 'சத்' என்ற சொல். அச்சொல் இவ்வாக்கியத்தின் எழுவாய். சத் அசீத்' என எழுவாயும் பயனிலையுஞ் சேரும்போது செம்பொருள் அல்லது மெய்ப் பொருள் இருந்தது எனப் பொருள்படுதல் தானே பொருத்தமாவது! இன்னும்,

'சக்தி சிவ: சத் சப்த ப்ரகிருதி ப்ரத்ய யௌ'

சத்தி சிவம் என்பன 'சத்' என்ற மொழியின் பகுதியும் விகுதியுமாம் என்ற அபியுக்தர் வாக்கியமும் 'சத்' ன்ற பதப் பொருள் விளக்கத்தின் பொருட்டே எழுந்திருப்பக் காண்கிறோம்.

இனி, மெய்ப்பொருள், செம்பொருள், என்ற இந்தச் 'சத்' இன் விளக்கம் இவ்வாறு பதப் பொருள் காட்டுஞ் சொற்றன்மை யளவில் முற்றுக ஏற்பட்டுவிடுதற்கில்லை. பொருள் தன்மை யாலும் விளக்கம்பெற வேண்டும்.

''சத் மூலா : சோம்ய இமா : சர்வா: ப்ரஜா:
சத் ஆயதநா : சத் ப்ரதிஷ்டா : ''

இந்தப் படைப்புகளெல்லாஞ் சத்தை மூலமாகக் கொண்டவை. சத்திலேயே தங்கியிருப்பவை. சத்தினலேயே நிலைபெறுபவை

என்பது சாந்தோக்ய உபநிடத மந்திரங்களிலொன்று. இச்சுலோகம் 'சத்' பதப்பொருளின் தத்துவ ரீதியான உண் மையை நன்கு புலப்படுத்துகின்றது. அனைத்திற்கும் மூலமாதல்

தாங்குநிலையாதல், நிலைபெறுத்துஞ் சாதனமாதல் என்ற மூவகைத் தன்மைகள் 'சத்' இல் அடங்குவதை இங்கு காண்கின்றோம். இது இப்படியிருக்க, 'சத்' என்பதற்கு இருப்பது என்றுமட்டும் பொருள் கொண்டுவிட்டாற் போதுமா! இதற்கு மெய்ப்பொருள் செம் பொருள் எனக் கண்ட அர்த்தம் மிக விவேககரமானது, உபயோகரமானது எனலாம்.

இங்ஙனம். உளதாந்தன்மை, மெய்ப்பொருளாந்தன்மை, செம்பொருளாந்தன்மை உள்ளது 'சத்' என இத்துணையுங் கண்டோம். இனி தானல்லாத ஏனைப் பொருள்களுக்கும் இதுவே உளதாந் தன்மையைத் தருகிறது என்ற விளக்கம் வேதமந்திரங் களிலும் புராணச் செய்திகளிலும் வெளிவந்திருப்பதை அவதா னிப்போம். அதுவும் இந்த 'சத்' பொருள் தன்மையை நன்கு தெளிவிப்பதாக அமையும்.

1. 'ய ஆத்மதா பலதா'

எவர் ஆத்துமத் தன்மையை அருளுகின்றாரோ எவர் பலத்தை அருளுகின்றாரோ

2. யேன த்யௌ ருக்ரா ப்ருத்வீ சத்ருஹ்லா'

எவரால் விசும்பு உக்கிரமாயிருக்கிறதோ எவரால் பூமீ திடமாயிருக்கிறதோ

3. 'கஸ்மை தேவாய ஹவிஷா விதேம'

(அந்தத் தேவனை விட்டு) வேறெந்தத் தேவனை ஹவிசு கொண்டு வழிபடுவோம் — இவை ருக்வேதம் 121 ஆம் சூக்தத் திற் சில பகுதிகள். இவை கூறுவதென்? இந்த 'சத்' பொருள் இல்லாத பட்சத்தில் உயிர்க்கே உயிராந் தன்மை இருக்காது என்கிறது முதன் மந்திரம். விசும்புக்கு உக்கிரத்தன்மையும் பிருதிவிக்குத் திடமாந் தன்மையும் இருக்கமாட்டா என்கிறது இரண்டாம் மந்திரம்.

'சத்' எனும் இப் பொருள் இருந்து ஏனையவற்றுக்குப் பொருளாந்தன்மை (**Factuality**) யை நல்காத அளவில், உயிர்களுஞ் சரி உலகப் பொருள்களுஞ்சரி இருந்தும் இல்லாதவையாகவே ஆகிவிடும் என்பது இதன் தாற்பரியம். இதைப் பார்க்கும்போது. ஆஹா! இதுவன்றோ 'சத்' என்ற எண்ணம் உதிக்கிறது. இப் பொருண்மையைப் புலப்படுத்துங் கந்தபுராண வரலாற்றுண்மை யொன்றை இங்கே கவனிப்போம். இறைவன் திருக்கைலாசத்தில்

ஒரு நாள் ஒரு கணம் தாமே தம்மையிழந்திருக்கும் யோக நிலையை ஒரு திருவிளையாட்டாகக் கொண்டார். தேவர்க்கும் மனிதர்க்கும் மற்றும் பல்வேறுயிரினங்களுக்கும் எத்தனையோ யுகங்களாகக் கூடிய அவ்வொரு கணத்தில் உலகம் பட்ட அவலத்தைக் கந்தபுராணம்மேருப் படலம் வகைவகையாய்ச் சித்திரிக்கின்றது. அக்காலம்எந்தஉயிருக்காயினும் புசிப்போ பொசிப்போ போகமோ நிகழவில்லையாம். உலகம் அப்படியே இருந்தது இருந்தபடி ஸ்தம்பித்துவிட்டதாம்! 'சத்' இயல்பின் உண்மையைக் கந்தபுராணஆசிரியர் காட்டிய விதம் இதுவாகும்.

இவ்வாறெல்லாங் காணப்படவுள்ள எல்லாப் பொருட்சாயல்களையும் தழுவக் கூடியனவாய் 'சத்' என்ற சொற்குச் சிறந்த பொருளாய் அமையக்கூடியவாய் உள்ளன மெய்ப்பொருள் செம்பொருள் உள்பொருள் என்பனவேயாதல் ஒரு தலை அது செம்பொருள் ஆதல் பற்றி எவ்வித மாறுபாடுகளுக்கும் இடங்கொடுக்காதது. மெய்ப்பொருளாதல் பற்றி என்றும் ஒரு படித்தாயிருப்பது. உள் பொருளாதல் பற்றி என்றும் இருப்பதாகும். எனக் கொள்ளக் கிடத்தலினுல், — 'சத்' என்பது விகாரமின்றி ஒரு படித்தாய் என்றுமிருப்பதாகும் எனக் கொள்ளல் அமையும்.

Foot note :

1. வன்முலை யணங்கி னேரும் வானவர் யாருங் காமத்
   தன்மையும் புணர்ப்பு மின்றித் தளர்ந்தனர் வறிஞர்
   — தம்பால்

   இன்மைகொண் டோர்கள் செல்ல ஈவது கூடாவெல்லைப்
   புன்மையொடிருவர் தாமும் புலம்புறு தன்மையே போல்

'வல்' போன்ற (சூதாடு கருவிபோன்ற) தனங்களோடு கூடிய தெய்வமகளிரும் தேவர்களும் காம நுகர்ச்சியும் சம்போகமுமில்லாமல் தளர்ச்சியுற்றுர்கள். தரித்திரனுகிய ஒருவனிடம் மற்றெரு தரித்திரன் யாசிக்கச் சென்றபோது ஈதலும் ஏற்றலும் நிகழாமையினுலே இருவரும் சிறுமைப்பட்டு வருந்தியவாறுபோல இருந்தது இந்நிலைமை. அவனுக்கும் கொடுக்க இல்லாமை பற்றிய கவலை; இவனுக்கும் பெறமுடியாத கவலை.

[சிவபெருமான் பிரபஞ்சத்தை நடத்துஞ் சங்கற்பமின்றி யோகத்திலிருந்தமையால் விளைந்த விபரீதம் இது]

கந்தபுராணம், மேருப்படலம் செய். 20

'சதசத்' ஆராய்ச்சி (2)

(25-10-77 இல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பானது)

இனி, சைவசித்தாந்த அடிப்படைக் கொள்கைக்கிணங்கப் பாசமும் உள் பொருளே. அங்ஙனமாக, அதற்கு 'அசத்' என்று பெயரேற்பட்டதேன் என்பது கேள்வி. வாஸ்தவமாக அதுவும் உள்பொருளேதான். ஆனால் கடவுள் போல உள்பொருளன்று. 'சத்' என்று பெயர் பெற்ற கடவுட் பொருள் எவ்வித வேறுபாடுமின்றி ஒரு படித்தாய் என்றுமிருப்பது. இது அப்படியானதன்று. கடவுளுக்குளதாவது போன்ற மெய்ப்பொருள் தன்மை இதற்கில்லை. இது கடவுள் போலத் தானாகவே நிலை பெறுவதில்லை மற்றொன்றால் நிலை பெறுகின்றது. மற்றெதனையுந் தான் தாங்கி நிற்பதில்லை. மற்றொன்றினால் தான் தாங்கப் பட்டு நிற்கிறது. இது என்றும் ஒரு படித்தாய் இருப்பதில்லை. வெவ்வேறு திருப்பங்களில் வெவ்வேறு நிலைகளைப் பெறுகின்றது! அதனால் இதனை மெய்ப்பொருள் அல்லாதது என்பதில் தவறில்லை 'அசத்' என்ற இதன் பெயர் அப் பொருளிலேயே இடம் பெறுகின்றது.

ஆணவம், கன்மம், மாயை இவை மூன்றும் பாசத்தில் அடங்கும். ஆணவம் உயிரின் கேவல நிலையில் நன்றாகப் பெருகித் திணிந்து அதனை மூடிக்கொள்கின்றது. பின் சகல நிலையில் மெல்ல மெல்லச் சுருங்கி மெலிகின்றது. இறுதியான சுத்தநிலையில் தன் வலி முற்றாகக்கெட்டு விலகியே போய்விடுகின்றது.

கன்மம் கேவல நிலையில் உயிரிடம் தன் கைவரிசையைக் காட்ட முடியாதிருக்கின்றது பின்சகல நிலையில் வேண்டியவாறு தொழிற்பட்டுக் கிளைத்துப் பெருகி ஒன்றுக்காயிரமாய்க் குவிகின்றது. மேல்முத்தி நிலையில் அற்றுப்போய் விட்டொழிகின்றது.

மாயை கேவலநிலையில் தொழிற்படாதிருக்கின்றது. பின் சகல நிலையில் தநு, கரண, புவன, போகங்களாய் உருப்பட்டு வந்து உயிர்க்கு ஒரு வகையால் விளக்கமும் மறுவகையால் மயக்கமும் விளைக்கின்றது. அப்பால் சுத்த நிலையில் விட்டு விலகிக்கொள் கின்றது. இம் மாயையின் காரியமாகிய காட்சியுலகமும் ஒரு கால் தோன்றுகிறது. பின் சிலகாலம் நிலைபெறுகிறது. பின் ஒரு காலம் ஒடுங்கிப் போகின்றது.

ஆதலால் இவை என்றும் ஒரு படித்தாய் நிலை பெறுவன வாகமாட்டா. இந்த மும்மலமுஞ் சம்பந்தப்பட்ட யாதானு மோருயிரின் முத்தி நிலையில் அந்த உயிரைவிட்டு விலகிக் கொள்கின்றனவே தவிர முற்றாக கெட்டொழிந்து இல்லாத பொருள்களாகப் போய்விடவில்லை. முத்தியுறாத மற்றை உயிர் களையொட்டி அவை இருந்து கொண்டேயிருக்கின்றன. இனி, காட்சியுலகமும் தன் பிரளய காலத்தில் ஒடுங்கினதேயன்றி இல்லாமற் போய்விடவில்லை. அது விரிந்த நிலையில் தன் காரிய ரூபத்தில் இருந்தது ஒடுங்கிய நிலையில் தன் காரண ரூபத்தை எய்துகிறது. மரம் அழிந்தாலும் அம் மரத்தன்மை முழுவதும் அதன் வேரிலோ வித்திலோ அடங்கியிருப்பது போல இது நிகழ்கின்றது. ஆதலால், பாசம் என்பது, இல்லாதபொருள் என் றதனால் அசத்தெனப் பட்டதல்ல, என்றும் ஒரு படித்தாயிராதது என்பதனாலேயே அசத்தெனப் பட்டது என்கை தெளிவாகும்.

இப் பாசத்தினது அசத்துத் தன்மை மற்றொரு வகையா லும் புலனாகும். உயிரின் சகல நிலையிற் பாசப்பகுதி ஒவ்வொன்றும் திருவருள் துணை கொண்டு உயிரால் அறியப்படு கின்றது. அடையப்படுகின்றது, அநுபவிக்கவும்படுகின்றது. பிறகு முத்தி நிலையில் நிலைமை நேர்மாறுகின்றது. அந்த நிலை யில் உயிர்க்கு இவற்றால் ஆகக்கிடந்தது எதுவுமேயில்லை. அப்பர் சுவாமிகள் தாம் முத்தி பெறுந் தறுவாயில் தம்மை விலகித் தம் சூழலில் நின்ற பாசங்களை முன்னிலைப்படுத்தி ஏசித்துரத்திய காட்சி அவர் தேவாரத்தில் இடம்பெற்றிருக்கின்றது.

''பொய்ம்மாயப் பெருங்கடலுள் புலம்பாநின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள்
இம்மாயப் பெருங்கடலை யரித்துத் தின்பீர்க்
கில்லையே கிடந்ததுதான் யானேல் வானோர்
தம்மானைத் தலை மகனைத் தண்ணலாரூர்த்
தடங்கடலைத் தொடர்ந்தோரை யடங்கச் செய்யும்
எம்மான்றனடித் தொடர்பாலுழிதர் கின்றேன்
இடரிலேன் கெடுவீர் காள் இடறேன் மின்னே''

இது அப்பர் திருப்புகலூரில் அருளிய திருத்தாண்டகத்தில் ஒரு பாடல். புண்ணியங்களே! பாபங்களே செல்வங்களே! நீங்கள் எல்லாம் மாயக் கடலாகிய இப் பிரபஞ்ச வாழ்வை அரித்தரித்துத் தின்று சுவை கண்டவர்கள். அந்தச் சுவையு ணர்ச்சியினாலே இப்பொழுது இந்நிலையிலும் என்னைச் சூழு கிறீர்கள் போலும். உங்கள் யத்தனத்துக்கு என் சார்பில் சற்றும் இடமில்லை என்பதை அறிந்துகொள்ளுங்கள் தற்பொழுது யான்

முன்னைய திருநாவுக்கரசு அல்ல. இன்றைய இத்திருநாவுக்கரசு திருவாரூர்ச் சிவபெருமான் திருவடிக்காளான திருநாவுக்கரசு. இதை நீங்கள் அறிதற்கு நியாயமில்லை. ஆதலால்தான் சொல்கின்றேன். வீணில் அலையாமற் போய்விடுங்கள், என்பது இச் செய்யுளின் தாற்பரியமாகும். உமக்கு இனி என் சார்பில் இல்லையே கிடந்தது தான், கெடுவீர்காள்! இடறேன் மின் என்று சுவாமிகள் அவற்றைக் கையுதிர்த்துக் கடத்திவிட்டிருக்குங் காட்சியை இங்கே காண்கின்றேன்றேம். இத் தேவாரப் பொருளின் தத்துவப் பின்னணி யாது?

முத்திநிலையென்றால் உயிர் தன் வாழ்வின் இலட்சியத்தை அடைந்துவிட்ட நிலை; மேல், அதற்குச் சிவப் பொருளே பொருள். மற்றெதுவானாலும் பொருளேயல்ல. முன்னொருகால் அவை அதற்குப் பொருளாயிருந்தது. என்னவோ, உண்மைதான். ஆனால் இனி அஃதில்லை. இங்ஙனம் ஒரு கால் பொருளாயிருந்து மற்றொருகால் பொருளல்லா நிலைக்குத் தள்ளப்படுவதற்கு விஷயமாயிருப்ப தொன்று செம்பொருளாகாது. அதாவது 'சத்' ஆகமாட்டாது. அது 'அசத்தே அசத்.

இங்ஙனமாக, பாசம் என்ற பொருள் தன்னியல்பை முன்னிட்டு நோக்கும் பிறர் நோக்கிலும் அசத், முத்திபெறும் உயிரின் சுயநோக்கிலும் அசத், பரம்பொருளாகிய கடவுணெதிர் தான் நில்லாதொதுங்கும் தன்னியல்பிலும் அசத். ஒருவகையாலல்ல மூவகையால் இதன் அசத்தியல்பு நிரூபணமாகின்றது.

இதுவரை கடவுட் பொருள் 'சத்' ஆமாறும், பாசப் பொருள் 'அசத்' ஆமாறும் பற்றிக் கண்டோம். இனி, முப் பொருளில் மூன்றாவதாகிய உயிர் சதசத்' ஆமாறு காண்போம்.

முப் பொருள்களில் கடவுள் பரிபூரணம். எவராலாயினும் அல்லது எதனாலாயினும் அதற்கு ஆகவேண்டியது எதுவுமேயில்லை. ஆகவே பாசப் பொருள் கடவுளின் சுயதேவை கருதி அதற்கு வேண்டியதல்ல. இனி, பாசம் அறிவுணர்வற்ற சடப் பொருள். ஆதலால் சித்துப்பொருளாகிய கடவுளையறியும் யோக்கியதை அதற்கில்லை. கடவுளை அடைந்து அநுபவிக்வேண்டிய அவசரமும் அதற்கில்லை. எனில், இவ்விரண்டும் இவற்றின் வேறாகிய உயிருக்காகவே உள்ளன என்பது வெளிப்படை, இவையிரண்டும் உயிருக்கு இன்றியமையாதவையும் ஆம்.

உயிருக்குரிய மூன்று நிலைகளில் முதலாவதாகிய கேவல நிலையில், பாசங்களில் முதன்மைமிக்கதாகிய ஆணவம் உயிரின் சகசசம்பந்தியாகவே இருந்துகொள்கின்றது. சகலநிலையில் அந்த ஆணவ நீக்கஞ் சாட்டாக வந்து கூடும் மாயையுங் கன்மமும் அதன் உபகாரிகளாகின்றன. இங்ஙனம் கேவலம் சகலம் என்ற இரண்டில் மட்டுமே பாசம் உயிர்க்கு இன்றியமையாததாக, கடவுள் அதற்கு என்றும் எல்லா நிலைகளிலும் இன்றியமையாததாகின்றது கடவுள் உயிரோடு ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நில்லாதவரை உயிர்க்குக் கேவலமும் நிகழாது சகலமும் நிகழாது சுத்தமும் நிகழாது. கடவுளின் இன்றியமையாமை இத்தகையதாகும்.

இத்தன்மையில், பாசமாகிய அசத்தைச் சார்ந்து அசத்தை அறிதலும் கடவுளாகிய சத்தைச் சார்ந்து சத்தையறிதலும் உயிர்க்குளவாகும். இந்த இரண்டு நிலைகளுக்கும் ஆளாந்தன்மையால் உயிர் சதசத்' ஆகின்றது இந்தச் 'சதசத்' இயல்பு வேறு கோணங்களிலிருந்தும் நோக்கப்படலாம்.

இங்கே நாங்கள் உயிருக்குக் கேவல நிலை யென்கிறது. அநாதி கேவல நிலையை: ஒரு மகாசங்காரத்துக்கும் அடுத்து வரும் மகா சிருட்டிக்கும் இடைப்பட்ட காலத்தில் உயிரிருக்கும் நிலை அதுவாகும். அந் நிலையில் அதன் கேவலம் ஆணவ கேவலம் எனத் தனிப்பெயர் பெறும். அந்நிலையில் ஆணவம் மட்டுமே அதனோடிருந்தது. அந்த ஆணவம் உயிரைத் தனக்குள் அமுக்கிக்கொண்டிருந்தது. அது ஒன்று தவிர உயிரினது உத் ஜீவிப்பிற்குத் தேவையான மற்று எப் பாசத் தொடர்பும் அப்போது அங்கில்லை. காரிட்ட ஆணவக் கருவறையினுள்ளிட்ட கண்ணிலாக்குழவியைப்போற் கட்டுண்டிருந்த நிலை' என அந்நிலையைத் வர்ணிப்பர் தாயுமான சுவாமிகள். அந்நிலை, அதற்குச் சீவத் தன்மை இருந்தும் இல்லாத நிலையே. ஆதலின் அக்கட்டத்தில் உயிர்க்குப் பொருளாந்தன்மை சொல்வது உசிதமாகாதுபோலிருக்கும், பொருள் இருக்கிறதே தவிர, பொருளாந்தன்மை அங்கே புலப்பட்டதில்லை என்பதே விளக்கமாகும். அதனால் அங்கு அது பொருளல்லது எனவே எண்ணப்பட நிற்கும். அஃதாவது 'அசத்' என்றே சொல்லிவிடக்கூடியதாயிருக்கும்

பின், சுத்த நிலையில் மலமாசெல்லாம் நீங்கிவிடுகின்றன. சுத்தபுடமிட்ட பத்தரைமாற்றுத் தங்கம் போலாகிவிடுகின்றது உயிர். அந்நிலையில் நற்சார்பாகிய இறைவன் திருவடிச் சார்பினையும் பெற்றிருக்கின்றது. அதற்கு இனி 'இன்பமே எந்நாளுந் துன்பமில்லை. அப்பொழுது அது பொருளான பொருளாகவே எண்ணப்பட நிற்கின்றது. அதாவது அதன் பொருளாந்தன்மை

பிரகாசமாய் விடுகின்றது. இனி என்றுயினும் அது அந் நிலை யிலிருந்து மாறுபடமாட்டாது. என்றும் ஒரு படித்தாகவே யிருக்கும் ஆதலால் அந்நிலை அதற்குச் 'சத்' நிலையேயாம். இங்ஙனம் இரு நிலைகளுக்கும் ஆளாந்தன்மை இருத்தல் காரணத் தாலும் உயிர் 'சதசத்' எனப்படுகின்றது.

இனி மற்றொரு வகையானும் உயிர் 'சதசத்' ஆதல் காண் போம். கேவல நிலையும் சுத்த நிலையும் அல்லாத சகல நிலையில் உயிர்க்குத் தநு கரண புவன போகங்கள் கிடைக்கின்றன. இவற்றின் உதவியால் உயிர் தன்னைப் பந்திக்கும் பாசங்களின் இயல்பையும் ஒருபொது நிலையில் அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பிருக்கின்றது. அவற்றோடு கூடி வாழுங்காலம் முழுவதி லும் பல பல புவனங்களிலும் பலபல யோனிகளிலும் மாறி மாறிப் பிறந்து பலவேறு கன்மங்களையுஞ் செய்தும் அநுபவித் தும் வருகின்றது. அக்கன்மங்களுக்கிடையே எதிர்பாராத வகையால் விளையும் அபுத்தி பூர்வ சிவ புண்ணியமும் ஏதாவது செய் யும் வாய்ப்புக்கிட்டும். அதன் பலனாகப் புத்தி பூர்வமாகவே சிவ புண்ணியங்களை அறிந்து செய்யும் நிலை ஏற்படும். அவற்றின் பேறுபேறாக யாதானுமோர் பிறப்பில் மெய்ப்பொருளை நாடும் நல்லுணர்ச்சி கைவரப்பெற்றுச் சரியை கிரியை முதலாயவற் றைச் சார்ந்தொழுகும். அவற்றின் பெறுபேறாக ஞானகுரு வாய்க்கப் பெற்றுவிட்டால் உயிர்க்குச் சுத்த நிலை கைகூடி விடும். இந்தச் சுத்த நிலை கை கூடுதற்கு முன்னோடி முயற்சியாக அது செய்தனவெல்லாம் சத்தின் சார்பை முன்னிட்டு நிகழ்ந்தன வேயாம். அவையனைத்துஞ் சகல நிலையொன்றில்தானே இடம் பெறுவனவாம். இங்ஙனமிருப்பதால், சகல நிலையென்ற இவ் வொருநிலையிற்றானே அசத்தைச் சார்ந்து அசத்தையறியும் வாய்ப் பும் சத்தைச் சாரமுயலும் வாய்ப்பும் இருத்தல் பற்றி இவ்வொரு நிலையில்வைத்தே உயிரின் சதசத்தாம் இயல்பு அறியப்படுமாறும் உளதாகும். இங்ஙனம் இச் 'சதசத்' இயல்பை மூன்று வகையால் நோக்கினோம். இனி,

முற்குறிப்பிட்டவாறு, சதசத்' என்ற ஒரு தொடர்க் குள்ளே முப்பொருளும் அடங்கி நிற்கும் அமைவானது இம் முப் பொருளிருப்புப் பற்றிய, இதுபோன்ற மற்றோரியல்பையும் நினைவிக்கின்றது. அதனையும் இத் தொடர்பில் வைத்தே அறிதல் சுவாரஸ்யமாகும்.

'ஸத்' அஸத்' ஸதஸத்' என்ற இவை வேறுவேறான மூன்று பொருள்கள் எனினும் இடத்தாலோ காலத்தாலோ இவை வேறுபட் டிருப்பதில்லை. என்றும் ஒன்றாகவேயிருப்பவை. எனில், மூன்று

பொருள்கள் ஒன்றுயிருத்தல் எப்படியும் அசம்பாவிதம் ஆகுமே? என்பது கேள்வி. இவை உருவப் பொருள்களாயிருந்தால் மட்டுமே அப்படி அசம்பாவிதத்திற்கிடமாகும். இவை மூன்றும் அருவப்பொருள்களாயிருத்தலின் அப்படியொரு சங்கை நிகழ இடமில்லை. உருவப்பொருள்களின் நிலை கண்டித நிலை. அதாவது, இடத்திலோ காலத்திலோ ஒவ்வோர் பகுதியை வரையறைப் படுத்திக்கொண்டிருக்கும் நிலை. அருவப் பொருட்களின் நிலை அகண்டித நிலை, அது கண்டித நிலைக்கு நேர்மாறுனது. அதுவே வியாபக நிலை எனப்படுவது. எனில், அங்ஙனம் முப்பொருளும் வியாபகமாய் ஒருங்கிருக்க ஒன்றன் வியாபகத் தன்மை மற்ற தனுற் பாதிக்கப்படாதோ என்பதும் ஒரு கேள்வி அங்ஙனம் பாதிப்பு நிகழாத ஒருவகையிலேயே இறைவனின் பொதுவியல்பு அமைந்திருத்தல் இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

இறைவன் பொதுவியல்புகளாகச் சொல்லப்படுபவற்றுள் ஒன்று ஒன்றுய் நிற்றல். அவர் உயிர்கள் தோறுங் கலந்து அவை தாஞயும், உலகப் பொருள்கள் ஒவ்வொன்றுடனும் அதுவது வாயும் நிற்கும் நிலை இரண்டும் ஒன்றுய் நிற்றலில் அடங்கும் என்பது ஆகம உண்மை. இவ்வாற்ருல், சர்வவியாபியாகிய இறைவன் உயிரையும் உலகையும் தன் வியாபகத்துள் அடங்கக் கொண்டு தன்வியாபகத்துக்கோ அவற்றின் வியாபகத்துக்கோ பாதிப்பில்லா வகையில் நிற்பன் என்பது பெறப்படும்.

'என்னுளே உயிர்ப்பாய்ப் புறம் போந்து வந்து
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே' என்பது போன்ற திருமுறை உண்மைகள், இறைவன், உயிர்கள் விஷயத்தில் அவை தாஞய் நிற்குமாற்றை விளக்குவன.

'இரு நிலனய்த் தீயாகி நீருமாகி
இயமானுய் எறியுங் காற்றுமாகி
அருநிலைய திங்களாய் ஞாயிருகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி' என்பதுபோன்ற உண்மைகள், இறைவன் உலகப் பொருள்களுடன் அதுவதுவாய் நிற்கு மாற்றைத் தெரிவிப்பன.

சித்தாந்த அறிவிற்குப் பயன் திருமுறைப்பொரு ளுண்மையை உள்ளபடி அறிந்து தெளிதலே என்பர். அதுவும் இதனுற் பெறுதும்.

ஆணவ விசாரணை

பதி பசு பாசம் என்னும் மூன்றும் சைவசித்தாந்தத்தில் உள்பொருள்கள் ஆகும். இவற்றுள் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என முப்பொருட்கூட்டாயிருக்கின்றது, இம் முப்பொருட்கூட்டில் முதலிடம் பெறுவது ஆணவம்.

ஆணவ உண்மை

உயிர் வாழ்க்கையில் இருவேறு நிலைகள் அவதானிக் கப்படுகின்றன. உயிர் பாச பந்தங்களோடு கூடி உலகியற் சார்பாக வாழும் வாழ்க்கைநிலையொன்று. பாசபந்தங் கழன்று உலகியற் சார்பு கெட்டு சிவனே தஞ்சமாக வாழும் நிலை மற் றையது. முன்னையது பெத்தநிலை என்றும் பின்னையது முத்தி நிலை என்று பெயர்பெறும்.

பெத்தநிலையில் உயிரின் வாழ்வியற் போக்குகளை அவதா னித்தலில், நமக்குச் சிரமம் ஏதுமில்லை. அனைத்துவகை உயிர்க ளின் வாழ்க்கைப் போக்கிலும் பொதுப்பண்பாக உணரக்கிடப் பது ஒன்றுளது. எந்த உயிரிடத்தும் அதன் வாழ்க்கையின் எத்தத் திருப்பத்திலும் 'நான்' என்ற ஒரு முனைப்பும் 'எனது' என்ற ஒருபற்றின்பிடிப்பும் இருத்தல் பொதுப் பண்பாகும் 'நான்' என்ற இம் முனைப்பு அகங்காரம் என்ற பெயராலும் எனது என்ற பிடிப்பு மமகாரம் என்ற பெயராலும் வழங்குகின்றன. பேத்தநிலை வாழ்வு முழுமையிலும் உயிர்க்கு அவ்விரண்டும் நீங் காப் பண்புகளாயிருக்கின்றன. அவை இல்லாத பட்சத்தில், இங்கே வாழ்க்கை என ஒன்று இருக்கவே முடியாது என எண் ணுமளவுக்கு அவை இன்றியமையாப் பண்புகளாகவும் இருக் கின்றன. இந்த அகங்கார மமகாரத் தன்மைகள் யாவரிடத்தேனும் சற்று மந்தமாக இருக்கக்கண்டாலே அவரைத் தரமற்றவர், தகுதியற்றவர் என்று ஒதுக்கும் நிலை உலகியல் நோக்கில் இருக்கவே இருக்கிறது.

இந்தப் பாங்கில் நோக்கும்போது இந்த அகங்கார மமகா ரங்களும் வாழ்வியலின் அடிநிலை உண்மைகளிற் சேர்ந்தன வாகவே கருதக்கிடக்கின்றன. ஆதலின், இவை எவ்வாறிருக் கின்றன? எதனுலிருக்கின்றன? ஏனிருக்கின்றன? என்ற விசா ரணைகள் அவசியமானவையேயாம்.

இவ்விரண்டும் அனைத்துயிர்க்கும் பொதுப்பண்பாயி ருப்பன எனப்படினும் உயிருக்குயிர் அவற்றின் தரமும் தகுதி யும் வேறுவேறு. எந்த இரண்டுயிர்க்கிடையிலும் இந்த வேறு

பாடு துலாம்பரமாக அறியக்கிடத்தல் சர்வசாதாரணமாகும். இங்ஙனம் ஒவ்வோருயிரினிடத்தும் அதனதனியல்புக்கேற்ப இவை அமைந்திருக்குந் தன்மை அவ்வவ்வுயிரின் தனித்துவ இயல்பு (Individuality) எனப்படுகின்றது.

இனி காரண காரியக் கோட்பாட்டின்படி நோக்குகையில் இவை காரியங்கள் என்ற பகுப்பில் அடங்கும் எவையெவை பலவாயும் சடத்தன்மையுடையனவாயும் இருப்பனவோ அவையெல்லாம் காரியங்கள், என்பது ஒரு நியமம். காரியங்கள் என்றிருப் பனவற்குக் காரணம் ஒவ்வொன்றிருத்தலும் தவிர்க்கமுடியாத நியமமேயாம் இந்நிலையில், இந்த அகங்காரமமகாரங்களின் காரணம் என்ன? என்ற விசாரணை எழுகின்றது.

யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்'' என்பது திருக்குறள். இதில் யான்

எனது என்னுஞ் செருக்கு என்ற தொடர்க்கு உரைகூறும் பரி மேலழகர், யானென்றும் எனதென்றும் பற்றுச் செய்தற்கேது வாகிய மயக்கம் என்கின்றார். (மயக்கம் திரவியமல்ல, ஆதலால் மயக்கத்தைச் செய்வதாகிய ஆணவமே இங்கு செருக்கு எனப் பட்டது என்றல் சித்தாந்தரீதியான விளக்கமாகும்)

''யானென தென்ன நின்ற இருண் முழு திரித்திட்டெல்லாம் தானென என்னை வல்லே தன்னடியிருத்தி'' — தணிகைப் புராணம் நந்தியுபதேசப்படலம் 140. இச் செய்யுளில் யான், எனது என்ற காரியங்களின் காரணம் இருள் எனப்படுகின்றது. இந்தவகையில், அகங்கார மமகாரங்களின் காரணமாக ஒன்று இருத்தல் பற்றி எல்லோராலும் வெகுவாகச் சிந்திக்கப்பட்டிருக் கின்றது.

அது ஞான அபாவந்தான் என்றனர் வேதாந்தியரில் ஒரு சாரார். மாயையின் இரு சத்திகளில் ஒன்றாகிய ஆவரண சக்தி தான் அது என்றனர் அவருள் மற்றொருசாரார். அது அவிச்சை என்றனர் சாங்கியர் அது மாயை கன்மங்களின் கூட்டுறவுதான் என்றனர் ஐக்கியவாதசைவர், பாசுபதசைவர் என்போர். அது வேறெதுவுமல்ல உயிர்க்குணம் என்றார்கள் பாடாணவாதிகள். பிரமம் அவிச்சையோடு சேர்ந்ததால் விளையும் ஒரு பிராந்தி யுணர்வே அது என்றனர் மாயாவாதிகள்.

'நான்', 'எனது' என்பன உயிர்க்குணமென்றால் அவை உயிரைவிட்டு என்றும் நீங்காதவையாதல் வேண்டும். எங்கள்

தத்துவ ஞான அறிவியல் அநுபவம் அதற்கு எதிர்மாறுகப் பேசுகின்றது. யாம் மேலே கண்ட திருக்குறட் கருத்தும் தணிகைப் புராணக் கருத்தும் அவை ஒருகால அடைவில் நீங்குவன என்ற விளக்கத்தைத் தருகின்றன. 'செருக்கு அறுப்பான்', இருள் முழுதும் 'இரித்திட்டு' என்ற தொடர்கள் குறிப்பிடத்தக்கன. அவ்வாறு நிற்கவே (ஏகனுகி இறை பணி நிற்க) யான் எனது என்னுஞ் செருக்கற்று அரனது சீபாதத்தை அணையுமாகலான்' (சிவஞானபோதம் 10ஆம் சூத். 1ஆம்அதி. செருக்கு என்பது செருக்குக் கேதுவாகிய மலத்தைக் குறித்தலால் ஆகுபெயர் — உரை விளக்கக் குறிப்பு)

'நானென்ப தற்றுயிரொ டுனென்பதற்று' — திருப்புகழ்.

''ஊன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டென்உள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ''
—திருவாசகம்

'நிர்அஹங்காரோ நிர்மமோ பூத்வா சாந்திம் அதிகச்சதி' அகங்கார மமகாரமற்றுச் சாந்தியை (உயிர்) அடைகிறது — உபநிஷதம். இக்கருத்துக்கள் எல்லாம் இந்த அகங்கார மமகாரங்கள் உயிரில் நெடுக இருப்பன அல்ல என்பதை ஒரேமுகமாக ஆதரிக்கின்றன. ஆதலால் இவை சொந்தக் குணங்களல்ல என்பது வெளி.

இனி, இவற்றின் காரணம் ஞான அபாவம் என்ருல் பொருந்தாது. ஞான அபாவம் — ஞானத்தின் இன்மை. இன்மையாகிய ஒரு காரணத்திலிருந்தும் ஏதேனுமொரு காரியந்தோன்றும் என எவரும் ஒத்துக் கொள்ளார். காரணம் இன்மையெனிற் காரியமும் இன்மையே. குறித்த அகங்கார மமகாரங்கள் இரண்டும் உயிரின் பெத்தநிலை முழுவதிலும் நின்று பலன்படுவன என்று எங்களுக்கே நிதர்சனமாகத் தெரிகின்றது. இவை காரணமாகவே உயிர்க்குப் போக்திருத்துவம் (போகம் அனுபவிப்போனுந் தன்மை) இருப்பதாகவும் கொள்ளப்பட்டிருக்கின்றது. இத் தன்மையே உயிரின் ஆளுமையை (Personality) உருவாக்குவது என்றும் கருதப்படுகின்றது.

இதனுல் இவற்றைப் பிராந்தியுணர்வு எனத் தட்டிக் கழித்துவிடுதலும் முடியாது. மாயை என்பது இறைவன் உடைமையாயிருந்து அவனுல் உயிர்க்குச் சேர்க்கப்படுவது. ஆதலின், உயிரின் உடைமகள் போலுள்ள இவற்றின் காரணம் மாயை என்பதற்கில்லை. அன்றியும், கன்மம் என்பது இந்த

அகங்கார மமகாரங்கள் காரணமாகவே உயிரிடத்தில் வினை தோன்றும். ஆதலின் அவற்றின் காரியமாயுள்ள கன்மத்தை அவற்றுக்குக் காரணமென்றல் சாலாது. அவிச்சை என்பது ஒரு பொருளேயன்று. பிராந்தி என்பது போல்வதே அதுவும். பிராந்தி — மயக்கம். 'மருள், மயக்கம், அவிச்சை விபரீத உணர்வு என்பன ஒருபொருட்கிளவி'—திருக்குறள் 36. 1. — பரிமேலழகர் உரைக் குறிப்பு.

இதனால், குறித்த இவ்விளக்கங்களெல்லாம் சிலர் சிலரின் பிரதிக்ஞை (Hypothesis) என்றோ, கற்பிதம் (Supposition) என்றோ தான் மெய்யியல் அறிவாராய்ச்சி கண்டிருக்கின்றது. ஏது, உதாரணங்களால் நிரூபிக்கப்படாவிடில் பிரதிக்ஞை, என்றும் பிரதிக்ஞையாகவே இருக்கும். அது பொருளாகாது. கற்பிதத்துக்குக் காரண காரியவலு விருத்தல் சாலாது. மேற்கூறிய விளக்கங்களும் இக்கதிக்குட்பட்டனவேயாயின.

இது இங்ஙனமாக, இந்த அகங்கார மமகார நிலைகள் உயிரின் நன்மைக்கோ தீமைக்கோ? என்ற விசாரணையும் எழுகின்றது. உயிரின் நன்மைக்கேயானவை எனில் அவற்றின் காரணம் எதுவாயினும் ஆகட்டும் என்று இருந்துவிடுதல் கூடும். இங்கு நிலைமை வேறு. இந்த அகங்கார மமகார நிலைகளே உயிரின் வினைவிளைவுக்குக் காரணமாயுள்ளவை. உயிரினது எந்த ஒரு செயலின் கண்ணும் இவை சம்பந்தப்படுதலினாலேயே ஆகாமியந் தோன்றிச் சஞ்சிதமாகிப் பிராரப்தமாய் அநுபவம் நிகழ வருகின்றது. இத்தகைய வினைகளின் ஆர்ச்சிப்பும் அநுபவமும் தொடர் நிகழ்ச்சியாக நீண்டு உயிரின் பந்தநிலையை நீட்டித்துக்கொண்டிருப்பதற்கு இவைகளே காரணமாகின்றன. அந்த அளவில் இவை நன்மைக்கேதான் உள்ளன என்பதற்கில்லை. வினைப்பெருக்கம் பிறவிப் பெருக்கத்துக்கே ஏதுவாகின்றமையால் இது நன்மைக்குத்தான் என்று எப்படித் துணிவது? இன்னும் இவற்றின் அணைதுணையாக உயிரிடத்தில் தோன்றும் அநர்த்தங்கள் வெகுபலவாகின்றன. இவற்றுக்கெல்லாம் மூலமாயிருக்கும் இவ்வகங்கார மமகாரங்களின் காரணம் அறியப்படுதல் இன்றியமையாததுமன்றிச் சுவாரஸ்யமானதுங்கூட.

ஆணவமே காரணம் :

இதற்கு முந்திய பந்தியொன்றில், உயிரோ, கன்மமோ மாயையோ இவற்றின் காரணமாதலில்லை எனக் கண்டோம். கடவுள் இவற்றுக்குக் காரணமாதல் கூடுமோ என்று சந்தேகிப்பதற்கும் இடமில்லை, அது கடவுள் தன்மைக்கு நேர் விரோதமாகும். எனவே, மெய்யியல் அறிவாராய்ச்சியின் அடிப்படைத் தத்துவங்களாயுள்ளவற்றில் மேற்கண்டன போக எஞ்சி நிற்கும் ஆணவம் ஒன்றே இவற்றுக்குக் காரணம் எனத் துணிய வேண்டியிருக்கின்றது.

ஆணவப் பெயர்கள் :

ஸ ம்ருதயு பாசான் புரத : ப்ரஞ்ஞேத்ய

சோகாதிகோ மோதததே ஸ்வர்க்க லோகே''

அவன் (உயிர்) ஆணவத்தையும் மாயை கன்மங்களையும் முதலில் நீக்கிவிட்டு, துக்கத்தின் நீங்கிச் சிவலோகத்தில் மகிழ்கின்றான். என்கின்றது கடோபநிஷத்தில் ஒரு மந்திரம். (கடம். 1·18) ''இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள் நீங்கி — மாசறு காட்சி யவர்க்கு'' என்ற திருக்குறளிலும் இப் பொருள் மிளிரக் காண்கின்றோம்; உபநிடத சுலோகத்தில் 'மிருத்யு' என்ற பதமும் குறளில் 'இருள்' என்ற பதமும் ஆணவத்துக்குப் பெயராக இடம் பெற்றுள்ளன. இவ் வகையில் ஆணவத்தின் பெயர்களாக ஆகமங்களிலும் சித்தாந்த நூல்களிலும் இடம்பெற்றவை பல.

''பசுத்வ பசுநீகார ம்ருத்யு மூர்ச்சா மலாஞ்சனே :

அவித்யா வ்ருதி ருக் க்லானி பாப மூல க்ஷயாதிபி :

மிருகேந்திரம் 7 . 7

1. பசுத்வம் — உயிரைப் பாசத்தோடு கூடியதாகச்செய்வது
2. பசுநீகாரம் — உயிரின் அறிவை மூடியிருப்பது
3. ம்ருத்யு — உயிரைச் சீவிக்க வொட்டாது செய்வது
4. மூர்ச்சா — உயிரை மயக்குற்றுக் கிடக்கவைப்பது
5. மலம் — உயிரிடத்தில் அழுக்காந் தன்மையைத் தோற்றுவது
6. அஞ்சனம் — இருள்போல் உயிரைச் சூழ்ந்து கொள்வது
7. அவித்யா — உயிருக்கு அறியாமையைச் செய்வது
8. ஆவ்ருதி — உயிரறிவுக்கு உண்மைப் பொருட் காட்சி தோன்றாமல் மறைப்பது
9. ருக் — உயிரின் ஞானக் கிரியா வியாபகத்தைத் தடுப்பது
10. க்லானி — உயிர்க்குக் களைப்பு அசதி சோர்வு முதலானவற்றை உண்டாக்குவது

11. பாபமூலம் — பாபத்துக்குக் காரணமாயிருப்பது.

12. க்ஷயம் — உயிரின் ஞானக் கிரியா ஆற்றலைத் தேய்ப்பது

ஆணவம்

(i) உயிரின் அறிவு வியாபகத்தை ஒடுக்கி அணுவாஞற்போற் செய்வது.

(ii) அணு (உயிர்) வை இயல்பாகவே பற்றியிருப்பது.

[சகஜம் — உயிரிடத்து இயல்பாயுள்ளது.]

இவ்வகையில் மிருகேந்திராகமம் கொடுத்திருக்கும் பெயர்ப் பட்டியலி (1—12) லிருந்தே ஆணவ இயல்புகள் அதிகம் அவதானிக்கவுள்ளன. மேலும் இவ்வாகமத்தில் ஆணவம் பற்றிக் கூறப் பட்டவை வருமாறு :-

மிருகேந்திரத்தில் :

இந்த மலமில்லாவிட்டால் உயிர்க்குப் பரதந்திரியம் ஏற்பட இடமில்லை. பரதந்திரியம் உயிர் சுபாவமெனில் முக்தான்மாக்கள் என ஒரு பகுதியிருத்தல் யாங்ஙனம்? மலபந்தமே பரதந்திரிய காரணம் என்கை இதனுல் தெரிகிறது. பந்தமே ஆன்மாவிற்கு நித்தியமென்ருல் முத்திக்காக ஏற்பட்ட ஞானதி உபாயங்களெல்லாம் வியர்த்தமாகும். அநாதியான ஆத்மா ஆனது மலசத்தியாற் கட்டுப்படாவிடில் அது நித்தியமான, வியாபகமான சிற்சத்தியுடையதாயிருந்தும் போகத்தின் பொருட்டுக் கலை முதலிய மாயாதத்துவங்களையும் மோக்ஷத்திற்காகச் சிவனையும் நாடவேண்டுவதேன்? ஆன்மாவிற்கு ஆவரணமாக வந்த இம்மலமானது சைவாகமங்களில் அநேக பரியாய நாமமுள்ளதாகச் சொல்லப்படுகிறது. அது பசு சாஸ்திரஞ் செய்தவர்களுக்குத் தெரியாது. அம்மலமானது சர்வபிராணிகட்கும் ஒன்றே. அது அநாதியாயும் கனமாய்ப் பேதிக்கக்கூடாததாயும் மகத்தாயும் ஆத்மாக்கள் தோறும் தத்தம் பரிபாககாலத்திலழிகின்ற அநேக சத்திகளுள்ளதாயுமிருக்கும். இம்மலம் ஆன்மாக்கட்கு அநாதியேயுளது. அப்படியல்ல இடையில் வந்ததெனில் வந்ததற்கு நிமித்தஞ் சொல்ல வேண்டும். நிமித்தமில்லாமலே வருமென்ருல் முக்தான்மாக்களையும் மறைப்பதாக வேண்டும். அங்ஙனேல் மோக்ஷப்ரயத்தனம் வீண்போனதாகும். அம்மலம் ஜடம், ஜடமாகவும் அநேகமாகவுமுள்ளதொன்று உற்பத்தியுள்ளதாதல் வேண்டும். அங்ஙனமின்மையின் இது ஏகமேயாம். ஆனுல் எல்லா

ருக்கும் ஏககாலத்தில் முத்தியேற்படக் காணுமையினுலே அவ்வவ் வாத்மாக்களோடு தனித்தனி தொடர்புகொள்ளும் அளவிறந்த சக்திகளுடையது என்றுகொள்ளவேண்டும். இறைவன் சக்தியாகிய திரோதானமும் இந்த மல சக்திகளையதிஷ்டித்து அநுவர்த்திக்கிற (பின்னிற்கிற) படியால் பாசம் என்னும் பெயர்க்குரியதாயிற்று. ஈஸ்வர சத்தியானது தனக்குத் திரோதான அதிகாரமிருக்கும் வரையில் அந்த மல சக்திகளைப் பரிணமிக்கச் செய்துகொண்டு, அநுக்கிரஹ ரூபமான ஞானம் பிரகாசிக்குந் தருணம்பார்த்து அநுக்ரஹ சக்தி ஆய்விடுகிறது.

சேதனம் அசேதனம் என்ற இருவகைப் பிரபஞ்சமும் ஈஸ்வரனது ஆட்சியிலுள்ளனவே. அவ்வகையில் இரண்டையும் அனுக்கிரஹிக்கவேண்டிய பொறுப்பு அவர்க்குளதாகும். அந் நோக்கில், அவர் தன் சத்தியால் மல சக்திகளைப் பரிணமிக்கச் செய்கின்ருர் என்ருலும் அது அந்நேரம் உயிரின் அநுக்கிரகத் துக்குரியதாக இல்லை. இந்நிலையில் ஈஸ்வர சக்தியைச் சர்வாநுக் கிரகிகா என்பதெப்படி? அன்றியும், உயிருக்குப் பாதகமான ஆணவ சக்திகள் பரிணமிக்க உதவுதல் அநுக்ரஹ லக்ஷணத் துக்குப் பொருத்தமாகாதே! என்பன இவ்விடத்தில் எழும் ஆசங்கைகள். உயிரும் ஆணவமும் விரோதிகளாகையால் ஈஸ்வரன் இரண்டையும் ஒரே வேளையில் அநுக்கிரகிக்கமுடியா தென்பதொன்று. உயிரை வருத்துவதற்கல்ல; உயிரின் மலத் திணிப்பை விலக்குவதற்காகவே அவற்றைப் பரிணமிக்கச் செய்கின்ருர் ஈஸ்வரன் என்பதொன்று. ஆதலால் ஈஸ்வரசத்தி சர்வாநுக்கிரஹிகா என்பதில் தவறில்லை. மலசக்திகளை அவர் பரிணமிக்கச் செய்வது ஒரு உபாயம் பற்றியதேயன்றிச் செற்றம் பற்றியதன்ரும். உபாயமாவதென்னவெனில், ஒருவனுக்கு மல அதிகாரமுள்ளவரை முத்திப்பேறு சம்பவிக்காதாதலால், மல அதிகாரத்தை நீக்குவதற்கு இறைவன் புரியும் ஒரு தந்திரமே என்க. ஆதலால் இறைவன் மலத்தைப் பரிணமிக்கச் செய்வதும் உயிர்க்கநுக்கிரஹிப்பதும், தம்முள் விரோதமான இருவேறு நிகழ்ச்சிகளல்ல. வைத்தியனெருவன் விரண முடையானுக்குக் காரம் வைத்து வருத்தலும் விரணத்தை மாற்றுதலும் ஒன்றுக் கொன்று விரோதச் செயல்களாகா. இதுபோல்வதே அதுவும் என்க.

இவ்வாறு மிருகேந்திராகமப் பாசலக்ஷணப்படலத்தில் ஆணவ லக்ஷணம் பேசப்பட்டுள்ளது. ஞாணமிர்தத்திலும் திருவருட்பய னிலும் இக்கருத்துக்கள் பயின்று வருதல் காணலாம்.

பௌஷ்கராகமத்தில் :

ஆணவ இலக்ஷணங்களை விரித்துரைக்கும் மற்றொரு ஆகமம் பௌஷ்கரம் ஆகும். இதன் நான்காவது படலமாகிய பசு படலத்தில் 115 தொடக்கம்169 முடியவுள்ள சுலோகங்களில் ஆணவ லக்ஷணம் பேசப்பட்டுள்ளது. ஆன்மாவின் இலக்கணங்களை விபரிக்கையில், அதற்கு வியாபகத்தன்மை இருத்தலை விளக்கி அவ்வியாபகத்தன்மையைத் தடுப்பதொன்றுள்ளது என்ற தொடர்பில் அங்கே ஆணவலக்ஷணம் தொடர்புபடுத்தப்படுகின்றது. ஆன்மா கிஞ்சிஜ்ஞன் — சிற்றறிவினன், என்ற நிலை பெற்றதும் கிஞ்சித்கர்த்ருத்வம் — சிறு தொழிலுடைமை பெற்றதும் இம் மலத்தினுல்தான் என்பது இவ்வாகமக் கருத்து. ஆணவம் பற்றி மேலும் இவ்வாகமந்தரும் விசேட கருத்துக்களாவன :

1. இந்த ஆணவமலம் ஒரு திரவியம்; அநந்தசக்தியுடையதாயிருக்கையால்; அக்கினியைப்போல்.

2. இது அநாதியே. இடையில் வந்ததெனில் அநாதியாயிருக்கிற உயிரின் சிற்சக்தியை இது ஒருபோதும் பாதிக்கமாட்டாது.

3. இந்த ஆன்மா மலத்தால் மறைக்கப்பட்டவன்; கிஞ்சிஜ்ஞத்வமடைந்ததால்; கிஞ்சிஜ்ஞத்வமில்லாதவன் மலத்தால் மறைக்கப்படான்; பரமசிவத்தைப்போல. ஆதலாலவ்வான்மா மலத்தால் மறைக்கப்பட்டவனேயாம்.

4. மலத்தால் மறைக்கப்பட்டமையினுலேயே ஆன்மாவுக்குச் சுகதுக்கச் சேர்க்கையுமுளதாயிற்று.

5. மாயை கன்மங்கள் ஆன்மசிற்சத்திக்கு வியஞ்சகமா (விளக்குந் துணை) யுள்ளவை. அதனுல் அவற்றினுல் மறைப்பு நிகழுமென்பதற்கில்லை. ஆணவமே மறைப்பின் காரணம்.

6. அம்மலம் மோஹம் முதல் வைசித்திரியம் ஈருக ஏழு பிரகாரமாக அறியத்தக்கது. (இவ்வேழும் அதன் காரியரூபங்களாம்)

---

foot note :

ஆணவ சத்தியின் தொழிற்பாடு இருவேறுவகையிலிருக்கும் என்பர். ஒன்று ஆவரணம் மற்றையது அதோநியாமிகம், ஆவரணம் — சூழ்ந்துகவ்வல். அதோநியாமிகம் — கீழ்நிலைக்கு இட்டுவைத்தல் இந்த அதோநியாமிகமே உயிரை மீள மீள உலக முகமான சுகதுக்க போகங்களில் ஈடுபடுத்திக்கொண்டிருக்கும் என்பது ஓர் உண்மை.

(i) மோஹம் : மண் பெண் பொன் ஆதிகளிடத்தில் நன்மை தீமை கருதாதெழும் மயக்கம். பின்வரும் ஆறு வகைகளிலும் கூட மோஹம் என்ற பண்பு ஏதானுமொரு விதத்தில் கலந்தேயிருக்கும்.

(ii) இராகம் : கிடைக்கும் என்று நம்ப முடியாத வற்றிலும் இச்சை கொண்டிருத்தல்.

(iii) மதம் தான்பெற்ற யாதானுமோர் பேறு பற்றித் தன்னை மறந்து தருக்கடைதல்

(iv) விஷாதம் : தானரும்பேறெனக் கருதிக்கொண் டவை இழக்கப்படுங்கால் ஏற்படுங் கிலேசம்.

(v) தாபம் : இழப்புக் காரணமாகத் தொடர்ந்து ஏற்பட்டிருக்கும் மனவெதுப்பு.

(vi) சோஷம் : துக்கந் தாளாமல் அதிலே உப்பி மரத் துப்போதல்

(vii) வைசித்திரியம் : தன்னைச் சார்ந்த சொத்துச் சுதந்திரச் செழிப்புகளைப் பார்த்து அவை தெய் வத்தால் வந்ததென்னது தன்னால் வந்ததெனக்கொள்ளுதல்.

7. மலம் மறைப்பதென்ற விஷயத்தில் அது ஆன்மசிற்சத்தியை மறைக்குமோ அல்லது மழுங்கச் செய்யுமோ என்ற கேள் விக்கிடனுண்டு. சிற்சத்தி மறைபடுவதெனில் அதனைத் தன் குணமாகவுள்ள ஆன்மாவும் மறைபட்டதாய் விடும். சிற் சத்தி மழுங்கச்செய்யப்படுவதெனில் அது சிற்சத்திக்கு அழிவுண்மை கற்பிப்பதாகும். ஆதலால் இரண்டும் பொருந் தாது. எனில் மறைப்பு என்பது எவ்வகையிலிருக்கும் என்றால் சிற்சத்தி இருந்தாங்கிருக்க, அதன் அறிவு (ஞத்வ) தொழில் (கர்த்ருத்வ) பிரவிர்த்தியைத் தடுக்கும் அளவின தாகவேயிருக்கும். மந்திரசக்தியானது அக்கினியின் பிரகா சசக்தி மறையாதிருக்கவே அதன் சுடும் சக்தியை மட்டும் மறைத்தல் போல இதனைக் கொள்ளலாகும்.

8. இதனால், நேத்திரமானது இருட்டால் மறைக்கப்படுகையில் தன்பிரகாசமுங் கெடாமல் விஷயங்களில் அபிமுகப் படுதலு மில்லால் எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே மல சத்தியால் மறைபடும் சிற்சத்தியும் தன்னியல்புங் கெடாமல் விஷய அறிவில் அபிமுகப்படுதலுமில்லாமல் தன்னிடத்தில் இருக்கும் என அறியலாம்.

ஆகமக் காட்சியில் ஆணவத்தின் நிலை இன்னதென்பதை மட்டிடுதற்கு இவ்விரு ஆகமக் கருத்துக்களும் போதுமானவை.

ஒப்பியல் நோக்கு :

ஆகமங்கள் கூறும் இப்பொருள் விரிவுகளையெல்லாம் பாராதமுன், நமது சித்தாந்த ஆசிரியர்கள் தம் ஞானக்கவித் துவ சாமர்த்தியத்தால் இத்தகைய விரிவுகளையெல்லாம் இரத் தினச் சுருக்கமாகப் பொருத்தியடக்கி ஒவ்வோர் விருத்தத்திற் புகுத்திவைத்த நயம் விளங்கிக்கொள்ளுதல் அரிதாகும். சிவப்பிர காசம் 20 ஆஞ் செய்யுளும் (ஏகமாய்த் தங்கால) சிவஞான சித்தியார் இரண்டாம் சூத்திரம் 80 ஆம் செய்யுளும் (ஒன்றதாய் அநேக சக்தி) சம்பந்தப்பட்ட ஆசிரியர்களின் அற்புத சாமர்த்திய கிருதிகள் (Master pieces) ஆயிருக்கும் நயம் இவ்வாகம விரிவு விளக்கங்களை அறியும் அறிவு விளக்கத்தில் மட்டுமே பிரகாசமாகும். திருவருட்பயனில் இருண்மலநிலையதிகாரத்துப் பத்துக்குறளுள் இவ்விரிவுகளெல்லாம் புகுந்தடங்க உமாபதி சிவாசாரியர் புனைந்த கிருதி விசேஷமும் சாமானி யமன்று. இதனை விரித்து விசாரிக்க இச் சிறுகட்டுரை இடந் தராமையின் ஒழிகின்றோம். மற்றும் மற்றுஞ் சித்தாந்த நூல்க ளிலும் ஆங்காங்கு ஆணவம் பற்றி வருங் கருத்துக்கள் இவ்வா கமப் பொருட்கதிர்களின் சிதறல்களேயாம். ஆகம சுலோகங்களில் அக் கருத்துக்களைப் பார்த்தபின்னரே அக்கருத்துக்கள் சித்தாந்தத் தமிழ் நூல்களில், ஞானக் கொழுமை தமிழ்ச்செழுமையிற் கொலுவிருக்கஅமைந்திருக்கும் கெம்பீரமும் நயக்கப்படுவதாகும்.

(i) ‘நாப்யப்ரகாசி கரணம் கிம்து கார்ய அப்ரவர்தனம்’ — மலம் சிற்சத்தியை மழுக்குவதன்று. ஆனால் ஞத்துவ கர்த்திருத்துவ (அறிவு செயல்) கார்யங்கள் பிரவர்த்திக் காமற்செய்தல் மட்டுமே —பௌஷ்கரம் பசு படலம் 158

(ii) ‘மூலமல மாயறிவு முழுதினையும் மறைக்கும்’

—சிவப்பிரகாசம்

(iii) 'என்றுமஞ்ஞானங்காட்டும் ஆணவம் இயைந்து நின்றே'
—சிவஞானசித்தியார்

(iv) 'அதுதான் ஞான திரோதகமாய் மறைத்துக் கொடுநிற்றலான்'
—சிவஞானபோதம்

இந்த நான்கு பகுதிகளிலும் ஒரே பொருளே சொல்லப்படுகிறது. ஆனால், முதலாவது ஆகமக் கூற்று. பின்னைய மூன்றும் தமிழ்ச் சித்தாந்த சாஸ்திரக் கூற்றுக்கள். இறுதிக் கூற்றிலுள்ள ஞானவிறுக்கோடு தமிழ் முறுக்கும் மிக மகத்துவமானது இத்தகைய நோக்கும் சித்தாந்தப் பொருளுணர்வுக்கு ஊற்றந்தருதல் அறிதற்பாற்று.

ஆணவத்தின் பிராதான்யம் :

அகங்கார மமகாரங்களில்லாவழி லௌகிக வாழ்க்கை வாழ்க்கையாயிருக்காது என்றவாறு, ஆணவம் என்ற பொருள் இல்வழி சித்தாந்த ஆராய்வும் சித்தாந்த ஆராய்ச்சியாய் இருக்காதெனச் சொல்லவேண்டியிருக்கிறது. அவ்வளவுக்கு முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது ஆணவம். சித்தாந்தம் என்ற காவியத்தில் ஆணவம் பிரதிநாயகன் எனலாம். உயிரின் வாழ்க்கை நிலையின் பல்வேறு கட்டங்களிலும் ஆணவத்தின் செல்வாக்கு இடம்பெறுகின்றது. கேவலம், சகலம், சுத்தம் என்பன உயிரின் மூவேறு நிலைகளாம். காரண கேவலநிலையில் ஆணவம், ஒன்றே உயிரின் தஞ்சம். அங்கு ஆணவம் உயிரை முற்ற முடியத் தன்னுதிக்கத்திலேயே வைத்துக்கொண்டு மயக்குவதாகிய தன் சொரூப இலட்சணத்தில் நிற்கிறது. பின் காரண சகலத்தில் உயிர்க்குக் ,கிடைக்கும் கருவிகரணங்களைச் சார்ந்து அதற்கு விபரீத உணர்வை விளைக்கும் தன் தடஸ்தலட்சணத்தில் நிற்கிறது. பின் காரண சுத்தத்தில் தான் சம்பந்தப்பட்ட உயிரை விட்டுவிலகுதல் மூலம் உயிர் சிவப்பேற்றை அநுபவிக்க வைக்கின்றது. பின் காரிய கேவலம் காரிய சகலம் காரிய சுத்தம் என்ற நிலைகளிலும் அதன் நிலை மேற்போந்த ஒழுங்குக் கனுகுணமாகவே யிருக்கிறது.

விழிப்புணர்ப்புறு மிருளென விராவிய தன்னை
அழிப்பமுற்றிய சத்தியுந் தன்வழி யாக்கி
ஒழிப்பின் மூன்றிடத் திருதிறத் தவத்தை யோரைந்தும்
கழிப்பி லாதுயி ருறப்பல சத்தியிற் கதுவும்.''

—தணிகைப் புராணம் நந்தியுபதேசப்படலம் 104 என்பது காண்க. (மூன்றிடம் — கேவலம், சகலம், சுத்தம். இரு திறம் — காரணம், காரியம். அவத்தை ஐந்து — சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி துரியம், துரியாதீதம்)

சிவஞான போதத்தில்.

சித்தாந்த மூல நூலாகிய சிவஞானபோதத்தில் முதற் சூத்திரத்திலேயே ஆணவந் தோற்றமளிக்கிறது. 'தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்' என்றதன்மூலம் ஆணவமலங் காரணமாகவே ஒடுங்கிய உலகம் மீளத்தோன்றுவதென்ற கருத்து விளக்கமாகிறது. இவ்வாறே இந்நூலின் மற்றுஞ் சூத்திரப் பொருள்களிலும் இந்த ஆணவம் பற்றிய கருத்து நேர்முகமாக அல்லது சார்புவகையாகச் சம்பந்தப்பட்டிருக்கும் உண்மை அறியத்தகும்.

2ஆம் சூத் : இங்கு இரண்டாம் அதிகரண உதாரண வெண்பா 'வல்லி மல கன்மம் அன்றுளவாம்' என்று பேசுகின்றது. ஆணவம் அநாதி என்ற கருத்து இங்கே பிரஸ்தாபிக்கப்படுகின்றது.

3 ஆம் சூத் : இதில் இரண்டாம் அதிகரணம் 'எனதுடல் என்றலின்' என்பது. இதன் கண் 'எனது' என்ற சொல் ஆணவ குணமாய மமகாரம் என்பதை நினைவுறுத்தும். நான்காம் அதிகரணம் 'ஒடுக்கமறிதலின்' என்பது. இங்கு சொப்பனுவத்தை தொடர்புபடுகிறது. இதற்கு முன்னைய மூன்று அதிகரணங்களும் சாக்கிராவத்தையில் நிகழுமியல்புபற்றியன ஐந்தாமதிகரணம் சுழுத்தி துரியங்களினிகழுமியல்புபற்றியது. ஆறுமதிகரணம் துரியாதீதத்தில் நிகழுமியல்புபற்றியது. சுத்தாவத்தை உணர்த்துமுறை பற்றிய அவத்தைகளோடு சம்பந்தப்பட்ட குறிப்புகளும் இங்கே தொடர்புறுகின்றன. (இந்த அவத்தைத் தொடர்புகள் எல்லாம் இங்கே ஆன்ம உண்மை சாதிக்கவே ஏற்பட்டவை) அவத்தைகளின் காரணம் ஆணவமே. 'அவத்தை ஒரைந்தும் கழிப்பிலாதுயிருற' என மேற்காட்டிய தணிகைப் புராணச் செய்யுளால் இது விளங்கும்.

4 ஆம் சூத் : 'சகசமலத்துணராது' என நேர்முகமாகவே ஆணவம் இங்கு பேசப்படுகிறது. அன்றியும், உயிர் ஐந்தவத்தையுறுதற்கு ஆணவம் காரணமாம் என்ற உண்மையும் இதிற் புலனுகின்றது.

5 ஆம் சூத் : இச் சூத்திரம் பாச இலக்கணம் கூறுவது. பாசங்களைச் செலுத்தும் திரோதான உண்மையும் இங்கே தொடர்புபடுகிறது. இங்கு 'அருள்' எனப்பட்டது. திரோதானம். திரோதான — ஆணவத் தொடர்பு அகிலப்

பிரசித்தமானது. 'விழிப்புணர்ப்புறு மிருளென' என மேற்காட்டிய தணிகைப் புராணச் செய்யுள் இத் தன்மை காட்டும்.

6 ஆம் சூத் : இது சத்தும் அசத்தும் வரைசெய்துணர்த்துவது. பாசங்கள் பொதுவியல்புபற்றி அசத்தெனப்படும். சிறப்பியல்புபற்றி அசத்தாதல் செல்லாது அத் தன்மை சிவஞானத்தான் மட்டுமே அறியப்படும். உன்னரிய திருவருளை யொழிய மலமுளதென் றுணர் வரிதா மதனுண்மை தெரிவரிதாமுனக்கே (சிவப்பிரகாசம் 18) என்றவாறு. ஆணவம்பற்றிய இயல்பும் இங்கே உய்த்துணரக் கிடப்பது.

7 ஆம் சூத் : இங்கு, 'இருதிறனறிவுளது இரண்டலா ஆன்மா' என உயிரின் சிறப்பிலக்கணம் கூறப்படுகின்றது. இரு திறனறிவு — இரு திறனையும் அறியும் அறிவு, இருதிற னும் அறியும் அறிவு, இருதிறனின் கண்ணும் அறியும் அறிவு என விதக்கப்படுதல் மூலம், திரு வருளால், உயிர்க்கு ஆணவமும் (சுத்த நிலையில்) அறியப்படும் என்ற கருத்து இங்கே புலனு கின்றது.

8-ம் சூத் ! இதில், ஆன்மாக்களுக்கு தமது முதல்தானே, குருவுமாயுணர்த்தும் என்ற உண்மை பேசப்படு கையில் அதற்கு முன்னோடி நிலைமையாகிய மல பரிபாகம் சிந்திக்கப்படும்வகையில் ஆணவமும் தொடர்புபடுகின்றது. ஆணவ சக்திகள் உயிரின் ஞானக் கிரியைகளைத்தடுக்கும் நிலையிலிருந்து விலகும் பக்குவமே, மலபரிபாகமாம் மேலும் இதன் நான்காம் அதிகரணத்து உதாரண வெண்பா 'மல கன்மம் வரின் நீங்காளை நீங்கு நினைந்து' என்ப தால் வாதனை வயத்தால் வரக்கூடிய மலத் துயரை நீக்குதல் குறிக்கப்படுதலுங் காணலாம்.

9 ஆம் சூத். இது ஆன்மசுத்தி பண்ணுமாறுணர்த்துவது. இது பற்றிய உதாரணவெண்பாக்களில், 'உண்மையைத் தைவம் புணர்ந்ததனுல் பொய் விட்டுப்போம்' 'பண்ட ணைந்த ஊனத்தைத்தான் விடுமாறு' எனவருவனவற் றில், பொய் —சுட்டுணர்வு, பண்டணைந்த ஊனம் — அநாதி யாய்க் கூடிநின்ற பொதுவியல்பு எனப்பட்ட இரண்டும் ஆணவ காரியங்களாதல் தகும்.

10ஆம் சூத் : இச் சூத்திரம், 'ஏகனாகி இறைபணி நிற்க மலமாயை தன்னொரு வல்வினை இன்றே' என்கின்றது. இங்கு ஆணவம் நேரடியாகவே மலம் எனப் பெயர்சுட்டி உணர்த்தப்படுகிறது. ஏனைப் பாசங் களுடன் மலமும் இல்லையாய் ஒழியும் என மல நீக்கம் இங்கே பேசப்படுகிறது.

11 ஆம் சூத் : இறைவன் உயிர்க்குக் கண்டுகாட்டும் உபகாரங் கூறும் இச்சூத்திரத்தின் உதாரண வெண்பா வொன்றில், 'மன்னுமிருளை மதிதுரந்தவாறு அன்பின் மன்னும் அரனே மலந்துரந்து' உதவுமாறு கூறப்படு கின்றது. துரத்தல் — பற்றை நீக்குதல். அடுத்த வெண்பாவில், 'மலம் நசித்து உளம் ஈசன் கழலணைந்து சேடம் ஆம்' என்ற உண்மையும் அடுத்த வெண் பாவில், மலத்துள் மறைந்து உள்ளம் மற்றுலகை உண்ணும்' என பெத்தநிலை சார்பிலும், அதற்கெதி ராக, 'மலத்து இரித்துச் செல்லும்வரத்து' என முத்தி நிலை சார்பிலும் ஆணவத்தியல் விளக்கப்படுகிறது. உள்ளம் — உயிர். உலகை உண்ணும் — ஐம்பு லன்களை விடயிக்கும். 'மலத்து இரித்து வரத்துச் செல்லும்' — மலத்தை முதல்வனருளாற் பற்றறக் களைந்து வியாபகமாய் அறிவு விளங்கி அவனது சீபாதத்தை யணைந்து சுத்தப்படும்.

அநாதியான மலம் முத்தி நிலையில் உயிரை விட்டு விலகும் என்பது எப்படிப் பொருந்தும்? என்ற பிரசித்தமான ஆசங்கையை, சூரியன் முகில், உவமையில் வைத்து விடுவிக்கும் நயமும் இவ் வெண்பாவிலேயே உணரப்பட இருக்கிறது. இதன் விரிவைப் பின்னர்க் காண்போம்.

12 ஆம் சூத் : சீவன்முத்தரியல்பு கூறுவது இச்சூத்திரம். இதன்கண் 'அம்மலங்கழீஇ அன்பரொடு மரீஇ' என்பது பிரதான அம்சமாம். அம்மலங்கழீஇ — மல அழுக்கை ஞான நீராற் கழுவி. மலங்கழீஇ என்ற தனால் சீவன் முத்தர்க்கு மலத்தடை நீங்கி அறிவு வியாபரித்தல் குறிக்கப்படுகிறது. முன் 10 ஆஞ் சூத்திரத்திலேயே மல நீக்கம் கூறப்பட்டிருந்தும் பின் இங்குங் கூறியது நீங்கிய மலமே பயிற்சி வயத்தான் மீண்டும் நுழையவரின் அதைக் கழுவு முபாயமாம்.

இவ்வகையால் சிவஞான போதம் முழுமையிலும் ஆணவக் கருத்துத் தொடர்புற்று நிற்றல் அறியப்படுகிறது. சிவஞான போதத்துக்கு நேரொத்த அமைப்பிலுள்ள சிவஞான சித்தியிலும் இங்ஙனமே இவ்வொவ்வோர் பொருட்கூறும் அவ்வச் சூத்திரங்களில் அமைந்திருக்கக்காணலாம். சைவ சித்தாந்தப் பொருள்நிலை ஆராய்வில் ஆணவம் பெற்றிருக்கும் அகண்டத் தன்மை எத்தகையதென்பதை இவ்விபரங்காட்டும்.

தத்துவப் பிரகாசத்தில் :

இனி, சித்தாந்த நுண்பொருட் கூறுகளாகிய உள்பொருள் களைத் தனித்தனி நிறுத்தி அவற்றின் அகப்புற — இயல்புகளெல்லாம் புலப்படுமாறு ஒவ்வொன்றையும் பப்பத்து அம்சமாக விரித்துவிளக்குவது தத்துவப் பிரகாசமென்னும் சித்தாந்த நூல். அந்நூலில் ஆணவ இயல்பு பின்வருமாறு அமைகின்றது. ஆணவத்திற்கு,

1. உருவம் — அஞ்ஞானம்
2. சொரூபம் — அறியாமை பண்ணல்
3. சுபாவம் — அவத்தைப் படுத்தல்
4. குணம் — அறிந்தவற்றை மீள மறப்பித்தல்
5. விசேடம் — பரிபாக எல்லையில் தன் சக்தி மாய்தல்
6. வியாத்தி — மூவகை உயிர்களோடுங் கூடியிருத்தல்
7. வியாபகம் — தன்னையும் சிவனையும் உயிர் அறியாமலுடன் நிற்றல்
8. நிறம் — கருமை
9. தரிசனம் — இத்தன்மைகளுளவாக அறிய நிற்றல்
10. சுத்தி — ஆன்மா பராசத்தியுடன் சேரும் அவதரம்

மலபரிபாகம் :

சைவசித்தாந்தத்தில் முற்றுணர் முனிவராகிய சிவஞான சுவாமிகள் இவ்வாணவத்தினை. எல்லாப் பெருங்கேட்டிற்கும் மூல காரணமாகிய மலம் என வர்ணிப்பர். சர்வஞ்ஞனாகிய இறைவன் இம்மலத்தைச் சார்ந்த உயிர் காலக்கிரமத்தில் அதிலிருந்து விடுபடத்தக்க ஒரு வகையிலே உயிர்க்குத் தனுகரண புவன போகங்களைக்கூட்டி அதை ஆணவப் பிடிப்பிலிருந்து பேதித்து வளர்த்தெடுக்கும் விபரம் மிகச் சுவராஸ்யமானது.

(i) ''காரிட்ட ஆணவக் கருவறையிலறிவற்ற......

தாயுமானவர். சின்மயானந்தகுரு 6.

(ii) ''கருமருவு குகையனைய காயத்தினடுவுட்......

—தாயுமானவர். சின்மயானந்தகுரு 7.

(iii) செம்புறுகளிம்பென்ன மூலமல மூழ்கியிருள்

சேருமலர் விழி— செப்பறை அகிலாண்டேஸ்வரி பதிகம் என்னும் பாடல்கள் இறைவனுடைய இப்பேருபகாரத் தன்மையைச் செம்பாகமாக எடுத்து விளக்குதல் காணலாம் இவ்வகையில் உயிரை, உகந்தவகையில் வினையூட்டி, இறைவன் வழிநடத்துதல் வகையால் காலகதியில் இவ்வாணவசக்திகள் மெல்ல மெல்லப் பலனிழந்து வந்து ஒரு எல்லையில் அதனை விட்டு நழுவும் நிலையினவாகும். அவ்வியல்பே மலபரிபாகம் என்று சித்தாந்த பரிபாஷையிற் குறிக்கப்படுகின்றது. விடியா இரவு விடிந்தது போலாகும் இந்த நிலை ஆன்மீக வாழ்க்கைப் போக்கில் ஒரு திருப்புமுனை எனத்தக்கது. இருவினையொப்பைத்தனக்கு முன்னோடியாகவும் சத்தினி பாதத்தைப் பின்விளைவாகவுங் கொண்டியலும் இம் மலபரிபாகம் கண்டேதான் திருவருள் ஞான குருவாய் வந்து உயிரை ஆட்கொள்ளும் உண்மை குறிப்பிடத்தக்கதாகும். கால அடைவில் மலசக்திகள் எத்தனைக்கெத்தனை விலகிக்கொள்கின்றனவோ அத்தனைக் கத்தனை உயிருடனுயுள்ள திரோதான சக்தி திருவருட் சக்தியாய் வியாபிக்கும். இந்நிலை சத்தி நிபாதம் எனப்படும்.

மல நீக்கம் :

உயிர்க்கு மலபரிபாகம் நிகழுஞ் செவ்வியை இடமாகக் கொண்டு அவ்வுயிரினுள்ளிருந்து அதனை இயக்குவதாகிய இறைவன் திருவருளே யாதானுமோர் குருமூர்த்தி வேடத்தில் ஆவேசித்து வந்து அவ்வுயிர்க்குத் தீக்ஷை புரிந்தருளும். தீ என்பது கொடுத்தல்; ஷை என்பது கெடுத்தல். அதுவரை அஞ்ஞான சம்பந்தியாய் இருந்த உயிருக்கு மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்குமாற்றால், அதுவரை அதற்குத் தடையாயிருந்த மலத்தையும் மற்றும் பாசபந்தங்களையும் கெடுத்தலே தீக்ஷையாகும். சிவஞான போதத்திலும் சிவஞான சித்தியாரிலும் எட்டாஞ் சூத்திரப் பொருள் இந்தத் தீக்ஷை உபகாரமேயாம். அடுத்துவரும் ஒன்பதாஞ் சூத்திரம் ஞானப்படியேற்றநிலைகளாகிய தசகாரிய நிலைகளில் ஆன்மசுத்தி எனப்படும். ஞான திரோதகமாகிய இந்த ஆணவப் பிடிப்பு அதிஆழமும் அழுத்தமும் மிக்கதொன்றாதலால் அதன் நீக்கம் எடுத்த எடுப்பில் முற்ற முடிய ஏற்பட்டுவிடாது. ஆன்மசுத்தி நிலையுற்ற உயிர் அந் நிலையைத் தொடர்ந்து அந் நிலையிற் கிடைக்கும் சிவதரிசனத்தை ஆதாயப்படுத்திக்கொண்டு

அதன் வாயிலாகச் சிவப்பொருளோடு ஏகனாகி இறைபணி நிற்க மலத்தின் தாக்கம் பெருமளவில் அற்றொழியும். 'ஏகனாகி இறை பணிநிற்க மலமாயை தன்னொடு வல்வினையின்றே' — என்கின் றது சிவஞானபோதம். இப்பத்தாஞ் சூத்திரப் பொருள் பாச நீக்கம் என்றல் பிரசித்தம். பாச நீக்கம் பெற்ற வாய்ப்பி னாலே இறைவன் தனக்குள்ளாயிருந்து தனக்குக் கண்டு காட்டும் நிலையை உணர்கின்ற உயிர் அவ்விறைவன்பால் அயரா அன்பு செய்து அவனடிக் கீழ் ஒன்றும். இந்நிலை சிவப்பேறும். பதினொ ராஞ் சூத்திரப் பொருள் சிவப்பேறு. இச்சிவப்பேற்று நிலையிலும் உயிர் தன் முன்னைய உடற் சூழ்நிலையிலேயே, அவ்வுடற்குரிய பிராரத்த எல்லை கழியும்வரை இருக்கவேண்டுதலின், விட்ட ஆணவம் வாசனை மாத்திரையால் மீளவுந் தொட்டுக்கொள்ளவும் கூடும் என்ற முன்னெச்சரிக்கையோடு, நோய் நீங்கிய அந்நிய நாளையில் நோயாளி, போன நோய் மீளவும் பற்றாமை வேண்டிப் பத்திய பாகங்களில் மிக விழிப்பாயிருத்தல்போல, தன் கூட்டநாட்டங் களிலும் சகவாசங்களிலும் மிக விழிப்பாயிருந்து, தனக்கு விருத்தியாகும் ஞான நீரினாலே, வாசனா மலச் சார்பாக ஏதும் இருக்கக்கூடுமாயின் அதனைக் கழுவிக்கொள்ளும் என்ற பொருள் நிலை பன்னிரண்டாஞ் சூத்திரத்தால் உணர்த்தப்படும். மல நீக்கத்தின் முற்ற முடிந்த நிலை இதுவாகும்.

பதினொராஞ் சூத்திரத்திற் கண்டாங்கு, 'அயரா அன்பின் அரன் கழல் செல்கையில்' ஆணவ சக்திகள் உயிரின் தொடர்பி லிருந்து நீங்கியேவிட்டன என்பதே சித்தாந்த நூல்களின் ஏகோபித்த முடிபாகும். உயிரை மும்மலம்பற்றியிருத்தற்கு, அரிசியை மூன்று தவிடுமிகள் பற்றியிருக்குமாற்றைச் சித்தாந்த நூல்கள் உதாரணமாகக் காட்டுதல் ஒன்றே இவ்வுண்மைக்கு நிதர்சனமாகற்பாலது. நெல்லை அவித்துப் பாகம்பண்ணிக் குற்றுமளவில் உமி அதை விட்டுவிலகியேபோய்விடுகின்றது. அதுபோல, உயிரின் ஆணவ மலசக்திகளும் படிப்படியாக வலியிழந்து விலகும் பக்குவமுற்ற தசையில் திருவருளால் முற்ற விலகியே போகும்.

மெய்கண்டார் உவமை நலம்:

இங்ஙனம் மலம் நீங்கும் உண்மையின் சுவரூபம் முழுமை யும் புலப்படுமாறு, மெய்கண்டார் தம் சிவஞானபோதத்துப் பதினோராஞ் சூத்திரத்து உதாரண வெண்பா ஒன்றில் பெய்து ரைக்கும் உவமைநலம் பொருளுண்மையைத் தெளித்துக் காட்டுவதாதலோடு உற்றுணர்ந்து சுவைத்தற்குமுரியதாகும்.

''பொன்வாள்முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத்
தன்வாளே யெங்குமாந் தன்மைபோல்—முன்வாள்
மலத்துள் மறைந்து (உ)ள்ளம் மற்றுலகை உண்ணும்
மலத்தி (னு+இ) ரித்துச் செல்லும் வரத்து''

சிவஞா. 11 ஆம் சூத் 2 ஆம் அதிகரணம்

வாள் — ஒளி. பொன் வாள்—சூரியன். கொண்மூ — மேகம் உள்ளம் — ஆன்மா. உலகை — ஐம்புல விடயங்களை. உண்ணும் — அநுபவிக்கும் மலத்துஇரித்து — மலத்தைப் பற்றறக் களைந்து. வரத்துச் செல்லும் வியாபகமாய் அறிவு விளங்கி அவனது சீபாதத்தையணைந்து சுத்தப்படும் வரத்து வரமாகிய திருவடிக்கு. வரம் — வரமாகிய திருவடி சீபாதம்.

இச் செய்யுளில், பொன்வாள் முன் கொண்மூவிற் புக்கொடுங்கிப் போயகலத் தன்வாளே எங்குமாந் தன்மை' உபமானம். இதில் மூன்று பொருட் பகுதிகள் உள. மூன்றில் ஒவ்வொன்றும் ஆன் மாவின் மூவகை அவத்தை நிலையில் ஒவ்வோர் அவத்தை நிலைக்கு உவமையாம்.

உபமானம்	உபமேயம்
1. பொன்வாள் முன் கொண் மூவிற் புக்கொடுங்கல்	ஆன்மா அநாதியே ஆணவ மலத்தில் மறைந்திருத்தல்
2. போயகலல்	கலைமுதலிய தத்துவங்களின் உபகாரத்தால் ஆணவ இருள் சிறிது விலகியிருத்தல்
3. தன்வாளேயெங்குமாந் தன்மை	உயிர் ஆணவ மறைப்பு முற்ற நீங்கித் தன் பிரகாசமாதல்

இவ்வுவமைகளில் (1) ஆன்மாவின் கேவலாவத்தை நிலைக்கும் (2) அதன் சகலாவத்தை நிலைக்கும் (3) அதன் சுத்த அவத்தை நிலைக்கும் உவமையாம். முகிலால் முற்ற மறைபட்டு முகில் வடிவினுள் தன் வடிவு தோன்ருதிருந்த சூரியன் ஒரு சிறு காற்றசைவினலே முகில் சற்று விலகக் கொஞ்சம் ஒளிதோற்றக் கூடியதாகிறது. அதுபோல, கேவலத்தில், ஆணவ வடிவில் தன்வடிவு புலப்படாதிருந்த ஆன்மா கலை முதலிய தத்துவத்தின் சிறு உபகாரத்தாலே சிறிது தன் அறிவு தொழில் விளங்கும் நிலை எய்திற்று. இங்கு, சிறு காற்றசைவு, கலையாதிதத்துவங் களுக்கு உவமை. அங்ஙனம் சிறிதேயொளிவிடும் நிலையிலிருந்த சூரியன் பெருங்காற்றெழுந்தசைப்ப முகில் மறைப்பு முழுவதும்

அடிபட்டொதுங்குதலால் தன் பிரகாசம் குறைவின்றித் திகழ நிற்கின்றது. அதுபோல, தன் அறிவு தொழில்கள் சிறிதே விளங்கும் நிலையிலிருந்த ஆன்மா, கலையாதிகளின் அற்ப விளக்கம் போலாது, பெரும் அகண்டாகார விளக்கமாகிய சத்திநிபாத (பராசத்தி) நன்மையால் தன்பிரகாசம் முழுமையுறத் திகழ்கின்றது. முகில் பெருங்காற்றால் அடிபடுகையில் சூரியனை மறைக்குந் தன்மையில் நின்று விலகியதே தவிர முகில் இல்லாமற்போய்விடவில்லை. அதுபோல சத்திநிபாதத்தால் ஆணவசத்தி, சம்பந்தப்பட்ட அவ்வுயிரை மறைத்தலிலிருந்து விலகினதே தவிர ஆணவம் இல்லாமற்போய்விடவில்லை. சூரிய பிம்பத்தை மறைக்குந் தன்மையிலிருந்து அகன்ற முகில் சூரிய பிம்ப எல்லைக்கு அப்பால் இருந்துகொண்டேயிருக்கிறது. அதுபோல சம்பந்தப்பட்ட உயிரை மறைக்குந் தன்மையிலிருந்து விலக்கப்பட்ட ஆணவம், அவ்வுயிரல்லாத மற்றையுயிர்கள் சார்பில் இருந்துகொண்டேயிருக்கிறது. அதன் நித்யங்கெடவேயில்லை.

ஆசங்கையொன்று

இந்நிலையில் பலத்த ஆசங்கையொன்றுக்கு இடமுண்டு. ஆணவசத்தி கெட்டது ஆணவம் இருக்கிறதெனில் ஆணவம் வேறு அதன் சக்தி வேறோ என்பது ஆசங்கை இங்கு சக்தியென்றது அதன் செயற்பகுதியையே என அறிதல் வேண்டும். செயல் காரியம். ஆணவம் காரணம். காரியத்துக்கு அழிவு நிகழலாம். காரணத்துக்கு அது பொருந்தாது. அந்நியமப்படி, சம்பந்தப்பட்ட உயிரை மறைத்த ஆணவ சக்தியாகிய காரியம் அழிந்தது. காரணமாய ஆணவம் அழிந்திலது எனக்கொள்வதில் தவறில்லை. இந்நிலைமை குறித்தன்றே உமாபதி சிவாசாரியர் ஆணவ இலக்கணம் வகுத்துரைக்கும்போதே, 'ஏகமாய்' என்றும் 'தங்கால எல்லைகளின் நீங்கும் எண்ணரிய சத்தியதாய்' என்றும் பகுத்தோதிவைத்துள்ளார். நாம் இங்கு சற்று முன்பாக அவதானித்த தத்துவப் பிரகாசப்பாடலிலும், ஆணவத்தின் பத்தியல்புகளில், பரிபாக எல்லையில் தன் சக்தி மாய்தல் அதன் விசேடம் என்ற இயல்பாகக் குறிக்கப்பட்டிருத்தல் கண்டோம். மறப்பித்தல், மறைத்தல் என்பன எங்ஙனம் அதன் குணமாகுமோ அங்ஙனம் ''தன்சக்தி மாய்தல்' அதன் விசேடம் எனப்பட்டுள்ளது.

ஆணவம் ஒன்று. அது நித்தியம். அதன் சக்திகள் பல. ஒன்றாகிய ஆணவம் பலவாயுள்ள உயிர்களை மறைப்பதாயிருக்கையில் அதற்குச் சக்திகள் பல என்பதை மறுத்தல்

இயலாது. ஆனுல், சக்திகளும் ஆணவம் போல நித்திய மல்ல. அவை அநித்தியம். நித்தியம். அழியாது, சத்தி அழியும். எனில், இத் தொடர்பில் மற்ருேர் ஆசங்கையும் எழுதல் இயல பேயாம். தன் சக்திகளில் ஒரோவொன்று ஓரோவோர்காலத்தில் அழிந்துகொண்டிருக்க முடிவில் ஆணவம் முற்ருகச் சத்திகெட்ட தாய்ப் போய்விடுமே என்பது ஆசங்கை. இந்த ஆசங்கை யதார்த்தமானதாகுமெனில் இது சம்பந்தமாக, பின்வரும் இரு கேள்விகளுக்கு நாம் விடை கூறியாகவேண்டும். ஆணவ சக்திகள் எல்லாமாக மொத்தம் எத்தனை? ஆன்மாக்கள் எல்லாமாக மொத்தம் எத்தனை? இவற்றிற்கு விடையிருப்பின் மட்டுமே அந்த ஆசங்கை அர்த்தமுள்ளதாகும்.

குறிக்கப்பட்ட இவ்விரண்டும் அநேகம், அநந்தம் என்ற பெயர் நிலைச் சுட்டுக்குரியவை என்பது சர்வ சைவசித்தாந்த சாஸ்திர சம்மதாயிருக்கையில் இவற்றுக்குரிய எண்ணிக்கை பற்றிச் சிந்திப்பது நிரர்த்தகமாகும். அவ்வகையில் மேற்குறித்த ஆசங்கையும் நிரர்த்தகமேயாம். ஆணவமே அநாதி நித்தியம். அதற்கும் உயிருக்கு முளதாந் தொடர்பு அநாதியேயன்றி நித்தியமன்று அநாதியாயுள்ளதொவ்வென்றும் நித்தியமாதல் ஒருதலையான் வேண்டப்படும் என்ற இலக்கணம் திரவியத்துக்குரியது. ஆணவ உயிர்த்தொடர்பு திரவியமன்று. அது காரியம். காரியத்துக்குக் கேடு நிகழ்தலில் ஆசங்கைக்கிடமில்லை என்பதே சித்தாந்த சாஸ்திர கர்த்தாக்களின் உள்ளக்கிடை எனத் தெரிகிறது.

இவ்வுண்மை அவர்கள் காட்சியிற் கண்ட விஷயம்; 'இது திருவருளுபகார நீதி' என்று உணர்ந்த விஷயம்.

''சேணுர் இருள் வடிவஞ் செங்கதிரோன் பால்நிற்கக்
காணு தொழியுங் கணக்கே போல் — ஆணவத்தின்
ஆதி குறையாமல் என்பால் அணுகாமல்
நீதி நிறுத்தும் நிலை போற்றி'' என்னும் போற்றிப் பஃஞெடைப் பகுதி குறிப்பிடத்தக்கது. 'முன்னவனே முன்னின்ருல் முடியாத பொருளுளதோ' என்றவாறு சுத்தநிலையில் திருவருள் பராசத்தியாய் உயிரிற் பிரகாசிக்க ஏன்று கொண்டமையால் இது நடக்கக் கூடியதே என்பதைத்தான் இவ்வடிகள் நினைவுறுத்துகின்றன. 'செங்கதிரோன் பால்நிற்க இருள்வடிவங் காணு தொழிதல்' என்ற உவமை இதனை விளக்குதற்கே வந்துள்ளது. பால் நிற்க—பக்கத்தில் நிற்க, வெளிப்படையாய் இருக்க.

முத்தி நிலையில் ஆணவம்

மேற் போந்தவற்ருல் முத்தியில் ஆணவம் இல்லையாயிற்று (முத்தியடைந்த உயிர் விஷயத்தில்) என்ற முடிவே தோன்று

கின்றது. அது அங்ஙனமாக, உண்மை விளக்கம் என்ற சித்தாந்த நூலில் 51ஆம் வெண்பா 'முத்தியினில் மூன்று முதலும் மொழியக்கேள்' எனத் தொடங்கி,

(i) 'சுத்த அநுபோகத்தைத் துய்த்தல்அணு'

(ii) 'இன்பங் கொடுத்தல் இறை'

(iii) இத்தை விளைவித்தல் மலம்', 'அன்புடனே கண்டு கொள் அப்பா' என முடிகின்றது. இவ்வெண்பாப் பொருள் சித்தாந்த அறிஞர்களை வெகுதூரஞ் சிந்திக்க வைக்கின்றது. (i) (ii) என்ற பகுதிகள் பற்றி யாருக்கும் ஆட்சேபமில்லை. ஆனல், (iii) ஆம் பகுதி கொடுக்கும் பிரச்சினைகள் மிகப்பல.

'முத்தியிலே முப்பொருளும் உள்ளன' என்று முதலிற் பொதுவகையால் மொழிந்து. பின் ஒவ்வொன்றும் எவ்வெவ் வகையில் இருக்கின்றன எனக் காட்டுவது இச்செய்யுள். அவ்வொழுங்கில், மலத்தைக் குறிப்பிடும்போது ''இத்தை விளைவித்தல்' என்கிறது. இதனை எடுத்த எடுப்பில் நோக்குவார்க்கு, முத்தியிலும் ஆணவமோ ஆணவ சக்தியோ, முத்திபெறும் உயிரை விட்டு விலகவில்லை என்ற விளக்கம் பொள்ளெனப் புலப்பட்டு விடுவதாகத் தெரிகிறது. இவ்வகையில் வெளியான சில அறிஞர் அபிப்பிராயங்களின் பொருந்துமாற்றைப் பற்றிச் சற்றுச் சிந்தித்தல் தகும்.

(i) 'முத்தியில் ஆணவம் திருந்திய நிலையில் உள்ளது'
—டாக்டர் தேவசேனபதி.

(ii) ஆணவம் குறைவது மிகுவது திருந்துவது உபசாரமே
— திரு. நல். முருகேசு முதலியார்

(iii) ஆணவம் எவ்விடத்தும் தொழிலாற்றிக் கொண்டேயிருக்கும். நித்தியப் பொருளுக்கு என்றும் அதன் கூறுகள் ஒரு படித்தாயே யிருக்கும். அதனல் முத்தியிலும் ஆணவம் உண்டு. ஆனல் தொழிற்படுவதில்லை.
—திரு பழ. இரத்தினம் செட்டியார்.

1975ஆம் ஆண்டு அக்டோபர் மாசமும் அதற்குமுன் பின்னுகவும் வெளிவந்த சித்தாந்தம் பத்திரிகையில் 'முத்தி நிலையில் ஆணவம்' என்னும் பொருள் பற்றி ஒரு கருத்துப் பரிமாறல் இடம் பெற்றிருந்தது. அதன்கண் அவதானிக்கக் கிடந்த கருத்துக்களே மேற்காட்டியவையால். 'இத்தை விளை வித்தல் மலம்' என்ற உண்மை விளக்கம் தொடரின் பருமட்ட

மான விளக்கமளவில் வைத்து முத்திநிலையிலும் சம்பந்தப்பட்ட உயிரிடத்தில் ஆணவம் விலகாமலேயிருக்கிறது எனக் காட்டுதலே குறித்த மூவருக்கும் பொது அபிப்பிராயமென எண்ணக் கிடக்கின்றது. இவ்வபிப்பிராயம், இதற்குமுன் இக்கட்டுரையில் நாங்கள் கவனித்த சித்தாந்த சாஸ்திர அபிப்பிராயங்களுக்கு மாறுபடாமல் இருப்பதானல் மட்டுமே ஏற்புடையதாகும்.

குறித்த அறிஞர்கள் அறிவியலாராய்சி ரீதியில் தத்தம் அபிப்பிராயத்துக்கான விளக்கங்களும் உதாரணங்களுந் தந்துள்ளார்கள். டாக்டர் அவர்கள், ஆணவம் திருந்தியநிலையிலிருப்பது என்பது 'திரோதானசக்தி சிற்சத்தியாய் மாறியதுபோல்' என உபமான விளக்கங் காட்டுகிருர்கள். திரோதான சத்தி சிற்சத்தியாய் மாறுதலுக்கும் எடுத்துக்கொண்ட உபமேயப் பொருட்குமிடையில் வேறுபாடுண்டு. சத்தி சித்துப் பொருளாதலால் அது தன்னிஷ்டமாக மாற்றமடைதலில் ஆசங்கை கொள்ள இடமில்லை. ஆணவமோ சடம். அதுதன்நிலைமாறி மற்றென்றுமொன்றற்கு இயைபில்லை. அது தானே மாறிற்றன்று தன்னை யியக்கும் திருவருளால் அங்ஙனம் ஆயிற்றெனில், அதற்குச் சாஸ்திர சம்மதமில்லை. அருள் மலத்தைத் துரந்தது என்று காட்டும் சாத்திர அபிப்பிராயங்களன்றி, அருள் மலத்தை மாற்றியது என்ற அபிப்பிராயம் எங்குங் காணப்பட்டதில்லை.

1. 'மன்னும் அருளே மலந்துரந்து'—சிவஞானபோதம் 11·2.
2. 'விண்டகலும் மலங்களெலாம்' — சித்தியார் 9·7 (3ஆம் அதி.)
3. 'வரவர வந்திடுவன் பின் மலமான தறுமே'—சித்தியார் 9·10 (3ஆம் அதி)
4. 'எல்லா மலங்களும் பின் காயமொடு மாயுமன்றே'— சித்தியார் 10·6 (2ஆம் அதி.)
5. 'தாணு பின்தன் கழலணையத் தவிரும் மலம்' — சித்தியார் 11·5 (ஆரம்பம்)
6. 'அடியிற் பொருந்த மலம் போமே'—சிததியார் 11 5
7. 'தங்கால எல்லைகளின் மீளும் எண்ணரிய சத்தியதாய்'—சிவப்பிரகாசம் 20
8. 'அழிந்திடும் சத்தி ...ந்தம் அழிந்திடா' — சிவப்பிரகாசம் 88
9. மூல நிறையிருள் இரிய .. அடங்கி ,, 93

இவ்வெல்லாக் கூற்றுகளும் மலமாற்றத்தையல்ல நீக்கத்தையே ஒரே குரலாக எடுத்திசைக்கின்றன.

மேலும் டாக்டர் அவர்கள் திருந்திய நிலையில் ஆணவம் உண்மைக்கு மெய்யடியார்கள் கூற்றிலும் அவர்கள் ஒழுகலாற்றிலுமிருந்து உதாரணந் தருகின்ருர்கள்.

'இறுமாந் திருப்பன் கொலோ' —திருநாவுக்கரசர்
'வாக்கியலால் வார்கழல் வந்துற் றிறுமாந்திருந்தேன்'
—மாணிக்கவாசகர்

மதுரைக்குச் செல்வதில் அப்பரும் சம்பந்தரும் நான் முந்தி நீமுந்தி என நின்றமை —பெரியபுராண வரலாறு

இவற்றின்மூலம், மெஞ்ஞான நிலையிலும் அவர்களிடத்தில் இவைவெளிப்பட்டது திருந்திய ஆணவ முனைப்பினுல் என நிறுவ முற்படுகின்ருர்கள். நால்வர் பெருமக்கள் நிலை பந்தநிலையென் பாரியாருமிலர். அதற்கெதிர் யான் எனது முற்றக்கெட்ட சுத்தநிலையே அவர் நிலையாதல் பலருமொப்பும் உண்மை யாகும். 'ஊனமிலா ஞானந்தானுதிப்பினல்லால் ஒருவருக்கும் யானெனதிங்கொழியாதன்றே' என்பது சித்தியார் கூற்று அவர் செயல் திருந்திய ஆணவத்தால் (Proper pride) நிகழ்ந்ததெனில் அவர்களுக்கு நான், எனது அற்றதில்லை, அவை அருமையின் ஞானம் உதித்ததில்லை என்ற விபரீத முடிவை ஏற்க வரும். அல்லாமலும் 'அவனருளாலல்லது எதனையுஞ் செய்யாராதல்' என்ற ஞானிகள் இலக்கணமும் வழுவுறும். அன்றியும் இவைபோல்வன அவர்களின் திருந்திய ஆணவ முனைப்பின் விளைவென்பதாயின்,

''என்னடியானுயிரைவௌவேல் என்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவி நாளும்'' - என்ற சம்பந்தர் தேவாரத்தில் குறிக்கப்படும் சிவன் செயலும் அவர்தம் Proper Pride இன் விளைவென்றே கொள்ளவரும். இவற்றை அவ்வாறுகொள்ளும் சமயிகளும் இருக்கலாம். அவர்கள் பிறர் பிறர். சைவசித்தாந்த சமயிகளல்ல என்பதை அறிதல்மேல். உண்மையால் நோக்குவார்க்கு (pride) முனைப்பு என்ற சொற்சுட்டுக்குரியது எதுவாயினும், அது (Proper) திருந்தியது ஆயிருப்பினுஞ்சரி (false) திருந்தாதது. ஆயிருப்பினுஞ்சரி அது பந்தநிலைக்குட்பட்டதேயென்பது விளங்கவரும். திருவள்ளுவர் 'மாண்பிறவாமானம்' என ஒன்றை உய்த்துணர வைக்கின்ருர். அது இத் திருந்திய முனைப்பு (Proper Pride) என்பதையே சுட்டும் என்றல் சாலும். ஆனுல். அது சுத்த நிலைக்கல்ல

---

foot note :

''இவறலும் மாண்பிறந்த மானமும் மாணு உவகையும் ஏதம் இறைக்கு.'' —அரசியல் குற்றங்கடிதல் 3

இதன் உரைக்குறிப்பில் மாட்சியான மானத்தின் நீக்குதற்கு மாண்பிறந்த மானமென்ருர் எனப்பரிமேலழகர் குறிப்பிடுவர். இம் மாட்சியான மானம் என்பது Proper Pride என்பதற்குச்சமமாகலாம். அது உலகியல் நோக்கிக் கூறப்பட்டது இங்கு பெயராட்சி அளவுக்கு அது தழுவப்பட்டது என்க

ஏகனுகி இறைபணிநிற்கும் சுத்தநிலையாளர்க்கு பிறரால் நிகழ்வன, அவர்களால் நிகழ்வனவற்றில் எதுவும் அவர்முனைப் பாலாவதன்று. அவ்வொவ்வொன்றும் திருவருளால் ஆவதே. அவர்நினைவு சொல், செயல் எதுவும் முனைப்பு முத்திரை பெறுதல் சாலாது. முனைப்பு என்ற சொல்லே அங்கு அநுமதிக்கப்படுதற்கி டனின்றும். அவர்களது அத்தகு நிலைகளைக் குறிக்க நமக்குச் சொல்வேண்டும் எனில், திருவருள் வீறு அல்லது திருவருள் விலாசம் என்றவாறு சொல்லுதல் அமையும்.

'வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே'' — திருவாசகம்
'எனதுரை தனதுரை யாக ஏறுகந்தேறிய நிமலன்'
— சம்பந்தர் தேவாரம்

இத் திருமுறை வாசகங்களின் பயனுக நாம் உணரக் கிடப்பது இதுவேயாம்.

இனி, ஆணவம் குறைவது மிகுவது திருந்துவது, உபசாரமே என்கின்றது மேல் எடுத்துக்கொண்ட இரண்டாமவர் கருத்து. உயிர், மலம், பந்தம், மோக்ஷம் என்பன சைவ சித்தாந்தத்தில் உண்மை சித்தாந்த ரீதியாக உரைக்கும் அவற்றது இயல் புகளும் உண்மை. இவற்றின் விஷயத்தில் உபசாரப் பிரயோகம் சென்மதியாமோ என்பது சிந்திக்கத்தக்கதாம். 'திருந்துவது' என்ற நிலை ஆணவ விஷயத்தில் இல்லாதது ஒன்று இல்லாதது என்ற கருத்தில் உலகர் உபசாரம் என்ற சொல்லை உபயோகிப் பதுண்டேனும் நூல் வழக்கில் அது அக்கருத்தில் வழங்குமா றில்லை. காரணம், காரியம்; குணம், குணி; பண்பு, புலன்; பொருள், வினைகள்; என்பவற்றில் ஒன்றை மற்ருென்றில் ஏற்றியுரைக்கும் ஏற்றுரையே நூல் வழக்கில் உபசாரம் எனப்படுவது. இங்கு திருந்துவது என்பது குறித்த வகைகளில் ஒன்றினும் அடங்குவ தாகக் காணவில்லை ஏலவே கலாதி தத்துவங்களின் சேர்க்கை யால் ஆணவம் ஒரு சிறிது குறைதலும், பின் சத்திநி பாதத் தாற் பெருமளவு குறைதலும், பின் ஏகனுகி நிற்றலால் முற்றக் குறைதலும். பொன் வாள் முன் கொண் மூவில் — என்ற சிவ ஞான போத உதாரண வெண்பாவில் ஏலவே கண்டோம் ஆதலின், இவை உண்மைகள் அன்றி உபசாரங்களாகா. அப்படி யன்று, ஆணவ சத்தி குறைவதை இங்கு ஆணவம் குறைவது என எடுத்துக்கொண்டமையே உபசாரமாவது எனில் அஃ தொக்கும். ஆனல், திருந்துவது என்பதனேடொரு தொடராக வந்தமையின் அக்கருத்து நிலையும் சந்தேகிக்கப்படவேண்டி யாயிற்று.

இனி, மேற்குறித்தவற்றில் மூன்றுமவர் கருத்து, முத்தியிலும் ஆணவத்தின் கூறுகள் குறைவதில்லை. முத்தியிலும் ஆணவம் உண்டு. ஆனால், தொழிற்படுவதில்லை, எனப் பேசுகின்றது இங்கு கூறுகள் என்பது எதைக் குறிக்கும் என்பது முதல் விசாரமாகும். உடற் கூறு பொருட்கூறு என்பவற்றிற் போல, பங்கு என்ற பொருளில் அச்சொல் உபயோகிக்கப்பட்டதெனில் அதில் தவறில்லை. ஆணவம் எந்நிலையிலும் தன் உருவங் குறையாதென்பதே நம்மவர் துணிபுமாம். அன்றி கூறு என்பதனால் ஆணவ சக்திகள் குறிக்கப்படுமெனில் அதுபொருந்தாதாய் முடியும். சக்தி குறைதற்குச் சாஸ்திர சம்மதம் மிகவுமிருத்தலை முன்பே கண்டோம். மேலும், ஆணவம் ஏகமாயிருந்ததினாலும் அதன் மறைப்புக்கு விஷயமாகும் ஆன்மாக்கள் அநேகம் ஆதலினாலும் ஒன்று அனைத்துடனும் தனித்தனி நின்று மறைக்குமெனல் பொருந்தாது. எனவே தனிப்பட்ட உயிர்கள் ஒவ்வொன்றையும் மறைப்பன அதன் வெவ்வேறு சக்திகளேயாதல் ஒரு தலை

> கதிதருங் காழிமன் காட்டுமப் பாசங்கள் மூன்றவைதாம்
> பொதிதரு மாணவம் போகஞ்செய் கன்மமு மாயையுமாம்
> முதியது தானென்று முன்பி னிலாதது சேதனன்கண்
> அதிகம் மறைப்பன ஆயிர கோடி விருத்திகளே
>
> தத்துவவிளக்கம் 19.

(இந்நிலையில் சக்திகளைச் சுட்டாது ஆணவக் குறைவு பேசுதற்கு அவகாசமுமில்லை. ஆதலின் செட்டியார் அவர்கள், கூறுகள் என்றதனால் சக்திகளையே குறித்திருப்பதாகவே கொள்ளவேண்டியிருக்கின்றது.)

இவ்வாற்றால், மறைந்த ஆணவ சக்திகள் தொழிற்படாமல் அப்படியே இருந்தாங்கிருப்பன என்று இவர்கள் கொண்டதற்குக் காரணம், கடவுளால் முடியாதவை என்ற பெயரில் வெளிவந்த இவர்கள் நூல் ஒன்றில் ஒரு கட்டுரையில் அறிய வருகின்றது. அதன் ண், அவர்கள்,

'If any part whatever in an individual were to vanish or alter, it would no longer be that individual at all' தனிப்பட்ட எந்த ஒரு பொருளிலாயினும் எந்த ஒரு அம்சமாயினும் மறையவோ, மாற்றமுறவோ நேரின் அப்பொருள் அதே பொருளாய் நிலையுறுதல் சாலாது—என்ற மேலை நாட்டறிஞரொருவரின் கருத்தை எடுத்துக்காட்டி இதே கருத்தை விபரித்திருக்கிறார்கள். இக்கருத்து சைவ சித்தாந்தத்திற்குப் புதிதன்று. இக் கட்டுரையின் முன் பகுதியில் நாம் அவதானித்த பௌஷ்கராகமக் கருத்துக்களுள் இதுவும் இடம்பெற்றிருத்தல் காணலாம்.

---

foot not :

1. William James

ஆணவ சக்தி உயிரறிவை மறைக்கிறதோ மழுக்குகின்றதோ (அப்பிரகாசமாக்கல்) என்ற ஆசங்கையை விடுவிக்கும் சந்தர்ப்பத்தில்.

அநாதி ரபி சம்பந்த; ப்ரோக்தோ யதி மலாத்மனோ :
மலாத் கிம் க்ரியதே தத்ர சக்தே ராவரணம் து வா
அப்ரகாசீ க்ருதிர் வாபி தத்ராத் யஸ்து நசோபதே
தஸ்யாச் சாபின்ன ரூபத்வாத் ஆத்மனோபி ப்ரசங்கத :
நாப்யப்ர காசி கரணம் விநாசித்வ ப்ரசங்கத :
ப்ரகாசஸ்யாப் ரகாசோபி விநாசாத் நாவசிஷ்யதே. 155—157

மலமானது ஆன்ம சிற்சத்தியை மறைக்கிறதோ அப்பிர காசஞ் (மழுக்குதல்) செய்கிறதோ? மறைக்கிறதெனில் சிற்சத்தியோடபின்னமாயிருக்கிற ஆன்மாவும் மறைபடும். அப்பிரகாசஞ்செய்யுமெனில் அப்ரகாசத்திற்கு நாசம் வருமாகையால் இரண்டு பக்ஷமும் (கருத்துநிலை) கூடாதென்று கொள்க.

இங்ஙனம், ஆன்ம சிற்சக்தி மழுக்கப்படுமாயின் அதற்கு நாசம் வருமென்று தானே சொன்ன சைவ சாஸ்திரத்திற்கு ஆணவ சக்தி விலக்கப்படுமாயின் ஆணவத்திற்கு நாசம் வருதல் உண்மை என்ற காட்சியிருக்குமாயின் வெளிப்படச் சொல்லியேயிருக்கும். அது உண்மையில் இல்லை. அதனல் ஆகமம் சொல்லவில்லை என்பதே துணிபு.

'நஸாதிகாரே தமஸி முக்திர் பவதி.
அதிகாரோபி 'தச்சக்தே : பரிணாமாத் நிவர்த்ததே
—மிருகேந். 7.16

மலத்திற்கு அதிகாரமிருக்கும் வரையில் ஒருவனுக்கு முத்தி உண்டாகிறதில்லை. மலம் நீங்குதலே முத்தியெனப்படுகையால் மலாதிகாரமும் மலசக்தி பரிணமித்தபின்தான் நீங்குவதாகும். பரிணமித்தல் (பரிபாகமுறுதல்).

இவ்வாறு சைவ சாஸ்திரமே சொல்வதிலிருந்து நாம் உய்த்துணர வேண்டியதொன்றுண்டு. குறித்த பொதுநிலைக் கருத்திற்கு உட்படாமல் தன் சக்தியின் ஒரோவோர் கூறு ஒரேவோர்கால் விலகியும் தான் மாயாதிருக்கும் நிலை ஆணவத்துக்குண்டென்பது ஆகமக் காட்சி கண்ட உண்மை என்பதே அங்ஙனம் உய்த்துணரக் கிடப்பதாம். ஆதலால், முத்திநிலையில் ஆணவ சத்தி உயிரைவிட்டு நீங்கியேவிடும் என்பதே முடிநிலைப் பொருளாகின்றது. இன்னும் இதுபற்றி நிகழக்கூடிய வாதப் பிரதிவாதங்கள் வரம்பின்றி நீளக்கூடியன. அதற்கு அவகாசமின்

மையின் இம் மட்டில் ஒழிகின்ரும். இம் முடிபுக்கு நாம் முற் கூறிய சாஸ்திர ஆதாரங்கள் அத்தனையும் ஒத்தியலுமாறு காண்க.

உண்மை விளக்கப் பொருளுண்மை

இங்ஙனேல், 'இத்தை விளைவித்தல் மலம்' என்ற உண்மை விளக்கக் கூற்றுக்குத் தாற்பரியம் யாது?

இதை விளங்கமுயலுமுன் நாம் ஒரு கருத்தை மனத் திருத்திக்கொள்ளவேண்டியது ஆவசியகமாகும். நமது சைவ சித் தாந்த சாஸ்திரங்கள் தமிழ்ச் செய்யுள் நூல்கள். ஆகமக் கருத்துக்கள் அவற்றிலுள்ளனவே தவிர அவை தமிழியல் நூல்களேயாதற்குத் தடையில்லை. இவற்றின் ஆசிரியர்கள்தாம் கூறுந் தத்துவக் கருத்துக்களை வசன நடையிலேயே கூறிவிடத் தெரியாதவர்களல்ல. அவர்கள் செய்யுள் நடையையே விரும்பி மேற்கொண்டதுபற்றி நாம் அறியவேண்டுவதொன்றுண்டு, தமிழிலுள்ள சாஸ்திர நூல்களுக்குப் பொருள் காண்கையில் செய்யுள் உத்திமுறைகளைத் தழிவியே பொருள் காணவேண்டும் என்பது அவ்வாசிரியர்களின் உள்ளக்கிடையாகும். மெய்கண்டார் வசன வடிவில் தந்த மேற்கோள், ஏது என்பவற்றிற் பல வற்றுக்கும் செய்யுள் உத்தி முறையிலேயே பொருள் தெளிய வேண்டியிருத்தல் இதற்கு நிதர்சனமாகும்.

செய்யுள் உத்திகள், சொல், பொருள், யாப்பு, அணி இலக் கண நுட்பங்களையும், தருக்க விதிகளையும் தம் உறுப்பாகக் கொண்டவை. குறித்த இப்பகுதிகளிற் பயிற்சியின்றிச் சித்தாந்த சாஸ்திரச் செய்யுட்களை விளங்கிக்கொள்ளுதல் இயலாதாகும்

Foot note :

[இக்காலத்துச் சைவ சித்தாந்தக் கல்வியில் ஊக்கங்குன்றி வரு தற்கு இக்குறைபாடே முழுக்காரணமாகிறது, சித்தாந்த சாஸ்திரச் செய்யுட் பகுதிகளை, வசனங்களைப் பார்ப்பதுபோலப் பார்த்துவிட்டு அர்த்தங்கொள்ளும் வகையால் மரபு வழிப்பட்ட சித்தாந்த முடிபுக ளோடு முரண்பட்டுக்கொண்டு, அம்முரண்பாட்டை வீடுவிக்கப் பிற பிற நூலாதாரங்கள் தேடும் நிலையும் வேறேயுள்ளது.

ஆகமங்கள் சித்தாந்தமாகும் என்பதோருண்மை. தமிழ்ச் சித்தாந்த சாஸ்திரங்களும் ஆகமப்பொருளையே கூறுவன. அளவை முறைபற் றிச் சித்தாந்தசாஸ்திரப் பொருளை நிச்சயிக்கையிலும் ஆகமப்பொருள் முடிபுக்குவிரோதமாகா வகையில் அளவை இலக்கணத்தைக் கையாள

இவ்வுண்மைக்கிணங்கப் பொருள் கொள்ளவேண்டிய சித்தாந்த சாஸ்திரச் செய்யுள் தொடர்களில் இத்தை விளைவித்தல் மலம் என்பது மெத்தப் பிரதானமான ஒன்ருகும்.

இத்தை விளைவித்தல் மலம் என்புழி எத்தை என்றறியும் அவாய் நிலையுள்ளது, முன், சுத்த அநுபோகத்தைத் துய்த்தல் அணு என்றும் இன்பங் கொடுத்தல் இறை என்றும் சொல்லப் பட்டாயிற்று. சுட்டுப் பெயரொன்று முன்வந்த ஒன்றையே சுட்ட வேண்டும். அந் நியமத்தில் இங்கு இது என்ற சுட்டுக்குப் பொருளாயிருப்பது எதுவென்று பார்க்கில் அது அணு (ஆன்மாவும்) வும் ஆகாது. இறையும் ஆகாது. அவை ஏலவே தொழிநிலை பெற்றுக்கொண்டன. இனி, இச்சுட்டு இன்பத்தைக் குறிக்குமோ எனின் அதுவும் பொருந்தாது, இன்பத்தை விளைவிப்பது மலமன்று; இன்பம் விளைவிக்கப்படுவதொன்றுமன்று. உயிரைப் பந்தித்த மலம் திருவருளால் விலக இறைவனுபகாரத்தால் விளைவதே இன்பம். எனில் இத்தை என்பதனுல் குறிக்கப்பட்டது இன்பவிளைவாகிய இச் சூழ்நிலை என்றே கொள்ளக்கிடக்கிறது.

இனி இச் சூழ்நிலை விளைவுக்கு மலம் எப்படிக் காரணமாகும் என்பது கேள்வி. இக் கேள்விக்குத் தருக்க ரீதியாகவும் இலக்கண ரீதியாகவும் செய்யுட் கற்பனை உத்தி வழியாகவும் பொருள் கொள்ள இடமுண்டு.

பொருள் நிச்சயத்துக்கு உதவுங் காரணிகளில் ஒன்று ஏது. அது உண்மை தழுவிய ஏதுவாய் வருதலும் இன்மை தழுவிய ஏதுவாய் அமைதலும் இயல்பு. மழையுண்மை பயிர்விளைவுக்குக் காரணமாதல்போல மழையின்மை திறந்தவெளியரங்கிற் கூட்டம் நிகழக் காரணமாதலும் உண்மையில் உள்ளனவே. இவ்வகையில், இயல்பாயிருந்த ஆணவத்தினது மறைப்பு இல்லையாதல் அதனுல் தடையுண்டிருந்த பேரின்ப விளைவுக்குக் காரணமாகி

Foot note :

வேண்டும் என்பதே சித்தாந்த ஆசிரியர்களின் திருவுள்ளம். ஏலவே தருக்க நூல்கள் பல இருப்பவும், வட மொழியில் பௌஷ்கராகமும் தமிழில் சிவஞான சித்தியாரும் அளவை இலக்கணத்தைத் தமக்கொரு அம்சமாகக்கொண்டிருத்தல் இதற்கு நிதர்சனமாகிறது. சிவஞான சுவாமிகள் தமது உரையில் இடமிடங்கள்தோறும் ஆகமப் பொருளுக்கு அமைவான அளவைப் பிரயோக முறையை வற்புறுத்திச் செல்லுதலின் நோக்கமும் அதுவேயாம்.

ஆகம நூற் கல்வி சித்தாந்தக் கல்விக்கு அத்தியாவசியமாதலும் ஒரு பெரும்பேருண்மையாதல் அறியத்தகும். எனவே பிறநூற் கருத்தொன்று சித்தாந்தக் கருத்துக்கு மாறுபாடாகக் காணுமிடத்து அதற்கேற்ப இதைத்திருத்திக்கொள்ளமுயலல் உண்மையோடுபட்ட முயற்சியன்ரும் என்பதுங் காண்க]

றது. இந்நிலையில், சம்பந்தப்பட்ட உயிரைச் சார்ந்து அதன் ஞானக் கிரியைகளை மறைக்கும் பாங்கிலிருந்து விலகிக்கொண்ட ஆணவசத்தியானது அதேவேளை அவ்வுயிருக்கு உலகந்தோன்று வாறு மறைத்து நிற்றலும் கருதிக்கொள்ளற்கிடமுண்டு.

இத்தை விளைவித்தல் மலம் — இப்பேரின்ப அநுபவம் விளைதற்கு மறைமுகமாக ஏதுவாதல் மலத்தின் செயல். உல கத்தை மறைத்துச் சிவத்தை மறையாது நிற்குமாற்றால். —வச்சிரவேலுமுதலியார்தெளிவுரை.

இப்பாடல் இறுதியில் வரும் 'அன்புடனே கண்டுகொள் அப்பா என்ற தொடரும் குறிப்பிடத்தக்கது. சித்தாந்த உண்மைமுடிவில் அன்பு வைத்து அந்த அன்புக் கண்ணோட்டத்தில் இதன் தாற் பரியத்தை அதற்கேற்ப உணர்ந்து கொள் அப்பா என்பது இத் தொடரின் பொருளாகும். இவ்வுண்மையைப் பிரமாண நூல்க ளின் கூற்றுகளில் அன்பு வைத்துக்கண்டுகொள்' என்றே குறித்த சித்தாந்த நல்லறிஞராகிய வச்சிரவேலு முதலியாரும் இதற்கு உரைத்திருப்பக் காணலாம். இங்ஙனங் கூறுதலால், இப் பொருளுண்மை அன்புக் கலப்பற்ற வெறும் அறிவுக் கண் கொண்டு காணலுறின் சந்தேக விபரீதங்கட்கிடமாகும் என்பது குறிப்பு. இதற்கு உரை கொள்வார் எவரும் இவ்விறுதியடியை முதலில் உற்று நோக்கியுணர்தல் கடனாகும்.

'கெடுப்பதூஉங் கெட்டார்க்கு' என்ற திருக்குறட்கு உரை யுரைக்கும் பரிமேலழகர், கெடுப்பதூஉம் என்ற தொடர்க்கு 'தான் பெய்யாது நின்று கெடுப்பதும்' என உரை வகுத்துள் ளார்'' இங்கு பெய்யாமை என்ற எதிர்மறை கெடுத்தலுக்கு எங் ஙனங் காரணமாகின்றதோ அங்ஙனமே அங்கும் மறையாமை என்ற எதிர் மறை, இன்ப விளைவுக்குக் காரணமாகின்றது. இவ்வகை யால் அத் தொடர்க்கு மேற்போந்தவாறு உரை காண்பதற்கு இலக்கிய பரமான சான்றுண்மையும்பெற்றாம்.

இனி, செய்யுள்களிற் பொருளுண்மை, கற்பனை வழியால் தோற்றப்படுதலுக்கு ஒரு உதாரணங் காண்போம்.

''பொய் வாய்மை பெருக்கிய புன்சமயப்
பொறியில் சமண் நீசர் புறத்துறையாம்
அவ்வாழ்குழி யின்கண் விழுந்தெழுமா
றறியாது மயங்கி அவம்புரிவேன்
மைவாச நறுங்குழல் மாமலையாள்
மணவாளன் மலர்க்கழல் வந்தடையும்
இவ்வாழ்வு பெறத்தரு சூலையினுக்
கெதிர் செய் குறை என் கொல் எனத்தொழுவார்''

திருத்தொண்டர் புராணம் — திருநாவுக்கரசர் 73

சூலை நோய் தீர்ந்து சிவனருட்பேறுற்ற திருநாவுக்கரசர்' அப்பேறு தாமுறச் செய்ததாகிய சூலைக்குத் தாம் செய்யக்கிடந்த கைம்மாறென்? எனக் கருதுவதாக இச் செய்யுட் கற்பனை அமைகின்றது. புறநோக்கிற் கற்பனையேயானாலுங் காரணங் காரணமேதான். சூலை அவரைப் பீடித்திராவிடில், அவர் சமண வாழ்வை உவர்த்தலும், தமக்கையாரை நினைந்து 'மீளலும், திருவதிகையிற் சென்று திருப்பதிக மிசைத்தலும், சிவனருட் பேற்றுக்களாதலும் கூடாவாம். அதேபோலவே, ஆணவம் என வொன்றில்லாப்பட்சத்தில் உயிர் பிரபஞ்ச வாழ்வில் உவர்ப்படைதலும், மேல்கதி வீடுபேறுகளைக் கருதி முயல்தலும், குருவைத் தலைப்பட்டுத் தீக்ஷையுறுதலும், அதன் தொடர்பான அகமுக விருத்திகள் பெறுதலும், முடிவில் முற்றாக ஆணவம் விலகிச் சிவானந்தப் பேரின்பமுறுதலும் கூடாவாம். அங்கு அப்பர் அருட்பேற்றுக்குச் சூலை காரணம் என்ற அதே பாணியில், இங்கு ஆன்மாவின் சிவானந்தப் பேற்றுக்கு ஆணவம் காரணமென்று காட்டப்பட்டிருக்கின்றது. இத்தகைய பொருள்நோக்கு யதார்த்த வாதமாகாதென்பார் உளரேல், அவர் இலக்கியப் பயன றியார் என விடுத்தலே மேல்.

இனி, குறித்த தொடர்க்கு இலக்கண நுட்ப வகையாற் பொருள் கொள்ளுமாறு :

இச் செய்யுள் குறிக்கும் பிரதான பொருள் பேரின்ப நுகர்ச்சி. அது ஒரு வினை. அதற்கு வினைமுதல் ஆன்மா. ஒரு வினைக்கு எட்டுக் காரணங்கள் உளவாகத் தொல்காப்பியமும் நன்னூலுஞ் சாற்றும். அவை. செய்பவன், கருவி, நிலம், செயல் காலம், செய்பொருள், இன்னதற்கு, இது பயன் எனப் பெயர் பெறும். இவ்வெட்டில் வினைமுதல் ஒன்றே செய்பவன். ஏனைய ஏழும் செய்விப்பன என்ற ஒரு பிரிவில் அடங்கும். இச் செய்யுட் சார்பில் இன்பங் கொடுப்பதான இறையும் விளைவிப்பதான மலமும் கருவிகள். இறை உபகரிக்கும் முகாந்திரமான கருவியும், ஆணவம்தான் முன்னெல்லாஞ் செய்தவாறு தற்பொழுது இன்பப்பேற்றுக்குத்தடையாகாது விலகிநிற்கும் முகாந்திரத்தாற் கருவியும் ஆம். இங்ஙனம் இலக்கணக் கண்நோக்கில், சித்தாந்தப் பொருண்முடிபுக்கு விரோதமாகாவண்ணம், இச் செய்யுட்குப் பொருளுரைக்கும் முறையை அறிமுகஞ் செய்தவர், காஞ்சிபுரம், ஸிலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்.

இவ்வுரை விளக்கச் சார்பாக அவர்கள் கூறும் இலக்கண நுட்பங்களும், இலக்கிய ஆதாரங்களும், இப் பொருள் நிலையை ஆதரிக்கும் ஞான நூற் கருத்துக்களும் பிறவும் அவர்கள் இயற்றிய உண்மை விளக்க உரை என்ற நூலில் 96-106 ஆம் பக்க இடைவிற் கண்டுதெளியலாம். 1967இல் புரசைப் பாக்கம் மாணிக்கம் பதிப்பகத்தார்வெளியீடாக வெளிவந்துள்ளது இந்நூல்.

இருக்கும் துன்ப அநுபவங் காட்சிப் படுமானால் உயிருக்குத் தான் நிற்கும் இன்ப போகத்திலே மனம் லயிக்காமற் போய் விடும். அதற்காக அது தோன்றாமல் மறைக்க வேண்டும். அந்த மறைப்பு. நிறுத்தலின் விசேட பண்பாயிருக்கும். இனி, இன்பா நுபவம் முடிந்து துன்பாநுபவத்தில் நிலைப்பதென்றால் உயிர்க்கு மிகக் கஷ்டமாயிருக்கும். அந் நிலையில் ஏதேனும் தந்திரங்க ளால் அதற்கு மனமயக்கத்தையோ வைராக்கியத்தையோ ஊட்டி அதே போகத்தில் நிலைக்கச் செய்ய வேண்டும். இது நிகழா விட்டால் துன்ப போகங்கள் முறைப்படி அனுபவித் தொழிய மைப்படாமை காரணமாகப் பிறவி நீட்டிக்கும். இங்ஙனம், இத்திரோதான சக்தி எது செய்யினும் அது ஏதேனுமொரு வகையில் மறைப்புடன் கூடியதாகவேயிருத்தல் அறிதற்பால தாகும்.

'திரோதாயி நிறுத்தலாகும்' எனச் சிவப்பிரகாசம் 18 ஆம் செய்யுள் கூறுவதும் குறித்த இச் சுலோகப்பொருளும் ஒன்றே.

இப் பொருளுண்மை இதனினுங் கூடிய அழுத்தத்துடன் மதங்க பாரமேஸ்வரம் என்ற ஆகமத்தில் இடம் பெற்றிருக்கக் காண்கின்றோம்.

''ரோதயித்ரீ யா பத்யு ராவ்ருத்ய ஜகதோ துரம்
ருணத்தி ஸ்திதயே அத்யர்த்தம்
நேச் சன்னபி பசும் பலாத்'' — பர்த்தாவின் சத்தியாகிய ரோதயித்ரீ என்பது உயிர்களை ஊட்டும் பொறுப்பைத் தானே வகித்துக் கொண்டு விரும்பப்படாத விஷயங்களிலுங் கூட உயி ரைப் பலவந்தமாகத் தடுத்து நிறுத்தி அநுபவிக்கச் செய் கின்றது.

—மதங்கபாரமேஸ்வரம் சக்திபடலம். 38

மேற்கண்டவாறு போகத்தில் நிறுத்தல் என்னும் விஷ யத்திற் பலவந்தம் பிரயோகிக்கப்படுமாற்றை இது தெரிவிக் கின்றது. குழந்தையை அடித்து அடக்கி வைத்து மருந் தூட்டுவது போல்வது இது, இது வெல்லாம் உயிரின் ஈடேற்ற மான முடிவான நன்மைக் காதலின், குறித்த ஒருயிர் ஈடேற்றம் பெற்ற பின், இது மருந்தூட்டியவாறறன்று, சர்க்கரை தீற்றிய வாறு என எண்ணி இறும்பூதெய்தவரும் என்பதையும் அறிதல் நலம். 'அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய அற்புதம் அறியேனே', குரம்பையிற்புகப் பெய்து அடித்தடித்து அக் காரமுன் தீற்றிய அற்புதம் இது என்கிறார் மாணிக்க வாசக சுவாமிகள். இத் திரோதானத் தொழில்கள் ரோதயித்ரீ சக்தி

துக்கு ஒரு அடிப்படைத்தேவை என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும். சிவஞான சுவாமிகள் உரை வளம் இதற்கு நிதர்சனமாகின்றது. நமது பாரம்பரியத்தில், அத்தகைய அறிவு நிலை வாய்க்கப்பெற்றவர்களே சைவ சித்தாந்த அறிவில் வியுத்பத்தி உடையவர்களாய் விளங்கியிருக்கிறார்கள். இவர்களில் இங்கு நாம் கவனித்த ஞானப்பிரகாச சுவாமிகளும் ஒருவர். அவர்களும் அவர்கள்போல் தமிழ் இலக்கிய இலக்கண மரபின் அடிப்படையில் சைவ சித்தாந்த நூல்களுக்கு விளக்கந் தரும் மெய்யறிஞர்களுமே நமக்கு ஆதர்ஷ புருஷர்கள். அவர்களது உரை மரபு என்றென்றும் பின்பற்றப்படவேண்டியது. சைவசித்தாந்தம் ஒரு உயிர் மூச்சாக இம் மண்ணில் நிலவுவதற்கு அது மிக மிக இன்றியமையாததாகும், இந்த மரபு தவிர்ந்து நிகழுஞ் சித்தாந்தக் கல்வியும், கட்டுரை கருத்துரை விளக்கங்களும் ஒன்றில் பொய்படும் அல்லது புனை பூணும். இன்றைய சூழ்நிலையில் இதற்கு உதாரண விளக்கம் வேண்டியதில்லை. உண்மையை அறிந்து கடைப்பிடித்தல அறிஞர் கடனாகும்.

மாயா வியவகாரம் (1)

மெய்ப் பொருளாராய்ச்சிக் குட்பட்ட முப்பொருள்களி லொன்று பாசம். அப்பாசத்தின் முப்பிரிவுகளிலொன்று மாயா.

வடமொழி தென்மொழி என்னும் இரு மொழிகளிலும் உரிமை கொண்டாடப்படும் சில பதங்களில் ஒன்ருயிருக்கின்றது மாயா. வடமொழியில் இது மா+யா எனப் பகுக்கப்பட்டு மா—தோன்றல், யா — ஒடுங்கல் எனப் பொருள் கொள்ளப்படும். அவ்வகையில் பிரபஞ்சம் எல்லாந் தோன்றி மீள ஒடுங்குதற்கிடனுயுள்ளது மாயா எனப் பொருள் விரிக்கின்ருர்கள்.

தென் மொழியில் மாய் + ஆ எனப் பிரிக்கப்பட்டு மாய்—மாய்தல், ஆ — ஆதல் என முதனிலைத் தொழிற்பெயர்ப் பொருளில், பிரபஞ்சம் மாய்ந்து ஒடுங்குதற்கும் ஆகித் தோன்றுதற்கும் இடனுயுள்ளது மாயா எனக் கொள்ளப்படும். தென்மொழியாய்க் கொள்ளும் இவ்விளக்கத்தில் ஒடுக்கம் முன்னும் தோற்றம் பின்னுமாய் நிற்கும் ஒழுங்கில், மெய்கண்ட தேவநாயனுர், தமது சிவஞான போத முதற் சூத்தில் மேற்கொண்ட உணர்த்துமுறை யழகும் இருத்தல் புலனுகும். 'ஒடுங்கிய சங்காரத்தினல்லது உற்பத்தி யில்லை' என ஒடுக்கத்தை முன்னும் தோற்றத்தைப் பின்னுமாக வைத்துத் தமது சூத்திரக் கூற்றுக்குத் தாமே விளக்கமுந் தருவர் மெய்கண்டார்.

இவ்வாற்ருல், உலகம் தோன்றுதற்கும் ஒடுங்குதற்கும் இடனுயிருப்பது மாயை என்ற உண்மை அதன் பெயர்க்காரண மளவிலேயே அறியப்படக்கூடியதாயிருக்கிறது. இங்ஙனம் காரியத் தோற்ற ஒடுக்கங்களுக்கு மூலமாயிருக்கும் அம்மாயை ஒரு பொருள் (Matter) என்றே துணிதற்கிடமுண்டு.

இது இவ்வாருக, இம் மாயையை உள் பொருளென்பர் ஒரு சாரார்; இல் பொருள் என்பர் ஒருசாரார். அது பிரபஞ்ச முதற் காரணம் என்பர் ஒரு சாரார், அன்றென்பர் ஒருசாரார். அது பிரபஞ்சத்திற்கு வேருனது என்பர் ஒரு சாரார், அது பிர மத்திற் சேர்ந்துள்ளது என்பர் ஒரு சாரார். பிரமத்தின் அபின்ன சத்தி என்பர் சிலர். அதன் பின்ன சக்தி என்பர் சிலர். இவ்வாறு மெய்ப்பொருளாராய்ச்சியாளர்க்கிடையே அபிப்பிராயபேதங்கள் உள.

மாயை இல் பொருள் எனில் உலகத் தோற்ற உண்மைக்கு முரணுகும். அது பிரமத்தின் ஒரு பகுதியெனில் பிரமத்தின்

கலப்பற்ற தனித் தன்மைக்கு வீரோதமாகும் பிரமத்தின் அபின்ன சக்தியெனின் பிரமத்தின் சித்தாந் தன்மைக்கு ஒவ்வாததாகும். நிலைமை இவ்வாருதலின் இதனியல்பைச் சற்று விரிவுபட ஆராய் தல் பயனுடைத்து.

வேதத்தில் மாயை என்னும் இச் சொல் எவ்வகைப் பொருளில் ஆட்சிபெற்றுள்ளதென்பதை முதலிற் காண்போம்.

'புனதி தீர : புவனனி மாயா' அவ்வீரன் தனது அமானுஷ்ய சக்தியினுல் புவனங்களைத் தூய்மை செய்தான் — ருக்வேதம் முதலாம் மண்டலம் 160ஆம் சூக்தம் 3ஆம் மந்திரம்.

'மாயினும் அமினு : பர உதமாயா' — (இந்திரன்) வஞ்சனையாளனுகிய வீருத்திரனது தந்திரங்களை அழித்தான். ருக் வேதம் 1-32· 4

'அஸ்வாபயத் ஹறதை : தாசானும் இந்த்ர மாயயா' — இந்திரன் சுவசத்தியினுலே தாசர்களது தீமையை அடக்கினுன். 4. 30.21

தான் யஜ்ஞஸ்ய மாயயா ஸர்வா வை யஜாமஹே' — பூசையின் பலத்தினுல் எல்லாம் விலகிப்போகுமாறு வேண்டுகிறோம்.— யசுர்வேத சதருத்ரீய நமகம் ஐந்தாம் மந்திரம்.

இவற்றிலிருந்து, மாயை என்னும் பதம், வேதத்தில், அமாநுஷ்ய சக்தி (Mystrious power) பலம் (art), வஞ்சனை (Fraud), தந்திரம் (Trick) என்ற பொருள்களிற் பிரயோகமாயிருக்கக் காண்கின்றோம். இவையும் இவற்றின் சாயலாயமையக்கூடியனவுமான பொருள் நிலையில் இச் சொல் உபயோகிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் வேத சங்கிதைகளிற் பல.

இனி உபநிடத வழக்கைக் கவனித்தல் பொருத்தமாகும்.

சந்தாம்ஸி யஜ்ஞ : க்ரதவோ வ்ரதானி
பூதம் பவ்யம் யச்ச வேதா வதந்தி
அஸ்மான் மாயீ ச்ருஜதே விஸ்வ மேதத்
தஸ்மின் சான்யோ மாயயா சந்நிருத்த : " — வேதமந்திரம், யாகம், இங்குத் தோன்றியிருப்பன, இனித் தோன்றவுள்ளன ஆதிய எல்லாவற்றையும் அந்த மாயவான் இதிலிருந்து படைத்தார். அவரிடத்தில் சம்பந்தமுற்றிருக்கும் மற்றவர் (உயிர்) மாயையினுல் தடையுண்டிருக்கிருர்.

– சுவேதாஸ்வதர உப நிடதம் 4 ஆம் அத். 9 ஆம் மந்திரம்.

இம் மந்திரத்தில் மாயீ, மாயை என வந்துள்ளவை யாவை என்பது அடுத்து வரும் மந்திரத்திற் காட்டப்படுகிறது.

''மாயாம் து ப்ரகிருதிம் வித்யாத்

மாயினம் து மஹே ச்வரம்'' மாயை என்றது பிரகிருதி என அறிக; மாயீ எனப்பட்டவர் பரமேச்வரன் என அறிக. என்கின்றது இம் மந்திரம். இங்ஙனம் இவ்வுப நிடதத்தில் மாயை என்னுஞ்சொல், முற் காணப்பட்டதற்கு வேருன ஒரு பொருளில் நிற்கக்காண்கிருேம். மாயா — பிரகிருதி, மாயீ — மாயையைத்தன் உடமைப் பொருளாகக் கொண்டவன் (பரமேச்வரன்) என்ற கருத்து இங்கே அமைகிறது.

பிரகிருதி என்ருல் பிறபொருள்கள் தோன்றுதற்கு மூல காரணம் (Material Cause) என்ற பொருள் பிரசித்தமானது. இதே உபநிடதத்தில் இப் பொருளுணர்த்த யோனி என்ற சொல்லும் இடம் பெற்றிருத்தல் காணலாம். யோனி என்பதற்கு பிறப்பிடம், பிறப்பு மூலம் என்ற பொருளிருத்தல் வெளிப்படை. அதனுல் அது பிரகிருதியையே குறிக்கும் என்பதை மறுத்தல் இயலாது.

மற்றைய உபநிடதங்களில் இப்பிரகிருதி பெயர்ச்சுட்டி உணர்த்தப்பட்ட இடங்கள் சில. பெயர் சுட்டாமல் வேறு வகையால் உணர்த்தப்பட்டுள்ள இடங்களுஞ் சில. வேறு வகை என்றது உய்த்துணர வைத்தல் போன்ற உத்தி வகைகளாம்.

''யதோ வா இமானி பூதானி ஜாயந்தே
யேன ஜாதானி ஜீவந்தி
யத் ப்ரயந்தி அபிசம் விசந்தி ச

தத் விசிஜ்ஞாஸஸ்வ தத் ப்ரஹ்ம'' — எதிலிருந்து இப் படைப்புக்கள் உண்டாகின்றனவோ, எதனுல் படைக்கப்பட்டவை வாழ்கின்றனவோ, அவை மீள எதில் ஒடுங்குகின்றனவோ அதுவே பிரமம் என அறிவாயாக. இது தைத்திரீய உபநிடதமந்திரங்களிலொன்று. இதன் கண், குறித்த பிரகிருதி என்பது நேரே கூறப்படாமல் சார்பு வகையால் அறியப்படுமாறு வைக்கப்பட்டிருக்கின்றது. இதன் விளக்கத்தைப் பின்னுல் விபரிப்போம்.

''யதா ஊர்ணநாபி : ச்ருஜதே க்ருஹ்யதே வாச
யதா ப்ருதிவ்யாம் ஓஷதய : சம்பவந்தி
யதா சத : புருஷாத் கேச லோமானி

ததா அக்ஷராத் சம்பவதி இஹ விச்வம்'' — சிலந்தி எவ்வாறு நூலை வெளியேற்றி ஒடுக்கிக் கொள்கிறதோ, வயலின்

பயிர் வகைகள் எவ்வாறு முளைக்கின்றனவோ, மனிதனில் கேசங்களும் உரோமங்களும் எவ்வாறு தோன்றுகின்றனவோ அவ்வாறே அழிவில் பொருளாகிய பிரமத்திலிருந்து பிரபஞ்சம் உண்டாகின்றது எனப் பேசுகின்றது முண்டக உபநிடதம் மந்திரம் ஒன்று. இம் மந்திரத்தில் பிரகிருதி என்ற 'பொருள் எடுத்துச் சொல்லப்படாமல் உய்த்துணர வைக்கப்பட்டிருக்கின்றது. இதன் விபரமும் பின்னால் விளக்கப்படும்.

இவற்றால், சுவேதாஸ்வதர உபநிடதத்தில் மாயை என்னுஞ் சொல் பிரபஞ்சத் தோற்றத்திற்கு முதற் காரணமாகிய பிரகிருதியையே உணர்த்தி வந்துள்ளமையையும். தைத்திரீயம், முண்டகம் என்ற மறு உப நிடதங்களும் ஒவ்வோராற்றால் பிரகிருதி உண்மையை ஒத்துக்கொண்டுள்ளமையையுங் கண்டோம்.

இனி, நம் கவனத்துக்குரியவை சிவாகமங்கள், மிருகேந்திரம், பௌஷ்கரம், மதங்க பாரமேஸ்வரம் முதலிய ஆகமங்கள், மேற்கண்ட நூல்கள் போலாது, முப்பொருளுண்மையை வெகு விஸ்தாரமாக விரித்துக்கூறும் நூல்களாம். வேத உபநிடதங்களில் அருகிக் காணப்படும் மாயை இலக்கணம் பற்றிய சகல விபரங்களும் சிவாகமங்களிற் பெருக விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

மிருகேந்திரத்தில் மாயை விஷயமாக, மாயா பிரகரணம் என்றே ஒரு தனி அத்தியாயம் உண்டு.

''தத் ஏகம் அசிவம் பீஜம் ஜகத் சித்ர சக்திமத்
ஸஹகார் யதிகாராந்த ஸம்ரோதி வியாப்ய நச்வரம்''

மாயை என்பது ஏகப் பொருளாகவும், மயக்குவதாகவும் பிரபஞ்சத்திற்கு மூலகாரணமாகவும் தன் துணையாகிய கன்மத்துக்குப் பிரவிருத்தி உள்ளவரையில் ஆன்மாக்களை மறைப்பதாயும் வியாபகமாயும் நித்தமாயும் உள்ளது என அதன் வரைவிலக்கணம் முதற் சுலோகத்திற் காணப்படுகின்றது. இதைத் தொடர்ந்து அவ்வாகமங்கள் கூறும் மாயாவிலக்கணம் வருமாறு :

ஆடைக்கு நூல் முதற்காரணமாதல் போலப் பிரபஞ்சத்திற்கு மாயை முதற்காரணமாகும். காரியமாகிய பிரபஞ்சஞ் சடமாயிருப்பதால் காரணமாகிய மாயையுஞ் சடமே. அவ்வாறல்லாவிடிற் காரணகாரிய நியமம் பங்கமடையும். இம் மாயை பிரளயத்திலழியுமென்றால் மீளப் பிரபஞ்சம் எதிலிருந்துண்டாகும் என்னும் ஆசங்கை வரும். ஆதலால் மாயை நித்தியமே. அது எங்குமுள்ள எல்லாச் சீவன்களுக்கும் அங்கங்கு வேண்டிய தநு கரண, புவன போகங்களைத் தந்துகொண்டிருப்பதால்

அது வியாபகமான பொருளேயாம். சடமாய்ப் பலவாயுள்ளன அனைத்தும் அழியும் என்பது விதியாதலால் அழிவின்றி நித்திய மாயிருக்கும் என அறியப்பட்டுள்ள இம்மாயை ஏகப்பொருளே யாம் சேதனமான பிரமத்திலிருந்தே அசேதனமான மாயை உண்டாகுமென்பர் சிலர். அவ்வாறு, காரணமொன்றிலிருந்து அதற்கு விரோதமான காரியமொன்று தோன்றுமேல் ஜலத்திலிருந்து புகைதோன்றிற்றெனவுங் கொள்ள வேண்டி வரும். வைசேடிகரும் பிறரும் மாயையினின்றல்ல பரமாணுக்க ளினின்றே பிரபஞ்சந் தோன்றுமென்பர். அசேதனங்களாய்ப் பலவாயிருத்தலால் பரமாணுக்கள் அழியுந் தன்மையனவாம். அழியும் பொருள் நித்தியமாதலில்லை. எனவே, அவை பிரபஞ் சத்திற்கு முதற்காரணமாதல் பொருந்தாது. என்றிங்ஙனம் மாயை பற்றிய விளக்கங்களை மிருகேந்திர மாயாப் பிரகரணம் உணர்த்தக் காண்கின்றோம்.

மதங்க பாரமேச்வர ஆகமத்தில் மாயா படலம் என்ற தனி அத்தியாயமொன்றுள்ளது. அதன் கண்,

''சூக்ஷமம் - சர்வகதம் - நித்யம் - அற்புத குணவகம்

சைதன்ய நிலயம் விச்வம் அசேதனம் அருபகம்'' என மாயா விலக்கணங்கள் அடுக்கியுரைக்கப்படுகின்றன. மேலும் அதன் உண்மையியல்பு பின்வருமாறு விஸ்தரிக்கப்படுகின்றது.

''சக்தய : ச அத்ர சம்பூர்ணு ஸ்வவியாபார சுபேஷலா
அவ்யாஹத குணைர்ணு யஸ்யாசௌ பரமேஸ்வர :
ஸ்வதந்த்ர : சர்வகர்த்ருத்வே தஸ்ய கிம் ப்ரவிசார்யதே
மாயாபி தத்வசா யஸ்மாத் நித்யம் ப்ரசவ தர்மிணீ''

அம்மாயை சம்பூர்ணமானவையும் தடை படாத ஆற்ற லுள்ளவையுமாகிய சக்திகள்மூலம் ஸ்வதந்திரனான பரமேஸ்வரன் வசப்பட்டு இயங்குதலால் தினந்தினம் சிருஷ்டிகளைப்பெற்றுப் பெற்றுப் பெருக்கிக் கொண்டிருக்கிறது என மாயையின் தொழிற்பாட்டியல்பும் இங்கே சுட்டியுணர்த்தப் பட்டிருக்கின்றது. 122 சுலோகங்களைக் கொண்ட விரிவான இப் படலத்தில் மாயையைப்பற்றி அறிய உள்ளன அநேகம்.

பௌஷ்கராகமத்தில் பாச பதார்த்த படலம், பும்ஸ் தத்வ படலம் என்ற இரு பெரிய படலங்கள் 348 பக்கங்களுக்கு மேல் இடம்பெற்றுள்ளன. இவற்றில் மாயை இலக்கணம் தர்க்க ரீதியாக உத்தாரணஞ் செய்யப்பட்டிருக்கின்றது. சிந்தியம், சுவாயம் புவம், விச்வசதாக்கியம், முதலிய ஆகமங்களும் மாயை யிலக்கணந் தெரிவிப்பதில் இத்தகையனவே.

இங்ஙனம் ஆகமங் கூறுவதாகக் காணும் மாயை இலக்கணங்களில், ஏலவே நாம் வேதத்திலுள்ளனவாகக் கண்ட அமாநுஷ்யஆற்றல், பலம், வஞ்சனை முதலாங் கருத்துக்களும் இடம்பெறக்காண்கின்றோம். உபநிடதத்திற் காணப்பட்ட பிரகிருதி என்பதன் சார்பில் அமையக்கூடிய பல்வேறு கருத்துப் புதையல்களையும் காண்கின்றோம். உபநிடதத்தில் பிரகிருதியென்று நாம மாத்திரமே தெரிவிக்கப்பட்டது. இங்கு அதன் அந்தரங்க இயல்புகள், விசித்திரச் செயல்முறைகள் எல்லாமே வெளியிடப்பெறுகின்றன. இவற்றை விட எவ்வளவோ அதிகமான கருத்துக்களும் விளக்கங்களும் இங்கு இன்னும் பெறக்கிடக்கின்றன.

ஆகமங்கள் தரும் விளக்கத்தின் பிரகாரம், பிரகிருதி என்பது மாயையினது முழுவிரிவில் அதன் கீழ்ப்பாகமாகிய மூன்றிலொரு பகுதி என அறியப்படுகிறது. இதற்கு மேலும் அசுத்தமாயை. சுத்தமாயை என்ற இரு பகுதிகளை ஆகமங்கள் விபரிக்கின்றன. இதனால், உபநிடதங் குறிப்பிடும் மாயை இலக்கணத்திலிருந்து மேலும் இரு மடங்கு வளர்ந்து காணப்படுகின்றது ஆகமக் காட்சியிற் காணும் மாயை. இவ் விரிவின் மூலம் இன்றியமையாத சித்தாந்த நுண்பொருட் கூறுகள் ஆகமத்திற் செவ்வே விளக்கம் பெற்றிருக்கின்றன. நுணுக்கமான பல பிரச்சினைகள் இதனால் விடுவிக்கப்படுகின்றன.

ஆன்மா தேகபந்தப்பட வந்த வகை யாது? அது ஏகதேசியாய், கிஞ்சிஞ்ஞனாய், வசித்திட வரும் வியாபியாய் நிற்றற்கு உதவிய சூழ் நிலை எது? ஆன்மா தனது ஞானக் கிரியை விளக்கங்களைப் பெறக் கருவி கரணங்களில் தங்கியிருக்கும் என்றதன் விபரம் யாது? சித்தாகிய ஆன்மா புருடதத்துவம் என்ற ஒரு தத்துவ நிலைக்கு ஒதுக்கப்பட்டதன் சூஷ்மம் என்ன? — இத்தகைய பிரச்சினைகளை விடுவிப்பதற்கு உபகாரப்படுவது ஆகமங்கள் தரும் அசுத்தமாயா வரலாறே என்பது குறிப்பிடத்தக்க விசேடமுடையதாகும்.

ஏலவே மலபந்தமுற்றிருக்கும் ஆன்மாவுக்குப் பின்னும் பிரதிபந்தமாகத் தக்க நிர்ப்பந்தத்தை வருவிக்கும் ஏதுக்களாய் அமைந்தவை அசுத்தமாயையிற்றோன்றும் கலை முதலிய தத்துவங்களே என்கின்றது ஆகமம். இத் தத்துவங்களினாற் சிறங்கணிக்கப்பட்டதனாலன்றே புருடன் என்ற தத்துவ நிலையும் ஆன்மாவுக்கு உளதாயிற்று.

இங்ஙனம், சித்தாகிய ஆன்மாவைச் சடமாகிய தத்துவங்கள் பந்தப்படுத்த வந்ததெங்ஙனம் என்பது அடுத்த கேள்வி.

இதற்குப் பொறுப்புள்ளவை சிவ தத்துவங்களான சுத்தக் கருவிகள் ஐந்துமே. அவை பற்றிய விளக்கம் முழுமையும் ஆகமங்கள் விரிக்கும் சுத்தமாயை விரிவினுல் அறியக் கிடக்கின்றன. இன்னும், இறைவனுல் தனது சுத்தக் கருவிகளாகிய சிவதத்துவங்கள் மூலம் இயக்கப்பட்டாலொழிய மாயை எதவுஞ் செய்தவியலாது என்ற பாரமார்த்திக உண்மையும் இச்சுத்தமாயை விரிவின்மூலமே உறுதியாகின்றது. இவ்வாற்ருல் வேதத்திற் கால் கொண்ட மாயை இலக்கணம் ஆகமத்தில் முழுமையான வளர்ச்சிநிலை பெற்றிருக்கக் காண்கின்ருேம். சித்தாந்தச் சார்பான மற்றை விஷயங்களிற் போலவே மாயைக்கு விளக்கந் தரும் விஷயத்திலும் வேதம் பொது நிலையும் ஆகமம் சிறப்பு நிலையும் வகிக்கும் விதமும் புலனுகின்றது.

இங்ஙனம், ஆகமங்கள் தரும் மாயை விளக்கத்தையே சைவ சித்தாந்த நூல்கள் அமைவு படுத்திக் கூறும். 'சிவாகமங்கள் சித்தாந்தமாகும்' என்பதன் அர்த்தம் இதுவே.

''நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் உலகத்துக்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சக்தியாய்ப் புவனபோகந் தநுகரணமு முயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் செய்யுமன்றே'' என்ற சிவஞான சித்தியார்ச் செய்யுள் சர்வாகம சங்கிரகமாய் அமைந்திருத்தல் வெளிப்படை.

முப்பொருளிலக்கண தத்துவ தாற்பரியங்களை உருவக நடைப்படுத்தி அவற்றைக் கதாபாத்திரங்களாக நிறுவிக் காவியம் படைத்திருக்கின்ருர் கச்சியப்ப சிவாச்சாரியார். அவருடைய கந்தபுராணக் கதாபாத்திரங்களிலொன்று மாயை. அவர்காட்டும் மாயை பிறள் எவளுமன்று. முப் பொருளில் ஒன்ருன முப் பாசங்களில் மூன்ருவதான மாயையே என்பது அவர் வாக்கிலேயே வெளிவந்திருக்கின்றது.

''அருவினள் சேறலும் அற்பு தத்தவண்
வருபொரு ளியாவையும் மறைந்து போயின'' என்ற மாயை நீங்கு படலச் செய்யுள் மாயையை அருவினள் என்று குறிப்பிட்டிருக்கின்றது. 'சூக்ஷ்மம்', ''அரூபகம்' என மிருகேந்திரம் கூறியதும் 'அருவாய்' என அருணந்தி சிவாசாரியார் கூறியதும் இங்கு 'அருவினள்' எனக் கச்சியப்பர் தெரிவிப்பதும் ஒன்றே 'அற்புதத்தவண் வருபொருள்' என்றதில் மதங்கபார மேச்வரத்திற் கூறப்பட்ட அற்புத குணவகம் என்ற இலக்கணந் தொனிக்கின்றது. 'அவண் வரு பொருள்' என்றதனுலே 'புவன போகந்

தநு கரணமுமுயிர்க்காய் வைத்தோர் பொருளாய் எனச் சிவ ஞான சித்தியார் கூறிய இலக்கணம் புலனுகின்றது. மதங்கங் கூறிய 'பிரசவதர்மிணீ' என்ற இலக்கணமும் இதிலே விளங்கு கிறது. 'அவள் சேறலும் யாவையும் மறைந்து போயின' என் றதனுல், தோன்றுதற்கிடமாயிருந்த அதுவே அனைத்தையு மொடுக்கியுங் கொள்ளும் என்னும் பொருளில் வந்த, 'யத்பிர யந்தி அபிசம் விசந்தி ச' என்ற தைத்திரீய மந்திர உண்மை புலனுகின்றது இம் மாயை பற்றிக் கச்சியப்பர் தருஞ் செய் திகள் இன்னும் உற்று நோக்கத்தக்கவை.

காசிபர் தவஞ் செய்திருந்த இடம் நீரும் நிழலுமற்று, வெறுங் கற்பாரப் படையாய்க் கிடந்த வன்னிலம். மாயை கணப் பொழுதிலே அதனை வாவியுஞ் சோலையுஞ் செய் குன்று களும் நிறைந்த சித்திர வனமாக்கினுள். அதன் கண் ஐம்புல நுகர்ச்சிக்கமைந்த நானுவிதமான படைப்பு விசேடங்களையுந் தோற்றுவித்தாள். தானும் அற்புதலாவண்ய அழக சுந்தரியாய் அவர் முன் உருக்கொண்டு தோன்றினுள். இதனுல், காசிபர் பால் கருவற வரண்டுபோய்க்கிடந்த காம உணர்ச்சியைக் கிள்ளி விட்டாள். பாலை நிலத்தைத் தளிர்க்கச் செய்தது போலவே காசிபரின் காம உணர்ச்சியையுந் தளிர்க்கப்பண்ணிய விந்தையை என்னென்பது!

அவள் தோன்றிய மறுகணமே தான் மறைந்து அதன் மூலம் காசிபரின் ஆவலை நீள வளர்த்துப் பெருக்கி அருமை காட்டினுள். பின் பண்டுபோல் எதிர் தோன்றி ஆசை காட்டி மோசஞ் செய்தாள். இரவோடிரவாக ஒரு மூன்று பெருவீரர் களையும் ஒரு வீராங்கனையையும் எண்ணிறந்த பல்லாயிரம் வெள் ளக்கணக்கான அவுண சைன்னியங்களையும் பெற்றுப் பெருக் கித் தான் பிரசவ தர்மிணி என்பதைக் காட்டினுள்.

பின், காசிபர் மக்களுக்கு மெய்ப்பொருளுபதேசஞ் செய்ய அடியெடுத்த போது இடைமறித்துக் குறுக்கிட்டுத் தடுத்து,

'பிள்ளைகளே! உங்களுக்கு வேண்டுவது பதி, பசு, பாச விளக்கமல்ல; செல்வமும் வெற்றியும் அழிவிலாயுளும் சீர்த்தி யும் கீர்த்தியும் பிரதாபமுமே' என்று லௌகீக போதனையை முன் வைத்தாள். பொருட் செல்வத்தைவிடக் கல்விச் செல் வமே சிறந்தது என்ற ஆத்திக உண்மையைக் கூடத் தலை கீழாய்ப் புரட்டி,

'வளத்தினிற் சிறந்தது மற்றென்றில்லையே' எனப் பொருட் செல்வப் போதையைப் புகட்டி மருட்டினுள். இங்ஙனம் அநித்தி யத்தை நித்தியமென்றும், அநாவசியத்தை ஆவசியகமென்றும்

ஒவ்வோருயிரும் அவ்வப்பிறப்பிற் பெறும் அநுபவம் அதனதன் பழவினைப் பயனேயாதல் ஒருதலை. என்றால், இப் பழவினை எப்படி ஆனது? எப்படி இருந்தது? எப்படிப் பலன் தருவது? என்பன இத்தொடர்பில் அறிதற்பாலனவாகும்.

ஒவ்வோருயிரும் ஓயாமல் ஏதாவதொரு முயற்சியில் ஈடு பட்டுக் கொண்டேயிருத்தல் கண்கூடு. இம்முயற்சிகள் நன்மை தரும் முயற்சியாகவும் இருக்கும், தீமை தரும் முயற்சியாகவும் இருக்கும். அவ்வகையால் அவை முறையே நல்வினை, தீவினை எனப் பெயர் பெறும்.

இந்த முயற்சிகள் செய்த செய்த அப்பொழுதே ஒழிந்து போகின்றன. முயற்சிகள் ஒழிந்தாலும் முயற்சிகளின் பெறு பேறுகள் ஒழிந்துவிடுவதில்லை. நல்வினை முயற்சியின் பெறு பேறு புண்ணியம். தீவினை முயற்சியின் பெறுபேறு பாவம் என அருவமாய் இருக்கும். இப்படியான புண்ணியங்களும் பாவங்களுமாக ஒவ்வோர் பிறப்பிலும் ஒவ்வோர் உயிர்க்குஞ் சேர்வன பெருந் தொகையாம். அவை ஒவ்வொன்றும் அவ ரவர் பேரிற் பதிவாகிக் கிடக்கும். இவற்றுக்குரிய பதிவேடு புத்தி என்ற தத்துவம். ஒவ்வோருயிரின் புத்தியோடும் அவ் வவரின் புண்ணிய பாவப் பதிவுகள் தொகை வகையாக மண்டிக்கிடக்கும். ஆனால் தனக்குரிய புண்ணிய பாவத் தொகை தன் புத்திதத்துவம் பற்றுக்கோடாகத் தன்னோடிருப் பது எந்த உயிருக்குந் தெரியாது. இப்படி, செய்ததாகிய உயிருக்குந் தெரியாமல் அதனோடிருக்கும் வினைத் தொகுதிக்குச் சஞ்சிதம் என்று பெயர். சஞ்சிதம் என்ற சொல் கூடிக் குவிந்து கிடப்பது (Accumulated) என்னு பொருள் தரும். அது இங்கே உயிரின் புத்திதத்துவம் பற்றுக்கோடாகக் கூடிக் குவிந்து கிடக்கும் அவ்வினைத் தொகுதிக்குப் பெயராகிறது. ஒவ்வோருயிரின் பேரிலும் பதிவாகியுள்ள ஒவ்வொரு புண்ணி யமும் ஒவ்வொருபாவமும் அநுபவிக்கப்பட்டே ஒழியவும் வேண்டும்.

'நாபுக்தம் க்ஷீயந்தே கர்ம, கல்பகோடி சதைரபி' அநுப விக்கப்படாமல் எக்கன்மமும், நூறுகோடி கல்பங்கடந்தாலுங் கூட, அழிவடையாது என்பது ஆகம உண்மை. 'உற்ற தொழில் நினைவுரையில்...... எனும் சிவப்பிரகாசம் 31ஆம் செய்யுள் இக்கன்மம் பற்றிக் கூறுகையில், 'ஒன்றொன்றலழியாது' எனவும் 'ஊண் ஒழியாது' (அநுபவத்துக்கு வருதல் தப்பாது) எனவுங் கூறுகின்றது.

தேவர்கள் முன்னொருகால் தக்கன் யாகத்திற் பங்குபற்றியிருந்தார்கள். அது சிவனை நிந்திக்கும் முறையில் நிகழ்ந்த ஒரு யாகம். அதனால் அது முழுக்கமுழுக்கச் சிவாபராதம் என்ற மீளாத் தோஷத்தின் பாற்பட்டது. 'சாவ முன்னாள் தக்கன் வேள்வித்தகர், தின்றவர்கள் என்று அவர்களின் பாபதோஷக் கனதியை உணர்த்துகிறார் மாணிக்கவாசகர். கன்மக் கோட்பாட்டின்வண்ணம் அந்தத் தோஷ பலனை அவர்கள் அனுபவித்தே யாதல்வேண்டும். சிவாபராத தோஷம் எவ்வளவுக்கு வன்மையானதோ அவ்வளவுக்கு வன் கண்மையான துஷ்டர்களால்தான் அதற்குப் பரிகாரம் நிகழ வேண்டியது வாஸ்தவமே! ஆதலின்தேவரை அவுணர் வருத்தும்படியாகச் செய்தது தேவர் நன்மைக்காகவேதான். ஐயமில்லை. எனில்,

ஒருவர் நன்மைக்காக மற்றவரைப் பலியிடுவதா? தேவர்கள் நன்மை பெறுதற் பொருட்டு அவுணரைப் படைத்து அலைத்து அழிக்கலாகுமா? என்றால், அந்த அவுணர்களுக்குந்தான் அப்படியே அலைந்து அழிந்து விமோசனம் பெறவேண்டியதற்கான 'சாபம்' ஒன்று பெருமளவில் இருந்ததாகக் காட்டுகிறது அவர்களின் பூர்வீக வரலாறு.

எனவே, தனக்கு வேறான பொருளாகிய மாயையை இறைவன் தனது சக்திகளால்தானே இயக்குகின்றான். அதன்கண் விநோத படைப்புகளையெல்லாந் தோற்றுவிக்கின்றான். அவற்றினாற் பெறும் விபரீத அனுபவங்களோடு உயிரை மருவப் பொருத்தி மயக்குகிறான். அதன் மூலம் அவ்வுயிர்க்குரிய வினைப் போக அநுபவ நிலைகளிலே ஒவ்வோருயிரையுஞ் செலுத்துகிறான். அவ்வுபகாரத்தினால் உயிர்களை மலபந்தம் நீக்கி இறைவன் ஈடேற்றுகின்றான். இந்த நிக்கிரக அநுக்கிரகச் செயல்கள் நிறைவேறும் பொருட்டாக இறைவனால் தன் கைக் கருவியாக, பரிக்கிரஹ சக்தியாகக் கொள்ளப்பட்டிருப்பது மாயை. இந்த மாயாவிலக்கணத்துக்குக் கச்சியப்பர் தரும் மாயை சிறந்த இலக்கியமாதல் இவ்வகையால் அறியப்படும்.

மாயா வியவகாரம் (2)

இனி, மெய்ப்பொருளாராய்ச்சியாளர்களிடையே இம்மாயை பற்றி ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளையும் அவற்றின் அடிப் படைகளையும் விளைவுகளையும் அலசி ஆராய்தல் அமைவுடைத்து, அதனுலும் மாயை பற்றி அறியக்கிடப்பன அதிகமாதலின்.

பிரபஞ்சம் எதிலிருந்து தோன்றிற்று? என்ற எண்ணத்தின் விளைவே மாயை ஆராய்ச்சியாயிற்று. இந்த ஆராய்ச்சி உண்மைப் பொருளியல்பு பற்றி வேதங் கூறும் முடிபுக்கு மாறுபடாதிருத்தல் வேண்டும் என்பது பொது நியதி.

'ஸத் ஏவ சோம்ய இதம் அக்ர ஆசீத். ஏகமேவ அத் விதீயம் - ஸத் என்ற இதுவே ஆதியிலிருந்தது, அது ஏகமும் அத்விதீயமுமாயுள்ளது. என சாந்தோக்யம் 6. 2. 1 இல் பிரஸ்தாபிக்கப்பட்ட அதுவே வேதத்தின் முடிவான உண்மை. வேதாந்தியரும் பாஞ்சராத்திரரும் இத்தொடரிலுள்ள ஏகம், அத்விதீயம் என்ற இரு சொற்களும் ஒரே பொருள் பற்றி வந்த இரு சொற்களாகக் கொண்டனர். அதாவது, ஏகம் எனில் ஒன்று. அத்விதீயம் என்றுலும் ஒன்று. அப் பொருள் 'ஸத்' எனப்பட்ட பிரமமே எனத் துணிந்தனர். அதனுல் இரண்டாம் மூன்றும் பொருள்களாகிய உயிர் மாயை என்பவற் றுக்கு இருப்புக் கொள்ளுதல் அவர்க்குப் பிரச்சினையாயிற்று. அப்பிரச்சினையைச் சமாளிக்கும் முகத்தால் உயிரையும் மாயையையும் எப்படியாவது பிரமத்தோடொன்றுகக் காட்ட முனைந்தனர்.

அவருள் வேதாந்தியர், பிரமத்தை விட உயிர் என ஒன்றில்லை. பிரமமே அவித்தையோடு கூடியமையாற் பல்வேறு உயிர்கள் எனும்படி தோன்றுகிறது. தன்னிலையில் அது பரப்பிரமம். அவித்தையொடு கூடிய நிலையில் அது ஜீவப்பிரமம் என்றனர். இனி, அதே பிரமந்தானே தன் மாயா சக்தியாற் பரிணமித் தலால் பிரபஞ்சமாயிற்று எனவுங்கொண்டனர்.

பாஞ்சராத்திரிகள் மற்றொரு விதத்தில் இதை முடிவு செய் தனர். உயிர், மாயை என்ற இரண்டும் பிரமத்துக்கு வேறுன இரண்டாம் மூன்றும். பொருள்கள் எனினும் அவை வேறென இல்லாமல், பிரமத்தோடு பிரமமாய் அதற்கு விசேடணமாய் இருப்பன. ஆதலால், ஏகம், அத்விதீயம் என்ற சொற்கள் இரண்டும் உணர்த்தியது ஒன்று என்ற ஒரே பொருளைத்தான் என்பது பாஞ்சராத்திரமுடிபு.

இதனால் மாயை பற்றிய கருத்தில் இருவர்க்கும் வேறு பாடிருத்தல் வெளிப்படை. பிரமம் தான் பிரபஞ்சமாகப் பரிணமித்தற்குச் சாதனமாகக் கொள்ளும் ஏதோ ஒரு தன்மையே (உபாயமோ, தந்திரமோ) மாயை என்றனர் வேதாந்தியர். உயிர், மாயை (சீவன், அசித்) என்ற இரண்டையும் உடலாகக் கொண்டு பிரமம் தன் சூக்கும நிலையிலிருந்து தூல நிலைக்கு மாறுதலே பரிணமம் என்றனர் பாஞ்சராத்திரியர். தோற்றிய பிரமம் மீள ஒடுங்கும் ஒடுக்கத்தின் போது உயிரும் மாயையும் பிரமத்தில் உறங்கிக் கிடக்கும் என்பது அவர் கருத்து

உபநிடத உண்மைகளின் சாராம்சமாயுள்ளது பிரம சூத்திரம் என்னுமொரு நூல், அதுவே வேதாந்தியர்க்கும், பாஞ்சராத்திரர்க்கும் மூலவேதம் போல்வது. உபநிடதங்களிற் பரிணமம் என்ற பதம் இடம் பெறவில்லை, பிரமசூத்திரத்திலேயே அது இடம் பெறுகின்றது. அதன் முதலாம் அத்தியாயத்து நாலாம் பாத 27 ஆம் சூத்திரம் 'பரிணமாத்' என்றிருக்கிறது. இதற்கு உரை கூறுகையில் இதனை இதற்கு முன் வந்துள்ள, 'ஆத்மக்ருதே :' என்ற சூத்திரத்தோடு சேர்த்து இரண்டையும் ஒரு தொடராக வைத்தே உரை கூறினர் வேதாந்தியர். அவர் கூறும் பொருள் விபரம்:-

'ஆத்மக்ருதே :' —தனக்கோர் கர்த்ருத்வஞ் சொல்லுகை யாலே பிரமம் முதற் காரணம். (அது எப்படி வாய்க்குமெனில்) பரிணமாத் — பிரபஞ்சமாகத் தன்னைப் பரிணமிப்பிக்கையாலே' இது வேதாந்த உரை.

பாஞ்சராத்திரர் அப்படி இரண்டு சூத்திரத்தையும் ஒரு தொடராக்காமல் 'பரிணமாத்' என்றதை ஒரு தனிப் பொருள் முடிவுள்ளதாக வைத்து, 'சிதசித் வஸ்து சரீரகமான பிரமமே பிரபஞ்ச ரூபமாகப் பரிணமிக்கையாலே' என்று உரை கூறினர்.

இதன் பிரகாரம், பரிணம உண்மைபற்றி உண்மையில் இருவர்க்கும் அபிப்பிராய பேதம் இருந்தாலும், பிரபஞ்சத் தோற்றத்திற்குப் பிரமமே முதற்காரணம் என நிறுவுதற்குப் பரிணமத்தை ஒரு பொது ஏதுவாகக் கொண்ட அளவில் ஒற்றுமை இருத்தல் காணப்படுகின்றது.

இப்படிக் கொள்வதனால், பிரபஞ்சத்தின் சார்பினால் நிகழும் சுக, துக்க மயக்க நிலைகளாகிய விகார இயல்புகள், நிர்க்குணம் என்றும் நிர்விகாரி என்றும் சொல்லப்படுகிற

பிரமத்துக்கும் உள்ளதாக ஒப்புக் கொண்டதாக முடியுமே என்ற ஆசங்கையும் அவ்விருவர்க்கும் ஏற்பட்டே இருக்கின்றது. அதற்கு, இருவரும் இருவிதமாகச் சமாதானம் சொல்லிக் கொள்கின்றனர்.

'ஸத் ஸத்யஸ்ய அபவத், என்ற தைத்திரீய மந்திரத்தை ஆதாரமாகக் காட்டி, 'சத்தாகிய பிரமம் சத்தியத்தின் மயமாயிருப்பதால் அதற்கு அப்படிப்பட்ட விகாரமேற்பட இடமில்லை. இது வேதாந்தியர் கூறிய சமாதானம்.

பிரமம் அவித்தையினுல் ஆவரிக்கப்பட்டுப் பிரபஞ்சமாகிற தென்னும் வேதாந்தியர்க்குத்தான் அத்தோஷம் சம்பவிக்க இடமுண்டாகும். சூக்குமமான 'சிதசித்' சரீரகமான பிரமம் தூலமாதலே பரிணுமம் என்றது ங்கள் கருத்தாதலால் சொல்லப்பட்ட அவ்விகாரங்கள் அச் சிதசித்துக்களோடேயே கிடந்து கொண்டிருக்குமல்லாமல் பிரமத்தைச் சாரமாட்டா. உடலுக்குள்ளனவான கறுப்பு வெளுப்புக்கள் உயிரைச் சாராமை போல, இது பாஞ்சராத்திரியர் கூறுஞ் சமாதானம். இதில், இவர்கள் வேதாந்தியரைக் குறித்துக் கூறும் வசனம் வேதாந்த பரமான பரிணுமக் கருத்தை இவர்கள் ஒத்துக் கொள்ளாமையைக் காட்டும். இது இருவர்க்கு முள்ள ஒற்றுமைக்குள் ஒரு வேற்றுமையாகும்.

பிரமம் தானே பிரபஞ்சமாய்ப் பரிணமித்தற்கு மாயையை ஒரு கருவிக் காரகமாகக் (Cause intrumentalis)கொண்டிருக்கிறது என்பது வேதாந்தியர் விளக்கம் பிரமம் என்ற பொருள் மாயையோடொன்ருய்த் தன் தூல நிலைக்கு வந்தமையால் பிரபஞ்சம் ஏற்பட்டது என்பது பாஞ்சாரத்திரர் விளக்கம். பிரமமே பிரபஞ்சத்திற்கு முதற்காரணம் என்று நிறுவ முயன்ற கொள்கையின் வரலாறு இதுவாகும் வேதாந்தியர்க்கு மாயை அவித்தை (Illusion) மாத்திரமே. பாஞ்சராத்திரர்க்கு மாயை ஒரு தனிப் பொருள். மாயாகாரியமாகிய பிரபஞ்சம் முழுவதிலும் பிரமம் சாந்நித்தியமாயிருக்குங் காட்சி இருவருக்குமே இருந்திருக்கின்றது ஆனுல், அது ஏற்பட்டதெப்படி என்று விளங்குதலில் இருவருமே கஷ்டப்பட்டிருக்கிருர்கள். தான் நிமித்த காரணமாய் நின்று முதற் காரணமாய மாயையிலிருந்து பிரபஞ்சத்தைத் தோற்றுவித்த பிரமம் தான் அவற்றுடன் கலப்பினுல் ஒன்ருய் நிற்கிறது என்பது சைவசித்தாந்தப் பொருள் நிலை. படைத்தல், ஒன்ருய் நிற்றல் என்ற இரு தன்மைகள் இங்கே இடம்பெறுகின்றன. பாஞ்சராத்திரியர் இந்த இரு தன்மையையும் ஒன்ருகச் சேர்த்தெடுத்துக் கொண்டதனுல் அவர்கள்

கொள்ளும் பொருள்நிலை சைவ சித்தாந்தப் பொருள் நிலையோடு வேறுபடுகின்றது. மாயைக்கேயுரியதாகிய முதற்காரணமாந் தன்மையில் பிரமத்தையுஞ் சம்பந்தப்படுத்திவிட்ட ஒரு குறைபாடு அவர்கள் பொருள் நிலையில் இடங்கொண்டுவிட்டது எனலாம். இனி,

சைவ சித்தாந்தப் பொருள் நிலைக்கு முற்றிலும் ஒத்து வரக்கூடிய ஒரு விளக்கம் தைத்ரீய உபநிடதத்தில் இருப்பதைக் கவனித்தல் உசிதமாகும். 'ஸ இதம் சர்வம் அஸ்ருஜத யத் இதம் கிம்ச தத் ஸ்ருஷ்ட்வா தத் ஏவ அனுப்ராவிசத் — தத் அனுப்ரவிஷ்ய — சத் ச த்யத் ச அபவத' தைத் 2. 6 1 பிரமம் இது எல்லாவற்றையுஞ் சிருஷ்டித்தது. சிருஷ்டித்து அவற்றிற் பிரவேசித்தது பிரவேசித்து 'சத்' ஆகிய உயிர்களாயும் 'தியத்' ஆகிய பாசப் பொருள்களாயும் ஆயிற்று ''இரு நிலனாய்த் தீயாகி நீருமாகி இயமானனாய் எறியும் காற்றுமாகி ... நிமிர்புன் சடையடிகள் நின்றவாறே'' என்பன போல வரும் திரு முறைக் கருத்தும் இவ்வுபநிடதக் கருத்தும் ஒன்றே. வேதாந்தியரும் பாஞ்சராத்திரரும் இவ்வுப நிடதக் கருத்தைப் புறக்கணித்துக் கொள்கைவிளக்கஞ் செய்ய முயன்றிருக்கிறார்கள் என்பதை இங்கே கவனித்தல் தகும். மேலும்,

உபநிடதத்தில் மாயையைக் குறித்த பிரகிருதி என்ற பதம் பிரமசூத்திரத்தில் இடம் பெற்றிலது. அதற்கெதிர், பிரதானம் என்ற பெயரில் பிரகிருதியைப் பற்றி விளக்கிய சாங்கிய மதம் அதிற் கண்டிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மாயா என்ற பதம் ஓரிடத்திலும் அதற்குப் பிரதி பதமான யோனி இரு இடங்களிலும் வந்துள்ளன.

''மாயா மாத்ரம்து கார்த்ஸ்யேன அநபி வியத்த ஸ்வரூபத்வாத்'' என்பது பிரம்ம சூத்திர மூன்றும் அத்தியாய 2 ஆம் பாதத்தில் 2ஆஞ் சூத்திரம். பூரணமாக விளக்கம் பெறாத சொரூபமுடைமையினாலே சொப்பனத்திற் காண்கின்ற வஸ்துக்கள் மாயை மாத்திரமே. என இதற்குரை கூறும் வேதாந்தியர் அவ்வளவிலாமையாது, 'உண்மையானவையன்று,' என்ற தொடரையும் குறிப்பெச்சமாகச் சேர்த்துக் கூறி முடித்திருக்கின்றனர். மாயை என்ற பதத்திற்கு, உண்மையானதன்று என்பது இங்கே தோன்றும் புது விளக்கமாகும்.

'இனிப் பூரணமாகப் பிரகடனஞ் செய்யும் சொரூபமில்லாமையால் ஆச்சரியகரமான சொப்பன பதார்த்தங்களெல்லாம் பிரமத்தினால் சிருஷ்டிக்கப்படுகின்றன' என்றுஅச் சூத்திரத்திற்கு

ஊழ் என்ற பதத்தைக் கையாண்டவர் பலர். அதன் இயல்புகளை விரித்திலக்கியம் படைத்திருக்கின்றார் திருவள்ளுவர், அதன் நுட்பங்களைத் தமது உரைத்திறன் வாயிலாக வெளிப்படுத்துகின்றார் பரிமேலழகர். ஊழ் என்ற அதிகாரத்தின் முகப்பில் பரிமேலழகர் கூறும் வரைவிலக்கணம்,

'அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற் கேதுவாகிய நியதி' — என்று பேசுகின்றது. வினைப்பயன் சடமாதலால் அதுதானாகவே செய்தவனைச் சென்றடையாது. என மேலே கண்டோம். ஆதலின் அறிவுடைப் பொருளாகிய ஒன்றே நியதியின் வாயிலாக, அதாவது நியதியை ஒரு கருவியாகக்கொண்டு அதனைச் செய்விக்கின்றது எனத் தெளிதல் வேண்டும். அவ்வறிவுடைப் பொருள் தெய்வசக்தியேயல்லது பிறிதில்லை. நம் சித்தாந்த பரிபாஷையில் அது திரோதான சக்தி எனப்படுகின்றது.

குறித்த ஊழ் அதிகார அவதாரிகையில் ஊழின் பரியாயப் பெயர்கள் பல இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று தெய்வம். தெய்வத்தால் வகுக்கப்படுவது, தெய்வத்தால் நிர்வகிக்கப்படுவது என்ற பொருளிலேயே ஊழுக்குத் தெய்வம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கின்றது. தமிழில் இத்தகைய வழக்குகள் சிலவல்ல. இனி, அதற்கு மற்றொரு பெயர் விதி. விதிக்கப்பட்டது விதி என்ற விளக்கத்தில் இப் பெயர் வழங்குகிறதாகக் கொள்ளலாம். இந்த விதியாகிய ஊழுக்கிணங்க உயிர்களுக்காம் உடல்களையும் கருவி கரணங்களையும் படைப்பவனாதலின் படைத்தற்கடவுளாகிய பிரமனுக்கும் விதி என்னும் பெயர் வழங்குகிறது. 'வகுத்தான் வகுத்தவகை' என ஊழைக் குறிப்பிடுகிறார் வள்ளுவர். இங்ஙனம் ஊழின் பரியாயப் பெயர்களை ஆராய்வதன் மூலமும் ஊழினியல்புகளைத் தெரிந்துகொள்ளல் சாலும்.

ஊழின் விரிந்து பரந்த இயல்புகளனைத்தும் நியதி என்ற பெயரிற் பொதுவாக அடங்கும். இன்னதற்கு இன்னது என்ற நியமம்; இன்னது இன்னதன்மூலம் இன்னமாதிரியாகத்தான் இடம்பெறவேண்டும் என்ற வரையறை; இதற்குப் பலன் இவ்வளவுதான். இவ்வளவிற் கூடுதலுமாகாது; குறைதலுமாகாது என்ற கண்டிப்பு என்ற இத்தகையியல்புகளைக் குறித்து நிற்பது இச்சொல். இத் தொடர்பில் நாம் மேலும் விதந்து விசாரிக்க இடமுண்டு.

மாயா வியவகாரம் (3)

சைவ சித்தாந்தம், ஏகமேவ அத்விதீயம் என்ற தொடருக்கு வேதாந்தியரும் பாஞ்சராத்திரருங் கொண்ட பொருளை அங்கீகரித்திலது. அப்பொருள் அத்தொடர்க்குரிய பொருளல்ல என நிறுவுவதற்கு அத்தொடரிலேயே அது ஆதாரமுங் கண்டிருக்கிறது. பொருள் ஒன்றேதான் எனக் காட்டுதல் இத்தொடர்க் கருத்தாயின் முன் 'ஏகம்' என்றதே போதுமே; பின் அத்விதீயம் என்பானேன்? என்பது கேள்வி, அது அடுக்கு மொழியென்ற சொற்றொடரிலக்கணப்படி வந்தது என்று கொள்வதாயின் அது பொருந்தாது. அடுக்குமொழியெனில் ஒரே சொல்லன்றோ அடுக்கி வந்திருக்க வேண்டும். வெவ்வேறு சொல் அடுக்கிவருதல் அடுக்குமொழியிலக்கணமாதல் செல்லாது. இன்னும் 'ஏகம்' என்ற அளவில் நில்லாது ஏவ என்றுங் கூறியதனால் ஒன்றேதான் எனப் பொருள் தோன்றி எடுத்துக் கொண்ட விஷயம் பற்றிய துணிவு ஸ்தாபிக்கப்பட்டதாயிற்று. பின், மேலும் அப்பொருளே சுட்டி ஒருசொல் வருதல் புனருக்தி — கூறியது கூறல் — என்ற வாக்கிய தோஷமாகும். ஆதலால், அத்தொடர்க்கு அப் பொருள் பொருந்தாதென மறுத்துச் சைவ சித்தாந்தம் வேறுபொருள் கொள்கின்றது.

அதன் கருத்திற்கிணங்க இத் தொடரில், 'ஏகமேவ' என்பது ஒரு தனிப்பொருட் பகுதி. 'அத்விதீயம்' மற்றொரு பொருட்பகுதி, முன்னைய பகுதி பிரமப் பொருளின் தன் நிலையைச் சுட்டுவது; பின்னைய பகுதி அப் பிரமப் பொருள் ஏனைய பொருள்களோடு கொண்டிருக்குந் தொடர்பு நிலையைச் சுட்டுவது. அந்தக் கண்ணோட்டத்தில் இத் தொடர்க்குப் பொருள் கண்டால், ஏகம் ஏவ — பிரமப் பொருள் ஒன்றேதான், அத்விதீயம் — அது ஏனைப் பொருள்களுடன் இரண்டன்மை தோன்ற நிற்கும் என விளங்கும், இன்னொரு வகையிற் சொல்வதாயின் பிரமம் தன்னுண்மையியல்பைப் பொறுத்து ஒன்றேயாகவும்; கலப்பியல்பால் ஒன்றுபடுந் தன்மையைப் பொறுத்து ஏனைப் பசு, பாசப் பொருள்களோடு இரண்டன்மை தோன்றவும் நிற்கும் எனலாம். இதுவே இத் தொடர்க்குச் சைவசித்தாந்தங் கொள்ளும் பொருள்.

இப் பொருள் கொண்டமையால் பிரமமல்லாத உயிருக்கும் மாயைக்கும் இருப்புக் கூறி அவற்றின் இயல்பை உள்ளது உள்ளபடி உணர்த்துதலில் சைவ சித்தாந்தத்துக்கு எவ்வித கஷ்டமுமேற்படவில்லை. இந்நிலை இருப்பதால், பிரமம் பிர

பஞ்சத்திற்கு முதற் காரணமாதல் செல்லாது எனத் தர்க்க ரீதியாக மறுத்தொதுக்குவதோடு, பிரமமே முதற் காரணமென்ற தற்கு ஆதாரமாக மற்றவர்கள் காட்டும் உபநிடத மந்திரங் களையும், மாயையே முதற்காரணம் என்ற தனது கொள்கைக் காதாரமாக அணைத்துக்கொண்டு விளங்குகின்றது சைவ சித் தாந்தம்.

நாம் முன்பு குறிப்பிட்ட உப நிடத மந்திரங்களில் (பக்-61) இரண்டு இத்தொடர்பில் கவனிக்கற்பாலன.

''யதோ வா இமானி பூதானி ஜாயந்தே யேன ஜாதானி ஜீவந்தி

யத் ப்ரயந்தி அபிசம் விசந்தி ச தத் விஜிஜ்ஞாசஸ்வ தத் ப்ரஹ்ம''

எதிலிருந்து இந்தப் பூதங்கள் தோன்றினவோ, தோன்றியவை எதனால் வாழ்கின்றனவோ, இவை மீளவும் எதனிடம் செல்கின் றனவோ எங்கு ஒடுங்குகின்றனவோ அது பிரமம். என்பது தைத்திரீய மந்திரம். இதில், தோன்றியன எல்லாம் பிரமத்தி லிருந்து தோன்றின என்ற கருத்து தூல அறிவாற் காணப் படுகிறது. ஆராய்சியறிவாற் காண்கின்றபோது அனைத்தும் மாயையிலிருந்தே தோன்றின எனக் கொள்ளுதற்குப் போதிய இடமுண்டு. ஆதாரம் ஆதேயம் என்பவற்றில் ஒன்றை மற்றதன் பெயராற் குறிப்பிடும் தன்மை உலக வழக்கிலுமுண்டு; செய் யுள் வழக்கிலுமுண்டு. இங்கே பிரமம் என்ற ஆதாரத்தின் பெய ரால் ஆதேயம் என்ற பிரகிருதி (மாயை)யே குறிக்கப்பட்டுள் ளது. இதற்கு இலக்கண அநுமதியும் உண்டு. இலக்கணையின் வகைகள் ஐந்தில் இது ஆதார இலக்கணை எனப்படும்

பிரமம் - ஆதாரம் - பிரகிருதி - ஆதேயம். சிவஞான சித்தி யார் 216ஆம் செய்யுளால், ஆன்மாவை முந்தனென்னும் வழக் குண்மை குறிக்கப்படுகிறது. முந்தன் — இறைவன். இறைவன் ஆதாரம். ஆன்மா ஆதேயம். ஆதேயமாகிய ஆன்மாவை ஆதா ரமாகிய இறைவன் பெயராற் குறிப்பது ஆதார இலக்கணை. அது போல, பிரமம் என்ற சொல்லாற் பிரகிருதியையே இச் சுலோகம் குறிப்பதாகத் தாராளமாகக் கொள்ளலாம். இங்ங னம் இலக்கணவகையானன்றி அநுபவவகையாலும் இது பொருந்துவதேயாம்.

மருந்தினால் நோய் தீர்வதாயிருக்கவும் வைத்தியனால் நோய் தீர்ந்ததென்கிறோம். இவ் உதாரணத்தில் வைத்தே மாயை பிரமங்களின் தொடர்பை விளங்குதல் சாலும், வைத்தியன் மருந்து என்பனவும் ஆதார ஆதாயங்களே. இவற்றில், மருந்து

தானே நோயை அறிந்ததுமன்று. குறித்த நோயொன்றுக்குக் குறித்த மருந்தொன்று, தானே தகுதியானதெனத் தானுகச் சென்று சேர்ந்ததுமன்று. அறியவல்லானுகிய வைத்தியன் அறிந்து கொடுப்ப அவன் செயலால் அது நோய் தீர்க்கவல் லதாகின்றது. நோயாளியும் உய்தி பெற வாய்ப்பாகின்றது. மருந்து — சடம். வைத்தியன் — சித்து. மருந்து — கருவி வைத்தியன் — கர்த்தா.

இதே பாங்கில், அறிய வல்லதாகிய பிரமம் ஆன்மாவின் மல நோயை அறிந்து அதற்கேற்ற மருந்து மாயை எனக் கண்டு, உயிருக்கு அதைச் சேர்த்துவிட அதனுற்றலால் மாயை மலந்தீர்க்கும் வலுவுடையதாகின்றது. இங்ஙனம் உயிரின் பொருட்டு பலவேறு உடல்களாகவும், பலவேறு உலகங்களா கவும், பல்வேறு பொருள்களாகவும் இறைவன் சேர்த்து விட்ட அத்தனையும் 'இமானி பூதானி' என்று குறித்த சுலோகத் திற் குறிக்கப்பட்டன. இவையனைத்தும் ஆன்மாவின் மலபரி பாகத்திற்கு உதவுவன. அதனுல் மருந்துபோல் கொள்ளத்தக்கன. இவை தோன்றியது மாயையிலேதான்; பிரமத்திலல்ல. இனி. மறு உபநிடத மந்திரத்தையுங் கவனிக்கலாம்.

''யதா ஊர்ணநாபி : ச்ருஜதே க்ருஹ்யதே வா ச
யதா ப்ருதிவ்யாம், ஓஷதய : சம்பவந்தி
யதா ஸத : புருஷாத் கேச லோமானி
ததா அக்ஷராத் சம்பவதி இஹ வீச்வம்''

எவ்வாறு சிலந்தி நூலைத் தோற்றுவிக்கிறதோ, எவ்வாறு பூமியில் பயிர்கள் தோன்றுகின்றனவோ எவ்வாறு மனிதனி லிருந்து தலைமயிரும் பிறரோமங்களும் தோன்றுகின்றனவோ அவ்வாறு அழிவறு பொருளாகிய பிரமத்திலிருந்து இப் பிர பஞ்சம் தோன்றுகிறது, என்பது முண்டக மந்திரம். பிரமத்தி லிருந்தே பிரபஞ்சம் சம்பவிக்கின்றது என்றே இச் சுலோகங்கள் கூறுவதாகப் பொது நோக்கில் தெரிகிறது. ஆனுல் ஆராய்ந்து பார்க்கும்போது பிரகிருதி என ஒன்று இங்கே உய்த்துணர வைக்கப்பட்டிருத்தல் புலனுகின்றது. உய்த்துணரவைத்தல் என்பதும் கருதிய பொருளைத் தெரிவித்தற்கு நூல்கள் கையா ளும் உத்தி வகைகளில் ஒன்ருகும்.

சிலந்தியிலிருந்து நூல் தோன்றிற்றென்றால் சிலந்தியாகிய ஆன்மாவிலிருந்து நூல் தோன்றிற்றெனலாமோ? 'வயலிற் பயிர் தோன்றிற்றென்றால் மண் தானே முளை ஆயிற்றெனலாமோ? மனிதனிலிருந்து உரோமந் தோன்றிற்றென்றால் மனித உயிரிலிருந்து தோன்றிற்றெனலாமோ? ஆகாது. பின்னை, இதனைத் தெளிவது யாங்ஙனம்? சிலந்தியினுடலிலிருந்து நூல் தோன்றிற்று. வயலிற் பதிந்த விதையிலிருந்து முளை தோன்றிற்று. மனித உடலிலிருந்து உரோமம் தோன்றிற்று என ஆராய்ச்சியுணர்வால் அறிந்துகொள்வதே இதைத் தெளியும் வழியாகும், சிலந்தியுடல், வித்து, மனிதவுடல் மூன்றும் இதன் கண் இருக்கின்றன. ஆனால், சொல்லப்படவில்லை, யுக்தியினால் அறிந்துகொள்ளவிடப்பட்டிருக்கின்றன. இதுவே, உய்த்துணரவைத்தல் ஆகும்.

வெறுஞ் சிலந்தியுடலில் நூல் தோன்றாது. உடல் முதற் காரணமாயிருக்க, சிலந்தியுயிர் நிமித்த காரணமாய் உடனிருக்கும் போதேதான் நூல் தோன்றுகின்றது. அதுபோலவே மண் குளிர்ச்சி நிமித்த காரணமாயிருக்கும்போதே வித்தாகிய முதற் காரணத்திலிருந்து முளை தோன்றுகின்றது. அங்ஙனமே மனிதனாகிய ஆன்மா நிமித்த காரணமாயிருக்க உடலில் உரோமம் தோன்றுகிறது. ஆதலால், சிலந்தி, மண், மனிதன் என்பன முதற் காரணம், எனக் கொள்ளுதற்கிடமில்லையாகும். இதுபோலவே பிரமம் நிமித்த காரணமாயிருக்க அதன் சந்நிதியில் அதை ஆதாரமாகக்கொண்டு விளங்கும் மாயையிலிருந்தே பிரபஞ்சந் தோன்றுகின்றது. இந் நிலையில் மாயையே பிரபஞ்சத்திற்கு முதற் காரணம். நிமித்த காரணமாயமையும் பிரமத்தை முதற் காரணமெனல் தவறு என அறியலாம்.

இனி, சத்து அசத்து என்ற உபநிடதக் குறியீடுகள் சார்பிலும் நாம் ஆவசியகம் அறிய வேண்டிய மாயாவிலக்கண மொன்றுளது. மாயை இல்பொருள். வெறுந் தோற்றம் மாத்திரமே எனக் கொண்ட மாயாவாதிகள் அசத்து என்றால் இல்பொருள் என்று வீட்டனர். இதுபற்றிய விளக்கம், சதசத் ஆராய்ச்சி என்ற முன்னைய கட்டுரையிற் பெற்றுள்ளோம், ஆதலால் இங்கே விரிவு வேண்டியதில்லை.

'அசத்' என்ற சொல்லுக்குப் பாசம் அனைத்தும் விடயமாயினும் சந்தர்ப்பத்திற்கேற்ப இங்கு மாயையை மட்டுமே கருத்திற் கொள்வோம். மாயை இல் பொருளாதல் எவ்வாற்றானும் ஓவ்வாதென்பது மேற் கண்ட விளக்கங்களால் இனிது பெறப்படும். எனினும். இனியுஞ் சிந்திக்க இடமுண்டு.

இல்லாததொன்று எந்தவொரு காரியப்பாட்டுக்கும் உதவியதில்லை. ஆகாயத் தாமரை என்ருயினும் மாலை தோன்ற உதவியதில்லை. ஆகாயத் தாமரை இல்லை. அதனுல் மாலையும் இல்லை அதுபோலவே மாயை இல்லையெனில் பிரபஞ்சமும் இல்லையென்ருய் விடும். பிரபஞ்சம் இல்பொருளென்பதாயின் மாயாவாதிகளுக்குப் போல எல்லோர்க்கும் அது வெறுந் தோற்றமாதல் வேண்டும். அது சுருதி யுக்தி அநுபவம் மூன்றுக்கும் ஒவ்வாததா யிருக்கின்றது.

பிரபஞ்சம் என்றும் இருந்துகொண்டே யிருக்கிறது அதனுல் அதன் முதற்காரணமாகிய மாயையும் என்றும் இருந்து கொண்டேயிருப்பதாகும். அதனுலன்றே எல்லா ஆகமங்களும் ஒரே குரலாக மாயை நித்தியம் என்றுள்ளன. மாயை உள் பொருளே எனினும் என்றும் ஒரே தன்மையான உள்பொருளன்று.

பிரபஞ்சம் தோன்றியிருக்கும்போது மாயை தூலமாகிய உள் பொருள். பிரபஞ்சம் ஒடுங்கியிருக்கும்போது அது சூக்குமமாய உள் பொருள். எனவே, அதன் நித்தியத்திற்கென்றும் குறைவில்லையாம். ஆதலின் அசத்தென்பதற்கு இல் பொருளென்றல் பொருந்தாது என்பதே சைவ சித்தாந்தத் துணிபு.

மாயையின் நித்தியத் தன்மைக்குப் பங்க மேற்படாதவகையில் சைவ சித்தாந்தம் 'அசத்' என்ற சொற்குப் பொருள் கொண்டிருக்கும் அருமை அறியத் தக்கது. சைவசித்தாந்தத்தின் படி அசத். என்றும் ஒரு படித்தாய் இல்லாத உள்பொருள்' அதாவது, ஒருகால் வெளிபட்டுத் தூலமாயும் ஒருகால் ஒடுங்கிச் சூக்குமமாயும் நிலைக்கும் உள்பொருள்.

மாயை அவ்வியல்பினது. ஆகவே அது அசத். பிரமம் அதற்கு நேரெதிரானது. அதாவது நிர் விகாரமாய் என்றும் ஒரு படித்தாய் நிலைத்திருப்பது. ஆதலால் பிரமம் 'சத்'. மாயை அசத்' எனப் பெற்ற காரணம் இதனுல் விளக்கமாகிறது. 'சத்' என்பதன் பொருட்கு விடயமாகிய பிரமத்திற்குப் பரிணமங் கூறுதல் அடாது என்பது இதனுலும் பெறப்படும்.

நிர்விகாரம் — நிலைவேறுபடாமை, பரிணமம் — நிலை வேறுபடுதல். இரண்டும் ஒன்றிற் காணப்படுதல். அசம்பாவிதமன்ருே.

மாயா வியவகாரம் என்ற விஷயம் மாயையின் வியவகாரம் ஆதலோடு மாயாத வியவகாரமும் ஆதல் சிந்திக்கத்தக்கதாகும். எனினும் ஓரளவுக்கு அதுபற்றிய முக்கிய அம்சங்கள் இக் கட்டுரைத் தொடரில் ஆராயப்பட்டுள்ளன அவைவருமாறு :-

(1) வேத சங்கிதையிலும், உபநிடதத்திலும் மாயை என்ற பதப் பிரயோகம்.

(2) ஆகமங்களில் மாயை பற்றிய விளக்கம்.

(3) கந்தபுராணத்தில் இடம் பெறும் மாயை மூலம் மாயா விலக்கணம் அறியப்படுமாறு.

(4) வேதாந்தியரும் பாஞ்சராத்திரரும் மாயை பற்றிக் கொண்ட கருத்து முரண்பாடுகள்.

(5) மாயை பற்றிய விளக்கத்தில் சைவசித்தாந்தத்தின் நிலை.

(6) 'சதசத்' நோக்கில் மாயையின் பொருள்நிலை.

இரோதான மான்மியம்

''ஹிரண்மயேன பாத்ரேண சத்யஸ்ய அபிஹிதம் முகம் தத் த்வம் பூஷன் அபாவ்ருணு சத்ய தர்மாய த்ருஷ்டயே'' —பொன் மயமான ஒரு பாத்திரத்தினுல் சத்தியத்தினுடைய முகம் மறைக்கப்பட்டிருக்கிறது. ஓ! பூஷன் நாம் சத்தியத்தைத் தரிசிப்பதற்கு உபகார மாம்படி அதனை விலக்கி விடுவாயாக. என்பது ஈசா வாஸ்ய உபநிடதத்தில் பதினைந்தாம் மந்திரம். மெய்ப் பொருளைத் தரிசிக்க முயலும் தியானயோக அனுபவ சாலி ஒருவர் அதற்கு முன்னேடியாகத் தான் பெற்றுள்ள தத்வ தரிசனத்தின் முடிவிற் செய்து கொள்ளும் ஒரு பிராத் தனையாகத் தோன்றுகிறது இம்மந்திரம்.

உயிரிடத் துள்ளதென்று பெரும்பான்மையாக ஒத்துக் கொள்ளப்பட்டிருக்கும் மறைப்புத் தன்மைக்குக் காரணம் ஆணவம் என்பர். ஆணவத்தை இருண்மலம், கருமலம், அஞ் சனம் என்பதே வழக்கம், இங்கு பொன்மயபாத்திரம் என்ற சொல்லாற் குறிக்கப் படுவது அதுவாதல் பொருந்தாது, ஆதலின் இப் பொன்மயமான பாத்திரம் எதுவென்பது சிந்த னைக்குரியதாகும், இதை இனங் கண்டுகொள்ளல் இன்பம் பயப்பதாகும்.

இது இவ்வாருக, இத்தகைய தியான யோக அநுபவ சாலியாகிய மற்றெருருவரின் அநுபவம் பின்வருமாறு காணப் படுகின்றது.

தே த்யான யோகா நுகதா அபச்யன்
தேவாத்ம சக்திம் ஸ்வகுணைர் நிகூடாம்
ய: காரணனி நிலிலானி தானி
காலாத்ம யுக்தான் யதிதிஷ்டத் யேக :

தியான யோக சாதனையாளர்களாகிய ரிஷிகள் இறைவனு டைய சக்தியைக் கண்டார்கள், அது உயிர்களின் சிற்றறிவுக் கறிய வாராத அளவுக்கு அவற்றின் குணங்களினுல் மறைக்கப் பட்டதாய் இருந்தது. அச் சக்தியாளனுகிய இறைவனே கால ஆத்ம தத்துவங்களோடு கூடிய அனைத்தையும் நிர்வகித்து நிற்பவனுவான். என்கின்றது சுவேதாஸ்வதர உபநிஷதம் 1 ஆம் அத்தியாயம் 3 ஆம் சுலோகம். இச் சுலோகத்தில் வரும், 'ஸ்வ குணைர் நிகூடாம்' என்ற தொடர் தனது குணங்களால் என்றும் தமது குணங்களால் என்றும் இருவகையிற் பொருள் கொள்ள நிற்கும். நிகூடா என்ற சொல்லும் மறைப்பது, மறைக்

கப்பட்டது என இரு பொருள் கொள்ள நிற்கும். இவ்வாறிருத்தலால் ஸ்வகுணை; நிகூடாம் என்ற தொடர் — (1) தனது குணங்களால் மறைப்பது.

(2) தமது (உயிர்களின்) குணங்களினுல் மறைக்கப்பட்டது என இரு பொருள் தரக்கூடியதாயிருக்கிறது. இவ்விரு பொருளும் பிரதானமானவையே என்பது பின்னுல் அறியவரும்.

இவ் வகையில், தேவாத்ம சக்தி உயிரோடு உடனுய் நிற்பதென்பதும் பெறப்படுகின்றது. இச் சக்தியை ரோதசக்தி, ரோதயித்ரீ என்ற பெயர்களால் ஆகமங்களில் குறிப்பிடக் காண்கின்ருேம்.

இச் சொற்கள் 'ருத்' என்ற வடமொழி வினையடியிலிருந்து தோன்றி, தடு, மறை என்ற வினையடிகளில் தோன்றும் கருத்தாப் பெயர்ப் பொருள் தருவன. இவற்றில் மறை என்பது மறைப்பது, மறைக்கப்படுவது, என்ற இரு பொருட்கும் பொதுவாயிருத்தல் குறிப்பிடற்பாலதாம். சித்தாந்த நூல்களில் இச் சக்தி திரோதாயி, திரோதானம் என்ற பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது. இச் சொற்கள் திரோதா என்ற கூட்டு வினை (திரஸ் + தா) யடியில் தோன்றியவை. இத் திரோதா என்பதற்கு மறை (to hide, to conceal) ஒளி (to disappear, to vanish) என்ற இரு பொருளும் உள்ளன. அவ்வகையால், மறைத்தல் மறைந்திருத்தல் என்ற இரு பொருட்கும் பொதுவாகத் திரோதானம் என்ற சொல் நிலைபெறக் காண்கின்ருேம்.

இவ்வளவில், மேற் குறித்த சுவேதாஸ்வதர உபநிடத மந்திரத்தில் 'ஸ்வகுணை: நிகூடா எனப்பட்ட தேவாத்ம சக்திப் பண்பும் சித்தாந்த நூல்களில் திரோதானம் என்று குறிக்கப்படும் சிவசக்திப் பண்பும் ஒன்ருதல் காண்கின்ருேம். இதன் பண்புகள் இரண்டில் தன் குணங்களினுல் மறைத்தல் என்ற பொருள் வெளிப்படையானது. அதன் விபரம் பின்னுல்அறிவோம். உயிர்க் குணங்களினுல் மறைக்கப்படுதல் என்றதன் விளக்கம் இச் சக்தியின் தன்மையைத் தானும் அநுசரிப்பதுபோல் வெளிப்படையாகாமலேயுள்ளது. எனினும், மறைந்திருப்பது என்ற திரோதானச் சொற் பொருள் விளக்கில் அறியப்படக்கூடியதாய் விடுகின்றது. இத் திரேதானம் தெய்வ சக்தி. ஆதலால் இது பிற சக்திகளால் மறைக்கப்படும் என்றல் பொருந்தாது ஒளியை இருள் மறைத்தல் எவ்வாற்ருனும் இல்லாத காரியமே. இத் தொடர்பில் தணிகைப் புராணச் செய்யுளொன்றைக் கவனித்தல் பொருந்தும்.

"விழிப்புணர்ப்புறு மிருளென விரவிய தன்னை
அழிப்ப முற்றிய சத்தியுந் தன்வழி யாக்கி
ஒழிப்பின் மூன்றிடத் திருதிறத் தவத்தை யோரைந்தும்
கழிப்பி லாதுயி ருறப்பல சக்தியிற் கதுவும்"

கண்ணைக் கவ்வும் இருள்போல உயிரைக் கவ்விக் கலந்து கொண்டிருக்கும் ஆணவமாகிய தன்னை அழிக்கும் பொருட்டாகச் சேர்ந்த இறைவன் சக்தியையும் தன் வழிநிற்பதாக்கி எல்லாவித அவஸ்தைகளும் உயிர்க்கேற்படுமாறு பல்வேறு சக்திகளால் அந்த ஆணவம் கதுவிக் கொண்டிருக்கும் தணிகைப் புராணம், நந்தியுபதேசப்படலம் செய். 104. குறித்த திரோதான சக்தியின் இயல்பு இங்கு ஆணவத்தின் தொடர்பில் வைத்து உணர்த்தப் படுகிறது தன்னையழிப்பதற்காகச் சேர்ந்த சிவசக்தியை ஆணவம் தன்வழி நிற்கச் செய்கிறதாகக் கூறுகிறது இச்செய்யுள். இப்படி இருளாகிய ஆணவத்திற்கு ஒளியாகிய சிவசக்தி பின்னிற்குந் தன்மை சித்தாந்தத்து அற்புதப் புதிர்களிலொன்று.

இந்த ஆணவமே ஒரு அற்புத வஸ்துவாக இருப்பது. கணவர்க்குந் தோன்ருத கற்பாஸ்திரி என்ற பிரத்தியேகமான ஒழுபுகழ் அதற்குண்டு. தன்னைக் கொண்டவனுகிய உயிர்க்குந் தோன்ருமல் மறைந்திருப்பது ஆணவம். அத் தன்மையில் அவ்வாணவத்தையும் வென்று விடுகின்றது இத் திரோதானம், தன்னையொளித்த கள்வியாகிய ஆணவத்துக்குப் பின்னே தானும் ஒரு பரந்துறை செல்வியாக அமைகின்றது இச் சக்தி. அதற்குத் தக்க ஆற்றல் அதற்குண்டு. அந்த ஆற்றற்பெருமையை அறிவித்தற்கே ஸ்வகுணை நிகூடா என அதனை அறிவித்தது சுவேதாஸ்வதர மந்திரம். இதனுல், ஆணவம் அதனைத் தன் வழிப்படுத்திக்கொண்ட தென்பது உபசாரம் அதுவே தானுக ஆணவத்தின் பின் நின்றதென்பதே உண்மையாதல் புலனுகின்றது. இங்ஙனம் ஆணவத்தின் பின் நின்றதென்றதனுலே அந்த ஆணவத் தன்மையாகிய மறைத்தல் தொழிலுக்கு உபகரிப்பதே இதன் தன்மையுமெனத் தெரிகிறது அது அதற்கின்றியமையாத ஒரு நியமமுமாகும்.

எவ்வாறெனில், சித்தினுடைய சேர்க்கையில்லாமற் சடம் தொழிற்படாதென்ற அறுதியிடப்பட்ட உண்மையினுலாம். ஆணவம் சடம் அதன் மறைத்தற் சக்தி இதனுலேயே செலுத்தப் படுகின்றது. அது மறைக்குமளவுக்கு இதுவும் மறைத்தலையே செய்கின்றது எனவுஞ் சொல்லலாம், குறித்த செய்யுளில் ஆணவத் தொடர்பில் வைத்து இச் சக்தியியல்பு உணர்த்தப்பட்டதிலிருந்து, மறைத்தலும், தான் மறைந்திருத்தலும் ஆகிய இரண்

டும் இதன் பண்பாதல் இனிதின் அறியக்கிடக்கின்றது. தான் சார்ந்த உயிரறிவை மறைத்தலோடு தன்னையும் மறைத்து வைத்திருக்கும் ஆணவச் சார்பில், அவ்விரு தன்மையும் தன் தன்மையாகக் கொண்ட இச் சத்தியினியல்பைத் தோற்றவைத்தமை இச் செய்யுட்கு ஒரு சிறப்பாகும்.

மிருகேந்திரம் என்ற ஆகம நூலில், பாசலக்ஷணப் பிரகரணம் என்பது ஒரு பகுதி. அப் பிரகரணத்திலும் ஆணவத் தொடர்பில் வைத்தே திரோதான சக்தியின் இயல்பு பேசப் பெறுகிறது. அது ஏன் தான் மறைந்திருக்கிறது? என்ற ஆசங்கையும் அங்கே விடுவிக்கப்படுகின்றமை காணலாம். அப் பிரகரணத்தில் முதற் பத்துச் சுலோகங்களில் ஆணவ இலக்கணம் தெரிவிக்கப்பட்டுப் பதினோராம் சுலோகம் பின்வருமாறு அமைகின்றது.

''தாஸாம் மாஹேஸ்வரீ சக்திஸ் ஸர்வானுக்ரஹா சிவா
தர்மானு வர்த்தனுத் ஏவ பாசஇத் யுபசர்யதே''

அவ்வாணவ சக்திகளுள் நின்றியலும் மாஹேஸ்வர (திரோதான) சக்தியானது எல்லாவகையாலும் உயிர்க்கு அநுக்கிரகிக்கும் முகாந்திர முள்ளதாய் சிவத்தன்மை வாய்ந்ததாய் இருந்தும் உயிரின் ஞானக்கிரியா சக்திகளை மறைக்கும் ஆணவதர்மத்தின் வழி நிற்பதால் பாசம் என்று உபசாரமாகச் சொல்லப்படுகின்றது. என்பது அச்சுலோகம். இதில் வரும், 'தர்மாநுவர்த்தனம்' என்ற தொடர் முக்கியமானது. முன் கண்ட தணிகைப் புராணச் செய்யுளில், தன்னை அழிப்ப முற்றிய சக்தியுந் தன் வழியாக்கி என்ற வசனப் பொருளின் அந்தரங்கத்தை இது வெளியாக்குகின்றது. இது ஆணவத்தின் பின் நிற்குந் தன்மை ஆணவத்தால் விளைந்ததன்று, இது தன்னளவில்தான் மேற்கொண்டதே என்ற உண்மையியல்பு வெளியாகிறது. திரோதானம் பாசம் போலக் கருதப்பட்டுப் பஞ்ச மலங்களில் ஒன்றாக எண்ணப்பட வந்த காரணமும் இத் தொடரால் விளக்கப்படுகின்றது. தத்தர்மம் — ஆணவதர்மம். அநுவர்த்தனம்—தொடர்ந்தியலல், அநுசரித்தல், வழிநிற்றல்.

இங்ஙனம் அநுவர்த்தித்து நின்றுகொண்டே அத் திரோதான சக்தி நிகழ்த்தும் தொழிற்பாடும் அதன் நுட்பங்களும் அவைபற்றிய விளக்கங்களும் மேல் பன்னிரண்டு சுலோகங்களிற் பேசப்படுகின்றன.

அநுவர்த்தித்து நின்றுகொண்டு அது மல சக்திகளைப் பரிணமிக்கச் செய்கின்றது. (பரிணமித்தல் — பக்குவமாதல்) கூட இருந்த குற்றத்துக்காக எள்ளோடு எலிப்பிழுக்கையுங் காய்தல்போல இத் தொழிலில் தான் ஈடுபட்டதால் பாசம் எனப் பட்டதே தவிர அது தன்னுண்மையில் அருட்சக்தியேதான். அது மலத்தைப் பரிணமிக்கச்செய்வதால் மலத்துக்கு அநுக்கிரகித்து அதன் வாயிலாக உயிரை வருத்துகிறதே! அது அநுக்கிரகமா குமா? என்றால், மலத்தைப் பரிணமிக்கச் செய்வது மலத்துக்கு அநுக்கிரகம் பண்ணவல்ல, அவ்வகையில் அம்மலசக்திகளைத் தொழிற்படுத்தி அவை தாங்களே தம்பாட்டில் தேயும்படி செய்து உயிரை அம்மலப்பிணிப்பிலிருந்து விடுவிப்பதற்காக? ஆதலால் அது உயிருக்கு அநுக்கிரகந்தான். விரண வைத்தியனொருவன் விரணத்திலுள்ள சவ்வு முதலியவற்றை நீக்குவதற்காகக் காரம் போன்றவற்றையிட்டு நோயாளியை வருத்தல்போல நிகழ்வது இதுவாகும். ஆதலால், அச்சக்தி மலத்தைப் பரிணமிக்கச் செய் தல் அதன் அநுக்கிரகத் தன்மைக்கு விரோதமாகமாட்டாது. இப் படியான அச்சக்தியின் கைங்கரியம் மலசக்திகள் மடங்கும் வரைதான் நிகழும். அதன் மேல் அது தன் சுய நிலையிற் பரா சக்தியாய் விளங்கும்.

இவ்வுண்மைகள் மிருகேந்திர பாசலக்ஷணப் பிரகரணத் தில் உள்ளன. இவற்றுக்கு வேறான திரோதான உண்மைகள் பிற ஆகமங்களிலும் உள்ளன. அவற்றிலுஞ் சிலவற்றை அறிதல் நலமாகும்.

''ரோதயித்ரீ அணுசங்கஸ்ய ப்ரளயே நியமஸ்திதிம்
போகேஷ் வபிரதஸ்யாபி விததாதி யதஸ் தத :''

ஆன்மாக்களுக்கு அவையவை நிற்கும் அவ்வவ் விஸ்தா னங்களுக்கேற்றவாறு போகங்களிலே நியதிப் பிரகாரத்தை அச் சத்தி கொடுக்குங் காரணத்தால் ரோதயித்ரீ என்று பெயர் பெறுகிறது — பௌஷ்கராகமம் பதி படலம் 75

ஆன்மாக்களைப் போகங்களில் நிறுத்தல் இச் சக்தியின் தொழில் என்பது இச் சுலோகந் தரும் விளக்கம். போகங்க ளில் நிறுத்தல் என்பது பற்றிய விளக்கத்தைச் சற்று விரிவா கத் தெரிந்து கொள்ளுதல் நலம்; போகங்கள் இரு வகையா னவை. அவற்றில் இன்ப போகங்கள் பிரீதிகரமானவை ஆனால், அவற்றையடுத்து வரவிருக்கும் துன்ப போகங்கள் அதற்கு நேர்மாறானவை. பிரீதிகரமான போகங்களில் ஆன்மா விரும்பி நிலைத்தல் சாலும். ஆனால் அந்நிலையிலும், தொடர்ந்து வர

இருக்கும் துன்ப அநுபவங் காட்சிப் படுமானல் உயிருக்குத் தான் நிற்கும் இன்ப போகத்திலே மனம் லயிக்காமற் போய் விடும். அதற்காக அது தோன்ருமல் மறைக்க வேண்டும். அந்த மறைப்பு நிறுத்தலின் விசேட பண்பாயிருக்கும். இனி, இன்பா நுபவம் முடிந்து துன்பாநுபவத்தில் நிலைப்பதென்ருல் உயிர்க்கு மிகக் கஷ்டமாயிருக்கும். அந் நிலையில் ஏதேனும் தந்திரங்க ளால் அதற்கு மனமயக்கத்தையோ வைராக்கியத்தையோ ஊட்டி அதே போகத்தில் நிலைக்கச் செய்ய வேண்டும். இது நிகழா விட்டால் துன்ப போகங்கள் முறைப்படி அனுபவித் தொழிய மைப்படாமை காரணமாகப் பிறவி நீட்டிக்கும். இங்ஙனம், இத்திரோதான சக்தி எது செய்யினும் அது ஏதேனுமொரு வகையில் மறைப்புடன் கூடியதாகவேயிருத்தல் அறிதற்பால தாகும்.

'திரோதாயி நிறுத்தலாகும்' எனச் சிவப்பிரகாசம் 18 ஆம் செய்யுள் கூறுவதும் குறித்த இச் சுலோகப்பொருளும் ஒன்றே.

இப் பொருளுண்மை இதனினுங் கூடிய அழுத்தத்துடன் மதங்க பாரமேஸ்வரம் என்ற ஆகமத்தில் இடம் பெற்றிருக்கக் காண்கின்ருேம்.

''ரோதயித்ரீ யா பத்யு ராவ்ருத்ய ஜகதோ துரம்
ருணத்தி ஸ்திதயே அத்யர்த்தம்
நேச் சன்னபி பசூம் பலாத்'' — பர்த்தாவின் சத்தியாகிய ரோதயித்ரீ என்பது உயிர்களை ஊட்டும் பொறுப்பைத் தானே வகித்துக் கொண்டு விரும்பப்படாத விஷயங்களிலுங் கூட உயிரைப் பலவந்தமாகத் தடுத்து நிறுத்தி அநுபவிக்கச் செய்கின்றது.

—மதங்கபாரமேஸ்வரம் சக்திபடலம். 38

மேற்கண்டவாறு போகத்தில் நிறுத்தல் என்னும் விஷயத்திற் பலவந்தம் பிரயோகிக்கப்படுமாற்றை இது தெரிவிக்கின்றது. குழந்தையை அடித்து அடக்கி வைத்து மருந் தூட்டுவது போல்வது இது, இது வெல்லாம் உயிரின் ஈடேற்ற மான முடிவான நன்மைக் காதலின், குறித்த ஓருயிர் ஈடேற்றம் பெற்ற பின், இது மருந்தூட்டியவாறறன்று, சர்க்கரை தீற்றிய வாறு என எண்ணி இறும்பூதெய்தவரும் என்பதையும் அறிதல் நலம். 'அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய அற்புதம் அறியேனே', குரம்பையிற்புகப் பெய்து அடித்தடித்து அக் காரமுன் தீற்றிய அற்புதம் இது என்கிருர் மாணிக்க வாசக சுவாமிகள். இத் திரோதானத் தொழில்கள் ரோதயித்ரீ சக்தி

யால் கோப்த்ரீ முதல் ச்ரத்தா ஈருன வெவ்வேறு ரூபங்களில் இயலும் வகையையும் இவ் வாகமம் விஸ்தரிக்கக் காணலாம்

'தர்மா தர்ம விபாகேஷு போக்து ரப்யுத்யதஸ்ய ஹி

அஸமஞ்சஸ ஹானுர்த்தம் ரக்ஷணய ச ஸர்பிதா

கோப்த்ரீ சோபயிதும் சக்தா ஜகத் ஏதத் சராசரம்''

தர்மாதர்ம அநுபவங்களில் முயல எத்தனிக்கும் உயிருக்கு அப்போதைக் கப்போது உசிதமல்லாததை மறைத்து உசித மானதில் மட்டும் அநுபவம் நிகழப் பண்ணிக் கொண்டிருக் கிறது கோப்த்ரீ சக்தி. என்கின்றது 42 ஆம் சுலோகம் போகா நுபவத்தை அச்சக்தி தன் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டிருக் குந் திறம் இதனுற் பேசப்படுகின்றது.

இனி 59ஆம் சுலோகத்தில் 'ச்ரத்தா' என்ற ஒரு சக்தியின் பேரால் திரோதானத்தின் அதிமுக்கிய அம்சமொன்று உணர்த் தப்படுகின்றது. சிலர் மனப்பூர்வமாக விரும்பி நாடும் சில போகங்களைப் பலர் பார்த்து அருவருக்கிருர்கள். அதனுல் அவர்களை அவமதித்தலுஞ் செய்கிருர்கள். ஆனல், அதிற் சம் பந்தப்படுபவர்களுக்கோ அது சற்றும் தெரிவதில்லை. அம்மட்டி லுமல்லாமல், அப் போகங்களில் அவர்களுக்கு அத்தியந்தமான இரசனையுமல்லவா ஏற்பட்டு விடுகிறது. தம் இயல்பைத் தடுக் கவோ புத்தி சொல்லவோ முயல்வார்மேல் வஞ்சஞ் சாதிக்கவும் அவர்கள் பின் நிற்பதில்லை. அவ்வளவுக்கு அவ்விடயங்களில் அவர்களுக்குச் சுவை தழும்பிப்போய் விடுகின்றது. குடித்துக் களித்துக் கேவலமான கோலத்தில் நிற்பவனைப் பெற்றதாயே முகங்கொடுத்துப் பார்க்க நாணுகிருள். என்கிருர் திருவள்ளுவர். ஆனுல் அவனுக்கோ அதுபற்றிய பெருமிதமே தலை தூக்குவ தன்றித் தாழ்வுணர்வு தலைக்கொள்வதில்லை. ஏன் இப்படி? இதன் இரகசியத்தை அச்சுலோகம் அழகாக வெளிப்படுத்துகிறது.

''குத்ஸிதேஷு அபி போகேஷு ச்ரத்தயா ஆத்ம சிக்ருத :

ஸ்வாசாரம் அவமத்யாசு தத்வ்ருத்தௌ சம்ப்ரவர்த்தே''

இந்த உயிரானது சிரத்தை என்ற சக்தியினுல் வசீகரிக் கப்பட்டுத் தனக்குள்ள ஆசாரம் அனைத்தையும் அவமதித்து அருவருப்பான போகங்களில் ஆவலாய்ப் பிரவர்த்திக்கின்றது. என்பது அச்சுலோகம்.

இங்ஙனம் இத் திரோதானம் சுவை பிறப்பிக்கும் பாங்கைப் போகத்தில் அழுத்தல் என்பர் சித்தாந்திகள் போகத்திற் சுவை பிறப்பித்தல் என்பர் நிரம்ப அழகிய தேசிகர் 'இச்சையி னச்சுறுவித்தல்' என்பர் தத்துவப் பிரகாசர்.

திரோதான சக்தியியல்புகளை விரிவாகக் கூறுகின்றது தத்துவப் பிரகாசம் என்னும் சைவசாஸ்திரநூல். இந்நூலின் 37 ஆம் 38 ஆம் செய்யுள்கள் திரோதான இலக்கணங்களைப் பகுத்து வகைப்படுத்துந் திறம் அவதானிக்கற் பாலதாகும். அது கூறுமாறு:-

திரோதானமானது மலமென்று பெயர் பெறினும் இறைவனது சக்தியாம். இது ஆன்மாக்களைக் கன்மமலம் பற்றியிருக்குமளவும் மறைத்து, மலச் செறிவு நீங்குமளவும், உயிரின் விரோதி போல, மறைவாக மறைத்து நின்று கொண்டிருக்கும். அந்தத் திரோதானமே மாயையிலிருந்து கலாதி தத்துவங்களைத் தோற்றிக் கொடுப்ப அவற்றினுதவியால் உயிர் வேதகலைகளையெல்லாங் கற்றுத் தேறிய பொழுதிலும், கன்மமிருக்கும் வரை இத்திரோதான சக்தியே உயிருக்குச் சிவனைத் தோன்ற விடாமல் மறைத்துக் கொண்டிருக்கும். அதனால்தான் இம் மேலான அருளை மலமென்றும் சொல்லுகிறார்கள். இதே சக்திதான் இருவினையொப்பும் மலபரிபாகமும் உயிர்க்கு நிகழும்போது சிவனையுந் தெரிந்து கொள்ளும்படி பராசக்தியாய் நின்று கருணை செய்யும்.

இத் திரோதானத்திற்கு:-

(1) உருவம் — இருளும் ஒளியுமாயிருத்தல்

(2) சொரூபம் — கண்ணாடி போல வழிபடுவார்க்கு வெளிப் பாயும் மற்றையோருக்கு இருளாயுமிருத்தல்.

(3) சுபாவம் — ஆணவ மலத்தின் குணமாயே நிற்றல்

(4) வியாத்தி — பராசக்தியினுள் அடங்கியதாயிருத்தல்

(5) வியாபகம் — கூகையின் கண்ணில் சூரியன் பலன் படுமாறு போல இருளாகத் தோன்றுவித்து நிற்றல்.

(6) குணம் — உயிர்க்கு இருவினையொப்பு வருவித்தல்.

(7) விசேடம் — சேர்ந்த சேர்ந்த கன்மத்தை ருசிப்பித்தல்.

(8) நிறம் — ஞான வடிவாயிருத்தல்.

(9) தரிசனம் — சத்தி நிபாதம்

(10) சுத்தி — திருவருளல்லது மலமல்ல என்னும் தெளிவு.

இச் செய்யுள்களால் திரோதானத்தின் இலக்கணத்தை இங்ஙனம் வகைப்படுத்துணர்த்தும் தத்துவப் பிரகாசர் மற்ருேர் செய்யுளில் திரோதானத்தைத் தொழில் வகையால் ஐவகைப் படுத்தி உரைப்பர்.

''உத்தமமாம் திரோதானம் வெளியை இருளாக்கல்
உயர் பொய்யை மெய்யாக்கல் கலாதிகளில் நிறுத்தல்
எத்தனேயோ தத்துவத்தும் இறையுணரா தாக்கல்
இச்சையினச் சுறுவித்தலென ஐந்தாம் வகையே''

என்பது அச் செய்யுட் பகுதி.

'பொய்யை மெய்யாக்கல்' என்ற காரியம் இன்றைய நமது நாடோடி அனுபவத்தில் தண்ணீர்பட்டபாடாயிருக்கிறது. எத்துறையிலும் அரைப்பொய்யும் (Quasi lie) காற் பொய்யும் (Quarter lie) ஆவது இடம்பெருமலிருப்பதில்லே. கீழ்மட்டத் திலுஞ்சரி மேல் மட்டத்திலுஞ் சரி, உயர் மட்டத்திலுஞ்சரி, இது ஒரு வாழ்க்கைக் கலேயாகத் தாண்டவமாடுகிறது. இது ஏன் இப்படி என்ருல் இது திரோதானத்தின் தொழிலே என்று தெளிவாகக் கூறுகிருர் தத்துவப் பிரகாசர்.

இவ்வளவும் திரோதான சக்தியின் இயல்புகளே ஒரு வகையில் அலசிக் கண்டுகொண்டோம். விஷயத்தை முடிக்குமுன், திரோதான இயல்புபற்றிப் பொதுவாக எழும் ஒரு ஆசங்கையை விடுவிக்க வேண்டும்.

ஏன்? இச் சக்தி வெளிவெளியாய் நின்று தன் செயல்களே நிகழ்த்தலாகாதா? மறைந்தேதான் நிற்கவேண்டிய அவசியம் யாது? என்பது ஆசங்கை.

இச் சக்தியின் நோக்கம் உயிரை விடுதலேயடையச் செய்தலே. அதாவது, உயிரைக் கவ்வியுள்ள ஆணவத்தை நீக்குதலே. சூரியன் தன் இயல்பில் எதிர் தோன்றிய அளவிலே இருள் விலகிப் போகிறது. அதுபோல இச் சக்தியும் தன் இயல்பில் எதிர் நிற்குமாளுல், ஆணவம் விலகாமலிருக்க முடியாது. ஏனெனில், சூரியன் போல ஒளிமயமானது இச் சக்தி, இருள் போல இருண்மயமானது ஆணவம் என்ற ஒப்புமையால். ஆனுல்,

வெறுமனே ஆணவத்தை விலக்குதல்மட்டும் இதன் நோக்கமன்று. உயிரின் கன்மானுபவம் அறுதியாய்க் கழியும்வரையும் ஆணவத்தை வைத்து அதற்குச் சிசுரூஷை (Nursing) பண்ணுவதும் இதன் நோக்கமாகும். அன்றியும், ஆணவச் சார்பினுல் உயிரிடத்தில் ஏற்பட்டிருந்த கோணல்கள் (சிந்தைத் திருகு) விகாரங்கள், அகங்கார மமகாரங்கள் முதலிய அத்தனையும் போயொழிய வேண்டும். அப்போதுதான் உயிருக்குச் சாஸ்வதமான விடுதலையாகும்.

சத்தினியல்பை அவமதித்து அசத்தினியல்பை நாடுதல் உயிரினிடத்து விளைந்த ஒரு கோணல். 'பொருளல்லவற்றைப் பொருளென்றுணரும் 'மருள்' என இதை வர்ணிப்பர் திருவள்ளுவர். காமம், குரோதம், லோபம், மோஹம், மதம் மார்ச்சரியம் என்பன ஆணவச் சேர்க்கையால் உயிரில் விளைந்த விகாரங்கள். எதற்கும் ''நான்' என முனைந்து எழுவது அதன்பாலுற்ற அகங்காரம். தன்னைச் சார்ந்த எதனையும் 'எனது' என்று அபிமானித்தல் அதற்கேற்பட்ட மமகாரம். இந்த மமகாரங் காரணமாக ஆசை, கோபம், வாட்டம், அசூயை, ஈர்ஷ்யை முதலான எத்தனையோ தீக் குணங்கள் அதிற்படிந்து விடுகின்றன.

அசூயை என்ருல் பொருமை. அதாவது பிறர் ஏற்றங்கண்டாற் சகிக்கமாட்டாமை. ஈர்ஷ்யை என்ருல் தான் படுங் கஷ்ட நஷ்டங்கள் தன் அயலானும் படவேண்டுமென்னும் துர்ப்பாக்கிய வசமான ஒரு மனோபாவம். ஆகத் தீரக் கெட்ட கொடிய குணம் இதுபோல் வேறெதுவும் இருத்தல் இயலாது. இப்படி இவைகளெல்லாம் விளைந்தது இந்த ஆணவத்தினுல் தான்.

இத்தனையும் பற்றறக் கழிவதானுல் முதலில் ஆணவ சக்திகள் பெருகிக் கன்மத்தில் ஊக்குவிக்க வேண்டும். அக் கன்ம அனுபவ மூலமாகவே மலசக்தி தேய வேண்டும். மல சக்திகள் தேயுந் தோறும் மேற்கண்ட தீயியல்புகள் படிப்படியாகக் குறையும் வாய்ப்புண்டு. அவ் வகையில் மலசக்தி முழுதும் தேயவே தீக்குணங்களும் முற்ருயகலும் அவை அகன்ற பின்னே உயிர் சுத்தனுகும். சுத்திபெற்ற உயிர் மட்டுமே சிவனருளுஞ் சிவானந்தத்தை அநுபவிக்கத் தகுதியாகும்.

விஷயம் இவ்வாறிருக்க, திரோதான சக்தி எடுத்த எடுப்பிலேயே தான் வெளிநின்று மலவிருளைப் போக்கி விட்டால் என்னுகும்! இவ்வாருன அகச் சுத்தம் ஏதும் ஏற்பட வாய்ப்புண்டாகுமா? ஏலவே உயிரிற் பட்ட தீக்குணங்கள் தீக்குணங்களாகவேயிருக்கப் புறத் தொடர்பளவில் ஆணவம் நீக்கப்படுவ

தாகில் உட்சுவரிருக்கப் புறச்சுவர் பூசியவாறும் முடியும். அதற்காகவேதான், திரோதான சக்தி தான் மறைந்து நின்று மேற்காட்டியவாறுன நிரந்தர நன்மையை உயிர்க்கு விளைக்க வேண்டியதாயிற்று.

சுத்தநிலை அடைதல் சார்பாக உயிர்பெறும் திருத்தம் ஒவ்வொன்றும் உயிருணர்விற்பட்டு நிகழும் திருத்தமாதல் வேண்டும். அதாவது உயிர் பட்டுக் கெட்டு அலுத்தும் உவர்த்தும் வருந்திப் பெறும் திருத்தமாதல் வேண்டும் என்பதே சைவ ஞானம். இந் நிலையை அநுசரித்தே திரோதானத்தின் செயற்பாடு அமைந்திருத்தல் கருதத் தக்கதாம்.

இனி, சக்தி வெளிப்பட்டு நின்றே மலசக்திகளை மடக்கிப் பிடித்து உயிரைக் கொண்டு அனுபவிப்பிக்கலாகாதோ எனின், ஆகாது. அது அசம்பாவிதம் ஏனெனில்,

சக்தி, சத்தும் சித்துமாயுள்ள ஒளிப்பொருள். மலம் அசத்தும் அசித்துமான சடப்பொருள். சத்துப் பொருள் வெளிப்படில் அசத்து எதுவும் அதனெதிர் நிற்காது. சூரியனுக் கெதிர் இருள் நில்லாமைபோல. 'யாவையுஞ் சூனியஞ் சத் தெதிர்' என்கின்றது சிவஞான போதம் எனவே சத்தி வெளிப் பட்டு நின்றால் அதனெதிர் ஆணவம் தானொரு பொருளாய் நின்று தொழிற்படும் தன்மையை முற்றாக இழந்துவிடும். அது ஒரு பொருளாய் நிலைக்கமாட்டாது ஆதலின்.

அன்றியும், சக்தியின் சொரூபம் பூரண ஞானம். 'சக்தி தன் வடிவேதென்னில் தடையிலா ஞானமாகும்' என்கின்றது சிவஞான சித்தியார். அது, தான் சுயரூபத்தில் வெளிப்படும் நிலையில் அது தன் பூரண ஞானத்தையே வழங்க முடியும். போகத்தை வழங்க முடியாது. மலத்தினால் ஏற்பட்ட விகாரங்கள் நீங்காதிருக்கும் வரையில் உயிர் போகத்தை ஏற்குமே தவிர ஞானத்தை ஏற்காது. சன்னிதோஷம் இருக்கும் வரை நோயாளி மருந்தை ஏற்பானேதவிர உணவை ஏற்க முடியாமை போல, நோய் நீங்கிய நிலையில் வைத்தியன் தானாகவே உணவைக் கொடுக்க சொல்வான். அதுபோல மலம் நீங்கிய நிலையில் சக்தி தானே முன்னின்று மெய்ஞ்ஞானத்தைக் கொடுக்கும். நோயாளி—ஆன்மா. நோய்—ஆணவம், மருந்து — கன்மபோகங்கள், மருந்தூட்டுஞ் சாதனங்கள் மாயாகருவிகள். மருந்தூட்டும் தாதி—திரோதானசக்தி. வைத்தியன் — சிவன் நோய் நீங்கிய பின் கொடுக்கும் உணவு — ஞானம் என இவ்வொப்புமையை விரித்துணரலாம்.

குறித்த இந்நிலைமை பற்றியே "பேதித்து நம்மைவளர்த் தெடுத்த பெய்வளை' என்று இச் சக்தியைப் போற்றுகிருர் மாணிக்கவாசகர். இச் சக்தி தன்னையும் பேதித்திருக்கின்றது; உயிரையும் பேதித்துவிடுகின்றது. 'பேதித்து ...... பெய்வளை' மெத்த அருமையான ஒரு தொடர். பராசக்தி என்ற நிலையிலி லிருந்து திரோதான சக்தியாக; அறக் கருணை பூணும் நிலை லிருந்து மறைக் கருணையும் பூணும் நிலையாக அது தன்னைத் தானே பேதிக்கின்றது. மல பெத்தனும் நிலையிலிருந்து மல சுத்தனும் நிலைக்கு உயிரைப் பேதிக்கின்றது. தன்னைப் பேதித்தமையும் உயிரைப் பேதித்தமையும் உயிரை வளர்த் தெடுக்கும் பரோபகாரம் பற்றி நம்மைப் பேதிப்பதற்காகவே சக்தி தன்னைப் பேதித்திருக்கின்றது. என்ற இப் பொருள் விளக்கிற் சகல ஐயங்களு மகன் றெழியும்,

இப்படியெல்லாம் இத்திரோதான சக்தி தான் முன் வராமற் பின் நின்று செய்யும் அருளுபகாரத்தின் அருமையைத் தத்துவ தரிசனம் பெற்ற மெய்ஞ்ஞானிகள் வகை வகையாய் வர்ணிக் கின்ருர்கள். அருணந்தி சிவாச்சாரியார் இதனை 'ஓடி மீள்கென ஆடல் பார்த்திருத்தல்' என்ற ஒரு அழகிய காட்சிச் சித்திர மாக வரைந்து காட்டியுள்ளார்.

''என்னுட் கரந்து என்பின் வந்தருளி
என்னையுந் தன்னையுந் அறிவின் றியற்றும்
என்னது யானெனும் தன்மையுங் கண்டு
யாவர் யாவையும் யாங்கணுஞ் சென்று
புக்குழிப்புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து
மிக்க போகம் விதியால் விளைத்திங்கு
ஏற்பணியாளாய் எனைப் பிரியாதே
ஓடி மீள்கென ஆடல் பார்த்திட்டு
என் வழி நின்றனன் எந்தை'' — இருபா இருபது. 18.

என்னுள்ளே தான் மறைந்து என்னை அடிப்பிரியாது ஒழுகி எனக்கு வேண்டும் போகங்களை வேண்டியவாறெல்லாம் ஊட்டி, போகமுண்ட மதர்ப்பினுலே நான் என்னையுமறியாது தன்னையு மறியாது அகங்கார மமகாரக் கூத்தாட அக் கூத்தையுங் கண்டு கண்டு வேடிக்கை பார்த்து என்பணியாள் போன்று என் வழியில் நின்ருன் என்னப்பன் என்பது அவர் வரைந்த சித்திரம்.

இதில், திரோதான சக்தியின் உபகாரம் அதனெடு பிரிப் பின்றி நின்றியற்றும் இறைவன் பேரால் வர்ணிக்கப்பட்டிருக் கிறது. 'என்னையுந்... ... அகந்தை' என்ற பகுதிப் பொருள், 'தனித் துணை நீ நிற்க யான் தருக்கித் தலையால் நடந்த வினைத்

துணையேன்'' என்ற திருவாசகச் சுருதியிலே எழுந்திசைக்கின்றது. 'புக்குழிப்புக்குப் பெயர்த்துழிப் பெயர்ந்து என்பின் வந்தருளிப் போகம் விளைத்து' என்ற பொருள், 'தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த செல்வம்' என்ற மணிவாசகக் காட்சியிலே லயங் கொள்கின்றது.

'என்னது யானெனுந் தன்மையுங் கண்டு' என்ற சித்திரம் பழைய தமிழ்ப்பாடல் ஒன்றை ஞாபகஞ் செய்கின்றது. உடன் போக்கிற் செல்லும் தலைவன் முதலில் தலைவியை முன் செல்லவிட்டுத் தான் பின் சென்றான் தலைமையுள்ளவன் தான் முன் செல்லாது பின் சென்றதேன் என்றால்,

''காண்பான் அவாவினாற்

காதலன் காதலிபின் நடவா நிற்ப'' என்

கின்றது அப் பாடல் அவள் நடையழகைப் பார்த்து ரசிக்கவே தான் அவன் அப்படிச் செய்தானும். இங்கும் 'கண்டு' என்ற சொல், உயிரின் தலைத்திமிர்ப்பான போக்கை இறைவன் பார்த்து வேடிக்கை மகிழ்ச்சி கொள்ளுதலைத் தோற்றுவிக்கின்றது.

இத்திரோதான சக்தியால் விளைவதாகிய மல நீக்கம் ஆத்மீக அநுபவ யாத்திரையில் ஒரு மைல் கல் எனலாம். கலங்கரை விளக்குமாகும். மலம் நீங்குமளவில் திரோதானமும் நீங்கும். அதன் நீக்கத்தைக் காணத் தவங் கிடக்கிறார்கள் எத்தனையோ மஹானுபாவர்கள். யாம் ஆரம்பத்திற் கண்ட ஈசாவாஸ்ய மந்திரத்தை அளித்த ரிஷியும் அவர்களில் ஒருவரேயாதல் ஒருதலை. ஆதலின் அவர் குறிப்பிடும், 'ஹிரண்மய பாத்திரம்' வேறெதுவுமன்று, இத் திரோதானமே என அதனை இனி நாங்கள் இனங் கண்டு கொள்ளல் அமையும். அவர் ஏலவே தத்துவ தரிசனம் பெற்றுக்கொண்டவர். அவர் மெய்ப்பொருளாகிய சிவத்தை நேரே காண இது தடை நிற்கிறது போலும்! ஆகவே அதனை நீக்கிவிடப் பிரார்த்தித்திருக்கிறார். அங்கு அப் 15 ஆம் மந்திரத்தை அடுத்துவரும் 16ஆம் மந்திரமும் இக் கருத்தையே ஆமோதிப்பதாயிருக்கும் அழகு அறிந்து அனுபவிக்கத் தக்கதாகும்.

''பூஷன் ஏகர்ஷே சூர்ய பிரஜாபத்ய
வ்யூஹ ரஸ்மீன் சமூஹ
தேஜோ யத்தே ரூபம் கல்யாணதமம்
தத் தே பச்யாமி
யோசா வசௌ புருஷ : சோகம் அஸ்மி''

பூஷனே, ஏகர்ஷியே, சூர்யனே ப்ரஜாபதியே! அப் பாத்

திரம் அகற்றப்பட்டபின் உனது சுயபிரபை (பராசக்தி ஒளி) என்கண்ணை மழுக்குவதாயிருக்கும். அதனால் நான் உன் மங்கள சொரூபத்தைப் பார்க்க முடியாதிருக்கும். அந் நிலைமையேற் படாதவாறு நீ உன் கிரண சமூகத்தைச் சுருக்கிக் கொள் வாயாக. சுருக்கினால் நான் உன்னைக் காண்பேன். கண்டு 'அது நானாகும்' பேறடைவேன் என்கின்றார் அந்தரிஷி.

திரோதானத்தின் மான்மியம் இருந்த வாற்றை இயன்ற அளவு பரக்க நோக்கி இவ்வளவும் விபரித்த வாற்றால் அதன் மகிமை ஓரளவு தெரிக்கப்பட்டதாயிற்று.

ஊழ்ப்பிரச்சினை

ஆன்மார்த்த அறிவாராய்ச்சி விஷயங்களில் ஆணவம், திரோதானம் போல்வது ஊழ் எனவும் ஒன்று. அவைகளும் பலவேறு பிரச்சினைகளுக்கிடமானவை இதுவும் அஃதே.

வினைப்பயன் வேறு ஊழ் வேருகுமா? உயிர் முயற்சி வேறு ஊழ்வேருகுமா? 'ஊழிற் பெருவலி யாவுள? என்ற திருவள்ளுவர், 'ஊழையும் உப்பக்கங் காண்பர்' எனவுங் கூறுவதன் தாற்பரியம் யாதாகலாம்? என்பன போன்று ஊழ் அறிவாராய்ச்சிக்கண் உளவாகும் பிரச்சினை கள்பல. ஆதலின் வினை, வினைப்பயன், வினைப்பயன் அனுபவத்துக்கு வரும் முறை, அதற்காம் அமைப்பு, அதனை நிர்வகிக்கும் சக்தி எனத் துறைதோறும் படிந்து இதனை விசாரித்தல் பயனுடைத்தாகும்.

பழவினை:-

உயிர்கள் ஓய்வு ஒழிவின்றி இன்பதுன்பங்களை அநுபவிக்கின்றன. அவ்வின்ப துன்பங்கள் உயிர்க்குயிர் வேறு வேருக நிகழ்கின்றன. ஒரே காரியத்தில் குறித்த இருவர் பெறும் அநுபவம் ஒரே மாதிரியாயிருப்பதில்லை. அநேக சந்தர்ப்பங்களில் ஒரே நிகழ்ச்சி ஒருவருக்கு விருப்பாகவும் மற்றவருக்கு வெறுப்பாகவும் இருத்தலுஞ் சகசம். இந்நிலை இருப்பது எதனுல்?

'காரணம் இன்றிக் காரியம் இல்லை' என்பது ஒரு பிரசித்த விதி. அதன் பிரகாரம், மேற்சொல்லியவாருன அநுபவ வேறுபாடுகளுக்குரிய காரணங்கள் இருந்தே ஆகின்றன. அக்காரணங்கள் வினைப்பயன் எனப்படும். இவை அவரவர் செயலின் பேறுகள். அவை ஒவ்வொருவருக்கும் வேவ்வேருயிருப்பதனுல் அநுபவங்களும் வேறுபடுகின்றன. ஒவ்வொருவர் வினைப் பயனும் அவ்வவர் சார்பில் ஏலவேயுள்ளவை. அதனுல் அவை பழவினை என்று பெயர்பெறுகின்றன.

'பண்டு செய்த பழவினையின் பயன்
கண்டுங் கண்டுங் களித்தியால் நெஞ்சமே' —அப்பர் தேவாரம்
— அக்கால்
அலவனைக் காதலித்துக் கால்முரித்துத்தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்' — நாலடியார்

ஒவ்வோருயிரும் அவ்வப்பிறப்பிற் பெறும் அநுபவம் அதனதன் பழவினைப் பயனேயாதல் ஒருதலை. என்றால், இப் பழவினை எப்படி ஆனது? எப்படி இருந்தது? எப்படிப் பலன் தருவது? என்பன இத்தொடர்பில் அறிதற்பாலனவாகும்.

ஒவ்வோருயிரும் ஓயாமல் ஏதாவதொரு முயற்சியில் ஈடு பட்டுக் கொண்டேயிருத்தல் கண்கூடு. இம்முயற்சிகள் நன்மை தரும் முயற்சியாகவும் இருக்கும், தீமை தரும் முயற்சியாகவும் இருக்கும். அவ்வகையால் அவை முறையே நல்வினை, தீவினை எனப் பெயர் பெறும்.

இந்த முயற்சிகள் செய்த செய்த அப்பொழுதே ஒழிந்து போகின்றன. முயற்சிகள் ஒழிந்தாலும் முயற்சிகளின் பெறு பேறுகள் ஒழிந்துவிடுவதில்லை. நல்வினை முயற்சியின் பெறு பேறு புண்ணியம். தீவினை முயற்சியின் பெறுபேறு பாவம் என அருவமாய் இருக்கும். இப்படியான புண்ணியங்களும் பாவங்களுமாக ஒவ்வோர் பிறப்பிலும் ஒவ்வோர் உயிர்க்குஞ் சேர்வன பெருந் தொகையாம். அவை ஒவ்வொன்றும் அவ ரவர் பேரிற் பதிவாகிக் கிடக்கும். இவற்றுக்குரிய பதிவேடு புத்தி என்ற தத்துவம். ஒவ்வோருயிரின் புத்தியோடும் அவ் வவரின் புண்ணிய பாவப் பதிவுகள் தொகை வகையாக மண்டிக்கிடக்கும். ஆனால் தனக்குரிய புண்ணிய பாவத் தொகை தன் புத்திதத்துவம் பற்றுக்கோடாகத் தன்னோடிருப் பது எந்த உயிருக்குந் தெரியாது. இப்படி, செய்ததாகிய உயிருக்குந் தெரியாமல் அதனோடிருக்கும் வினைத் தொகுதிக்குச் சஞ்சிதம் என்று பெயர். சஞ்சிதம் என்ற சொல் கூடிக் குவிந்து கிடப்பது (Accumulated) என்று பொருள் தரும். அது இங்கே உயிரின் புத்திதத்துவம் பற்றுக்கோடாகக் கூடிக் குவிந்து கிடக்கும் அவ்வினைத் தொகுதிக்குப் பெயராகிறது. ஒவ்வோருயிரின் பேரிலும் பதிவாகியுள்ள ஒவ்வொரு புண்ணி யமும் ஒவ்வொருபாவமும் அநுபவிக்கப்பட்டே ஒழியவும் வேண்டும்.

'நாபுக்தம் க்ஷீயந்தே கர்ம, கல்பகோடி சதைரபி' அநுப விக்கப்படாமல் எக்கன்மமும், நூறுகோடி கல்பங்கடந்தாலுங் கூட, அழிவடையாது என்பது ஆகம உண்மை. 'உற்ற தொழில் நினைவுரையில்...... எனும் சிவப்பிரகாசம் 31ஆம் செய்யுள் இக்கன்மம் பற்றிக் கூறுகையில், 'ஒன்றொன்றாலழியாது' எனவும் 'ஊண் ஒழியாது' (அநுபவத்துக்கு வருதல் தப்பாது) எனவுங் கூறுகின்றது.

இந்தச் சஞ்சிதம் முழுவதும் எந்த உயிருக்கேனும் எடுத்த பிறப்பொன்றில் அநுபவிக்கப்பட்டுத் தொலைவதா யிருக்காது. அநுபவிக்கப்படும் ஒவ்வோர் வினையின் சார் பிலும் அதிக அதிக புதுவினைகளும் தோன்றிச் சஞ்சிதத் தொகையைப் பெருக்கும் நிலையும் உள்ளதே. ஆதலால், கன்மத் தொலைவுக்காக உயிரொன்று அநந்த கோடி பிறவிகளை எடுக்கும் என்பர். அவற்றில் ஒருபிறப்பில் குறிக்கப்பட்ட ஒரு சிறு தொகுதியான வினைகளே ஓருயிரின் அநுபவத்துக்கு வரும். குறிக்கப்பட்ட அத்தொகுதிக்குப் பிராரப்தம் என்று பெயர். பிராரப்தம் என்ற சொல் தொடங்கப்பட்டது எனப் பொருள் தரும். ஒவ்வோருயிர்க்கும் பிறவி கொடுக்கப்பட்டுத் தாய் கருப்பத்தில் அடைக்கப்படும் ஒவ்வொரு தடவையும் அவ்வக் கணத்திலிருந்தே அவ்வப் பிராரத்தத் தொகுதி அநு பவங் கொடுக்கத் தொடங்கிவிடும். அக்காரணத்தால் அதற்கு இப்பெயர் ஏற்பட்டிருக்கிறது. எனவே, பிராரப்தமென்றால் அவ்வவ்வுயிர் அவ்வப்பிறப்பில் அநுபவித்தற்கென அதனதன் சஞ்சிதத்திலிருந்து வகுத்து ஒதுக்கப்பட்டிருக்கும் ஒரு பகுதி யான புண்ணிய பாவங்கள் என அறிதல் வேண்டும். அதனால் பிராரத்தம் பழவினை என்றும் அழைக்கப்படும். அவ்வப் பிறப் பில் உயிர் செய்யும் வினை புதுவினை (ஆகாமியம்). அதனோடு வேறுபடுத்திக் காட்டும் நோக்கில் இது பழவினை எனப்படு கின்றது. அவரவர் வினைப்பயன் என்றும், பிராரப்தம் என்றும், பழவினை என்றுஞ் சொல்லப்படுவது ஒரேகாரியமே.

வினை அநுபவத்துக்கு வருமாறு:-

இப்புண்ணிய பாவங்கள் எப்படி அநுபவத்துக்கு வரு கின்றன? என்பது இத்தொடர்பில் எழும் வினா. இவைகள் தாங்களாக முன்வந்து தம்பயன்களைத் தருவனவாகா. ஏனெனில், இவை அறிவற்ற சடங்கள். உயிர் தானாகத் தெரிந்து இவற் றைத் தன் அனுபவத்துக்கு எடுத்துக் கொள்ளுமோ? என்றால் அது சம்பவிக்காத காரியம் என்று காட்டப் பல ஏதுக்கள் உள. இவ்வினைகள் உயிருக்குத் தெரியாமலே உயிரின் புத்தி பற்றுக் கோடாகக் கிடப்பன. ஆதலின் எந்த உயிரும் தன் பழவினையைத் தான் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருத்தல் இயலாது. அன்றியும், உயிர் தானாகவே எடுத்துக் கொள்வ தானால் தனக்கு இதமானவற்றை மட்டுமே எடுத்துக் கொள்ளும். எந்த உயிராவது தனியே இன்பத்தை மட்டும் அனுபவிக்க அநுபவங் கண்டதில்லை இன்பமும் துன்பமும் பொதுவில் மாறி மாறி வந்து கொண்டிருப்பதையே எங்கும் காணக்கூடியதாயிருக்கிறது. ஆதலால், தானநுபவித்தற்குரி

யதை உயிர் தானே எடுத்துக் கொள்ளும் எனல் பொருந்தாது. எனில், இதை நிகழ்த்துதற்கு மூன்றாவதாக இன்னொன்று வேண்டும். அது இவ்விரண்டும் போலல்லாது தானாகவே தெரிந்து செயல் புரிவதாகவும் இருக்கவேண்டும். அது மற்றெதுவுமன்று. உயிரோடு உடனாயும், ஒன்றாயும், வேறாயுமிருக்கும் இறைவன் சக்திதான் என்பர். அந்தச் சக்தியே தான் திரோதானம் என்ற தன் பெயர்க்கேற்க, உயிரின் வினைத் தொகுதியை அது அறியாவாறு, அதற்கு மறைப்பை நிகழ்த்தி வைத்திருக்கும் கைங்கரியத்தையும் நிகழ்த்துகிறது. (முந்திய கட்டுரை இதைவிளக்கும்) நமக்கு அடுத்த கணம் என்ன நடக்கும் என்பதை நாம் நிச்சயிக்க முடியாது. நாம் நினைப்ப தொன்று நடப்பதொன்றாகும் சந்தர்ப்பங்கள் சிலவன்று, பல.

'ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் — ஒன்றை
நினையாத முன்வந்து நிற்கினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்'' — ஈசனே தன் சக்தியால் இவை யெல்லாஞ் செய்விக்கின்றான் என்கின்றது இந்நீதி வெண்பா.

சிலவேளை மங்கல வீட்டில் அமங்கலம் நிகழ்ந்துவிடுகிறது. புறாவைக் கொல்ல அம்பெய்த வேடனும், அதையே பற்ற வட்ட மிட்டுக்கொண்டிருந்த பருந்தும் இறக்க, புறா உயிர் தப்பிய வரலாறும் ஒன்றுண்டு. இப்படி எத்தனை எத்தனையோ! இத்தனைக்கும் கருத்தா ஈசனேதான். இது எங்கள் வினை எங்கள் அநுபவத்துக்கு வரும் வகைபற்றிய ஒரு பொது விளக்கம் எனக் கொள்ளலாம், இதனிலும் பார்க்கச் சிறப்பாக அறிய வேண்டியது மற்றொன்றுண்டு.

விசித்திர காரண காரியத் தொடர்பு:

எங்கள் அநுபவத்துக்கு வரும் வினைகள் சும்மா, சும்மா எழுந்தமானத்துக்கு வந்து கழிவனவாகக் காணப்படவில்லை, தனிப்பட்ட ஒருவருடைய தனிப்பட்ட ஒரு அனுபவத்தை உற்று நோக்கும் போது, அது அவரளவில் மட்டுமல்லாது - பலவேறு ஆட்களையும், பல்வேறு சூழ் நிலைகளையும், பலவேறு அநுபவங்களின் சம்பந்தங்களையும் தொட்டு நிகழ்வதாகத் தெரிகின்றது. அப்பலவேறு பகுதிகளுக்குள்ளும் மிக நுணுக்கமான காரண காரியத் தொடர்புகள் சன்னல் பின்னலாகச் சிக்குண்டிருத்தலும் வெளிப்படையாகத் தெரிகின்றது. பிரசித்தமான சரித்திர சம்பவங்களில் வைத்து இதனைவிளங்குதல் சுலபமாகும்.

தேவர்கள் அசுரர் கொடுமையிலிருந்து காப்பாற்றப்படுதல் கந்தபுராண சம்பவம். இந்த ஒரே சம்பவம் எங்கெல்லாம் தொடர்புபட்டுக்கொண்டு நிற்கின்றதென்ற விசித்திரத்தை ஒரு கால் பார்ப்போம்.

விஷ்ணுவும் இலக்குமியும் புத்திரப் பேறுவேண்டிச் சிவ பெருமானையும் உமாதேவியாரையும் ஒரு காலத்தில் பூசிக்கிறார்கள் சிவ பூசை செய்த புண்ணியம் காரணமாகச் சிவபெருமான் புத்திரப்பேற்றை அருளுகின்றார். ஆனால் சிவபூசை நிகழ்ச்சியில் விளைந்த ஏதோ ஒரு தவற்றுக்காக, 'அம் மகனுக்குத் தத்து ஏற்படுக' என்ற சாபமும் உமாதேவி வாயிலாகக் கொடுக்கப்படுகின்றது, வரத்தின் பேருகப் புத்திரன் பிறக்க வேண்டும். சாபங் காரணமாக அவன் என்றோ ஒருநாள் மரண அவஸ்தைப்படவேண்டும். இது இங்ஙனமாக,

ஒரு காலத்திற் சாகந்தீவு அரசன் புதல்வர்கள் இருவர் தவம் புரிகின்றனர் அவருள் ஒருவனாகிய சூரன் தான் சுப்பிரமணிய சுவாமிக்கு வாகனமாய மயிலாய் வரவேண்டும் என வேண்டுகிறான். மற்றையோனாகிய பதுமன் தான் அவர்க்குக் கொடியாகிய சேவலாய் வரவேண்டுகிறான். வரங் கிடைத்து விடுகிறது. இவர்கள் அங்கு மற்றொரு அதிக்கிரமச் செயலுக்கும் ஆளாகின்றனர். அதனால் சுப்பிரமணிய சுவாமியின் சாபமுங் கிடைத்துவிடுகிறது. வரத்தின் படி இவர்கள் மயிலுஞ் சேவலுமாகவேண்டும். சாபத்தின் பிரகாரம் இருவருஞ் சுப்பிரமணியர் கையால் அழியவேண்டும். இதுவும் இவ்வாறிருக்க,

சிவனை நிந்தித்துத் தக்கன் ஒரு காலத்திற் செய்த யாகத்தில் தேவர்கள் பங்குபற்றுகிறார்கள். அது சிவ அபராதம். அதற்கேற்ற தண்டனையாகத் தேவர்கள் அசுரர் கையால் வருந்த வேண்டிய பலனுண்டு. இதுவும் இவ்வாறாக, சூரனாதியரால் துன்புற்றஞ்சி இந்திரன் சிவபெருமானை நோக்கிக் கடுந் தவம் புரிகின்றான் அதன் பேருகத் தேவர்கள் அசுரரின் துன்பங்களிலிருந்து விடுபடவேண்டிய பலனும் இருக்கவே இருக்கிறது.

இந்த நான்கு பகுதியிலும் நால்வேறு வகையானவர்கள் பற்றி நிறைவேற்றுதற்குள்ள எல்லா அநுபவங்களும் ஒன்றற்கொன்று காரண காரியமாய்ப் பின்னிப் பிணைக்கப்பட்டு நிகழும் நிகழ்ச்சி விசேடமொன்றைக் கந்த புராணத்திற் காண்கிறோம்.

சூரனுஞ் சிங்கனும் மற்று மற்றுமுள்ளவர்களுடன் மாயைக்கு மக்களாய்த் தோன்றுகிறார்கள். சிவனை நோக்கிக் கடுந்தவமியற்றிச் சர்வாதிபத்தியம் பெற்றுத் தேவர்களை வருத்

துகிருர்கள். அந்த அசுரரிலிருந்து தம்மைக் காப்பாற்றத்தக்க சிவகுமாரரொருவரைத் தருமாறு தேவர்கள் சிவனை வேண்டு கின்ருர்கள். வெகு காலமாகச் சிவபெருமான், ஆகட்டும் பார்க்கலாம் என்ற அளவில் இருந்துகொண்டிருக்கிருர். தேவர்கள் துயரந் தலைக்கு மிஞ்சிவிடுந் தருணம் பார்த்துச் சிவபெருமான் யோகத்தில் அமர்ந்து விடுகிருர். தேவர்களோ சிவனைக் காணத் துடியாய்த் துடிக்கிருர்கள். ஆனல் சந்தர்ப்பம் விரோதமாயி ருக்கிறது. அவர் யோகத்தி லிருக்கும்போது அவர் முன் ஒரு வருஞ் செல்லாவண்ணம் நந்தி தேவர் தடையிட்டுக் காவல் செய்கிருர். 'மன்மதன் வந்தாற் சரி மற்றெவரும் உள்ளே வர அநுமதிக்கக் கூடாது' என, யோக இருக்கைக்குப் போகுமுன் சிவன் நந்திக்கு ஆணையிட்டதும் இருக்கிறது.

வேறு வழியில்லை. மன்மதனை அனுப்பித்தான் சிவனுடைய யோக நிலையைக் கலைக்க வேண்டுமெனத் தீர்மானிக்கின்ருர்கள் தேவர்கள். மன்மதனுக்கு விருப்பமில்லை. தேவர்கள் நிர்ப்பந்திக் கிருர்கள். அவன் தந்தையுமே அக் கோஷ்டியில் சேர்ந்து கொண்டிருக்கிருர். நிர்ப்பந்தத்துக்காற்ருமற் சென்ற மன்மதன் சிவனுடைய சினத்துக்காளாகி எரிந்தொழிகின்ருன். யோக நிலை நீங்கிய சிவன் உமாதேவியைக் கூடிச் சுப்பிரமணியர் அவத ரிக்கின்ருர். தேவர்களுக்காகச் சுப்பிரமணியர் போரிட்டு சூரன் பதுமன் ஆதியோரை அழிக்கின்ருர். தேவர் துயர் தீர்கிறது. சூரனும் பதுமனும் வரப் பலன் நிறைவுற்று மயிலுஞ் சேவலு மாகின்ருர்கள். இது கதை நிகழ்ச்சிச் சுருக்கம். இதற்குள்ளே பின்னிப் பிணைந்திருக்குங் காரண காரியத் தொடர்புகளின் விசித்திரத்தை என்னென்பது!

நான்கு தொகுதியில் வேறுவேருகக் கிடந்த எட்டு அனுக் கிரக நிக்கிரகங்கள் இங்கு ஒரே சரித்திர நிகழ்ச்சியிற் பின்னிக் கோக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு உபாங்கங்களாக அமைந்த மற்றும் நிகழ்ச்சிகள் வேறு. அவற்றைவிட்டு இதை மட்டும் எடுத்துக்கொண்டாலும் எத்தனையோ கோணங்களில் இதன் அமைப்பை நோக்கி வியக்கவேண்டியிருக்கிறது.

தேவர்களின் தவப்பலன் நிறைவேறச் சுப்பிரமணியர் பிறக்கவேண்டும். அந் நிகழ்ச்சிக்கு, விஷ்ணுவுக்கிட்ட சாபப் பலன் நிறைவேற்றம் உடனடிக் காரணமாகப் பொருத்தப்பட் டிருக்கிறது. கயிலையில் சுப்பிரமணிய சுவாமியிடம் பெற்ற சாபப் பலன் காரணமாகச் சூரனும் பதுமனும் பிறந்து அழிய வேண்டியிருக்கிறது. இந் நிலைமை, தேவர்கள் செய்த சிவாபரா தப் பலனுகுந் தண்டனையடையக் காரணமாம்படி கோக்கப்பட்

டிருக்கிறது. சுப்பிரமணியர் சாபப் பலன் நிறைவேற்றம் சூரன் பதுமனின் தவப் பலன் நிறைவேற்றத்துக்கு முன்னிலைக் காரணமாக இயைக்கப்பட்டிருக்கிறது. இத்தகைய இணைப்புமுறைகளுக்குள் வல்லானொருவனின் வித்தகக் கைத்திறம் ஈடுபட்டிருத்தல் வெளிப்படை. அதுவே இங்கத்தைய விசித்திரம்.

பிரசித்தி பெற்ற இராமாயண, சிலப்பதிகார, மணிமேகலைக் கதைகளுக்குள்ளும் இப்படியான இணைப்புக்கோப்பு நிலைகளுக்குக் குறைவில்லை. ஏன்? நமது சமானிய நடைமுறை அநுபவ நிகழ்ச்சிகளுக்குள்ளுமே இவற்றுக்குக் குறைவில்லைத்தானே! இவற்றால் நாம் அறியக் கிடப்பதென்ன?

நமக்கு நமக்குள்ள புண்ணிய பாவப் பலன்களை நாம் அவ்வப்போது ஈட்டி வைத்திருக்கின்றோம். அவை செய்யப்பட்ட ஒழுங்கு முறையில் கிரமமாக நமது அனுபவத்துக்கு வருவதாக இல்லை. நமக்கு அநேகமாக ஒரு இன்பானுபவ முடிவில் ஒரு துன்பானுபவம் நிகழ்கிறது. இதற்கேற்றபடி நாம் வினை செய்யும்போது ஒன்று விட்டொன்று புண்ணியமாயும் பாவமாயும் பலன் தரத்தக்க வகையில் திட்டமிட்டுச் செய்துள்ளோமா என்பது கேள்வி. எமது அறிவாராய்ச்சி அநுபவங்களுக்கெட்டிய வரையில், ஏன்? சுருதி யுக்தி அநுபவங்களுக்கெட்டிய வரையில் கூட அப்படியில்லை என்றே தெரிகிறது. பின்னை இதன்போக்கென்னவாகும்?

நியதி—ஊழ் :-

நம்பேரிலுள்ள புண்ணிய பாவங்களை அவற்றின் தரமறிந்து. அவை ஊட்டப்படவேண்டிய முறையறிந்து, 'இன்னாருடைய இன்னவினை இன்னின்ன தொடர்பில், இன்னின்னவாறு அநுபவத்துக்கு வருதல் வேண்டும்' என்று வல்லானொருவன் செய்துவைத்த வித்தகக் கைத்திறன் வாய்ந்த நியமம் ஒன்று இருக்கிறதென்றே கொள்ள வேண்டும். இந்த நியமம் பழவினைக்கு வேறானது. பழவினை சம்பந்தமாக இது ஏற்படுகின்றது என்ற அளவே அன்றி, பழவினையும் இதுவும் ஒன்றென்னும் நிலையில்லை. இந்த ஒழுங்கு நியமத்துக்கு நியதி என்றே பெயர். இந்த நியதியை நிர்வகித்து நிற்பது தெய்வ சக்தி. இதை ஆக்குவதும் அது. நடைமுறைப்படுத்துவதும் அதுவே. எனவே, பிராரத்தம், (பழவினை) நியதி, தெய்வசக்தி என்ற மூன்றின் சேர்க்கையினாலே எங்கள் அநுபவம் ஒவ்வொன்றும் நிகழ்ந்து கொண்டிருப்பதாக அறிதல் வேண்டும். இந்த நியதிக்கு மற்றும் பல பெயர்கள் உள. அவற்றுள் மிகப் பிரபல்யமானது ஊழ்.

ஊழ் என்ற பதத்தைக் கையாண்டவர் பலர். அதன் இயல்புகளை விரித்திலக்கியம் படைத்திருக்கின்றார் திருவள்ளுவர், அதன் நுட்பங்களைத் தமது உரைத்திறன் வாயிலாக வெளிப் படுத்துகின்றார் பரிமேலழகர். ஊழ் என்ற அதிகாரத்தின் முகப் பில் பரிமேலழகர் கூறும் வரை விலக்கணம்,

'அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்ற டைதற் கேதுவாகிய நியதி' — என்று பேசுகின்றது. வினைப் பயன் சடமாதலால் அதுதானாகவே செய்தவனைச் சென்றடை யாது. என மேலே கண்டோம். ஆதலின் அறிவுடைப் பொரு ளாகிய ஒன்றே நியதியின் வாயிலாக, அதாவது நியதியை ஒரு கருவியாகக்கொண்டு அதனைச் செய்விக்கின்றது எனத் தெளிதல் வேண்டும். அவ்வறிவுடைப் பொருள் தெய்வசக்தியே யல்லது பிறிதில்லை. நம் சித்தாந்த பரிபாஷையில் அது திரோதான சக்தி எனப்படுகின்றது.

குறித்த ஊழ் அதிகார அவதாரிகையில் ஊழின் பரி யாயப் பெயர்கள் பல இடம் பெறுகின்றன. அவற்றுள் ஒன்று தெய்வம். தெய்வத்தால் வகுக்கப்படுவது, தெய்வத்தால் நிர் வகிக்கப்படுவது என்ற பொருளிலேயே ஊழுக்குத் தெய்வம் என்ற பெயர் ஏற்பட்டிருக்கின்றது. தமிழில் இத்தகைய வழக்குகள் சிலவல்ல. இனி, அதற்கு மற்றொரு பெயர் விதி. விதிக் கப்பட்டது விதி என்ற விளக்கத்தில் இப் பெயர் வழங்குகிற தாகக் கொள்ளலாம். இந்த விதியாகிய ஊழுக்கிணங்க உயிர் களுக்காம் உடல்களையும் கருவி கரணங்களையும் படைப்பவனா தலின் படைத்தற்கடவுளாகிய பிரமனுக்கும் விதி என்னும் பெயர் வழங்குகிறது. 'வகுத்தான் வகுத்தவகை' என ஊழைக் குறிப் பிடுகிறார் வள்ளுவர். இங்ஙனம் ஊழின் பரியாயப் பெயர்களை ஆராய்வதன் மூலமும் ஊழினியல்புகளைத் தெரிந்துகொள்ளல் சாலும்.

ஊழின் விரிந்து பரந்த இயல்புகளனைத்தும் நியதி என்ற பெயரிற் பொதுவாக அடங்கும். இன்னதற்கு இன்னது என்ற நியமம்; இன்னது இன்னதன்மூலம் இன்னமாதிரியாகத்தான் இடம்பெறவேண்டும் என்ற வரையறை; இதற்குப் பலன் இவ்வ ளவுதான். இவ்வளவிற் கூடுதலுமாகாது; குறைதலுமாகாது என்ற கண்டிப்பு என்ற இத்தகையியல்புகளைக் குறித்து நிற்பது இச் சொல். இத் தொடர்பில் நாம் மேலும் விதந்து விசாரிக்க இடமுண்டு.

எப்பவோ முடிந்தவை:-

பிராரத்தமாயிருக்கும் புண்ணிய பாவங்கள் எந்த ஒழுங்கில் அநுபவிக்கப்பட்டால் உயிர்களின் மலபரிபாகப்பேறு இயன்ற அளவு விரைவில் ஏற்பட முடியுமோ அந்த ஒழுங்கைத் தெரிந்து கொண்டே தெய்வசக்தி அவற்றை அநுபவத்துக்குத் தருவதாகச் சித்தாந்த அநுபவம் பேசுகின்றது. இவ்வுண்மைப்படி பார்த்தால் வினை அநுபவங்கள் வரவேண்டிய கிரமமும் தொடர்ப்பாடுகளும் ஏலவே சித்தஞ்செய்யப்பட்டனவாகக் கொள்ளவேண்டிய துண்டு. 'எப்பவோ முடிந்த காரியம்', என்ற ஞானிகள் வாக்கு இதனையே உணர்த்துகின்றது. எங்களுக்குவரும் நன்மை தீமைகளின் குறைநிறைகள் பற்றி நாங்கள் எம்பாட்டில் அலட்டிக் கொள்ளும் போதெல்லாம் அதற்குச் சமாதானமாக, இவ்வசனத்தையே அறிஞர்கள் கூறுகிறுர்கள். இத்தெய்வீக அமைப்பாகிய ஊழ் வழியேதான் நமது பழவினையநுபவங்கள். நமக்குவரும் என்ற உண்மை இதனுலும் வெளியாகின்றது.

ஊழும் முயற்சியும் :-

யாரேனுமொருவர் ஏதேனுமோர் பிறப்பில் தன் பழவினை அனுபவத்தைப் பெறுவதாகில் சும்மாவிருந்து பெற்றுக்கொள்ளுதல் அமையாது. அவ்வவ்வனுபவப் பேற்றுக்கு அநுகுணமாக ஏதேனும் முயற்சி செய்தே பெற்றுக்கொள்ள வேண்டும். 'பிற்செயாது அநுபவிப்பதின்று' — சிவஞானசித்தியார். ஒருவனுக்குக் கொலைப்பாவமாக ஒரு பிராப்தம் இருக்கிறதாக வைத்துக்கொள்வோம். அதற்கான தண்டனையை அவன் மற்ருெரு பிறப்பிற் பெற்றேயாகவேண்டும். அதாவது ஒன்றில் அவன் சிறையிலடைபட வேண்டும். அல்லது கொலையுண்ண வேண்டும். இப்பலன், அவன் சும்மாவிருக்க வத்துவிடுமாறில்லை. அதற்காக அவன் யாதாயினுமொரு கொலையிலோ சூழ்ச்சியிலோ சம்பந்தப்படுதல் இன்றியமையாததாகும். இவ்வகையால், இவன் பெறவேண்டிய அநுபவத்துக்கும், அனுபவப் பேற்றுக்குக் காரணமாக அவன் ஈடுபடும் முயற்சிக்குந் தொடர்புண்மை அறியப்படுகின்றது. ஆதலால் ஒவ்வொருவனும் மேற்கொள்ளும் ஒவ்வோர் முயற்சியும் சம்பந்தப்பட்ட ஊழின் தொடர்பாகவே ஏற்படுவதாகக்கொள்ள வேண்டும். இன்னும்,

ஒருவனுடைய பிராரப்தத்தில் தான தருமவாயிலாக வாய்த்த ஒரு புண்ணியம் இருக்கிறதெனில், அதன் பலனாக. ஒரு பிறப்பில் அவன் பெரும்பொருளீட்டி இன்பமுற வேண்டியது

உண்மை. அதற்கேற்ற அளவான ஊக்கம் அவனுக்கு அப்பிறப்பில் ஏற்படுவதியல்பே. இதற்கெதிர் பிறர் பொருளை அபகரித்து அவர்களைக் கஷ்டத்துக்குள்ளாக்கியபாவம் ஒருவரின் பிராரத்தத்திலுள்ளதெனில், அதன் பலன் அநுபவத்துக்கு வரும் மற்றொரு பிறப்பில் அவன் அநுபவத்துக்கு வேண்டிய பொருளில்லாமற் கஷ்டப்பட வேண்டியிருக்கும். அதற்குத் தக்கவாறு, ஒன்றில், அவனிடம் சோம்பல் குடி கொள்ளலாம். அல்லது அவன் முயலும் முயற்சிகள் தடைப்படலாம். அல்லது விபரீதப் படுத்தப்படலாம். நடைமுறை அநுபவத்தில் நாம் கண்டுணரக்கூடியன இவை. இன்ப துன்ப அனுபவங்களுக்கான முயற்சிகளெல்லாம் ஊழுக்கேற்றபடி ஊழினால் வருவனவே என்பது இவ்வாற்றானுந் தெளியப்படும்.

தன்பாட்டில் சுதந்தரமாக இயங்கும் நிலைமை உயிருக்கில்லை. அது எப்போதும் பரதந்திரன், எந்நிலையிலும் தெய்வ சக்தி அறிவித்தால் மட்டுமே அது அறியும்; தெய்வ சக்தி செய்வித்தால் மட்டுமே அது செய்யும் என்பது சித்தாந்த உண்மை. நாம் மேற்கண்ட விளக்கத்தின் பிரகாரம், தெய்வ சக்தி, ஊழ் (நியதி) என்ற ஒரு திட்டமிடப்பட்ட அமைப்பின் மூலமே உயிர்க்கு அநுபவமூட்டும் என்பது புலனாயிருக்கிறது. இங்ஙனம் செயற்படுத்தும் வழிவகை (நியதி) தெய்வ சக்தியினுடையது, செயற்படுத்துவதும் தெய்வ சக்திதான் எனில், ஊழின்தொடர்பில்லாமல் முயற்சி நிகழும் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லையாகும்.

திருக்குறளில் ஊழ்:-

திருக்குறள் ஊழ் அதிகாரம் எடுத்த எடுப்பில் இக்கருத்துடனேயே கால் கொள்ளுகின்றது. ஆகூழ், போகூழ் என ஊழை வகைப்படுத்திக் கொண்டு,

> ''ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
> போகூழால் தோன்றும்மடி'' — என்கிறது திருக்குறள்.

'பொருளின் ஆக்க அழிவுகட்குக் காரணமாகிய முயற்சி சோம்பல்களையும் ஊழ்தானே தோற்றுவிக்கும்' என்கின்றார் இதற்குரை விளக்கந்தரும் பரிமேலழகியார். அவ்வதிகாரத்தில் உள்ள மற்றைய செய்யுள்களும் எல்லாம் உயிரின் அனுபவப் பேறு முழுவதையும் ஊழே நிர்வகித்து நிற்பதாகக் காட்டுகின்றன. அது வருமாறு:-

பெரும் புத்தியாளனாகிய ஒருவனுக்கும் சிலவேளை புத்தி மழுங்கிப் போகின்றது. மந்த புத்தியாளனுக்குச் சிலவேளை

மஹாவிவேகஞ் சுடர்கின்றது. சிலவேளைகளிற் சிலருக்குப் படித்த படிப்பொன்றும் உதவாமற் போக, பேதைமையுணர்வே முன்னின்று பிழையான வழியிற் செலுத்தி விடுகின்றது. அதற்காக அவன் பின்பு கழிவிரக்கங் கொள்ளவும் நேர்கிறது. உலகிற் சிலர் அறிவாளர்களாயிருக்கிருர்கள். தரக்குறைவான அற்ப சாதனங்கள் சிலவே பெருஞ் செல்வஞ் சேர்க்க உதவுகின்றன. தரமான உயர் சாதனங்கள் பலன்படா தொழிகின்றன. எவ்வளவு வருந்திக் காத்தாலும் பல பொருள்கள் நிலையாமற் போகின்றன வெறுத்து உதறித் தள்ளிய போதும் எத்தனையோ பொருள்கள் விட்டுப் போகமாட்டோம் என நிற்கின்றன. கோடிக்கணக்கிலே சொத்துக்களைச் சேர்த்து வைத்துக் கொள்வோர் பலர் அவற்றை அநுபவிக்கமுடியாமற் கஷ்டமுறுகின்ருர்கள். ஒருவகையான ஆதரவும் இல்லை இனி இறப்போம் என்றிருப்பவனையும் சாவு நெருங்காமல் தடுத்துத் துன்புறுவிக்கும் பலாபலன்களும் இருந்தேயாகின்றன. நல்லது தீயது இரண்டையும் அநுபவித்தே முடிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எல்லோருக்குமே இருக்கிறது. ஊழினுல் தீப்பலன் வர விருப்பதைத் தெய்வீகக் காட்சியுள்ள சோதிடர் முதலியோரால் முன்னமே தெரிந்துகொண்டு அதற்கு மாற்றுச் செயல் புரிய முயன்ருலும் அதைப்பலன்பட விடாமல் வரவேண்டிய தீங்கு முந்திக் கொள்கின்றது. இத்தனைக்குங் காரணம் ஊழ் என்ற ஒன்றேதான் என்கிறது திருக்குறள்.

இது இங்ஙனமாகவும் உயிரின் முயற்சி தன்பாட்டில் நடைபெறுவதென்றும் அம்முயற்சி பலன்படும் விஷயத்தில் இறைவன் ஊழையும் பின்னிப்பிணைத்து அதற்குத் தக்கவாறு பலன்தருகிருர் என்றும் கொள்வாருமுளர். அவர் கொள்கை எவ்வாற்ருனும் ஏற்கத்தக்கதன்ருகும்.

'ஊழ் மற்ஹொன்று சூழினுந்தான் முந்துறும்' என்ற வள்ளுவர் வாக்கை மெய்ப்பிக்கச் சரித்திரரீதியான அநுபவமொன்றுகேட்கப்பட்டு வருகின்றது.

'ஊழ் வரவைத் தெய்வக் காட்சியுள்ள முனிவர், சோதிடர் முதலியோர் அது வருதற்குப் பல்லாண்டுகள் முன்னதாகவே தெரிவித்து விடுகிருர்கள். தண்ணீரினுல். நெருப்பினுல், ஆயுதத்தால் — என்பன போன்ற விபரங்களுடன் அவர்கள் அத்தன்மையைத் தெரிவித்தலுண்டு. இவ்வியல்பில், வராஹமிஹிரர் என்னுமோர் சோதிடர் செய்தி மிகப்பிரசித்தமான ஒன்று. ஒரு அரசகுமாரனுக்குக் குறிப்பிட்ட ஒரு திகதியிற் குறிப்பிட்ட ஒரு நேரத்திற் பன்றியினுல் மரணம் என்று வராஹமிஹிரர்

பல நாட்களுக்கு முன்னமே சொல்லிவிட்டார். அதற்கெதிராக அரசன் மேற்கொண்ட மிக விழிப்பான பலத்த பலவகைப் பந்தோபஸ்துகளிடையே அரச மாளிகைச் சூழலிலுள்ள தூணொன்றில் அலங்காரத்துக்காகப் பொருத்தப்பட்டிருந்த இரும்பாலான பன்றியுருவமொன்று சுழல் காற்று விசையால் முறித்து வீசப்பட அரசகுமாரன் அதற்கு இரையாகின்றான். இங்ஙனம் அரசகுமாரனது பிராரப்தப் பலனென்றிருப்பதை வராஹமிஹிரர் தமது சோதிடக் காட்சியாற் கண்டே சொல்லி யிருக்கிறார் என்பது இதனால் தெரிகிறது. அவர்காட்சியிற்பட்ட அந்த அமைப்பு யாது? அதுவே ஊழ் ஆவது. இப்படி இப்படிய றியத்தக்கனவாயுள்ள உண்மை அநுபவங்களையே திருவள்ளுவர் தொகுத்துரைத்ததாகக் கொள்ளல் சாலும். இன்னும்,

இறைவனுக்குச் சாதனங்கள் ஏன்?

இறைவனுக்கு முன்னேற்பாடான அமைப்பெதுவுந் தேவை யில்லை. சர்வ வல்லமையாளனாகிய இறைவன் தம் சங்கற்ப வன்மையினால் அவ்வப்போதே அனைத்தும் நிகழ வைப்பார் என்பாருஞ் சிலர் உளர். இறைவனுக்குரிய அநந்தச் சுதந்தர நிலைமையை யாருமே மறுப்பதற்கில்லை. ஆனால் இறைவன் உயிரை நோக்கிச் செய்யும் ஒவ்வோர் கிருத்தியத்துக்கும் தகுந்த ஏதுக்களான பல்வேறமைப்புக்களை முன்னரே ஏற்படுத்தி வைத்து அவற்றின் மூலமாகவே காரிய நிர்வாகத்தை இயற்றி வருகிறார் அவ்வாறு செய்தற்குத் தகுதியான காரணமொன்றி ருத்தலை நாம் உளங் கொளல் வேண்டும். உயிர்களை மல நீக் கஞ் செய்து அவரவரியல்பிற்கேற்ப அவரவரை ஆட்கொள்வதே இறைவன் செயல். அம்மல நீக்கமும் பல வேறுபடி நிலைகளில் நிகழ்வதொன்றாகும். அவ்வப்படி நிலைகளில் மலநீக்கம்பெற்ற அவ்வவ்வுயிருக்கு அவற்றுக்குந் தக்கனவான அதிகார பதவி நிலைகளும் வேண்டியனவே. சாயுச்சிய நிலைக்குத் தக்க அளவு தகுதி பெறும் உயிர்கள் மிக மிகச் சிலவே. ஏனையுயிர்களெல்லாம் பலவேறு தடவைகளிற் படிமுறையால் மல நீக்கம் பெறும் வழியில் இயல்வனவாம். அவ்வப்போது அவையவை பெறும் மல நீக்கத்துக்கு ஒத்த பலன் அவ்வவற்றுக்கு வேண்டும். குறித்த அதிகார பதவி நிலைகள் அவ்வகையால் ஏற்பட்டனவே. அதுவும் இறைவன் உயிர்களை ஆட் கொள்ளுந்திறத்தில் அமைவதேயாம். அதன் பொருட்டாக இறைவன் தன் ஆணைவியாபகத்தினுட் பல்வேறு அதிகார பதவிகளை வகுத்தருள்கின்றான். அவ்வப் பதவிகளில் தன் விலாசங்களான காரணேஸ்வரர்கள் சந்நிதியில் குறித்தவாறு மல நீக்கம் பெறும் பல பல உயிர்களையும் அதி கார பதவிகளிலிருத்தி ஆட்கொள்ளும் விபரங்கள் ஆகமங்கள் வாயிலாக அறியக்கிடப்பன அதிகம். மாயா மலத்தொடக்கு

மட்டும் முற்ற நீங்கிய உயிர்களிற் பக்குவ மிகுதியுள்ளோர் அநந்த கோடி உருத்திரர்களாகச் சுத்த வித்தை தத்துவத்துக்கும் பிரகிருதி தத்துவத்துக்குமிடைப்பட்ட புவனங்களிலுள்ள அநந்தம் அதிகார பதவிகளிலுள்ளனர். மாயை கன்மம் இரண்டும் நீங்கிய உயிர்களிற் பக்குவமுள்ளோர் சதாசிவ தத்துவத்துக்கும் சுத்த வித்தைக்கும் இடைப்பட்ட புவனங்களில் மந்திரேஸ்வரர், வித்தியேஸ்வரர், அணு சதாசிவர்களாய் அதிகார பதவிநிலைகளில் அமர்ந்துள்ளனர். ஆகவே மேற் குறிப்பிட்டவாறு காரியப்பாட்டுக்கான அமைப்புக்கள் இறைவனுக்குத் தன் பொருட்டாக வேண்டுவனவாகா. தன்னால் ஆட்கொள்ளப்படும் பலதிற உயிர்களின் பொருட்டாகவே வேண்டப்படுதல் ஒரு தலை ஒரு அரசன் ஒரு நாட்டை நிர்வகித்தல் காரணமாக அமைக்கும் அமைப்பு விதிகள் சாதனங்களை ஒப்பு நோக்கி இதனை விளங்கிக் கொள்ளல் அமையும்.

சாஸ்திரங்களில் ஊழ்:-

இதுவே உண்மை நிலை. இன்றேல் இறைவன் உயிர்களுக் கூட்டுதற்காகத் தத்துவங்களும் வேண்டியதில்லை. பிரமனும் வேண்டியதில்லை. யமனும் வேண்டியதில்லை. மற்றும் காரணேஸ்வரர்களும் வேண்டியதில்லை. இங்ஙனம், இறைவன் உயிர்களின் பிராரப்தபலன்களை முறை திறம்பாது ஊட்டுதற்கென அமைத்துக் கொண்ட ஒருவகை அமைப்பே ஊழ் எனத் தெளிதலில் இனியும் தடையிருத்தல் இயலாது.

இந்த ஊழ் என்ற அமைப்பை நிர்வகித்தற் பொருட்டு, அதை நிர்வகிக்கும் தமது சக்திக்கு உதவியாதற் பொருட்டே அசுத்தமாயையில் 'நியதி' என்பதோர் தத்துவத்தையும் அமைத்துள்ளார். ஊழுக்கு நியதி என்பது பரியாயப் பெயராக இருப்பதாகப் பரிமேலழகர் தெரிவித்திருப்பதையும் முன்பு கண்டோம். இந்த ஊழை வழுவாமற் செலுத்தற்கான தத்துவம் நியதி. அதை நிர்வகிப்பது திருவருட்சக்தியான திரோதான சக்தியின் ஒரு கூறு என அறிதல் வேண்டும். சைவசாஸ்திரங்களான சித்தியார், சிவப்பிரகாசம், மதங்கபரமேஸ்வரம் (வித்தியா பாதம்) முதலானவற்றில் 'நியதி' என்பதில் வைத்தே ஊழிலக்கணம் முற்றாக விளங்கப்படுத்தப்பட்டிருக்கின்றது.

'நியதி பின்தோன்றிக் கன்ம நிச்சயம் பண்ணி நிற்கும்', என்கின்றது சிவஞானசித்தியார். 2 — 25 சிவாக்கிரயோகிகள் இதற்குக் கூறும் உரைவருமாறு:-

நியதிதத்துவமானது தோன்றிக் கன்ம நியமனத்தைப் பண்ணி ஒருவர் பண்ணிய கன்ம பலத்தை ஒருவர் புசியாத படியும் விஷய சௌந்தர்யத்தினாலே அதிக ப்பிரவிர்த்திகள்

வராதபடியும் பிராரப்தமான பாவ பலபோகம் அநிஷ்டமென்று விடாத படியும் பரிபக்குவமான ஒழுங்கிலன்றிக் கர்மபலத்தை முன்பின்னுகப் புசிக்க வொட்டாதபடியும் ஈசுரசக்திப் பிரேரணை யினுல் இராச ஆக்ஞை ஆனதுபோல் நியமனஞ் செய்து புசிப்பிக்கும்.

— சித்தியார் சிவாக். உரை பக். 290.

'கன்ம நிச்சயம் பண்ணிநிற்றல்' என்றதன் உட்கிடையை வெளிப்படுத்தும் பாங்கில் இவ்வளவு விளக்க விரிவு தந்திருக் கிருர் அவர். ஊழுக்கும் நியதிக்கும் உளதாம் ஒற்றுமை இவ் வாற்ருன் அறியப்படும்:

மதங்க பாரமேஸ்வரம் என்ற ஆகமத்தில் நியதி படலம் என்ற தனியான ஒரு பகுதியுண்டு. அதில் நியதிபற்றிய உண்மைகள் வெகுவிஸ்தாரமாக விபரிக்கப்படுவதுடன் அத்தத் துவத்தை நிர்வகித்தற் பொருட்டாக நியாமிகா என்ற ஒரு சக்தி உள்ளதாகவும் அது திரோதான சக்தியின் பன்னிரண்டு கூறுகளில் ஒன்ருகவும் கூறப்பட்டிருக்கின்றது. அதன் முதற் சுலோகம் வருமாறு:-

''சக்திர் நியாமிகா பும்சாம் ஸஹதத்வேதே ஸ்திதி ஹேதுஞ

யயா அணும் போகசந்தானே நியம்ய விநிவார்யதே'' — நியா மிகா என்ற சக்தி நியதி என்ற தத்துவத்தை நிர்வகித்து நிற்பது. தன்தன் போகத் தொடர்ச்சியில் ஆன்மா நிலைபெறு மாறு கட்டுப்படுத்தித் தடுத்து வைத்திருக்கின்றது. என்கின்றது இச்சுலோகம். அன்றியும்.

தலையெழுத்து, தலைவிதி, பிரமன் எழுத்து என்ற அநுபவ வாக்குகளும் பிராரப்தத்துக்கு வேருக ஊழ் என ஒன்றிருத்தலைப் புலப்படுத்துகின்றன. எழுதிச் செல்லும் விதியின்கை எழுதி எழுதி மேற்செல்லும் என்ற பாரசீகப் பழங்கவிதையும் ஒன் றுளது.

''தாந்தாம் முன் செய்தவினை தாமே யநுபவிப்பர்

பூந்தாமரையோன் பொறிவழியே'' என்ற நல்வழிச் செய்யுளு மொன்றுளது. பூந்தாமரையோன் - பிரமன். பொறி- பொறிக்கப் பட்டது. பிரமன் எழுத்து, படைக்குங் கடவுளாகிய பிரமன் ஒருவரின் அநுபவ வரலாறு (அப் பிறப்புக்குரியது) முழு வதையும் அவரில் பொறித்து வைத்துள்ளாரென்பது ஒரு கருத்து. அது தலையிற் பொறிக்கப் பட்டதாக உரைத்தல், தமிழ் வழக்கும் லலாடத்தில் (நெற்றி) பொறிக்கப்பட்டுள்ள தாகக் கூறல் சமஸ்கிருத வழக்குமாம். இங்ஙனம் பிரமனுல் பொறிக்கப்பட்டதான விதி பிராரத்தத்தின் வேறு என்பது சொல்ல வேண்டுவதில்லையாகும்.

மேலும், நம் முயற்சிகள் சில வேளை பயன்படாமற் போவதை ஒரு ஏதுவாகக்கொண்டு முயற்சி ஊழின் வழி நிகழ் வதில்லை எனச் சாதிக்க முனைவர் சிலர், அக் கருத்துத் தவ றனதென்றற்கும் ஏதுக்கள் உள. செய்யும் முயற்சியொன்றிற் பலன் தோன்றுதற்கு ஊழ் காரணமாதல் போல, அத்தகைய தொன்றிற் பலன் தோன்ருமைக்கும் அவ்வூழே காரணமாம். தான் செய் தொழிலிற் பலன் காணுமற் போவதும் ஒருவற்குத் துன்ப அநுபவமே. அங்ஙனம் ஏமாற்றம் விளையும் பாங்கில் அப்படியொரு முயற்சியைக் கூட்டி வைத்ததும் ஒருவகைப் பாபப் பலனை அநுபவிக்கத்தரும் ஊழே எனல் வேண் டும். அன் றியும் எவன் புரியும் யாதொரு முயற்சியும் பலன்தராதொழிவ தில்லை என்பது தத்வார்த்தமான ஒருண்மையுமாகும். சித்தாந்த சாஸ்திரத்தில் இதன் விளக்கம் பின்வருமாறு அமையும்.

நம் முயற்சிகள் பலன் தருதல் இரு வகையில் அமையும் லௌகீக ரீதியான பலன்பாடு ஒருவகை. ஆத்மீக ரீதியான பலன்பாடு ஒருவகை. ஆத்மீக ரீதியான பலன்பாடு என்ருல் உயிர்க்குள்ள சஞ்சிதகன்மம் பக்குவமாதல் என்று சொல்லப் படும். பக்குவமாதல் என்ருல் சஞ்சிதத்திலுள்ள பாவமோ புண் ணியமோ அனுபவிக்கப்படுந் தகுதியடைதல். எந்தப் பொரு ளும் பதப்படுத்தப்பட்ட பின்னரே நம் உணவுக்குத் தகுதியா தல் போன்று எந்தக் கன்மமும் பக்குவப் படுத்தப்பட்ட பின் னரே நம் அநுபவத்துக்குத் தகுதியாகும் என்ற ஒரு நிலையும் இருக்கின்றது. பிராரத்த அநுபவத்துக்கு வழிவகுக்கும் ஊழே, பின்மறுபிறப்பில் அநுபவத்துக்கு வர இருக்கும் சஞ்சிதத்துக் கும் பக்குவமூட்டும் கைங்கரியத்தையும் நிகழ்த்தும் அமைப்பை இவ்வகையாற் காண்கின்ருேம். அரும்பு மலராய், மலர்காயாய் காய் கனியாய்ப் பரிணமித்தல் போன்ற ஒரு மாற்ற நிலையே இப்பக்குவமாதல் என அறிதல் வேண்டும். இங்ஙனமாக நம் ஊழ் வழி நிகழும் நம் முயற்சியால் நாம் பக்குவமான பாவ புண் ணியங்களின் பலனை நுகர்கிருேம். அதாவது பழத்தை நுகர் கிருேம் பக்குவமாகாததைப் பக்குவம் பெறச் செய்கிருேம். அதாவது பழுக்காததைப் பழுக்கச் செய்கிருேம். ஆதலால், முயற்சிபலனளிக்கவில்லை என்றற்கிடனில்லை என்றவாறு 'பல முறை தோற்கிறவன்வெற்றிக்குத் தகுதியாகிருன்' என்பதுங் காண்க.

'புருஷ கார ஏவ கர்த்தவய : சர்வை : சர்வாத்மனு

யதிந சித்யதி தைவாத் கோத்ர தோஷ :'' எல்லோராலும் எல்லாவகையாலும் முயற்சியே செய்யப்படவேண் டியது. ஊழி ஞல் சித்தி கிடைக்காமற் போனுல் அதிலென்ன தோஷம்? அதாவது அதனுல் என்ன நஷ்டம்? என்கின்றது ஒரு வட

மொழி நீதி சுலோகம். இதில் 'யதிநசித்யதிதைவாத்' என்றத னுல் லௌகிக சித்தியின்மையைத் தந்ததும் ஊழே என்ற கருத்தும் ''கோத்ர தோஷ' என்றதனுல் அதனுலும் அந்தரங்கமான ஒரு நன்மை இருக்கிறது என்ற கருத்தும் பிரஸ்தாபிக்கப் படுதல் காணலாம்.

இந்தகைய ஆத்மீகப் பண்பாடு நம்மறிவுக்குத் தோன்ற நிகழ்வதில்லே. ஆத்ம சம்பந்தமான மற்றும் எத்தனையோ விஷயங்களைப் போலவே இதுவும் ஒரு இருட்டறை இரகசியம் அதனுல் முயற்சியில் வெறுப்புக்கொள்ளும் ஒரு விரக்தி நிலை ஏற்படவே செய்யும் அதற்கிடங்கொடுத்தலாகாதென்பது அறிஞர் திருவுள்ளம். திருவள்ளுவர் இதே அம்சத்தை உட்கொண்டு கூறும்போது

''தெய்வத்தா லாக தெனினும் முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்'' என்கின்ருர். ஊழ் பலன் தர வில்லே என்ருல் ஒரு சிறிதாயினும் பலன்படாமற் போய்விட வில்லேயே, நெல்வேளாண்மை பலன்படவில்லே என்ருல் அடியோடு ஒன்றுமில்லாமற் போய்விடவில்லே. முழு விளைவு இல்லாவிட்டால் அரை விளைவு கால்விளைவாவது; அதுவுமில்லாத பட்சத்தில் வைக்கோலாவது; வெள்ளம் வாரி வைக்கோலும் இல்லாவிட்டால் அரசாங்க உபமான்யமாவது உண்டுதானே, அவ்வாற்ருல், மெய்வருந்தினமைக்கேற்ற அற்ப அளவான பலனென்னு அதற்கிருக்கின்றது தானே என்கின்ருர் மிக நயமாக.

இதில். ஏன் இவர் 'லௌகீக பலன்பாடுதானே இல்லே. ஆத்மீக பலன்பாடு இருக்கின்றதுதானே! என்று புலப்படச் சொல்லியிருக்கலாமே! என ஒருவர் ஆசங்கித்தலுங் கூடும். இதுவும் விசாரிக்க வேண்டியதேயாம்.

அக் கருத்து ஆத்ம வீசாரமுடையவர்க்கன்றிச் சாமானிய உலகினர்க்குத் திருப்தியளிக்காது. எத்துறையினும் ஏதேனும் ஒரு லௌகீக பலனை எதிர்பார்ப்பதே அவர்கள் மனேதர்ம மாதலின். அதனுல் அவர்கள் மனேதர்மத்துக்கேற்க, அற்பமாயினும் லௌகீகமாக உள்ளதை அறிவுறுத்தும் நோக்கில். 'மெய்வருந்தக் கூலிதரும்' என்ற வள்ளுவர் விவேகம் மெச்சற்பாலதாம். உலகர்க்கு நூல் செய்கின்ருராதலின் அவர் கடமையும் அஃதேயாதல் ஒருதலே, உலகர்க்கே சிறப்பாக உரியதாகிய ஆள்வினையுடைமையதிகாரத்தில் இக் கருத்து இடம் பெறுதலேயும் விசேடமாய்க் கவனித்தல் வேண்டும். இவ்வாறு

கொள்ளாது. இக் குறட் பொருளைச் சாட்டாகக் கொண்டு ஊழுக்கும் முயற்சிக்கும் ஒரு தொடர்புமில்லை என முடிவு கட்டுதல் சுருதியுக்தி அநுபவம் மூன்றற்கும் ஒவ்வாதாகும்.

ஊழை முயற்சி வெல்லுமா?

இனி, ''ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்'' என்ற குறளின் ஆதரவில் நின்று கொண்டு, முயற்சி ஊழ்காரணமாக வருவதில்லை யெனச் சாதிக்க முயல்வாருமுளர். அவர்கள் கருத்தும் பொருந்தாமை ஆராய்வின்கண் அறியவரும்.

திருக்குறட் செய்யுட்களை விமர்ச்சிப்போர் பலர் குறிக்கப் பட்ட குறள் எந்த அதிகாரத்தில் உள்ளதென்பதைப் பொருள் செய்யாமலே எடுத்துக்கொண்ட சந்தர்ப்பத்திற்கிசைவாகப் பொருள் செய்து கொள்கின்றனர். அந்த அதிகாரப் பொருள் நோக்கு இன்னது எனப் பரிமேலழகர் வரையறுத்துச் சுட்டி யுரைக்கும் அவதாரிகையையும் நோக்குகின்றிலர். குறித்த செய்யுளின் குறிப்புரையில் அவர்தரும் விசேட குறிப்புரை யையும் அலட்சியம் பண்ணுகின்றனர். இம் மூன்றம்சத்தில் ஒன்றுக்கு மாறுபாடாயமையினும் அவ்வுரை திருக்குறளுரை யாகாமையை அறிதல் வேண்டும். இந்நேர்மைக் கண்ணோட் டத்தில் குறித்த குறளை நோக்குவோம்.

இக் குறள் ஆள்வினையுடைமை என்ற அதிகாரத்தில் வருவதென்பதை முதலிற் கவனிக்க வேண்டும். மடியின்மை என்ற அதிகாரத்தை அடுத்து அவ்வதிகாரம் வருதலையுங் கருத்திற் கொள்ளவேண்டும்.

(i) மடியின்மை — அஃதாவது கருதியன செய்யுங் கால் சோம்புதலில்லாமை.

(ii) ஆள்வினையுடைமை — அஃதாவது இடைவிடாது மெய்ம்முயற்சி யுடையனாதல்.

குறித்த இரண்டும் முயற்சியின் அவசியத்தை வற்புறுத்தல் என்ற நோக்கிற் பரிமேலழகர் தரும் விளக்கங்கள், முன்னையது முயற்சி நிலைக்கு முன்னோடியான இன்றியமையாத ஒரு சூழ் நிலையை உணர்த்த, பின்னையது முயற்சியின் அவசியம் உணர்த்தப் படுதலைத் தெரிவிக்கின்றது. இப் பின்னைய அதி காரத்தில், மனித முயற்சி சாதாரணமாகத் தளர்வடையப் பார்க்கும் சந்தர்ப்பங்களை (திருப்பங்களை)ச் சுட்டி அவற்றில்

வைத்து முயற்சியின் அவசியம் வற்புறுத்தும் ஒழுங்கு திருவள்ளுவரால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. வள்ளுவரின் உணர்த்து முறை பற்றிய ஒருத்தி இதுவாகும். அவர் நூலிற் பல இடங்களில் இது அவதானிக்கத் தகும். அவ்வகையிற் பார்க்கும்போது,

ஊழினால் பலதடவை ஒருவன் முயற்சி பலன்படாமற் போதலும் அந்நிலையில் ஒருவன் முயற்சி தளர்வடையப் பார்த்தலும் இயல்பே. முயற்சியின் அவசியத்தை வற்புறுத்தலில் ஈடுபட்டுள்ள வள்ளுவர்க்கு இது முக்கியமான ஒரு சந்தர்ப்பம் எனல் சொல்ல வேண்டா. எனவே, அச் சந்தர்ப்பத்தைச் சுட்டி உணர்த்தும் கருத்து நிலையை இக் குறளில் மேற்கொண்டார் என அறிதல் வேண்டும். இக் குறட்குப் பரிமேலழகர் எழுதும் உரையில்,

ஊழையும் — பயனை விலக்குவதாகிய ஊழையும்

உலைவின்றி — அவ் விலக்கிற்கு இளையாது. என வருங் குறிப்புக்களும், விளக்கக் குறிப்பில்,

தெய்வத்தானிடுக்கண் வரினும் முயற்சி விடற்பாலதன்றென்பது இவை மூன்று பாட்டாலுங் கூறப்பட்டது.

என்ற பகுதியும் உற்று நோக்கியுணரத்தக்கவை. இவற்றின் பெறு பேருக. இச் செய்யுளால், ஊழ் எவ்வளவு விபரீதமாயிருந்தாலும் முயற்சியைத்தொடர்க என்று அறிவுறுத்தலே வள்ளுவர் நோக்கென்பது நன்கு புலனாகின்றது. இங்ஙனம் விளங்கிக்கொள்ளுதலை விடுத்து ஊழை முயற்சியால் வெல்லலாம் எனத் திருவள்ளுவர் சொல்லிவிட்டதாகக் கொள்வது ஊழ் அதிகாரத்தில் அவர் விளக்கியுள்ள கருத்து நிலைக்கு நேர் மாறாய் அமைந்து, முன்னொடு பின் முரணக் கூறிய தோஷத்தை அவர் பாற் கற்பித்தலாய் முடியும். இக் குறளில், 'ஊழையும்' என்ற உம்மையும், உலைவின்றி. தாழாது என்ற அடைமொழிகளும் யாங் கொள்ளுங் கருத்துக்கு உதவுந் திறம் உற்று நோக்கற் பாலதாம். இனி, இது சம்பந்தமான மற்றோர் கருத்தம்சத்தையும் தெளிவு செய்துகொள்ளல் வேண்டும்.

மெய்யடியார் விஷயம் வேறு

முயற்சியால் ஊழை வெல்லலாம் என்பதே வள்ளுவர் கருத்தென இக் குறளால் நிலை நாட்ட முயல்வோர், மெய்யடியார் செய்திகளை உதாரணங் காட்டுகின்றனர். அவர்கள் கொண்ட கருத்து நேரிதன்று என்பதற்கு அதுவொன்றே யமையும்.

உலகில் வாழ்ந்து அனுபவம் பெறுந் தன்மையில் சாமானியர்களாகிய நம் நிலை வேறு. மெய்யடியார் நிலை வேறு. எங்கள் விஷயத்தில் திருவருள், திரோதானமாய், பாசம் போல்வதாய்

மறைவாய் நின்று தொழிற்படுகிறது, அவர்கள் விஷயத்தில் அது பராசக்தியாய் அருள் சுவரூபமாய் வெளி வெளியாய் நின்றியலுகின்றது. எங்களைப் பொறுத்தவரையில் 'போகு மட்டும் போய் வா' என்ற மனப்பாங்கில் இயலகிறது திரு வருள். அவர்கள் விஷயத்தில், 'உன்கருமம் என்கருமம்' என்ற சிரத்தையோடு நடத்துகின்றது அது. எங்களுக்கு உள்ள ஊழ் முழுவதையும் அநுபவிப்பித்து முடிப்பது திருவருளின் கடமை. அவர்களுக்கு அவர்கள் பெறுஞ் சிவாநுபவத்துக்கு அவசியமானதை மட்டும் அநுபவத்துக்கு விட்டு, ஏனையவற்றை இயன்றமட்டும் விலக்கிக்கொடுப்பது அதன் பண்பு. பெரும் பாலும் அவர்களுக்கு உள்ள ஊழ்த் தொடர்பு முழுவதும் ஏலவே விலக்கப்பட்டிருக்கும். ஆனால், வாசனை வசத்தினால் முன்னைய தொடர்ச்சியில் ஏதேனுஞ் சிறுக மறுகத் தலைக் காட்டுதலுந் தவிர்க்க முடியாததாகும் என்பது ஞான அபிப் பிராயம். அப்படியான சில சந்தர்ப்பங்களில், சம்பந்தப்பட்ட அடியார் மற்றவற்றை முற்றாகப் புறக்கணித்துத் தன்னையே பற்றாகப் பற்றி நிற்கும் அவசரத்தில் அவர்களுக்குளதாம் ஊழைத் திருவருள் விலக்கிக் கொடுக்கும் என்பதே உண்மை. ஆக்கினவனுக்கு அழிக்கும் அதிகாரமும் உண்டுதானே. ஊழை ஒழுங்கு செய்த திருவருள் வேண்டாதபோது அதனை விலக்கிக் கொடுப்பதில் வியப்பில்லை. அத்தகையோரிலும் பலர் பல கட்ட டங்களில் ஊழ் வாதனைக்கு உட்பட்டிருந்த நிலைமைகளையும் நாம் அநுதாபத்துடன் நோக்கவேண்டியிருக்கிறது. ஆதலால் அவரிற் சிலர் ஊழை வென்ற சில சந்தர்ப்பங்கள் முற்ற முற்றத் திருவருட் செயலாவதன்றி அவர்களின் முயற்சிப் பல னாகாது. திருவருளின் செயலில் நமக்காராய்ச்சியில்லை. "ஆட் பாலவர்கருளும் வண்ணமும் ஆதிமாண்பும் — கேட்பான் புகி லளவில்லை கிளக்க வேண்டா" என்பது ஞானசம்பந்தர் தந்த ஆணை.

> "நின்னடியே வழிபடுவான் நிமலா நினைக் கருத
> என்னடியா னுயிரை வவ்வே லென்றடற் கூற்றுதைத்த
> பொன்னடியே பரவி நாளும் பூவொடு நீர் சுமக்கும்
> நின்னடியா ரிடர்களையாய் நெடுங்களம் மேயவனே"

திருஞான சம்பந்தர் தரும் திரு நெடுங்களத் திருப்பதி கத்தில் வரும் இப்பாடற் பொருளை ஒரு கால் நோக்கினோரும், மெய்யடியார் ஊழை வென்றமை அவர் முயற்சிப் பலனென ஒரு போதுங் கொள்ளார் என்க.

நின்னடியை வணங்குதலே தன்பற்றாயிருந்தமைக்காக மார்க்கண்டேயர் மேல் வந்த கூற்றை உதைத்தாய். அதே அடியை இன்னும் அவ்வாறு பூசிக்கும் அடியார் எவர் விஷயத்தும் அவ்வாறே செய்தருள்.

ஞான சம்பந்தர் புரியும் இவ்வேண்டுதலின் பண்பென்ன பரிவென்ன! கண்ணுளார் கண்டின்புறுவர்.

சுபம்.

பிழை திருத்தம்

இல.	பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	4	20	மட்டிலலாது	மட்டிலல்லாது
2	6	1	நூல்களிலிருந்தும்	நூல்களிருந்தும்
3	10	12	எதுணை	எத்துணை
4	11	15	திருவேணி	திரிவேணி
5	18	14	அசீத்	ஆசீத்
6	18	20	—ன்ற	என்ற
7	19	6	உபயோகரமானது	உபயோககரமானது
8	20	6	டசிப்போ	புசிப்போ
9	23	8	காண்கின்றேன்றேம்	காண்கின்றேம்
10	23	20	கடவுணெதிர்	கடவுளெதிர்
11	23	31	அநுபவிக்வேண்டிய அவசரமும்	அநுபவிக்கவேண்டிய அவசரமும்
12	27	1	சவைசித்தாந்தத்தில்	சைவசித்தாந்தத்தில்
13	46	18	அநாதியாயுள்ளதொவ்வொன்றுக்	அநாதியாயுள்ளதொவ்வொன்றும்
14	47	இறுதி	விளக்கம்	விளக்கத்
15	48	33	—த்தம்	நித்தம்
16	54	11	தனி	இனி
17	57	29	சாஸ்திரங்கல்	சாஸ்திரங்கள்
18	60	7	மாயா	மாயயா
19	61	1	மாயை	மாயா

20	66	1	வைத்தோர்	வைத்ததோர்
21	66	15	அழக	அழகு
22	67	2	சிதியாரில்	சித்தியாரில்
23	70	7-8 இடை		இதனால் மாயை பிரமத்துக்கு வேறான ஒரு பொருள் என்ற அவர்கள் கருத்து வெளியாகின்றது.
24	71	12	ங்கள்	எங்கள்
25	72	10	ரவிஷ்ய — சத் ச த்யத் ச அபவத'	ராவிஷ்ய — சத் ச த்யத் ச அபவத'
26	81	12	என்றவினையடி	என்ற தமிழ் வினையடி
27	85	5	துன்பாநுபவதில்	துன்பாபநுவத்தில்
28	86	9	சக்கி	சக்தி
29	87	15	உயி	உயிர்
30	88	21	தெளிவாக்க்	தெளிவாகக்
31	90	31	கொடுக்க—	கொடுக்கச்

ஆசிரியரின் பிற நூல்கள்

1. குழந்தைவேற் சுவாமிகளும் குரு பரம்பரையும்

   வெளியீடு : குழந்தைவேற் சுவாமிகள்
   சமாதிக் கோயில் திருப்பணிச் சபை

2. மாவைப் பிள்ளைத்தமிழ் - உரையுடன்

   வெளியீடு ; மாவை முத்தமிழ் மன்றம்

3. திருக்குறிப்புத் தொண்டர் புராண ஆறுமுகத் தம்பிரான் உரை விளக்கக் குறிப்புகள்

   வெளியீடு : யாழ் கூட்டுறவுப் பதிப்பகம்

4. சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

   வெளியீடு : மானிப்பாய் இந்து விருத்திச் சங்கம்
   காலயுத்தி ஆவணி 1978

5. நாவலர் பிள்ளைத் தமிழ் (அச்சில்)

6. பெரிய புராணச் சிந்தனைகள்
7. மாவைப் பள்ளு

} அச்சேற வேண்டியவை